**8-5-2008**

# உள்ளடக்கம்

பக்கங்கள்

**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 389

**2. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 390-427

**3. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 428

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு 428

**4. மானியக் கோரிக்கைகள், 2008–2009,**
**விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11 – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

(அ)–(இ) 428-610

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் | 429,451, 506,521-522, 536-537, 573-574, 591-602 |
| *மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 471,491,507, 510,514-515, 572,574-575, 576,578, 579-591,603 |
| *திரு. எஸ்.வி. சேகர் | 507-512, 514-521 |
| திரு. கே. பொன்னுசாமி | 521-531 |
| திரு. போ. கோபாலன் | 531-537 |
| திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் | 436,455-456, 476,497, 537-544 |
| *திரு. என். நன்மாறன் | 448,467, 545-548,605 |
| *திரு. டி. இராமச்சந்திரன் | 438,469, 548-554 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 447,459, 488-489, 554-557 |
| திரு. அ. சௌந்திரபாண்டியன் | 559-563 |
| *திரு. ராம. சுப்புராம் | 447,488, 564-570 |
| திரு. போ. சின்னப்பன் | 460,480, 570-577 |

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 610-612

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 26

## 2008 மே 8, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்ற லரிது"*

"வாராது வந்த மாமணி" என்பதுபோல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.

### 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் வை. ராமசாமி அவர்கள் 7-5-2008 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். டாக்டர் வை. ராமசாமி அவர்கள் அன்றைய தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1996 முதல் 2001 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2008 மே 8

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**221—**

### நியாய விலைக் கடை

***32569—திரு. ராம. சுப்புராம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், கும்மங்குடி ஊராட்சி, மினிகந்தா கிராமத்தில் நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரிமளம் வட்டம், கீழாநிலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டின்கீழ் மினிகந்தா கிராமத்தைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகள் உள்ளன. அவை தலையாத்திவயல் முழுநேர நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கிடையே உள்ள தூரம் 1 கிலோ மீட்டர் மட்டுமே இருப்பதால், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி மினிகந்தா கிராமத்தில் புதிய பகுதிநேரக் கிளை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் [illegible] தொகுதி, அரிமளம் ஒன்றியம், கும்மங்குடி ஊ[illegible]சியில் மாண்புமிகு [illegible]அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல

228389.
சென்னை-600 008



2008 மே 8]

தற்போது கும்மங்குடியில் ஒரு முழுநேர அங்காடியும், தலையாத்திவயலில் ஒரு முழுநேர அங்காடியும், பொந்துக்குழி என்ற கிராமத்தில் ஒரு பகுதிநேர அங்காடியும் செயல்பட்டு வருகின்றன. கும்மங்குடி கடையில், கும்மங்குடி, கல்லுக்குடியிருப்பு, கேத்தாம்பட்டி, ஐயனார்பட்டி, நாட்டாம்பட்டி, வடக்கு பொந்துக்குழியில் பாதி கிராமத்தார், வனத்துப்பட்டி கிராமத்தார், மினிகந்தா கிராமத்தார் ஆக, எல்லோரும் அங்கே ரேஷன் பொருட்களை வாங்குகிறார்கள். இங்குள்ள கார்டுகளின் எண்ணிக்கை 754. அதைப்போன்று, தலையாத்திவயல் அங்காடியில், தலையாத்திவயல், ஒடித்திக்காடு, தாரிச்சான்பட்டி, மினிகந்தா கிராமத்தில் பாதி கிராமத்தினர் இங்கே பொருட்களை வாங்குகிறார்கள். இங்குள்ள கார்டுகளின் எண்ணிக்கை 421. பொந்துக்குழி என்ற கடையில் வடக்கு பொந்துக்குழியின் பாதி மக்களும், தெற்கு பொந்துக்குழி மக்களும் பொருட்களை வாங்குகிறார்கள். மினிகந்தா கிராமம் என்பது மற்ற கிராமங்களுக்கு மையப் பகுதியாக உள்ளது. அங்கு தனியார் ஒருவர், மாங்குடி என்பவர் அரசுக்கு ஒரு கடையைக் கட்டிக் கொடுத்துள்ளார். ஆக, அந்த மக்களுடைய வசதியைக் கருதி, மினிகந்தா கிராமத்தில் பகுதிநேர அங்காடி திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளேதான் அவர் சொல்கிற இந்தக் கடைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகையினால் எப்படியும் 1.5 கிலோ மீட்டர் இடைவெளி உள்ள இடத்தில்தான் கடை அமைக்க முடியும். இதிலே அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படி ஏதாவது தேவை என்று அவர்கள் நிரூபிப்பார்களானால், இதிலே ஏதாவது தவறுகள் இருப்பதாகத் தெரிவிப்பார்களானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு ஏதும் இல்லை. வடக்கே இருக்கின்ற மக்கள் தெற்கே போய் ரேஷன் பொருட்களை வாங்குகிறார்கள். தெற்கே இருக்கின்ற மக்கள் வடக்குப் பகுதிக்கு வருகின்றார்கள். எனவே, அரசு அதிகாரிகளும்,

D
V211,31:2008
P08.53:24

மக்கள் பிரதிநிதியும், ஊரிலுள்ள முக்கியப் பிரமுகர்களும் கலந்து பேசி, தாசில்தார் அவர்கள்மூலமாக ஓர் அமைதிக் கூட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களேயானால் அங்கே ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**222—**

## சேமிப்புக் கிடங்கு

***27776—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், செட்டிக்குளம் பகுதியில் வெங்காயத்தைப் பதப்படுத்துவதற்காக சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், செட்டிக்குளம் பகுதியில் வெங்காயத்தைப் பதப்படுத்த சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.



**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதியில், ஆலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட செட்டிக்குளம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களான பாலாஜூர், இரூர், குரூர், நாட்டார்மங்கலம், ஸ்ரீதேவிமங்கலம், கூத்தனூர், தேனூர், தொட்டியபட்டி, அடைக்கம்பட்டி, ஈச்சம்பட்டி, எலந்தளப்பட்டி, புதுவெள்ளாளப்பட்டி, பழையவெள்ளாளப்பட்டி போன்ற 25 கிராமங்களுக்கு மேல் வெங்காயத்தை மூன்று போக சாகுபடி செய்து வருகிறார்கள். இதில், புரட்டாசிபட்டம், மாசிபட்டம், வைகாசிபட்டம் என்ற மூன்று பட்டங்களிலும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சிறிய வெங்காயம், புரட்டாசிபட்டத்தில் பயிரிடப்படுவது. கார்த்திகை மாதம் மழைக்காலங்களில் சாகுபடி செய்யப்படும்போது வெங்காயத்தைச் சேமித்து வைக்கக் கிடங்கு இல்லாமலும், மழைக் காலங்களில் அந்த மக்கள் அந்த வெங்காயத்தையும் மற்றும் இதர பொருட்களையும் சேமித்து வைப்பதற்காக அவர்கள் படும் துன்பங்கள் இறைவனுக்குத்தான் தெரியும். அத்தனை இடர்பாடுகள் நிறைந்த விவசாயிகளின் குறையைப் போக்க அந்தப் பகுதியில் தொழில்நுட்பத்துடன்கூடிய ஒரு வெங்காய சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்த வேண்டும். அந்தப் பகுதி விவசாய மக்களின் நலனைக் கருதி, சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்த அரசு முன்வருமா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம் மற்றும் வேப்பூர் ஒன்றியம் என இரண்டு ஒன்றியங்களை உள்ளடக்கியுள்ளது. ஆலத்தூர் ஒன்றியத்தில் வெங்காயம் 4,290 எக்டேர் பரப்பிலும், வேப்பூர் ஒன்றியத்தில் 9 எக்டேரிலும், ஆக மொத்தம் 4,299 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 26 ஆயிரத்து 150 மெட்ரிக் டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியத்தில் தனியார் நிறுவனங்கள் ஏதேனும் இப்பகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைத்திட முன்வந்தால், மைய அரசின் நிறுவனமான தேசிய தோட்டக்கலை வாரியம் (N.H.B.) மற்றும் தேசிய தோட்டக் கலைக் குழு (N.H.M.) மூலமாக முதலீடு மானியம் பெற்றுத்தர வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலமாக அனைத்து உதவிகளும் செய்யப்படும். அரசின் சார்பில், பதப்படுத்துகின்ற கிடங்கு அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்து மிகுந்த, ஏற்றுமதிக்கு உகந்த, தரமான சிறிய வெங்காயம் அந்தப் பகுதியில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அதேநோத்தில் அந்த வெங்காயம் அனைத்து அண்டை மாவட்டங்களுக்கும், அண்டை மாநிலங்களான கேரளா, மைசூர் போன்ற பகுதிகளுக்கும் அதேபோல, இலங்கை, சிங்கப்பூர் போன்ற அண்டை நாடுகளுக்கும் அந்தப் பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த வெங்காய ஏற்றுமதிக்கு ஏற்றாற்போல--அண்மையில்கூட--நேற்று மாலை 4-00 மணியளவில் வைத்தியநாதபுரம் என்ற ஊராட்சியிலே தீ விபத்து ஏற்பட்டு 13 கிராமங்கள் எரிந்து சாம்பலாகிவிட்டன. அங்கேயிருக்கின்ற மக்காச்சோளம், பருத்தி மற்றும் வெங்காயம் போன்ற பொருட்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. ஆகவே, இதுபோன்ற-- இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் விபத்துகளிலிருந்து தடுப்பதற்கும், அந்தப் பகுதியினுடைய வெங்காய உற்பத்தியாளர்களுடைய வசதியைக் கருத்திற்கொண்டும் அமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்கின்ற பதிலையே சொல்லாமல், இதிலே தனிக்கவனம் செலுத்தி, அங்கே வெங்காய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலுங்கூட, அரசின் சார்பிலே குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற வாய்ப்பு இல்லை என்றுதான் சொல்லியிருக்கின்றேன். தனியார் முன்வந்தால் அதற்கான நிதியுதவியை மத்திய அரசு தேசிய தோட்டக்கலை வாரியம் (N.H.B) மூலமாக முதலீட்டு மானியம் பெற்றுத் தரப்படும் என்றும் சொல்லியிருக்கின்றேன்.

*முற்பகல் 9-40*

ஏன் அரசின்மூலம் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வாய்ப்பில்லை என்று சொன்னால், ஏற்கெனவே கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் வெங்காயத்திற்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க இந்த அரசு அறிவித்து, அதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. மூன்று முறை ஒப்பந்தங்கள்



கோரப்பட்டும், யாரும் முன்வரவில்லை. இப்பொழுது நான்காவது முறையாக ஒப்பந்தங்கள் கோர வேண்டிய நிலை இருக்கிறது. ஆக, இதுபோன்ற காலதாமதத்தைத் தவிர்க்க தனியார் முன்வந்தால், அவர்களுக்கு தேசிய தோட்டக்கலை குழுமூலமாக மானிய உதவி பெற்றுத் தருவதற்குதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**223—**

## வாய்க்கால் சீரமைப்பு

*** 9846—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதி, ஆர். பட்டினம் ஏரியின் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேறும் வாய்க்கால்களைச் சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். பட்டினம் ஏரியிலுள்ள நீர்வரத்து மற்றும் நீர் வெளியேறும் வாய்க்கால்களைச் சீரமைக்கும் திட்டம் உண்டா என்று கேட்டிருக்கிறார்கள். ஆர். பட்டினத்திற்கு ஆலத்தூர் ஏரியிலிருந்து வரத்துக் கால்வாய் வருகிறது. 3½ கிலோ மீட்டர் தூரம் உள்ள அந்த வரத்துக் கால்வாயில் ஏற்கெனவே 2 கிலோ மீட்டர் தூரம் சீரமைக்கப்பட்டுவிட்டது. மீதியிருப்பதற்கு இந்த ஆண்டு maintenance-லே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதனுடைய மதகுகள் சீரமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். காவிரி பாய்கிற டெல்டா பகுதியிலே உள்ள 216 மதகுகளைச் சீரமைக்க கலைஞருடைய அரசு 30 கோடி ரூபாய் ஒதுக்கி, 8-4-2008-லே ஆணையும் பிறப்பித்துவிட்டது. அப்படிச் சீரமைக்கிற அந்தப் பட்டியலில் ஆர். பட்டினம் ஏரியில் இருக்கிற அந்த மதகைச் சீரமைப்பதற்காக சுமார் 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்கு டெண்டரும் போடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

[2008 மே 8

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராசிபுரம் தொகுதி, ஆர். பட்டினம் ஏரியானது, போகமலை, கீழூர் ஆகிய இரண்டு மலைத் தொடர்ச்சிகளிலிருந்து மழைக் காலங்களில் பெய்கின்ற நீர் வந்து சேரக்கூடிய ஒரு பெரிய ஏரியாகும். அதன் நீர்வரத்து வாய்க்காலினுடைய நீளம் சுமார் 1 கிலோ மீட்டர் அளவிற்கு இருக்கின்றது. அதேபோல ஏரியின் மொத்தப் பரப்பளவு 126.76 ஏக்கர். நீர் வெளியேறும் வாய்க்காலின் நீளம் 710 மீட்டர். ஆகவே, இதைச் சீர்செய்வதன்மூலம் சுமார் 300 ஏக்கர் விவசாய நிலம் பயனடைய வாய்ப்பு உள்ளது. ஆகவே, இந்த வாய்க்காலினைச் சீரமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மேலும், 30-4-2008 அன்று இரண்டு அணைகள் கட்ட வேண்டுமென்று நான் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான யோசனையை அரசுக்குத் தெரிவித்ததற்கு நன்றி என்று கூறினார்கள். தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞருடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே ஆக்கபூர்வமான பல்வேறு திட்டங்களையெல்லாம் செய்யக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் அமைச்சர் அவர்கள் அதையும் செய்து தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த ஏரியினுடைய முக்கியத்துவத்தை இங்கே தெரிவித்தார்கள். அதை உணர்ந்த காரணத்தால்தான் வரத்துக் கால்வாய்கள் சீரமைப்பும், மதகுகள் சீரமைப்பும் எவ்வளவு தொகையிலே செய்யப்படும் என்ற விவரத்தை முதலிலேயே நான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதியிலே ஏற்காடு மலையிலிருந்து வருகின்ற மழைநீர் மேற்கு சிரபுங்கா ஆறு, கிழங்கு சிரபுங்கா ஆறுகளை வந்து அடைகின்றது. வருகின்ற அந்த வாய்க்கால் பகுதி நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அந்த இரண்டு ஆறுகளுக்கும் வருகின்ற அந்த வாய்க்காலைச் சீரமைத்துக் கொடுப்பாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது கோரிக்கை வைத்திருக்கிறார். அதுகுறித்து விவரம் அறிந்து தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இராசிபுரம் தொகுதியில் மட்டுமல்ல; பொதுவாக தமிழகம் எங்கும் இருக்கின்ற ஏரிகளில், குளங்களில், பாசனத்திற்கு வரவேண்டிய நீரை ஒழுங்குபடுத்த வேண்டிய மதகுகள், Shutters, Sluices, இவையெல்லாம் மிகவும் பழுதுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே பராமரிப்புச் செலவிற்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருக்கின்றது. உதாரணமாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற சித்தாறு basis, சித்தாறு division, அதில் ஏறக்குறைய 200, 300 குளங்கள் இருக்கின்றன. ஆனால், பராமரிப்புக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை வருடத்திற்கு எட்டு இலட்சம் ரூபாய் அல்லது எட்டரை இலட்சம் ரூபாய். ஆகவே அந்த மதகுகளை, மடைகளைப் பராமரிக்க முடியாமல் அந்த விவசாயிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். பாசனக் குழுக்களை அமைத்து விவசாயிகளிடமே அந்தப் பராமரிப்பை விடுவதாக அரசு அறிவித்தது. ஆனால், அந்த விவசாயிகளுடைய பாசனக் குழுக்கள் எதுவும் இப்பொழுது முறையாகச் செயல்படுவதாகத் தெரியவில்லை. எனவே, நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புவது என்னவென்றால்

[2008 மே 8

இப்பொழுது நாம் நிலத் தீர்வையை வசூலிக்கிறோம். அந்த நிலத் தீர்வை என்பது நம்முடைய வருவாயிலே மிகமிகக் குறைவு, smallest portion. அதனை அப்படியே வசூலித்து அந்த விவசாயிகளிடம் கொடுத்து அந்த மதகுகள், கண்மாய்களில் நீர் வருகின்ற அந்தப் பாதைகளைச் சரி செய்ய அரசு முன்வருமா என்றும், பாசனக் குழுக்களுக்கு உயிரூட்ட அரசு முன்வருமா என்றும், பாராமரிப்புச் செலவுத் தொகையினை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்றும் அறிய ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய் பராமரிப்புக்கு system tanks அதற்கு இவ்வளவு என்றும், non-system tanks அதற்கு இவ்வளவு என்றும் ஒதுக்குகிறோம். அதன் அடிப்படையில் அதே பணம் போதுமானதாகக்கூட இருப்பது இல்லை; சில நேரங்களில் மிகையாகத் தேவைப்படுகிறது. அப்போதுதான் சில திட்டங்களின் அடிப்படையிலே அந்தப் பணிகளை நாம் மேற்கொள்கிறோம். உதாரணத்திற்கு, இப்பொழுது உலக வங்கியினுடைய உதவியோடு நடைபெறுகின்ற IAMWARM நீர்வளம் மற்றும் நில வளத் திட்டத்தின் அடிப்படையில் 5,000 ஏரிகளைச் சீரமைக்கிற பணிகளை நாம் எடுத்திருக்கிறோம். அங்கே வரத்துக் கால்வாய், பாசனக் கால்வாய், மதகுகள் மற்றும் கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகள் நடைபெற இருக்கின்றன. மொத்தம் தமிழ்நாட்டில் இருக்கிற 30,000, 40,000 ஏரிகளில் பொதுப் பணித் துறையின்கீழ் வருவது 10,000 ஏரிகள்தான். அதிலே பெரும்பகுதியான ஏரிகளை இப்படி நாங்கள் சீரமைக்கிறோம். பற்றாக்குறைக்கு நபார்டு வங்கியும், ஒரு சில பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

பாசனச் சங்கதாரர்களைப் பொறுத்தவரையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்பது உலக வங்கியினுடைய திட்டங்களிலே ஒன்று. சென்ற முறை கழக ஆட்சி இருக்கிறபோதே பல இடங்களில் பாசனச் சங்கங்களை உருவாக்கியிருக்கிறோம். அவர்களுக்குத் தேர்தலும் நடைபெற்று சில இடங்களில், ஏன் பல இடங்களில் முறையாக நடைபெறுகிறது. சில இடங்களில் அங்கேயும் அரசியல் குறுக்கிட்டுவிடுகிறது. ஆனாலும் இந்த முறை பாசனச் சங்கங்களில்



2008 மே 8]

பாசனதாரர்களை ஊக்குவிக்க வேண்டும், சங்கங்களைப் பெருக்க வேண்டும் என்பதற்குத் தனியாக அதிகாரிகளையே நாங்கள் நியமித்து இருக்கிறோம். அவர்கள் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சங்கங்களுக்கு அரசாங்கம் சார்பிலே ஓரளவுக்குப் பணத்தைக் கொடுக்கிறோம், மீதி அவர்களும் போட வேண்டுமென்று; சில இடங்களிலே அவர்களால் அது முடியாமல் போய்விடுகிறது. எது எப்படி இருந்தாலும் சிறுசிறு பணிகளை அந்தச் சங்கத்தினரிடையே ஒப்படைக்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, IAMWARM திட்டத்திலே 100 ஏக்கருக்கு மேலே இருக்கிற கண்மாய்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு உலக வங்கியிலே நிதி பெற்று நாம் சீரமைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், 100 ஏக்கருக்குக் கீழே இருக்கிற Minor irrigation tanks, அதைப்போல பஞ்சாயத்து யூனியன் control-லில் இருக்கின்ற 50 ஏக்கருக்கு உட்பட்ட கண்மாய்கள், இப்படி தென்மாவட்டங்களிலே நிறைய கண்மாய்கள் இருக்கின்றன. நம்முடைய பரமக்குடிக்கு நீர்ப்பாசனக் கருத்தரங்கிற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்தபோது, அந்தக் கண்மாய்களையும் IAMWARM திட்டத்திலே ஏதாவது நிதி ஒதுக்கி—பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி இல்லாத காரணத்தினாலே இந்தக் கண்மாய்களையும் சீரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்று நாம் கேட்டிருந்தோம். அதற்காக 180 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? ஆகவே, இதுபோன்று 100 ஏக்கருக்குக் கீழே இருக்கின்ற கண்மாய்களை மிகவும் அவசியமாக சீரமைக்க வேண்டியிருக்கிற காரணத்தினாலே அதற்கான கருத்துரு அமைச்சரிடத்திலே உள்ளதா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் சொன்னதைப்போல், தமிழ்நாட்டிலே 39,000 ஏரிகள்

இருக்கின்றன. அவற்றிலே பொதுப் பணித் துறையின்கீழ் 10,000 ஏரிகள் இருக்கின்றன. Jamin tank-கள் 5,000 6,000 tank-கள் இருக்கின்றன. இந்தப் பொதுப் பணித் துறை tank-கள் மற்றும் ஏரிகளும் Jamin tank களும்தான் பொதுப் பணித் துறையின்கீழ் வருகின்றன. இத்தனை ஏக்கர் பாசனப் பகுதிகள் இருந்தால் அவற்றை நாங்கள் சீரமைப்போம் என்று எடுத்துக்கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனுடைய அந்த ஏரிகளினுடைய பொறுப்பு உள்ளாட்சித் துறையிடம் இருக்கிறது. அவற்றையும் எடுத்துச் செய்யக்கூடாதா என்பது மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி. அந்த எண்ணம் எங்களுக்கும் உண்டு. ஆனால் அப்படிச் சில இடங்களிலே நாங்கள் ஏரிகளை IAMWARM திட்டத்திலே எடுத்தோம். ஆனால் உலக வங்கி அதை ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று கழித்துவிட்டார்கள். ஆகையினால் அதற்கு ஒரு தனித் திட்டம்தான் வகுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி.

*முற்பகல் 9-50*

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, கோவை, ஈரோடு மாவட்டங்களுக்கென்று நீண்ட நாட்களுக்கு முன்பே, கருத்துரு உருவாக்கப்பட்ட, பவானிசாகர் அணையிலிருந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறபோது, அணை நிரம்பி, வழிந்து கடலில் கலக்கிற நீரைத் திறந்த வெளிக் கால்வாய்மூலமாக, கோவை, ஈரோடு மாவட்டங்களிலுள்ள குளம், குட்டைகளில் நீரை நிரப்புகின்ற அத்திக்கடவு-அவிநாசி திட்டம், ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டாலும்கூட, காவிரி நதி நீர்த் தாவா இருந்த காரணத்தினாலே அதை உடனடியாக அமலாக்க முடியவில்லை. ஆகவே, தற்போது காவிரி நதி ட்ரிபியூனலினுடைய இறுதித் தீர்ப்பு வெளி வந்திருக்கின்ற காரணத்தினால், தற்போது அந்தப் பிரச்சினையில்லை என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சிக்கு வந்திருந்தபோது, நீர்ப்பாசனக் கருத்தரங்கு நோத்திலே, இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். பொதுப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கையிலே அந்த அறிவிப்பு வருமென்று அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்தார்கள், வரவில்லை. வருகிற ஆண்டிலாவது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தைப்பற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னிடத்திலே பலமுறை எடுத்துச்சொல்லி, அதை ஆக்கபூர்வமாகச் செய்வதற்கு ஏதாவது வழியிருக்கிறதா, தேடு என்று சொன்னார்கள். இந்த அரசுக்கு அதை நிறைவேற்றுவதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. காரணம், மிகையாக ஓடிவருகிற நீரை எடுக்கிறோம் என்றுதான் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். ட்ரிபியூனல் வந்த பிறகு, பிரச்சினை தீர்ந்தது என்றுதான் நினைத்தோம். ஆனால், முதுகுவலிபோய், திருகுவலி வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது, ஒகேனக்கல்லிலிருந்து குடிநீருக்கு 1¼ டி.எம்.சி. தண்ணீரை எடுப்பதற்கே கர்நாடகம் மிகப்பெரிய தகராறு செய்துகொண்டிருக்கிறது. இதற்கும் நாங்கள் தண்ணீரை எடுக்கப் போகிறோம் என்று சொன்னால், மீண்டும் ட்ரிபியூனல் முன்பு வழக்குத் தொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. நாம் இப்போது 5(3)-யிலே ட்ரிபியூனலிலே ஒரு வழக்கு போட்டிருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திற்கும் அது வரும். ஆகவே, திட்டவட்டமாகச் சொல்கிறேன், இந்த அரசைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அத்திக்கடவு-அவிநாசி திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஓர் ஆர்வமுண்டு. இந்த அரசும், அவர்களுடைய ஆணையை ஏற்றுச் செயல்படுவதற்கு நானும் சித்தமாக இருக்கிறோம். ஆனால், சிலவற்றையெல்லாம் காலம், நேரம் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. அறிவித்துவிட்டு செய்யாமல் விடுவதல்ல கலைஞர் அவர்களுடைய அரசு. சொன்னால் செய்யக்கூடிய அரசு. ஆகையினால், நேரங்காலம் பார்த்து, அத்திக்கடவுக்கு அடிக்கல் நாட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையில் வெலிங்டன் ஏரிக்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, ஒரு வருடமாக ஆய்வு செய்து, கடந்த வாரம் ஆய்வறிக்கை அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பணி எப்போது தொடங்கப்படும்? வருகின்ற பருவ மழை காலத்திற்கு முன்பு அந்தப் பணி முடிக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 மே 8

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெலிங்டன் ஏரிப் பிரச்சினை, 1913 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த பிரச்சினை. முதல் உலக மகா யுத்தத்திலே மண்ணைக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டார்கள். 7, 8 முறை, வெள்ளைக்காரன் காலத்திலும்சரி, அதற்குப்பின் வந்த காங்கிரஸ் காலத்திலும்சரி, அதற்குப்பின் வந்த எங்கள் காலத்திலும்சரி, ரிப்பேர் செய்கிறோம். ஆனால், கரை அமிழ்ந்துகொண்டேயிருக்கிறது. ஆகையினால், இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே 20 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அந்த 20 கோடி ரூபாயைக்கொண்டு, திட்டமிடாமல் மீண்டும் இந்த நிலம் பழுது ஏற்படாமல் செய்யவேண்டுமானால், அதைத் தீர யோசிக்க வேண்டுமென்றுதான், மிகப் பெரிய டெக்னிக்கல் வல்லுநர் மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், நம்முடைய பொதுப் பணித் துறையில் இருக்கின்ற பல நிர்வாகிகளையும் உள்ளடக்கி, ஒரு குழு அமைத்து, அவர்கள் ஆய்ந்து ஓர் அறிக்கையை இப்போது தந்திருக்கிறார்கள். இலாகாவிற்கு அந்த அறிக்கை அனுப்பிவைக்கப்படும். பிறகு, அதுகுறித்துப் பரிசீலிக்கப்பட்டு, நிச்சயமாக நிறைவேற்றப்படும். அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கிய பணம் இருக்கிறது. ஆனால், உருப்படியாகக் காரியம் செய்ய வேண்டுமென்பதால், அரசாங்கம் சற்று யோசித்துச் செய்து கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது உங்களைக் கூப்பிடுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 39 குளங்களில் தண்ணீரைச் சேமித்திட, 2,500 ஏக்கர் பாசன வசதி பெற்றிட, நிலத்தடி நீர் மேம்பட, விவசாயிகள் வாழ்வு செழித்திட, இந்த ஆண்டு 18 ஆம் கால்வாய்த் திட்டம் இயக்கத்திற்கு வருமா என்று கேட்பதோடு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தங்கள்மூலம் வழங்கப்பட்ட இரண்டு குளங்கள் செப்பனிடுகின்ற பணி, கம்பம் மற்றும் திருமங்கலம் தொகுதியில் இன்னும் தொடங்கப்படவில்லை. குளங்களைச் செப்பனிடுகின்ற பணிகளை விரைவில் தொடங்கிட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? சண்முகா நதி நீர்த் தேக்கத்தில் 51 அடி தண்ணீர் தேங்கியிருக்கின்றது. அதை உடனடியாகப் பாசனத்திற்குத் திறந்துவிட முடியுமா என்று பேரவைத் தலைவர்மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2008 மே 8]

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 ஆம் கால்வாயில் அடைபட்டிருந்த அடைப்புக்களையெல்லாம் எடுப்பதற்காக, முதல்வர் கலைஞர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் நிச்சயமாக 18 ஆம் கால்வாய் வேலை முடியும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சண்முகா நதியிலிருந்து தண்ணீர் திறக்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அது குறித்து, இந்த அவை முடிந்தவுடன் அதிகாரிகளுடன் கலந்து பேசி, நாளைக்குள் அவர்களிடத்திலே எப்பொழுது திறக்கிறோம் என்று தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் லேட்டாகக் கொடுத்திருப்பீர்கள், அதுதான். ஆனால், நீங்கள் கொடுத்த அந்தக் குளங்கள், that is called ஏரி, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருந்தால் அதையும் நாங்கள் எடுத்துக்கொள்வோம். சில நேரங்களில், பல உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன் tank-ஐயும் சேர்த்துக் கொடுத்துவிடுகிறார்கள். அதை நாங்கள் எடுக்க முடியாது. இன்னும் சிலர் என்ன பண்ணுகிறார்கள் என்றால், குளம் இல்லாவிட்டால் பரவாயில்லை, ஒரு கால்வாய் வெட்டு என்கிறார்கள். அப்படி முடியாது. குளத்திற்கு என்றால், குளம்தான் வெட்ட முடியும். ஆகையினால், அதிலே சிலர் எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும், திரு. இராமகிருஷ்ணனுடைய கேள்விக்கான பதிலை நாளை காலையில் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில் வத்தலக்குண்டு யூனியனிலுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகிலுள்ள கல்தேக்கத்திலிருந்து தாமரைக்குளம் வடிகால் கண்மாய், செங்கட்டாம்பட்டிக் கண்மாய், கொங்கர்குளம் வரையிலுள்ள நீர் வெளியேறும் கால்வாய்களைச்

சீரமைத்து சிமெண்ட் கால்வாய்களை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த சில குளங்களில், ஏற்கெனவே பழுதுபார்க்கிற பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்பொழுது அவர் சொன்ன குளங்களைச் செப்பனிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நீண்டகாலப் பிரச்சினை--நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்--களத்தூரான் கால்வாய் செங்கல்பட்டு நீஞ்சல்மடுவு அணைத் திட்டம், கடந்த நிதிநிலை அறிக்கையிலே 1½ கோடி ரூபாயிலே செப்பனிடப்படும் என்று அறிவித்தார்கள். அது இன்னும் கிடப்பிலே கிடக்கிறது. அதை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் கூட்டத்தொடரிலேயே, செங்கல்பட்டு கொளவாய் ஏரி ஆழப்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதையும் ஆழப்படுத்துவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களத்தூரான் கால்வாய் கிடப்பிலே இல்லை, நபார்டிலே கிடக்கிறது. ஆகையினால், நபார்டிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வந்தவுடனே வேலை தொடங்கப்படும். (குறுக்கீடு) கொளவாய் ஏரியை என்ன செய்ய வேண்டும்? கொளவாய் ஏரியிலே, எப்பொழுதும், எந்தக் கோடையிலும் தண்ணீர் இருக்கும். தண்ணீர் இருக்கின்ற காரணத்தினால்தான், சுற்றுலாத் துறைகூட படகு



விட்டிருக்கிறார்கள். ஆகவே, தண்ணீர் வற்றவே வற்றாது. அதை எப்படி ஆழப்படுத்துவது? அங்கே இருக்கின்ற தண்ணீர் போதும் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *224*, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**224—**

## போக்குவரத்து பகுதி அலுவலகம்

***38562—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறில் போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செய்யாறு பகுதியில், போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அலுவலகம் அமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயினுடைய கையிலே ஏர் இல்லையென்றால், இன்றைக்கு விவசாயம் இல்லை, வயிற்றுக்குச் சோறு இல்லை. அதைப்போல, கலைஞருடைய கையிலே இன்றைக்கு நேரு இல்லையென்றால், போக்குவரத்துத் துறை உலகத் தரத்திற்கு இணையாக வளர்ந்திருக்காது என்கிற நிலை. இந்த நிலையிலே செய்யாறிலே போக்குவரத்துத் துறையின் ஒரு பகுதி அலுவலகம் அமைத்துத்தா வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2008 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து அருகில் இருக்கின்ற R.T.O. அலுவலகத்தில் எவ்வளவு வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன, அதனால் பொதுமக்களுக்கு என்ன நன்மை என்பதை ஆராய்ந்து, வருங்காலத்தில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட அந்த மாவட்டத்திலே, திருவண்ணாமலையிலேயிருந்து 85 கிலோ மீட்டர் தூரத்திலும், காஞ்சிபுரத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திலும் செய்யாறு இருக்கிறது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதியாக இருக்கின்ற இந்தப் பகுதிக்கு, எப்படி கடந்த ஆண்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்டத்திலே அரக்கோணத்திலே ஓர் அலுவலகத்தைத் திறந்தார்களோ, அப்படி இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்திலே எல்லை வட்டாரமாக இருக்கக்கூடிய செய்யாறு பகுதியிலே ஒரு பகுதி அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 15 புதிய R.T.O. அலுவலகங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். புதியதாக 14 யூனிட் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. செக்-போஸ்ட் ஒன்றுக்கும் கூடுதலாக அனுமதி அளித்திருக்கிறார்கள். Zonal Office என்று DTC Office நான்கு புதிய அலுவலகங்களுக்கு இப்போது அனுமதி அளித்திருக்கிறார்கள். 10 இடங்களிலே புதிய Testing Track நல்ல ஓட்டுநர்களை



2008 மே 8]

உருவாக்குவதற்காக, அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களைக் காட்டிலும், மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக ஒரு கோடி வாகனங்களுக்குமேல் தமிழ்நாட்டில் இருக்கின்றபடியால் எந்த இடத்தில் தேவையிருக்கிறதோ அந்த இடத்தில் போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் தொடங்க அனுமதியை ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, உங்களது கோரிக்கை வருங்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். இப்போதுகூட Joint Transport அலுவலகத்தை காஞ்சிபுரத்தில் அமைப்பதற்காகக் கருத்துரு வந்திருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, செய்யாறில் நிச்சயமாக இதுகுறித்து கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**225—**

## கயிறு தொழிற்சாலை

*** 34442—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ஈத்தாமொழி பகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நேரடியாக கயிறு சார்ந்த தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஸ்பூரூட்டி என்று அழைக்கப்படும் பாரம்பரியத் தொழில்களைப் புத்துயிரூட்டும் திட்டத்தின்படி கயிறு குழுமம் அமைக்க மைய அரசும் மாநில அரசும் நிதி உதவி வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

[2008 மே 8

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு தொழிற்சாலையும் அங்கே இல்லை. படித்தவர்கள் அதிகம் உள்ள எங்கள் மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் வேலை பார்ப்பதற்கு எந்தத் தொழிற்சாலை வசதியும் இல்லாத காரணத்தால் பிழைப்பிற்காக வெளி மாவட்டம், வெளி மாநிலம், வெளி நாடு என்று அலைய வேண்டியிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல், தென்னை, இரப்பர், வாழை ஆகிய விவசாயம் பெருமளவில் இருக்கின்றன. ஒரு காலகட்டத்தில் ஏராளமான மக்கள் கயிறு முறுக்கும் தொழில் செய்து, அப்படி உற்பத்தியாகும் கயிறு, வெளி மாவட்டம், வெளி மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருந்தது. ஆனால், தற்போது அந்தத் தொழில் மிகவும் பாதிப்படைந்திருக்கிறது. அந்தத் தொழில் செய்த மக்கள் பெரும்பாலும் வறுமையில் வாடுகிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள்கூட, தென் மாவட்ட மக்களின் வளர்ச்சிக்காக சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தொழிற்கொள்கையில்கூட, பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி எங்கள் மாவட்டத்திலும் ஒரு தொழிற்சாலை அரசு சார்பில் உள்ளது என நாங்கள் பெருமைப்படக்கூடியவகையில் எனது நாகர்கோவில் தொகுதியில், தென்னை விவசாயம் அதிகம் நடைபெறும் ஈத்தாமொழி பகுதியில் ஒரு கயிறு தொழிற்சாலையினை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதி, ஈத்தாமொழி பகுதியில், தொழில் வணிகத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டில் 1961 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட கயிறு விற்பனை தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, 367 உறுப்பினர்களைக் கொண்டு, 55 அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். சங்கத்தின்மூலம் ஆண்டிற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கயிறு விற்பனை நடந்து வருகிறது. இந்தச் சங்கத்தில் உற்பத்தி மேலும் பெருக வேண்டும் என்பதற்காக, தமிழக அரசு ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 இலட்சம் ரூபாய் முதலீட்டில் தானியங்கி கயிறு தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, இரு பிரி கயிறு பிரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தச் சங்கத்தின்மூலம் கயிறு திரித்தல், பாய், மெத்தைகள்



2008 மே 8]

மற்றும் தேயிலைப் பை தயாரித்தல் போன்ற தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் கயிறு தொழில் வாய்ப்புகள் குறித்துத் தெரிவிக்க ஆயத்தமாக உள்ளது. ஆர்வம் உள்ள தொழில்முனைவோர்கள் தொடர்புகொண்டால் தேவையான அனைத்து வழிகாட்டுதல்களையும் இச்சங்கம் வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கயிறு அங்கே விற்பனை செய்யப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், கயிறு உற்பத்தி குடிசைத் தொழில் போல பல இடங்களில் இருக்கின்றன. தென்னையிலிருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள்மூலம், கயிறு, தரைவிரிப்பான், பிரஷ் மற்றும் அதன் கழிவுப்பொருட்களிலிருந்து குஷன் பொருட்கள் மற்றும் ஏராளமான பொருட்கள் செய்யப் பயன்படுகிறது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக சிறிய அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல சிலர் தொழிலை செய்தாலும்கூட, இங்கே இதிலே அரசு தனிக் கவனம் செலுத்தக்கூடிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. நான் குறிப்பிடும் இடத்தில் ஒரு கயிறு தொழிற்சாலையை அரசு சார்பில் அமைக்க முன்வந்தால், பலருக்கு இதன்மூலம் வேலை கிடைக்கும். அதையொட்டியுள்ள பகுதிகளும் சிறப்புப்பெறும். அதற்கான இடவசதி கூட அங்கே இருக்கிறது. எனவே, தென்னை விவசாயம் அதிகம் உள்ள எனது தொகுதிக்குட்பட்ட ஈத்தாமொழி பகுதியில், கயிறு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துறையின் சார்பில் அரசு அமைக்க முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் இல்லையென்றாலும், தனியார் தொழில் முனைவோர்கள் கயிறு தொழிற்சாலைகள் அமைக்க முன்வந்தால்

அத்தொழிலை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல் பெறுதல், மானிய உதவி, சந்தை உதவி ஆகியவற்றுக்குத் தேவையான உதவிகளை கன்னியாகுமரி மாவட்ட தொழில் மையம் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த பெரிய மற்றும் சிறிய தொழில் கொள்கையில் ஏராளமான மானிய உதவிகள் தொழில் செய்பவர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவற்றைப் பயன்படுத்தி, எந்தத் தொழில் வேண்டுமென்றாலும் செய்யலாம். மேலும், உங்களுடைய மாவட்டத்திலே சில பகுதிகள் தொழிலிலே பின்தங்கிய பகுதியாகக்கூட முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நம்முடைய தமிழக அரசின் சார்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான கொள்கை அறிக்கை வெளியிடப்பட்டு, நேற்று இந்த அவையில் மானியக் கோரிக்கையும் நிறைவேற்றப்படுகிற நேரத்தில், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொழில் தொடங்க வாருங்கள் என்ற ஓர் அறிவிப்பையும் செய்திருக்கிறார்கள். இந்தக் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள்தான் அந்தந்தப் பகுதியிலே கிடைக்கிற மூலப்பொருளைக் கொண்டும், அந்தப் பகுதி மக்களுடைய தேவைக்கேற்பவும், சிறு தொழில்களைக் குறைந்த முதலீட்டில் தொடங்குவதற்கு வாய்ப்பாகவும் இருக்கும். இது வேலைவாய்ப்பைப் பெருக்கவும், அதேநேரத்தில் உற்பத்தியைப் பெருக்கவும், அந்தப் பகுதி மக்களின் வாங்கு சக்தியைக் கூட்டுவதற்கும் வாய்ப்பாக இருக்கிற காரணத்தாலே தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அளவிலே தொழில் தொடங்க முன்வருபவர்கள் வருகிற நேரத்தில், விண்ணப்பிக்கிற நேரத்தில், தங்கு தடையில்லாமல் அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா, மானியம் வழங்குமா என்பதையும் அறிய விரும்புகிற அதேவேளையில், இங்கே கயிறு தொழிற்சாலை பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். சேலம் மாவட்டத்திலே ஓமலூர், தாரமங்கலம் பகுதி, கன்னியாகுமரி மாவட்டப் பகுதி, பல்வேறு மாவட்டப் பகுதிகளிலே கயிறு தொழில் வேகமாக நடந்துகொண்டிருக்கிறது, நிறைய பேருக்கு வேலைவாய்ப்பையும் கொடுக்கிறது. ஆனால், சமீபத்திலே இந்தக் கயிறு உற்பத்தியைவிட அதை எரிபொருளாகப்



பயன்படுத்தலாம் என்ற ஒரு நிலை மாறி இருக்கிறது. ஆகவே, எரிபொருளுக்குப் பயன்படுத்துவதைவிட, கயிறுதான் வேலைவாய்ப்பையும், ஏற்றுமதியைப் பெருக்கவும் வாய்ப்பாக இருக்கிற காரணத்தாலே, எரிபொருளாகப் பயன்படுத்துவதைத் தடை செய்து, கயிறு உற்பத்திக்கு வழிவகுக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்காக சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் பல்வேறு வகையான சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குறுந்தொழில்கள், அதாவது 25 இலட்சம் ரூபாய்க்குக் கீழே தொடங்குகிற தொழில்கள், குறுந்தொழில்கள் என்று சொல்லப்படும். அவை மாநிலத்தில் எந்தப் பகுதியில், சென்னை உள்பட எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும், அவற்றிற்கு மூலதன மானியம் 15 சதவீதம் என்றால், 3¾ இலட்சம்; 20 சதவீதம் மின் மானியம்; அதேபோல 6 ஆண்டுகளுக்கு வாட் வரி விலக்கு போன்ற சலுகைகள் அறிவிக்கப்படும். தமிழகத்திலே 385 ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றிலே 251 ஒன்றியங்கள் பின்தங்கிய ஒன்றியங்களாகக் கண்டறியப்பட்டு, அங்கே தொடங்கப்படுகிற எல்லாத் தொழில்களுக்கும் மானியங்கள் வழங்கப்படும். அதேபோல 385 ஒன்றியங்களிலும் தொடங்கப்படுகிற விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளுடைய வேறுபாட்டு மானியங்களும் வழங்கப்படும்.

அதேபோல, தென்னை நார் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தளவிலே, தமிழகத்திலே 76 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 10 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை நிகழ்த்தப்பட்டு வருகிறது. 10 ஆயிரம் பேர் இதிலே பயன்பெற்று வருகிறார்கள். ஆகவே, அரசு எல்லாவித உதவிகளையும் இந்தத் தொழில் கொள்கையின்மூலம் அறிவித்திருக்கிறது. அவற்றைப் பயன்படுத்தி, தொழில் வளர நீங்கள் எல்லாம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 8

**226—**

## தரம் உயர்த்துதல்

***11632—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கும்மளாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினைப் பேரவைக்கு அளிக்கிறேன். தளி தொகுதி, கும்மளாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை வரும் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதி, கும்மளாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கன்னட மொழி வழி நடுநிலைப் பள்ளியாகும். இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் 8 ஆம் வகுப்பு படித்துவிட்டு, உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், அருகிலுள்ள பெங்களூருக்கு 25 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, என்னுடைய தளி தொகுதியில், கன்னட மொழி வழி உயர்நிலைப் பள்ளியோ, மேல்நிலைப் பள்ளியோ இல்லாத காரணத்தால், பெரும்பாலான மாணவ, மாணவிகள் பள்ளிக் கல்வியோடு தங்களுடைய கல்வியை நிறுத்தி விடுகின்றனர். ஆகவே, சிறுபான்மை மக்களின் பாதுகாவலனாக உள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் சிறுபான்மை மொழி வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையிலே இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய தொகுதியில் தொட்டபேளூர் மற்றும் அலசெட்டி



2008 மே 8]

தெலுங்குவழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த, உரிய முறையில் கருத்துருக்களும், அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை ஒரு இலட்சம் ரூபாயும் செலுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த இரண்டு நடுநிலைப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மூலக் கேள்வி கேட்டிருக்கின்ற பள்ளி, உண்மையிலேயே மிக முக்கியமான பள்ளி. அந்தப் பள்ளியிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் எந்தப் பள்ளியும் இல்லை என்பதும் உண்மை. கடந்த 1970ஆம் வருடத்திலிருந்து நடுநிலைப் பள்ளியாகவும் அது இருக்கின்றது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், பள்ளிக் கல்வியை மாணவர்கள் தொடர்வதற்கு கர்நாடக மாநிலத்தின் எல்லைக்கு செல்லவேண்டிய காரணத்தினால், அங்கே செல்ல முடியாத நிலை இருப்பதையும் நான் அறிந்தேன். எனவே இந்த ஆண்டிலேயே நிச்சயமாக அந்தப் பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இதர பள்ளிகள் குறித்தும் அரசு நிச்சயமாக ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியார் பள்ளிகளிலே Enron கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதைப்போல, அரசுப் பள்ளிகளிலும் Enron கல்வி முறை அறிமுகப்படுத்தப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு) Enron கல்வி முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமச்சந்திரன், மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Enron கல்வி முறை என்றால் என்ன என்பதை முதலில் விளக்கினால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட வாகூர்புதூர், ஆற்காடு தெருக்கு நடுநிலைப் பள்ளிகளை, மாணவர்களின் நலன் கருதி, உயர்நிலைப் பள்ளிகளாக இந்த ஆண்டு தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையான முன்மொழிவுகள் அரசுக்கு வருமென்றால், அரசு அதுகுறித்து பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியிலுள்ள மிட்டபேட்டை ஊராட்சி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும். அப்படிச் செய்தால் அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு அது பேருதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கோரிக்கைகள் பல உறுப்பினர்களிடமிருந்து தங்களுடைய தொகுதிக்கு வேண்டுமென்று வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அமமூர்த்திகூட மொத்தமாக



எல்லாவற்றுக்கும் சேர்த்து அறிவித்துவிட்டுப் போய்விடலாமே என்று சொன்னார். இது அரசினுடைய நிதிநிலைமை பொறுத்த விஷயம். எனவே வரக்கூடிய காலங்களில் படிப்படியாகச் செய்கின்றபோது, உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற இத்தகைய பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அரசு நிச்சயமாக முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம், தருமகுளம் நடுநிலைப் பள்ளியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் அதிகமாகப் படிக்கின்றார்கள். அதைப்போல மிகவும் பின்தங்கிய, விவசாயப் பெருங்குடி மக்கள், ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கின்ற பள்ளிக்கூடம் அது. அந்தப் பள்ளிக்கூட மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிக்குச் செல்லவேண்டுமென்றால், அருகிலே 5 கி.மீ. தூரமுள்ள . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** தனியார் பள்ளிக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. அந்தத் தனியார் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றுள்ள 5, 6 மாணவர்களுக்கு மட்டுமே அங்கே இடம் கிடைக்கின்றது. இதனால் 10 கி.மீ. தூரமுள்ள நாங்கூர், திருவெண்காடு பகுதியிலுள்ள பள்ளிக்கு அவர்கள் செல்லவேண்டியிருப்பதால், அந்த மாணவர்கள் தங்களுடைய படிப்பை நடுநிலைப் பள்ளியோடு, இடையிலேயே நிறுத்திவிடுகின்றார்கள். இதற்கு அந்த மக்களால் பங்களிப்புத் தொகையான ஒரு இலட்சம் ரூபாயும் செலுத்தப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அரசு தரமான கல்வி, சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலையில், நமது தமிழக அரசு இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நடுநிலைக் கல்விக்குப் பிறகு இடைநிலைக் கல்வியை மாணவர்கள் தொடரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான்,

[2008 மே 8

இந்த ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்கின்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இன்று காலையிலேகூட நீங்கள் பத்திரிகையைப் பார்த்திருப்பீர்களென்று சொன்னால், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஓர் அற்புதமான திட்டத்தை வடிவமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இடைநிலைக் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக scholarship கொடுப்பதற்கு ஏறக்குறைய 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு corpus-லே வைத்து வருடத்திற்கு 600 கோடி ரூபாய் அதற்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஓர் அருமையான திட்டத்தை successful-ஆகக் கொண்டு வருவதற்கு மத்திய அமைச்சரிடத்திலே அது ஒப்புதலுக்காக இருக்கின்றது. எனவே இத்தகைய திட்டங்கள் வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லக்கூடிய அந்த நிலைமை சீராக்கப்படும். பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய விஷயத்தில் அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய சூழ்நிலை அந்தப் பகுதியில் நிலவும் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து தரம் உயர்த்துவதிலே ஆர்வம் காட்டும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரில், என்னுடைய பாபநாசம் தொகுதியில் சோழபுரம், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். ஆவன செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலாவது அதைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கண்டிப்பாக சோழபுரம் உள்ளது. காரணம், போன ஆண்டும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து வெட்டுத் தீர்மானத்திலும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த ஆண்டு



2008 மே 8]

மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோதுகூட மறவாமல் சோழபுரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் மறக்காததுபோல நானும் நிச்சயமாக அதை மறக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**227—**

### ஆய்வுக்கூடம்

***34932—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலை புதூர்நாடு வனத் துறை மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை புதூர் நாட்டில், வனத் துறையின் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு நபார்டு வங்கி நிதியுதவியுடன், ஒன்பது இலட்சத்து எண்பத்து நான்காயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) இந்த ஆய்வுக்கூடம் 2008-2009-ல் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தனங்களை விளைவிக்கக்கூடிய என்னுடைய ஜவ்வாது மலையிலே, 15-க்கும் மேற்பட்ட வனத் துறைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லை என்று கடந்த காலத்திலே நான் சொல்லியிருக்கிறேன். அங்கே

[2008 மே 8

பார்த்தீர்களென்றால் Physics, Chemistry, Biology ஆகிய மூன்று ஆய்வுக்கூடங்களும் கிடையாது. இதுவரையிலும் அந்த மலைவாழ் மாணவர்கள் இதுபோன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் கல்வி கற்று வருவதால் அவர்கள் Science-ல் மார்க் எடுக்கமுடியாத சூழ்நிலை, அவலநிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நபார்டிலே கட்டித் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படியென்றால், கடந்த காலத்திலே அந்த மாணவர்களுடைய கல்வித் தரம் எப்படி இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் 1949-லே திரு. கக்கன் அவர்கள் Forest Minister-ஆக இருக்கும்போது அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வந்தார்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, கேள்வியை மாத்திரம் கேளுங்கள். நீங்கள் 1949-க்குப் போய் எப்போது வருவது?

**திரு. கி.க. ராஜா:** கேள்வியைத்தான் கேட்கிறேன். அடுத்து திரு. காமராஜர் அவர்கள் 1957-ல் அந்த மலைக்கு வந்தார்கள். அதன் பிறகு திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருக்கும்போது அந்த மலைக்கு வந்தார்கள். திரு. கே.பி.கே. அவர்கள் வந்தார்கள். அதற்குப் பிறகு யாருமே வரவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாள் வந்து அந்த மலையிலே தங்கி அந்த குழந்தைகளுடைய அவல நிலைகளையெல்லாம் பார்த்து, போக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப்போல, அந்தப் பள்ளிகளுடைய நிலைமை, அதற்கு வேண்டிய கட்டடங்கள் எல்லாம் இல்லாத நிலையைப் போக்குவதற்காகத்தான், சென்ற ஆண்டு 2007-லே நபார்டு வங்கியின் நிதி கேட்டு, அவர்களிடம் ஐந்து கோடியே ஏழு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் நிதியுதவி பெறப்பட்டது. இந்த ஆண்டு அந்தப் பள்ளிகளிலே அவர் கேட்டதைப்போல, ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்கு, உபகரணங்கள் வாங்குவதற்கு, அதைப்போல குடிநீர் வசதிகள், இன்னும் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கும், அதைப்போல கழிப்பிடங்கள் கட்டுவதற்கு, இதுபோன்ற அடிப்படை வசதிகளை அமைத்துத்



2008 மே 8]

தருவதற்கு, நம்முடைய அரசின் சார்பாக எண்பத்தியோரு இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்தப் பணிகளெல்லாம் செய்து முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி.க. ராஜா.

**திரு. கி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுப்போம் என்று சொன்னார்கள், சந்தோஷம். ஆனால், அவர் அங்கு வந்து தங்கி, அந்த நிலைமையைப் பார்க்கிறேன் என்ற ஒரு வார்த்தையை அவர் சொல்லவில்லை. அவர் வரவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதேபோல, அங்கே 14 வகுப்பறைகளுக்கு, 9 வகுப்பறைகள்தான் இருக்கின்றன. மலைப் பகுதி என்பதாலே, நிரம்ப chillness இருக்கிறது. குழந்தைகளெல்லாம் அமர்வதற்கு desk, bench கூடக் கிடையாது. இப்போது இருக்கின்ற ஆய்வுக்கூடத்திற்கு தண்ணீர் வசதி கிடையாது, current கிடையாது. Current இல்லையென்றால் எப்படி ஆய்வுக்கூடம் நடத்தமுடியும் என்பதையும் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு முயற்சி எடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டுக்கொள்வதோடு, பொதுவாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற, மலைகளிலே இருக்கின்ற வனத் துறை கட்டுப்பாட்டிலே இருக்கின்ற எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் அவர் அடிப்படை வசதிகளை இந்த ஆண்டிலாவது செய்து கொடுக்க முன்வருவாரா என்பதையும் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே, என்னுடைய பதிலிலே குறிப்பிட்டேன். அந்த அடிப்படை வசதிகள் அமைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நபார்டு வங்கியிடம் நிதியுதவி பெறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு அதிலே ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே எவ்வளவு அதற்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இருக்கிறேன். எனவே, இதுபோன்ற அடிப்படை வசதிகளை அமைத்து, நிச்சயமாக அந்தப் பள்ளிகளுடைய தரம் உயர்த்தப்படும். அடிப்படை வசதிகள் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் நான் வரவேண்டுமென்றும், நேரிலே பார்க்கவேண்டுமென்றும் விரும்புகிறார். நிச்சயமாக இந்தக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அவர் விரும்பியதைப்போல அந்தப் பகுதிக்கு வந்து அதை நேரிலேயே ஆய்வு செய்து, இன்னும் தேவைப்படுமேயானால் அவையெல்லாம் அங்கே செய்து தரப்படும். அவர் சொல்லியதைப்போல முன்பே அந்தப் பள்ளிக்காகக் கேட்டிருக்கிறார். கணிதப் பயிற்சிப் பாடம் இல்லை, கணினிப் பயிற்சிப் பாடங்கள் இல்லை என்று கேட்டிருக்கிறார். இந்த ஆண்டு நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று அந்தப் பாடங்களும் அந்தப் பள்ளியிலே தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே மாகாண்யம் என்ற பஞ்சாயத்துக்குட்பட்டு காட்டு இலாகா வருகின்றது. அதற்கு அடுத்தாற்போல படப்பை யூனியன் வருகிறது. இந்த இரண்டையும் இணைக்கக்கூடிய அந்தக் காட்டில் பாதை போடுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் அளித்து அதற்குப் பிறகு யூனியனிலே கிட்டத்தட்ட 4½ இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி பள்ளிக்கூடம் பற்றியது.

**திருமதி டி. யசோதா:** கேள்விதான் சார் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ரோடு கேட்கிறீர்கள்.

**திருமதி டி. யசோதா:** நானே இரண்டு வரிகளுக்கு மேல் கேட்க மாட்டேன். 4½ இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வனத் துறையைச் சார்ந்தவர்கள் நாங்கள்தான் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துத் தலைவருக்கு B.D.O. order போட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தப் பணம் காலதாமதம் ஆனதால் திரும்பிப் போய்விட்டது. ஆகவே அந்த வனத் துறைக்கு நடுவிலே போகிற அந்தப் பாதையை வனத் துறையைச் சார்ந்தவர்கள் செய்ய வேண்டுமா அல்லது பஞ்சாயத்து யூனியனே செய்யலாமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



சட்டமன்றப் பேரவை நூலகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் இடையிலே செல்கின்ற அந்தப் பாதைகளையெல்லாம் வனத் துறை சார்பாகத்தான் செய்வதாக இதுவரை ஒரு வரையறை இருக்கிறது. காரணம் இந்தப் பகுதியிலே வேண்டுமென்றால் அது நிலப் பகுதியாக இருக்கிற காரணத்தால் விலங்குகள் மற்ற மிருகங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பொதுவாக வனத் துறையின் சார்பாக செல்கின்ற இடத்திலே வன விலங்குகள் இருக்கும். வனத் துறையின் அதிகாரிகள் சென்றால்தான் அதற்கான பாதுகாப்போடு செல்வார்கள் என்ற காரணத்தாலே அதுபோன்று ஒரு வரையறை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அதைத் தளர்த்துவது என்றால் பல்வேறு பிரச்சினைகள் மற்றவற்றிற்கு எல்லாம் வழிவகுக்கும் என்ற காரணத்தால் வனத் துறையின் சார்பாகத்தான் அது செய்யப்படும். எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் வனத் துறைக்குப் பணம் ஒதுக்கித் தந்தால் உடனடியாக அது நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களிலே அதுபோன்று பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *228*, மாண்புமிகு உறுப்பினர் திரு. என் நன்மாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**228—**

**மேம்பாலம்**

***55806—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, எல்லீஸ் நகர் மேம்பாலப் பணி எப்போது நிறைவுற்று திறப்புவிழா நடைபெறும் என்பதை அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை எல்லீஸ் நகரில் அமையவுள்ள மேம்பாலப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இந்தப் பணியைப் பொறுத்தளவில் இந்த

[2008 மே 8

மாத இறுதியில் அதாவது அரசரடி பகுதியிலிருந்து கட்டபொம்மன் சிலைக்குச் செல்லக்கூடிய பகுதியில் அந்தப் பணி முழுமை பெற இருக்கின்றது. எஞ்சிய பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முழுமை பெற்று திறப்பு விழா தேதி அதற்குப் பிறகு முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மதுரை மக்களுடைய நீண்டகாலக் கனவு. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உரிய விடையை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அரசு உறுதிமொழிக் குழு அங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் தலைமையில் வந்தபொழுது துறை சார்ந்த அதிகாரிகள் ஜூலைக்குள் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். ஏடுகளிலும் அப்படியே செய்தி வந்திருக்கிறது.

நேற்றையதினம் காலையில் எல்லீஸ் நகர் பாலம் திறப்பு என்றே செய்தி வந்துவிட்டது. யார் இதுபோன்ற செய்திகளைத் தருகிறார்கள் என்று தெரியவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் என்பதையும்கூட சுருக்கினால் நல்லது. இல்லாவிட்டால் ஆகஸ்ட் 15 என்பது இந்திய சுதந்திரத் திருநாள், மதுரை மக்களுக்கு அந்த விடுதலை இன்பத்தை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன் முயற்சி எடுத்து அதனைச் செய்ய வேண்டும். நான் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்றேன். இதே அவையில் அவர் இருந்தபொழுது கடிதத்தைப் படித்துவிட்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். கேள்வியின் பொருள் எனக்குப் புரியவில்லை. நான் தயங்கியபோது நான் நெடுஞ்சாலைத் துறையினுடைய மாநில அமைச்சரோடு பேச வேண்டுமா, மத்திய இரயில்வே அமைச்சரோடு பேச வேண்டுமா என்று கேட்டார். இரண்டு பேர்களிடத்திலுமே பேசுங்கள் என்று சொன்னேன். உடனே சிறிது நேரத்திலேயே நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் என்னை அழைத்தார். விவரங்களைச் சொன்னார். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. எனவே, எல்லோருமாகச் சேர்ந்து இந்தப் பணியை ஒரு பெரும் பகுதி நிறைவேற்றி இருக்கிறீர்கள். முழுமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது போக்குவரத்திற்கு இரு சக்கர



2008 மே 8]

வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்களை மட்டுமாவது செல்வதற்கு உரிய வழியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அவ்வாறு செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை எல்லீஸ் நகர் பாலத்தைப் பொறுத்த அளவில், விரைந்து முடித்து அங்கே போக்குவரத்திற்கு ஏற்ற வகையில், அந்தப் பாலப் பணியை முடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். நானும் ஏற்கெனவே பதிலிலே குறிப்பிட்டிருக்கின்றேன். அதாவது, மொத்தம் 4 வழிப் பாதை கொண்டதாக அந்தப் பாலம் அமைக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. அதிலே அரசரடியிலிருந்து மதுரையில் அமைந்துள்ள கட்டபொம்மன் சிலை பகுதிக்குச் செல்லக்கூடிய இருவழிப் பாலப் பணிகள், ஏறத்தாழ 95 சதவீதப் பணிகள் முடிவுற்றுவிட்டன. அணுகு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதிலேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியையாவது முதற்கட்டமாக திறந்துவிடலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கே இருக்கக்கூடிய மாவட்ட நிர்வாகத்தோடு பேசி, அதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படும்.

மீதம் இருக்கக்கூடிய பணிகளும் ஆகஸ்ட் மாதம் முடியும் என்று குறிப்பிட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இன்னும் காலத்தைக் குறுக்கினால் ஏதுவாக இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார். அதை முடிந்த அளவு விரைந்து முடிக்க-- ஏனென்று சொன்னால், நெடுஞ்சாலைத் துறையினுடைய பணியும் நடைபெற்று வருகின்றது. இரயில்வே துறையினுடைய பணியும் நடைபெற்று வருகின்றது. எனவே, அந்தப் பணிகளையும் விரைந்து முடித்து, முடிந்த அளவு முழுமையாக அந்த நான்கு வழி பாலம் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

[2008 மே 8

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவிக்கிறேன். திறப்பு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வந்து அதனைத் திறந்து வைக்க முன்வரவேண்டுமென்கிற விருப்பத்தையும் வெளிப்படுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகரங்களிலே பாலங்கள் திறக்கின்றபொழுது, தமிழ்ச் சான்றோருடைய பெயர்களை வைத்து சிறப்புச் செய்தவர் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள். மறைமலையடிகள் பாலம், திரு.வி.க. பாலம் என்று பல பாலங்களுக்கு பெரியோர்களுடைய பெயர்களை வைத்து வரலாற்றுச் சிறப்பை உண்டாக்கிய பெருமை நம்முடைய முதல்வருக்கு உண்டு. அந்த வகையிலே கத்திப்பாராவிலே இடம் பெறுகின்ற ஒரு புகழ்பெற்ற மேம்பாலத்திற்கு--அங்கே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய சிலை அற்புதமாக இருந்தது. அது மறுபடியும் நிறுவப்படும் என்றாலும்கூட, அந்த மேம்பாலத்திற்கு-- பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பெயரை வைப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து மாநில அரசு முயற்சிக்குமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டு விட்டார்கள், அதை மத்திய அரசுடன் கலந்து பேசி முடிவு செய்யப்படுமா என்று சொல்லி. அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நடைபெற்று வருகின்ற பணி. எனவே மாண்புமிகு முதல்வரோடும், மாண்புமிகு மத்திய தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரோடும் பேசி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நாகை தொகுதியில் அடங்கியுள்ள வேளாங்கண்ணிக்கு அருகில் இருக்கக்கூடிய சிறுதூர் என்கிற கிராமத்தில் மீனவ மக்களுடைய



2008 மே 8]

25 ஆண்டு கால கோரிக்கை இந்த அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வேளாங்கண்ணி சிறுதூர் இணைப்புப் பாலம் அமைக்க அரசு 5 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்தப் பாலம் கட்டுவதைத் தடை செய்வதற்கு வேளாங்கண்ணி பேராலய நிருவாகம், உயர் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறது. தடை ஆணையை விலக்கி பாலம் கட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முழு விளக்கத்தையும் குறிப்பிட்டுவிட்டார்கள். அந்தப் பாலப் பணிக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் வழங்கினார்கள். அதற்குள் அந்த சம்பந்தப்பட்ட இடம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைச் சேர்ந்தது என்று சொல்லி, அதை வைத்து நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களாக எங்களுடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய கோட்டப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் மட்டத்திலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. அதிலே ஆய்வு செய்தோம். அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். அவர்களை அழைத்துப் பேசி, அந்தத் தடையாணையை அவர்களே திரும்பப் பெறக்கூடிய வகையில் அதற்குரிய வழியைக் காணச் சொல்லியிருக்கிறோம். இல்லையென்று சொன்னால், தொடர்ந்து நீதிமன்றத்திலேயே அதைச் சந்தித்து, அந்தத் தடையை நீக்கி அந்த இடத்திலே பாலம் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அருகில் இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் அனைத்தும், தமிழகம் முழுவதும் விபத்துகளைத் தடுப்பதற்காக வைக்கின்ற barricades என்று சொல்லக்கூடிய இரும்புகளால் ஆன அந்தக் கம்பித் தடுப்புகளுடைய அளவு என்பது மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் சின்ன வண்டி வாகனங்களிலே வருகின்றவர்கள் வெளிப்படுத்தும் ஒளிகளை அந்த barricades உள்வாங்கிக்கொள்கிறது. அடுத்த பக்கத்திற்குத் திருப்பிச் செலுத்துகிற வாய்ப்பில்லாத காரணத்தினாலே, நேருக்கு நேர் மோதல்

[2008 மே 8

ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நேற்றிரவு நான் 2 மணியளவில்
கடலூரிலிருந்து வருகின்றபோது கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஒரு
விபத்து ஏற்பட்டு அங்கு உயிருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆக,
விபத்தைத் தடுப்பதற்கு வைக்கப்பட்டிருக்கின்ற அந்த barricades-ஐ
ஒழுங்குபடுத்தி, தேவையான இடங்களில் மட்டும் வைத்து,
தேவையில்லாத இடங்களில் அகற்றுவதற்கும், அதேபோன்று கிழக்குக்
கடற்கரைச் சாலையில் மூன்று வழியில் செல்லக்கூடிய பாதைகளில்
ஒரு வழிக்கு மட்டும் toll plaza அனுமதித்துவிட்டு, மீண்டும் இரண்டை
நிரந்தரமாக மூடிவைத்திருக்கிறார்கள். நேற்றைய முன்தினம்
மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு
உடனடியாக தொலைபேசியிலே தாங்கள் அறிவுறுத்தியும்கூட . . .

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம்
நீட்டிக்கப்படுகிறது.

**திரு. தி. வேல்முருகன்:** அறிவுறுத்தியும்கூட இன்னும் அதே நிலை
நீடிக்கிறது. அதிகக் கட்டணம், ரூ.86 வாங்குகின்ற அந்த நிறுவனம்
இதுபோன்று தவறுகளைத் தொடர்ந்து செய்து வருவதால் அதை
இரத்துச் செய்துவிட்டு நெடுஞ்சாலைத் துறையே நேரடியாக எடுத்து
நடத்துவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு
பிரச்சினைகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்று சாலையில்
வைக்கப்பட்டிருக்கிற அந்த இரும்புத் தடுப்பு, விபத்தை
ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்று
சொல்கிறார். முக்கியச் சாலைகளில் காவல் துறையால், வரக்கூடிய
வாகனங்களைச் சோதனை செய்வதற்கு அல்லது ஏதாவது செய்தி
கிடைக்குமானால் அந்தச் செய்தியை வைத்து அந்த வாகனத்தைப்
பிடிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அந்த முறை, இப்போது
தொடர்ந்து காவல் துறை அலுவலர்கள் சோதனை செய்யாத
நேரத்திலும்கூட அந்தத் தடுப்பு அப்படியே வைக்கப்பட்டுவிடுகிறது.
இதை எங்கள் துறையின்மூலமாக, காவல் துறையினுடைய உயர்
அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். அதிலே யார்
முந்திச் செல்வது என்கின்ற மனப்பான்மை ஏற்பட்டு, கௌரவப்



2008 மே 8]

பிரச்சினை ஏற்பட்டு, யாரும் ஒருவருக்கொருவர் அனுசரித்துச்
செல்லாமல் நேரடியாகச் செல்கின்ற நேரத்திலே அங்கே விபத்து
ஏற்படுகிறது. எனவே, அதைக் காவல் துறையினுடைய அதிகாரிகளுக்கு
எடுத்துச் சொல்லியிருக்கிறோம். காவல் துறையினுடைய அதிகாரிகள்
பரிசோதனை செய்யாத நேரத்திலே அதைச் சாலையினுடைய
ஓரத்திலே எடுத்து வைக்க வேண்டும் என்று சொல்லி, அதுவும் அரசின்
பரிசீலனைக்கு வந்து, அதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அதேபோல இரண்டாவது பிரச்சினை, கிழக்குக் கடற்கரைச்
சாலையைப் பொறுத்தவரையில் சென்னையில் இருந்து பாண்டிச்சேரி
வரை செல்லக்கூடிய அந்தச் சாலையிலே, தமிழ்நாடு சாலை
மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் மேம்படுத்தப்பட்டு, அவர்கள்மூலமாக
நேரடியாக வரி வசூல் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.
மாண்புமிகு உறுப்பினர் கடந்த வாரம் அதுபோன்ற பிரச்சினையை
என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். 3 வழி என்று இருப்பதில்
2 வழியை அடைத்துவிட்டு, ஒரு வழியில் மட்டுமே அந்த வரியை
வசூல் செய்கிறார்கள். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.
பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று சொல்லி சம்பந்தப்பட்ட
அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள்
எங்களிடத்திலே சொன்ன பதில், பகல் முழுவதும் மொத்தம்
4 வழிகளில் வரி வசூல் செய்வதற்கு ஊழியர்களை நியமித்து வரி
வசூல் செய்கிறோம். இரவு நேரத்தில்தான் சுமார் 12 மணியில் இருந்து
காலை 4 மணி, 5 மணி வரை வாகனங்கள் அதிகம் செல்லாத நேரத்தில்
மட்டும் மூன்று வழிகளை அடைத்துவிட்டு ஒரு வழியில் மட்டும் வசூல்
செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பிரச்சினையை, தொடர்ந்து
அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்குத் தீர்வு
காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 229 மற்றும் வினா
எண் 230 ஆகியவை நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால்
அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக்
குறிக்கும்.]

[2008 மே 8

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எதையும் எடுத்துக்கொள்ளும் நிலையில் இல்லை, உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினேழு முதல் நூற்று இருபத்து ஆறு வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 26 மற்றும் 27 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(ஈ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

---



2008 மே 8]

### (அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 29 – சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல், வெட்டுத் தீர்மானம் எண் 29, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 241, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7838, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9290, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12688, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13802, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14488, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2221, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2796, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10738, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12393, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15551, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16422, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17026, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5385, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6440, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9929, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11216, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11393, திரு. டி. மூர்த்தி.

முற்பகல் 10-35

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12085, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12185, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12313, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13930, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14720, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15084, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16180, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17166, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13834, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14996, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15649, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16017, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16869, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1799, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், அந்தநல்லூர் ஒன்றியத்தில், முக்கொம்பு (மேலணை)-ஐச் சுற்றியுள்ள பூங்காக்களைச் சுற்றுலாத் துறையின்மூலம் மேம்பாடு செய்தல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2553, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் அமைந்துள்ள பிச்சாவரம் சுற்றுலா மையத்தின்மூலம் இயக்கப்படும் படகுகள் செல்ல முடியாதவாறு பக்கக் கால்வாய்கள் சேறும் சகதியுமாக உள்ள காரணத்தால் படகுகள் செல்வதற்கு ஏதுவாக முகத்துவாரத்தைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3151, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் உள்ள மதுராந்தகம் ஏரியில் ஒரு படகு குழாம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3724, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் வட்டம், மோர்தானா அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4042, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை, அமிர்தி மலை, பாலமதி, செங்காநத்தம் மலைப் பகுதிகளில் சுற்றுலாத் துறைமூலம் அடிப்படை வசதிகளைப் பெருக்கி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4890, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாரம்பரியமான பரத நாட்டியக் கலையை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5531, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தொகுதி சுற்றுலா மையத்திற்குக் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வசதியாக விமானதளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7318, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டைக்கு அருகில் உள்ள வைகை ஆற்றில்



அமைந்துள்ள பேரணைக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இதுபோன்று அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வருகின்றனர். எனவே, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி பேரணையைச் சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8256, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் அருகில் உள்ள பெருமுக்கல் முக்தியாஜல ஈஸ்வரர் கோயில் மலையை சுற்றலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8929, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள நலிவுற்ற கலைஞர்களான ராஜா ராணி ஆட்டம் ஆடுபவர்கள், தவில் வித்வான் போன்றவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9193, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கமம் என்ற அமைப்பு கலை விழாவை சென்னையில் மட்டுமல்லாது மாவட்டத் தலைநகரங்களில் நடத்தி, கிராமியக் கலைக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9249 திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9283, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9717, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை இரயில் நிலையத்தில் தீபத் திருவிழாக் காலங்களில் சுற்றுலா வழிகாட்டும் சிறப்பு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10042, திரு. வே. செந்தில் பாலாஜி.



**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூரில் இசைப் பள்ளி, இசைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10118, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் சுற்றுலாத் துறையின் மூலமாக பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10188, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, வத்தல்மலையைச் சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10380, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகையை சுற்றுலா மையமாக அறிவித்து அதனை மேம்படுத்த நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10413, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சித்தர் கோயிலில் பயணிகள் தங்குவதற்கு விடுதி வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10824, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் அரச்சலூர் அருகில் உள்ள ஓடாநிலை தீரன் சின்னமலை நினைவு இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10839, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சியில் உள்ள அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயத்தையும் மற்றும் சொக்கநாதர் ஆலயத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11261, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11567, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் சுற்றுலாத் தலத்தைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,24,60,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,49,36,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11764, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியிலுள்ள சுற்றுலாத் தலங்கள் புதுப்பிக்கப்படவும், சுற்றியுள்ள இடங்கள் விரிவுபடுத்தப்படவும் வேண்டும். மேலும், சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல விழாக் காலங்களில் சிறப்புப் பேருந்தை சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்ய

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்றைக்கு நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகளின்மீது சேர்த்தே பேசலாம். இன்றைக்கு இரண்டு அமைச்சர்கள் தங்களுடைய பதிலுரையை வழங்கவுள்ளதால், நேரத்தின் அருமையைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் தங்களது உரையை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

***திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மணியடிப்பதற்குள் என்னுடைய கருத்துகளைச் சொல்லி முடித்து விடுகிறேன். ஆனால், நான் பேசி முடிக்கும்வரை நீங்கள் மணியடிக்கக்கூடாது என்பதையும் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன்.

நிகழும் ஸர்வதாரி ஆண்டு, சித்திரை 26 ஆம் நாள், கௌரி விரதம், அக்ஷய திருதி, சதுர்த்தி விரதம் ஆகிய இச்சிறப்பு மிக்க நன்னாளில் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவைப்பட்டால் அடிப்பேன்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மணி அடியுங்கள், என்னை அடிக்காதீர்கள். என் தகவலால் இன்று யாராவது அசைவம் சாப்பிடாமல் இருந்தால் அவர்களுக்கு என் வருத்தத்தையும் கூறுகிறேன்.

@ 718 முதல் 777 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV மற்றும் V–ஆக அச்சிடப்பட்டுள்ளன.

சென்னை மக்களின் தாகம் தீர்த்த புதிய வீராணம் திட்டம், மழை நீர் சேகரிப்பு, சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பு, ரவுடிகள் ஒழிப்பு, கட்டப் பஞ்சாயத்து. கந்துவட்டி, லாட்டரி ஒழிப்பு, ஆலய, தேவாலய, தர்க்கா அன்னதானத் திட்டங்கள், +1, +2 மாணவ, மாணவியர்களுக்கு இலவச சைக்கிள்கள், பஸ் பாஸ் வழங்கிய இன்றைய ஆட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் இந்தியாவின் இரும்புப் பெண்மணி, தமிழகத்தின் தனிப் பெரும்பான்மை படைத்த (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே கட்சியின் எங்களின் தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த மானியக் கோரிக்கை உரையைக் காணிக்கையாக்குகின்றேன்.

தமிழில் பெயர் சூட்டப்பட்ட திரைப்படங்களுக்கு அரசு அளிக்கும் வரிச் சலுகை மக்களுக்குச் சரியாகச் சென்றடையவில்லை. பெரும்பான்மையான திரையரங்குகளில் முதல் வரிசை மட்டும் 10 ரூபாய் என்றும், அடுத்த வரிசை 90 ரூபாய் முதல் 150 ரூபாய் என்றும் வசூலிக்கப்படுகிறது. 10 ரூபாய் டிக்கெட் வாங்குபவர்கள் தங்கள் bike-ஐ நிறுத்த 20 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. திரையரங்குகளில் வாகனம் நிறுத்த இடம் இருந்தால்தான் அதற்கு அனுமதியே கொடுக்கப்படும் என்று சொல்லப்படும்போது, அந்த வாகனக் கட்டணம் இரத்து செய்யப்பட வேண்டும். அதேசமயம் அந்த வாகனங்களின் பாதுகாப்பிற்கும், அந்தத் திரையரங்கு நிருவாகம் உறுதியளிக்கும்படி செய்யப்பட வேண்டும்.

சிறு முதலீட்டுப் படங்களுக்கு அரசால் வழங்கும் மானியம் ஒவ்வொரு முறையும் அடுத்த நிதி ஆண்டில் வழங்குவதற்குப் பதிலாக, அந்தத் திரைப்படம் வெளிவந்து 90 நாட்களில் வழங்கினால், அந்தப் படத்தின் கடனை அடைக்கவாவது சிறு தயாரிப்பாளர்களுக்கு வசதியாக இருக்கும். பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலும் இதை நான் கேட்கிறேன்.

இப்போது இந்த அரசு ஆட்சி ஏற்றபிறகு தமிழ்நாட்டில் திருட்டு V.C.D. முழுவதுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக, அனைத்தும் திருட்டு D.V.D.-க்களாக வெளிவருகின்றன. இதுவும் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

இப்போது எடுக்கப்பட்டுவரும் மகாத்மா காந்தி திரைப்படத்திற்கும், தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களுடைய இன்றைய வயதையொட்டி 139 இலட்சம் அரசு உதவித் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழ்க் கலைகளில் தொன்மையானது தெருக்கூத்து. அது இன்று மிகவும் நலிந்து வருகிறது. புரசைத் தம்பிரான் போன்றவர்களுடைய படைப்புகளை இயல், இசை, நாடகச் சங்கம்மூலமாக ஆவணப் படங்களாக மாற்றம் செய்யப்பட வேண்டும். முடிந்தால் வியாபார நோக்கமின்றி தமிழ் ஆர்வமுள்ள தொலைக்காட்சிகளில் தினசரி ½ மணி நேரம் இரவு மக்கள் தூங்குவதற்குள் காண்பித்தால் மக்களுக்குச் சென்றடையும். அதேசமயம், ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும் அரசு விழா நிகழ்ச்சிகளில் கண்டிப்பாக இப்படிப்பட்ட கிராமியக் கலை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் கிடைக்கும் சிறு தொகை அந்தக் குடும்பங்களை வாழ வைக்கும்.

தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின்மூலம் முதியோர்களுக்கு மாதம் 300 ரூபாய் ஓய்வூதியத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளீர்கள். ஒரு கலைஞனாக இல்லாமல் வெறும் முதியோராக இருந்தாலே 400 ரூபாய் ஓய்வூதியம் கிடைக்கும்பொழுது, கலைஞன் என்று சொல்லிக்கொண்டு 100 ரூபாய் குறைவாகப் பெறுவது அர்த்தமற்றது. ஆகவே, கிராமியக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் குறைந்தபட்சம் 1,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய நாடகப்பிரியா நாடகக் குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அன்றைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1992 ஆம் வருடத்தில் அனைத்து இயல், இசை, நாடகக் கலைஞர்கள் தமிழக அரசு பேருந்தில் செல்ல 50 சதவிகிதக் கட்டணச் சலுகை அறிவித்தார்கள். அது இன்றுவரை நடைமுறையில் உள்ளது. அதே சமயம் ஒரு குழு சிதம்பரத்திலிருந்து திருவாரூர் சென்று நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்றால், சென்னைக்கு வந்து இயல், இசை, நாடகச் சங்கத்தில் இருக்கும் சலுகைக் கட்டண forms-ஐப் பெற்றுச் செல்ல வேண்டும். அரசு கொடுக்கும் இட்லியை சில அதிகாரிகள் சிந்தித்து இடியாப்பமாக்கிவிடுகிறார்கள். இதற்குப் பதில் வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கக்கூடிய ஓர் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

முற்பகல் 10-55

கலைமாமணி விருது என்பது கலைஞர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய கௌரவமாக இருந்தாலும், வராது வந்த மாமணியாகும், அந்தக் கலைமாமணியில் கிடைத்த தங்கக் காசு பல, அடகுக்

கடைகளில் இருக்கும் சூழ்நிலை உள்ளது. ஆகவே கலைமாமணி பட்டத்தை தன் வாழ்க்கையின் நிரந்தர கௌரவமாக்கவும், அவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் செல்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்ட கலைமாமணிகளுக்குத் துணைக்கு ஒருவருக்கும் சேர்த்து வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பான்மையான அரசு நிகழ்ச்சிகளுக்கு கலைவாணர் அரங்கம் ஒதுக்கப்பட்டு விடுவதால் புதியதாகக் கட்டப்படும் சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயே ஓர் அரங்கையும் நிர்மாணித்தால் கலைவாணர் அரங்கம் நாடகங்களுக்கும் பயன்படும்விதமாக அமையும்.

கலைவாணர் அரங்கையும் இப்போது இடித்துவிட்டு கட்டும் நோக்கம் இருந்தால் மாடி, கீழ் என இரு அரங்குகள் இலாப நோக்கமின்றி கட்டப்பட வேண்டும். கலைவாணர் அரங்கம் எதிர்க்கட்சியை சேர்ந்த எனக்கு கொடுக்கக்கூடாது என்று எழுதப்படாத ஒரு சட்டமாக உள்ளது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நாடக அரங்குகள் அமைக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** தாங்கள் ஏதேனும் கலைவாணர் அரங்கத்திற்கு விண்ணப்பம் செய்து அது மறுக்கப்பட்டிருக்கிறதா?

**திரு. எஸ்.வி. சேகர்:** ஆமாம், இரண்டு, மூன்று முறை செய்துவிட்டார்கள் சார்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** சரியாக, ஆதாரபூர்வமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ்.வி. சேகர்:** இல்லை, ஆதாரபூர்வமாகத்தான், மறுப்பதை வாய்மொழியாக மறுக்கிறார்கள். அதை எப்படி ஆதாரமாகக் காட்ட முடியும்?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** வாய்மொழியாக நீங்கள் பேசிவிட்டு, அவர்கள் வாய்மொழியாக இல்லை என்று சொன்னார்கள் என்று சொன்னால் எப்படி?

**திரு. எஸ்.வி. சேகர்:** நான் வேண்டுமென்றால் செல்-போனில் ரெக்கார்டு செய்து கொடுத்துவிடுகிறேன், அடுத்த முறை.

T.Nagar, P.T. Thiyagaraya Hall அந்த அரங்கத்திலேயே booking செய்யக்கூடிய வசதி செய்யப்பட வேண்டும். ஏனென்றால் T.Nagar, P.T. Thiyagaraya Hall-ஐ booking செய்ய வேண்டுமென்றால்



கோடம்பாக்கத்தில் இருக்கிற Corporation Office-க்குப் போய் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அரங்கத்திலேயே செய்தால் better.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இப்போது மாற்றப்பட்டு அந்த அரங்கத்திலேயே ஒரு Manager அங்கே நியமிக்கப்பட்டு இப்போது பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. சேகர்:** நன்றி. ஆனால் அந்த ஹாலும் எங்களுக்குக் கிடைக்காத காரணத்தினால்தான் இந்தத் தகவல் எனக்குத் தெரியவில்லை.

மின்வெட்டு இல்லாத நேரத்தில் மின் பகிர்வு மயிலாப்பூரில் சீராக இருக்கக் கண்டிப்பாக ஒரு துணை மின் நிலையம் மந்தைவெளியில் அமைக்கப்பட வேண்டும்.

தென் சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க உடனடியாக ஸ்ரீனிவாசபுரம்-பெசன்ட் நகர் கடற்கரைச் சாலைப் பாலம் கட்டப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் மாதம் சுமார் 3,000 commercial vehicles register செய்யப்படுகின்றன. வருடத்திற்கு சுமார் 36 ஆயிரம் வாகனங்கள்; அப்படியென்றால் வருடத்திற்கு 36 ஆயிரம் drivers, commercial drivers, நமக்குத் தேவை. ஆகவே, அரசே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாத கால Driving School நடத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வாகனப் பதிவு அந்தந்த R.T.O. Office-களில் நடப்பதற்குப் பதிலாக வாகனம் வாங்கும் show room-லேயே internet மூலம் செய்யப்பட வேண்டும். ஆந்திரா, கேரளா, கர்நாடகா, அங்கெல்லாம் இதுதான் நடைமுறையில் உள்ளது. தேவையற்ற அலைச்சல், எரிபொருள் செலவு, இடைத்தரகர்கள் தொல்லை ஆகியவற்றை இதன்மூலமாகத் தடுக்க முடியும்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, செப்டம்பர் மாதம் முதல் வரவிருக்கும் Arasu Cable Corporation-ல் அனைத்து தமிழ் channel -களும் Prime Band-ல்

ஒளிபரப்பப்பட வேண்டும். அதே சமயம் pay channel-களில் விளம்பரங்கள் வரக்கூடாது என்ற சட்டமும் இயற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். Set Top Box-க்கு எதிராக முதல் case file செய்தவன் நான்தான் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் M.L.A. Office கட்டித் தரப்படும் என 2006-ல் கூறப்பட்டது. இடம் தேர்வு செய்யப்பட்ட பிறகும் Ward Committee அதைத் தடை செய்துள்ளதாக அறிகிறேன். அவர்களுக்கு இந்த அதிகாரம் உள்ளதாகத் தெரியவில்லை. இருந்தால் அதை நீக்கி ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மயிலாப்பூரைப் பொறுத்தவரையில், நடைபெறும் எந்தச் சீரமைப்புப் பணிகளும் சட்டமன்ற உறுப்பினரான எனக்குத் தெரியப்படுத்துவதில்லை. M.L.A. நிதி ஒதுக்கீட்டைப் பெறும்போது மட்டும் Zone 10 அதிகாரிகள் ஓரிருவரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்கிறது. Councillor-ஏ எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்கள் என்றால் சட்டமன்ற உறுப்பினர் பதவியையே எடுத்துவிடலாம். இது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு ஏற்பட்ட ஓர் அவமானமான விஷயமாக நான் கருதுகின்றேன்.

சர்க்கரைக் குறைப்பாட்டினால் Juvenile Diabetics -ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளை, உடல் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்க்க வேண்டும். Juvenile Diabetics -ஆல் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒருவேளை அந்த diet-கூட கொடுக்க முடியாது. அவர்கள் மாறி, மாறி, சாப்பாடுதான் கொடுத்துவிடுகிறார்கள். ஒரு வேளை சாப்பாடு கொடுத்தால்கூட சர்க்கரை அளவு 400 ஆகிவிடுகிறது. அதனால் 10 வயதுக்குள்ளேயே அவர்கள் கண் பார்வை இழக்கக்கூடிய அபாயம் எல்லாம் இருக்கிறது. ஆகவே அவர்களை உடல் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். (குறுக்கீடுகள்) One minute. அவர் ஒரு டாக்டர். ஒரு suggestion சொல்வார். அவ்வளவுதான், சொல்லுங்கள் டாக்டர்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் என்பது—handicap என்பது நிரந்தரமாக, நிவர்த்தி செய்ய முடியாத வகையில் ஏற்படுவதுதான் handicap. அந்த வகையிலே



மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர் சொன்னதைத்தான் நான் ஆதரிக்கிறேன். அதற்குள்ளாக, புரிந்துகொள்ளாமல் அண்ணா தி.மு.க.வினர் மாமூலாக எதிர்ப்புத் தெரிவிப்பதைப்போல தெரிவித்திருக்கிறார்கள். Juvenile Diabetics என்ற அந்த இன்சுலின் சார்புடைய இளவயது நீரிழிவு நோயாளிகள் வாழ்நாள் முழுக்க ஊனமுற்றவர்கள். அதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் தேவையில்லை. அவர்களை ஊனமுற்றவர்களாக அறிவிப்பதற்கு அரசாங்கம் கட்டாயம் ஆவன செய்ய வேண்டுமென்று அவரோடு சேர்ந்து நானும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முன்னாலேயே அவர் இதுசம்பந்தமாகப் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் உறுப்பினர் முதல் முறையாகப் பேசுகிறபோது அதற்குக் கன்னிப் பேச்சு என்று சொல்வார்கள். அந்தக் கன்னிப் பேச்சிலே குறுக்கிடக் கூடாது என்பதுதான் மரபு. ஓர் உறுப்பினர் பேசுகிறபோது மற்றொரு உறுப்பினருக்கு Point of Order கிளப்பவோ, Point of Clarification, Point of Information கேட்கவோ உரிமை உண்டு. ஆனால் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அந்த உரிமையை ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, நான் Point of Order கிளப்பினால் என்னை அனுமதிக்கிற உரிமை சபாநாயகருக்குத்தான் உண்டு. (குறுக்கீடு) இல்லை, இல்லை. Point of Order நான் கேட்கலாம். I can rise. ஆனால், சபாநாயகர்தான் அதை allow பண்ணுவதா, இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதனாலே ஓர் உறுப்பினர் பேசுகிறபோது குறுக்கிடவே கூடாது என்பது அவையின் மரபல்ல. (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரே இதைச் சொன்னார். அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் இறுதியாக Point of Order ஆக இருந்தாலும் Point of Clarification ஆக இருந்தாலும் கேட்கலாம் என்று நேற்றையதினம் சொன்னீர்கள். இன்றைக்கு ஒரு முறையிலே மாற்றக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** யானைக்கு அர்ரம் என்றால் பூனைக்கு புர்ரம் என்று சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர், செங்கோட்டையன் அவர்கள் நீண்டகால உறுப்பினர். அவருக்குத் தெரியும். ஆகையினாலே சபாநாயகர் allow பண்ணினால், யார் வேண்டுமானாலும் கேட்கலாம். அவர் முடியாது என்றால் உட்கார்ந்துதான் ஆகவேண்டும்.

**திரு. எஸ்.வி. சேகர்:** என்னுடைய பேச்சிலே எல்லோருமே argue பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** எனக்கும். ஆளும் கட்சிக்கோ, எதிர்க்கட்சிக்கோ அல்ல. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினருடைய உரிமை, எல்லாக் கட்சிக்கும் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. இப்போது டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் திரு. எஸ்.வி. சேகருடைய கருத்துக்கு ஆதரவாகத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) திரு. எஸ்.வி. சேகர், பேசுங்கள்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இராமன் அவர்கள் எங்களிடம் நெருங்கி வருவதற்கு எங்களுக்கு சந்தோஷமாக உள்ளது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. கருத்தில் சொல்கிறேன், தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். கருத்திலே சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.வி. சேகர் அவர்கள்தான் எங்களோடு நெருங்கி வந்துகொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர், இந்தக் குறும்பு இல்லாமல் பேசுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மயிலாப்பூரில் நடக்கின்ற எந்த விழாக்களுக்கும் தகவல் சொல்லவில்லை என்று சொல்கிறார். அனைத்து விழாக்களிலும்



அவருடைய பெயர் போடப்படுகிறது. ஆனால் அவர்தான் வருவதில்லை. ஒருவேளை அவருடைய பொதுக் குழுவிற்கு வேண்டுமானால் அவருக்கு அழைப்பு அனுப்பாமல் இருக்கலாம். ஆனால் முறைப்படி அரசாங்கம் எல்லா அழைப்புகளையும் அவருக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.வி. சேகர்:** நான் விழாக்களைப்பற்றிச் சொல்லவில்லை. நடக்கும் சீரமைப்புப் பணிகளுக்காகத்தான் நான் சொன்னேன்.

அரசினால் இலவச கேஸ் கொடுக்கப்பட்ட பிறகு சாலையோர நடைபாதைக் கடைகளில் பெரும்பான்மையானவற்றில் வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் Gas Cylinder-கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. இது உடனடியாகத் தடுக்கப்படவேண்டும். குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

நம் சட்டசபை canteen-லேயே இன்றுவரை விலைப்பட்டியல் வைக்கப்படவில்லை. சட்டமும் ஒழுங்குமே நம்மிடமிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

என் தந்தை அரிமா எஸ்.வி. வெங்கடராமன் மறைவிற்குப்பிறகு அவர் செய்துவந்த அனாதைப் பிணங்களை அடக்கம் செய்யும் பணியை நான் தொடர்ந்து செய்து வருகிறேன். அரசு மருத்துவமனைகளில் அந்தப் பிணங்களை postmortem செய்தபிறகு கட்டுவதற்குக் காடாத் துணிகூட வழங்குவதில்லை. என் தந்தையின் முயற்சியால் Royapettah Hospital-இல் மட்டும் இலவசமாக வழங்கப்படுகின்றது. அனைத்து அரசு மருத்துவமனைகளும் அனாதைப் பிணங்களைப் பிரேதப் பரிசோதனை முடித்து கட்டிக் கொடுக்க இலவச காடாத் துணி வழங்க இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்திற்காக முதன்முறையாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளார்கள். அதேசமயம் சென்னைப் பல்கலைக்கழகத்தைவிட ஓர் ஆண்டு மூத்த, 152 ஆண்டு பாரம்பரியம்மிக்க, சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் தென் ஆசியாவிலேயே முதன் முதலாகக் கல்வியியலுக்காகத் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் Silver Tongue சீனிவாச சாஸ்திரியார், இந்தியப் பெருநாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள், இந்தியாவின் முதல்

மேலவைத் தலைவர் அனந்தசயனம் ஐயங்கார், முதல் பாதுகாப்பு அமைச்சர் மேதகு கிருஷ்ணமேனன் ஆகிய பெருமக்கள் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள். ஆகவே இவ்வளவு பெருமைபெற்ற சுமார் 50 ஏக்கர் பரப்பளவும், கட்டட வசதியும் கொண்ட இந்த இடத்தில் கல்வியியல் மேம்பாட்டுப் பல்கலைக்கழகம் அமைவது மிகவும் பொருத்தமாக இருக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு இடங்களுமே இதற்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு இடங்களிலுமே அந்தப் பல்கலைக்கழகங்கள் அமைவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு இடங்களுமே பயன்படுத்திக் கொள்ளப்படும்.

*முற்பகல் 11-05*

**திரு. எஸ்.வி. சேகர்:** அதேசமயம் இன்றும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படும் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பெயரை இப்பல்கலைக்கழகத்திற்கு வைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

திலகர் திடல் சென்னை மெரினா கடற்கரையில் மாநிலக் கல்லூரிக்கு எதிரில் கண்ணகி சிலைக்கும், பொது நூலகச் சாலைக்கும் நடுவில் உள்ள இடம். 'சுதந்திரம் நமது பிறப்புரிமை' என்ற தாரக மந்திரத்தை நமக்களித்த லோகமான்ய பாலகங்காதர திலகர் நினைவாக, 'திலகர் திடல்' என்று பெயர் சூட்டியவர் தியாகி சுப்பிரமணிய சிவா. இங்கே நம் தேச சுதந்திரத்திற்காக முழக்கமிட்டவர்கள் வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, கவி சுப்பிரமணிய பாரதியார், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், மகாத்மா காந்திஜி, இராஜாஜி, சுப்பிரமணிய ஐயர், ஜவஹர்லால் நேரு, எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி, கர்மவீரர் காமராஜ், ம.பொ.சி., சர்தார் ஆதிகேசவலு நாயகர் மற்றும் பல தேசபக்தர்கள். இந்தச் சரித்திர வரலாற்று இடமான திலகர் திடலை ஒரு சரித்திரச் சின்னமாக அறிவித்து, திலகரின் சிலையையும், பெயர் கல்வெட்டையும் நிறுவவேண்டும் என்று காந்தி தரிசன கேந்திரா அவர்கள் தாக்கல் செய்திருந்த பொது நல வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் ஜூன் 29, 2004 அன்று தமிழக அரசுக்கு 4 மாதத்திற்குள் மனுதாரரின் கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது. இதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.



சென்னை தீவுத் திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இணைந்து நடத்தும் Snow Ball—செயற்கை ஐஸ் தண்ணீருடன் அமோனியம் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. அமோனியம் என்பது ஒரு விஷ வாயு. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு வெளிநாட்டில் தடை உள்ளது. இதற்குச் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் உண்டியல் கொள்ளையர்கள் பிடிபட்டார்களா, இல்லையா? காவல் துறையின் நடவடிக்கை எந்த அளவில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள மயிலை மக்கள் ஆவலாக உள்ளார்கள். 'சிவன் சொத்து, குல நாசம்' போன்ற வாசகங்களைக் கோயில்களில் எழுதி வைக்கலாம். வருமானமுள்ள உண்டியல்களை, A.T.M.-ல் இருப்பது போன்று camera வைத்து, 24 மணி நேரம் இயங்கி record செய்யக்கூடிய வசதியுடன்கூடிய கம்ப்யூட்டருடன் இணைக்கப்படவேண்டும். யார் யாரோ பேசுவதைக் கேட்கக்கூடிய விஞ்ஞான வளர்ச்சியுள்ள இந்த நாட்டில், கோயில் உண்டியலை உடைத்தவர் யார் என்று இன்னும் கண்டுபிடிக்கமுடியாதது என்னுடைய நாடகத்தை நினைவுபடுத்துவதாக இருக்கிறது; நாடகத்தின் பெயர் 'காதுல பூ'.

சமீபத்தில் நீதிமன்ற உத்தரவின்படி, கையகப்படுத்தப்பட்ட Drive-in-Woodlands வளாகம் சமுதாயத்தில் பல மட்டங்களைச் சார்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் சந்திக்கக்கூடிய ஒரு இடமாக இருந்து வருகிறது. இதில் மிகவும் பாதிக்கப்பட்டவர் பழம்பெரும் பாடகர் திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ். அந்த வளாகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக உடனடியாக உணவகம் ஒன்றைத் தொடங்கலாம். அதேசமயம், இந்தச் சம்பவத்தால் வேலையிழந்த தொழிலாளர்களையும் contract அடிப்படையில் வேலைக்கு அமர்த்தினால், அவர்கள் குடும்பங்கள் வாழ்த்தும்.

இந்தச் சபையில் நடப்பதைப் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு எடுத்துச் செல்வது பத்திரிகைதான். பணியின்போது இறந்த பத்திரிகையாளர்கள் எத்தனை பேருக்கு இதுவரை அரசு அறிவித்த இரண்டு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது? அதே சமயம் இறந்தவர்களுடைய குடும்பத்தினர் பென்ஷன் பெறுவது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கிறது. திரு. ஜான் சுரேஷ் என்ற புகைப்படப் பத்திரிகையாளர் கேன்சரினால் இறந்துவிட்டார். அவருக்கு இந்த இரண்டு இலட்சம் ரூபாய் உதவித் தொகை கிடைத்தாலும், பத்தாம் வகுப்பு படிக்கக்கூடிய அவருடைய மகனை

மேற்கொண்டு படிக்க வைக்கமுடியாமல், அந்தக் குடும்பம் தவிக்கிறது. ஆகவே, அந்த மகனுடைய படிப்பை நிறுத்தி, வேலைக்கு அனுப்பும் துரதிருஷ்ட சூழ்நிலை அந்தக் குடும்பத்தில் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இதுபோன்ற இறந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களிலுள்ள குழந்தைகளுடைய படிப்புச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்லும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இச்சலுகை இறந்த பத்திரிகையாளர்கள் Accredited Journalist-ஆக இருந்தால் மட்டும் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறையைத் தவிர்க்க, பத்திரிகை அலுவலகத்தில் வேலை செய்யும் அனைத்து நிரந்தரப் பத்திரிகையாளர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூடுதலாக இரண்டு நிமிடங்கள் உங்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) கூடுதலாக இரண்டு நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சேகர்:** நானே இரண்டு வருடங்கள் கழித்துதான் பேசுகிறேன். தயவுசெய்து கொஞ்சம் கூடுதலாக time கொடுத்தீர்களென்றால் நலம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் இரண்டு நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. எஸ்.வி. சேகர்:** சென்ற ஆண்டு பட்ஜெட்டில் சட்டமன்ற வளாகத்திலுள்ள பத்திரிகையாளர் அறைக்கு Computer, E-Mail, Internet போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதாகக் கூறினீர்கள். கூடிய விரைவில் இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகவும் அத்தியாவசியமான ஒரு கோரிக்கை; சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், தற்சமயம் டைடல் பார்க் போன்றவற்றிற்கு இடம் கொடுக்கப்பட்ட பிறகு சுருங்கி, 17 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. கடந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் ரூபாய் வருமானம் தந்துள்ளது. இங்குள்ள A.C. படப்பிடிப்புத் தளம் பழுதடைந்துள்ளது. அதைச் சரிசெய்து



கொடுப்பதுடன், 26 மேக்கப் அறைகளும் சரிசெய்யப்படவேண்டும். படப்பிடிப்புத் தளத்திற்கு மீண்டும் குளிர்பதன வசதி செய்யப்பட வேண்டும். இது சின்னத் திரைப்படத் தயாரிப்பாளர்கள், விளம்பரதாரர்கள் அதிக அளவில் படப்பிடிப்பு நடத்த வாய்ப்பிருக்கும். அதே சமயம், திரைப்பட நகரின் முக்கிய அங்கமான மீன் வாய் அருகில் இடம்பெறும் நெடுஞ்சாலையைப் பொதுச் சாலையாக மாற்ற முயற்சி நடக்கிறது என அறிகிறேன். இந்தச் சாலைக்காக மட்டுமே படப்பிடிப்பு நடத்த பலர் வருகிறார்கள். படப்பிடிப்பிற்குத் தேவைப்படும் அனுமதி அனைத்தும், திரைப்பட நகரில் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்போது தமிழகத்தின் பல கோயில்களில் பிரசாதம் என்ற பெயரில் சிலபல சோற்றுப் பருக்கைகளை இலையில் சுற்றிக் கொடுக்கும் அவலம் இருக்கிறது. ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குப் போடும் அரசு, 50 கிராம்கூட இல்லாத பிரசாதப் பொட்டலத்தை 5 ரூபாய்க்கு விற்பது எந்தவகையில் நியாயம்? கோயில் பெயரைச் சொல்லி கொள்ளையடிப்பவர் குடும்பம் நன்றாக வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை; ஏழை, பாழைகள்தான் பக்தியுடன் பிரசாதம் வாங்குகிறார்கள்.

*முற்பகல் 11-10*

அதேபோல, மயிலை தெற்குமாட வீதியில் உள்ள புராதனமான வள்ளீஸ்வரன் கோயில் எதிரே புதிதாக அரசியல் கூட்டங்களுக்கு மேடை போட அனுமதி கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். இது தடை செய்யப்படவேண்டும்.

நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை சேதமடைந்த குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய குடியிருப்புகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. எந்தப் பணியும் தொடங்கவில்லை. 7,320 குடியிருப்புகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. பழைய குடியிருப்பு 285 சதுர அடிகள் முதல் 300 சதுர அடிகள் கொண்டது. இப்போது அறிவித்திருப்பது 236 சதுர அடிகள். ஏற்கெனவே கோழிக்கூண்டு; அதை குருவிக்கூடாக மாற்றாமல் மீனவர்களின் கோரிக்கைப்படி ஒரு வீட்டுக்கு 325 சதுரஅடிகள் வழங்கப்படவேண்டும்.

பட்டினப்பாக்கத்தில் மீன்களைப் பதப்படுத்தி விற்க குளிர்பதன வசதியுடன் கூடிய அங்காடி ஒன்று கட்டித்தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) No, no. (குறுக்கீடுகள்) நன்றி மட்டும் சொல்லி உங்கள் உரையை முடியுங்கள். அதில் நிறைய பக்கங்கள் உள்ளனவே!

**திரு. எஸ்.வி. சேகர்:** என்னுடைய தொகுதி மக்களுடைய கோரிக்கைகளை Mylaporemla@gmail.com என்ற எனது e-mail முகவரிக்கு எனக்கு அனுப்பியுள்ளார்கள். நான் அதை ஒவ்வொரு முறையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் Cell-க்கும் அனுப்பியுள்ளேன். அவர்களிடமிருந்து மட்டும்தான் சரியான பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன. பாக்கி எந்தத் துறையிலிருந்தும் சரியான பதில் வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேசமயம், Chennai Corporation Commissioner-க்கு அனுப்பிய பல e-mail -களுக்கு இன்றுவரை பெற்றுக்கொண்டேன் என்ற பதில்கூட கிடையாது. ஆகவே, தொகுதி மக்களுடைய அத்தனை கடிதங்களையும் தங்கள்மூலமாக அரசுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு இந்தியாதான் காரணம் என்று கூறிய, ** என்று நாம் சொல்லலாம்.

நான் பல நாடுகளுக்குச் சென்று வந்துள்ளேன். சமீபத்தில் முதல்முறையாக ஜப்பானில் தமிழ்க் கலை நிகழ்ச்சி நடத்தி வந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பேசிய பேச்சை இந்த அவையிலே பதிவு செய்வது அவ்வளவு முறையல்ல. தயவுசெய்து அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** பற்றி பேசிய வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) வெளியே போய் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** படையெடுப்பார்களா என்று கேட்கிறார்கள். படையெடுக்க மாட்டார்கள். இந்த மன்றத்தினுடைய பண்பல்ல என்பதால்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் சப்ஜெக்ட்டுக்குள் வருவீர்கள் என்று பார்த்தால், ** பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.வி. சேகர்:** சார், நன்றி சொல்லிவிடுகிறேன். ஒரே நிமிடம். ஒரே second-ல் உரையை முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு விஷயம். முதலிலேயே குறும்பாகப் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டீர்கள். அதனால் serious ஆகப் பேசுகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட மருந்துகளில் நரம்புத் தளர்ச்சி, விந்து விருத்திக்கான அஸ்வகந்தா லேகியம் மட்டும் மிகப்பெரிய டப்பாவில் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன். (சிரிப்பு)

நான் பல நாடுகளுக்குச் சென்று வந்துள்ளேன். East or West, our India is the Best. உலகத்திலேயே சிறந்த நாடு நம்முடைய இந்திய நாடு. நம்முடைய இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அந்த நிலைக்கு உயர்த்திய புரட்சித் தலைவிக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகள் பல. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது Island Ground-ல் Snow Ball, தண்ணீருடன் அம்மோனியா கலந்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தயாரிக்கப்படுவதாகவும், அமோனியாவில் விஷ வாயு இருக்கிறதென்றும் சொன்னார்கள். இதனால் இதுவரை எந்தவிதமான பிரச்சினைகளும் அங்கு வந்ததில்லை. முறையாக பொதுமக்கள் வந்து செல்கிறார்கள்.

அதைப்போன்று நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த ஆட்சியில் நலிந்த கலைஞர்களுக்கு 500 ரூபாய் என்று இருந்தது, கலைஞருடைய ஆட்சியில் 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த, தமிழகத்தின் விடிவெள்ளி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் பேசுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட லேகியத்தைப் பற்றி சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இதுபற்றி சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அதைச் சாப்பிட்டு, அனுபவத்தின்ரீதியாக அதற்குரிய பதிலையும் சொல்லிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே வைத்தியன் அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கமாட்டான். எவன் அகப்பட்டானோ அவனுக்குக் கொடுத்துவிடுவான். எனக்கு அகப்பட்டவர் பன்னீர்செல்வம். அதனால்தான் கொடுத்துவிட்டேன். (சிரிப்பு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

முற்பகல் 11-15

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய விடிவெள்ளி, இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ்மொழியின்மீது பற்றும் கொண்ட தந்தை பெரியாரின் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாகவும், வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கு வள்ளுவர் கோட்டம் அமைத்தும், கன்னியாகுமரி கடலிலே விண்ணைத் தொடும் அளவிற்கு வள்ளுவர் சிலை அமைத்த வாழும் வள்ளுவரே, குறளோவியம் படைத்திட்ட குறளரசரே, சங்கத் தமிழ் படைத்திட்ட சிங்கத் தமிழனே, 'என்னைக் கடலிலே தூக்கியெறிந்தாலும், கட்டுமரமாக மிதப்பேன், அதில் ஏறி நீங்கள் சவாரி செய்யலாம்' என்ற வீர வசனத்தின்மூலம் தமிழர்களுடைய உணர்வுகளைப் பொங்கியெழச் செய்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சியில் நல்லாட்சி செய்கின்ற போர்ப்படைத் தளபதியாகவும், வருங்காலத் தமிழகத்தை வழி நடத்திச் செல்கின்ற தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சுற்றுலா என்பது இடங்களைத் தெரிந்துகொள்வது மட்டுமல்ல, இதயங்களை அறிந்துகொள்வதும்தான்; உணவை நுகர்வது மட்டுமல்ல, உணர்வைப் பகிர்வதும்தான்; அலைகளைத் தரிசிப்பது மட்டுமல்ல, கலைகளை இரசிப்பதும்தான்; பாட்டைக் கேட்பது மட்டுமல்ல, பண்பாட்டைக் காப்பதும்தான்; திறந்த மனதுடன் சுற்றுலா செல்பவர்கள் இனிய அனுபவங்களுடன் திரும்பி வருகிறார்கள். அவர்கள் உள்ளம் கடற்கரையாய் விரிந்தும், விண்வெளியாய் உயர்ந்தும் உவகையுடன் துள்ளிக் குதிக்கிறது. சுற்றுலா பெருந்தன்மையை

வளர்க்கிறது, தனித்தன்மையைக் காப்பாற்றுகிறது. சுற்றுலாவினால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, கலைஞர்களுக்கு வாய்ப்பு, தொல்லியல் சின்னங்களுக்குப் பாதுகாப்பு, வணிகர்களுக்கு வர்த்தகம், பொதுமக்களுக்குக் கூட்டமைப்பு வசதி, அரசுக்கு அந்நியச் செலாவணி, நாடுகளிடையே நட்புறவு, வருகின்ற விருந்தினரைப் போற்றி, சுற்றுலாத் தலங்களின் தூய்மையைப் பேணி, பயணிகளிடம் வாய்மையைக் கடைப்பிடித்து நம் தமிழகம் உலகத்தின் ஒப்பற்ற சுற்றுலாத் தலமாக விளங்குகிறது என்று சொன்னால், இது தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞருடைய ஆட்சிக்காலம் என்பதை நான் மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதியாண்டில் சுற்றுலாத் துறையின்மூலமாக தமிழகத்தில் ஈகைப் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த கடையேழு வள்ளல்களின் அறச் செயல்களைக் கல்வெட்டாய்ப் பதிக்கும் எனது தொகுதிக்குட்பட்ட வல்வில் ஓரி வாழ்ந்த கொல்லிமலையில் கடையேழு வள்ளல்களின் சிலைகளைச் செதுக்கி, கலைக்கோட்டம் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எமது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையின்மூலமாக கொல்லிமலைக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிய கடையேழு வள்ளல்கள் காரி, ஓரி, பாரி, எழினி, பேகன், நள்ளி, ஆய் ஆகிய ஏழு வள்ளல்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எட்டாவது வள்ளலாக வாரி வழங்கிக்கொண்டிருப்பவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு நாமக்கல் மாவட்டம் உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, வல்வில் ஓரி வாழ்ந்த கொல்லிமலையில் வல்வில் ஓரியினுடைய சிலையை 1975-ஆம் ஆண்டு நிறுவி, கொல்லிமலையை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே அடையாளம் காட்டிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் வணங்குகிறேன்.

அதைப்போல ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற பகுதிகள்போல் கொல்லிமலையையும் பெரிய சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



கொல்லிமலை ஒன்றியத்தில் சுற்றுலாத் துறையின்மூலமாக வாசலூர்பட்டி அருகில் குளங்களைத் தூர்வாரி படகு விடப்பட்டுள்ளது. அங்கு படகுகளில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து செல்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிக்குபாறை என்னும் இடத்திலே உயரமான கோபுரங்கள் அமைத்து அதன்மேல் சென்று சுற்றுலாப் பயணிகள் அடர்த்தியான இயற்கைக் கண்காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் கொல்லிமலை என்ற ஓர் ஒன்றியம் இருக்கிறதா என்று கேட்கும் அளவுக்கு கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் எந்த அமைச்சர்களும் வரவில்லை, எந்தத் திட்டப் பணிகளும் நடைபெறவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிவுச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கொல்லிமலை சுற்றுலாத் தலமாக வரவேண்டுமென்பதற்காக 8 கோடி ரூபாய் நிதியை வழங்கி, கொல்லிமலையிலே பல்வேறு நலத் திட்டப் பணிகள் எல்லாம் மிகவும் விரைவாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் தொன்மையான துறைகளுள் ஒன்றாகத் திகழும் பதிவுத் துறை, பொதுமக்களின் சொத்துப் பரிமாற்றங்களுக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கும் பணியில் அருஞ்செயல் ஆற்றி வருகின்றது. அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில், மூன்றாவது பெரிய துறையாக சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றது. பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன்மூலம், தங்கு தடையற்ற விரைவான சேவை பொதுமக்களுக்குக் கிடைப்பதால், அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் ஒருங்கே பெற்ற துறையாக மக்கள்பணி ஆற்றி வருகிறது.

இத்துறையின்மூலம் மட்டும், கடந்த 2006-2007 ஆம் நிதியாண்டில் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.3,407.50 கோடியைவிட 24.21 விழுக்காடு அதிக

இலாபம் ஈட்டிச் செயலாற்றி வருகிறது என்று சொன்னால், இது தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலம் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இத்துறையை மேலும் திறம்பட நிருவகிக்கும்பொருட்டு, மாநிலம் முழுவதும் 9 மண்டலங்களாகவும், 50 பதிவு மாவட்டங்களாகவும் பிரித்து, மண்டல அலுவலகங்கள் துணைப் பதிவுத் துறை தலைவர் மூலமும், மாவட்ட அலுவலகங்கள் நிருவாக மாவட்டப் பதிவாளர் மூலமும், சார்பதிவாளர் அலுவலகங்கள் உதவிப் பதிவாளர் மூலமும், பதிவுத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் மூலமும், புலனாய்வுப் பிரிவு கூடுதல் பதிவுத் துறை தலைவர் தலைமையிலும், விழிப்புப் பணிப் பிரிவு உதவிப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் சார்பதிவாளர் மூலமும் சிறப்பாக இயங்கி வருகிறதென்று சொன்னால், இது மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதில் நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கான 'சமாதானத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்மூலம் அரசுக்கு ரூ.82.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டு, 22,599 ஆவணங்கள் தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு முத்திரைத் தீர்வையை மாற்று வழிகளில் மின்னணு முறை மற்றும் பிராங்கிங் இயந்திரம்மூலம் வசூலிக்கும் முறைகளை நடைமுறைப்படுத்த நமது கழக அரசு பரிசீலித்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், முத்திரைத்தாளின் மெய்ப்புத்தன்மையை அறிய, அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டு, பொதுமக்களின் சொத்து ஆவணங்கள் பாதுகாக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய நவீன கால நடைமுறைக்கேற்ப அனைத்துத் திருமணங்களும் எந்தெந்தச் சடங்குகளின்படி நடைபெறுகின்றனவோ, அதற்கேற்ப பல்வேறு சட்டங்களின்கீழ் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் மொத்தமுள்ள 568 சார்பதிவாளர் அலுவலகங்களில் 450 சார்பதிவாளர் அலுவலகங்கள் இன்றைய தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் கணினிமயமாக்கப்பட்டு, பதிவுத் துறையில் விரைவான மற்றும் தங்குதடையற்ற சேவை அளிக்க வழிவகை



செய்ததோடு நில்லாமல், வருங்காலத்தில் எஞ்சியுள்ள பதிவுத் துறை அலுவலகங்களையும் கணினிமயமாக்க ஆவன செய்ய வேண்டுமாய் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைக் குறுந்தகடுகளில் ஒளி வருடல்மூலம் பதிவு செய்வதால், பதிவு விவரங்களை விரைவாகச் சரிபார்த்தல், நகலெடுத்தல், வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல், சொத்து மதிப்புப் பட்டியல் தயார் செய்தல் மற்றும் திருமணங்களைப் பதிவு செய்தல், சங்கங்களைப் பதிவு செய்தல், நிறுவனங்களைப் பதிவு செய்தல் ஆகிய பணிகளில் பொதுமக்களுக்கு ஏற்படும் காலவிரயங்களைத் தடுத்து, எளிய முறையில் விவரங்களை அறிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பத்திரப் பதிவுத் துறையை மேம்படுத்த 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், ஐம்பது மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) அலுவலகங்களுக்கு, 50 நிகரிகளும், சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 500 இரும்பு அலமாரிகளும் வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள் சிலவற்றை முன் வைக்க விரும்புகிறேன்.

பெரப்பன்சோலை ஊராட்சியில் பாலப்பட்டி கிராமத்தில், பள்ளிப்பாறை என்ற ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க அணை மற்றும் அந்த பொதுமக்களின் பயன்பாட்டுக்காக சுற்றுலா மையம் அமைய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மேலக்கோம்பை கிராமத்தில் தோல்பட்டான் ஆற்றில் தடுப்பு அணை கட்டித்தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஊனாந்தாங்கல் ஊராட்சி கீழ்செக்கடி, மேல்செக்கடி பகுதிகளில் தடுப்பு அணை கட்ட வேண்டும். கொல்லிமலைக்குச் செல்ல மாற்றுப்பாதை அமைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மத்துருட்டு ஊராட்சிப் பகுதிகளில் உள்ள சிங்கிலியன் கோம்பை, இராமநாதபுரம், நாரைக் கிணறு ஊராட்சி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் பல ஆண்டுகாலமாக நிலத்தை உழுது விவசாயம் செய்து

வருகிறார்கள். நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதியான எனது தொகுதியில், கிட்டத்தட்ட மற்ற தொகுதிகளைக்காட்டிலும் அதிகமான பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். விடுபட்ட ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

மங்களபுரம் அம்பேத்கர் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திம்மநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முள்ளுக்குறிச்சிப் பகுதியில் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய (Super speciality) பள்ளிக்கூடம் கட்டப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட நிருவாகத்தின்மூலமாக அறிவிக்கப்பட்டு, அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், பணிகள் இன்னும் நடைபெறவில்லை. மலைவாழ் மக்கள் மாணவர்களின் நலன் கருதி, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமாய், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியத்தில் சார்பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமாய் மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் தொகுதியில் நான்கு ஒன்றியங்கள் உள்ளன. அவற்றில், புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும் மும்முனை மின்சாரம் உள்ளது. மீதியுள்ள இரண்டு ஒன்றியங்களில் மும்முனை மின்சாரம் இல்லை. இங்கு 60 விழுக்காடு மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். சேந்தமங்கலம், கொல்லிமலை ஆகிய இரண்டு ஒன்றியங்களுக்கும் மும்முனை



மின்சாரம் வழங்குமாறு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதுச்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட நைனாமலையில் வரதாராஜப்பெருமாள் கோயில் உள்ளது. அந்தக் கோயில், பழனி முருகன் கோயிலைவிட அதிகமான உயரத்தில் உள்ளது. அந்தக் கோயிலுக்கு பக்தர்கள் செல்ல வேண்டுமானால், நடந்து செல்கிற ஒரு நிலை இருந்து வருகிறது. வயதானவர்கள் அந்தக் கோயிலுக்குச் செல்ல முடியவில்லை. அந்த நிலையைப் போக்க, சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் ஒன்றியம், காரவள்ளி வனப் பகுதியில், வனத் துறையின்மூலமாக பூங்கா அமைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளப்பநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமாய் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஒன்றியம், சேளூர்நாடு ஊராட்சி, பள்ளக்குழி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமாய் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் ஆசிரியர் பயிற்சி மையம் அமைக்க வேண்டுமாய், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை என்பது சித்தர்கள் வாழ்ந்த இடம். இங்கு அரிய வகையான மூலிகை மருந்துகள் உள்ளன. அதில் குறிப்பாக, ஆட்டுக்கால் கிழங்கு மிக முக்கியமான மருந்து. மனிதனுக்கு மூட்டுவலி வந்தால், ஆட்டுக்கால் கிழங்கின் மேல் தோலை நீக்கி, அதன் பிறகு துண்டு துண்டாக நறுக்கி, பூண்டு, சீரகம், வெங்காயம், மிளகு இவற்றுடன் அரைத்து சட்னியாகச் சாப்பிட்டால் மூட்டு வலி குணமாகிவிடும். இப்படிப்பட்ட அரிய வகை மூலிகை மருந்துகள் அழியவிடாமல் பாதுகாக்க வேண்டுமென்பதை இந்த மாமன்றத்திலே

பதிவு செய்து, அதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஒன்றியத்தில், அரப்பிளீஸ்வரர் கோயில் உள்ளது. அதற்கு அருகில் சுமார் 200 அடி உயரத்திலிருந்து ஆகாய கங்கை கொட்டுகிறது. அந்த நீர் வீழ்ச்சியில் பக்தர்கள் குளித்தால், உடலிலுள்ள அனைத்து விதமான நோய்களும் குணமாகிவிடுகின்றன. அதற்குக் காரணம், அனைத்து வகையான மூலிகை மருந்துகளும் கலந்து வருவதேயாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொன்னுசாமி, நீங்கள் நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) அந்த லேகியத்தையெல்லாம் பார்மஸிக்கு அனுப்புங்கள்.

**திரு. கே. பொன்னுசாமி:** அங்கு குளிக்கச் செல்ல வேண்டுமானால், படிக்கட்டுமூலமாக செல்கின்ற நிலை இருந்து வருகிறது. அந்த நிலையை மாற்றி, ரோப் கார் அமைத்துக் கொடுக்குமாறு, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஒன்றியம், செம்மேடு-அரப்பிளீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் சாலையில் தரைப்பாலம் ஒன்று உள்ளது. அந்தப் பாலத்தில், மழைக் காலங்களில் தண்ணீர் அதிகமாக வருவதால், வாகனங்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. அந்நிலையைப் போக்க, பாலம் ஒன்று அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சமீப காலமாக மொழிப்போர் தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்கவில்லையென்று தெரிகிறது. அதை உடனடியாக வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு வரைபடத்தில் திருவண்ணாமலை கோயில் வழிபாட்டுத் தலங்களில் சேர்க்கப்படவில்லை. பல இலட்சம் பக்தர்கள், வெளிநாட்டு பக்தர்கள் வந்து செல்லும் திருவண்ணாமலை கோயிலை சுற்றுலா வரைபடத்தில் சேர்க்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியிலே கொல்லிமலைக்கு எந்த வளர்ச்சிப் பணிகளும் செய்யவில்லையென்ற ஒரு தவறான தகவலை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். கடந்த ஐந்தாண்டு காலத்திலே எவ்வளவு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அவருக்கே நன்றாகத் தெரியும். அவர் போட்டியிட்ட, அவரது சொந்த ஒன்றியத்திலேகூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. இன்றையதினம் 14 ஊராட்சிகளிலே 11 ஊராட்சிகளும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் பதவியையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் பிடித்திருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர், திரு. போ. கோபாலன்.

முற்பகல் 11-30

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று 8-5-2008ஆம் நாள். இதேநாளில் 8-5-2006 அன்று தமிழ்நாட்டை ஆளவேண்டியவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் என்று மக்கள் முத்திரை குத்திய நாள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நாளை நான் நினைத்துப் பார்க்கிறேன். 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் நாள் தமிழர்கள் தலையில் இடி விழுந்தநாள். அந்த நாள் பேச்சுக்கு உயர்வளித்த மேடைக் கலைப் புலவன், மேல் பூச்சுக்கு மதிப்பளியா மேருநிகர் தலைவன், நச்சுக்கும் நலன் செய்த காரன்ன கலைஞன், மேல் உச்சிக்கு தமிழினத்தை உந்தச் செய்த அண்ணா அவர்கள் இறந்த நாள், நம்மைவிட்டுப் பிரிந்த நாள். அந்த நினைவுகளோடு, தமிழகம் கலங்கிவிடுமோ, தமிழகம் பாழாகிவிடுமோ என்று எண்ணிய காலகட்டத்தில், மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கினார்கள். தலைமை ஏற்கப் போவது யார்? நாவலரா?

கலைஞரா? என்ற நிலைமை ஏற்பட்டபோது, கலைஞர் அவர்கள்தான் தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற தீர்ப்பை அன்றைய தமிழக மக்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் எடுத்ததற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது முன்கூட்டியே முடிவு செய்த ஒன்று. எத்தனை ஆண்டுகளானாலும், அது சரியானதுதான் என்ற தீர்ப்பை நாட்டு மக்கள் மேலும், மேலும் காண்பிக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் பொன்விழா கண்டு ஐந்தாவது முறையாகத் தமிழக முதல்வராக மக்கள் வாக்களித்த இந்த நல்ல நாளில்தான் நான் பேசுவதற்கான இந்த நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். நம்முடைய கொறடா திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், நான் கேட்காமலேயே எப்போது பார்த்தாலும், சுற்றுலாத் துறையில் பேசவேண்டும் என்று சொல்லி, என்னுடைய பெயரைச் சேர்த்துவிடுவார்கள். இந்த எட்டாம் தேதிக்காகத்தான், இந்த ஊட்டிக்காரன் இந்தக் கொளுத்தும் கோடை வெயிலினைத் தாங்கிக்கொண்டு, ஒரு மாத காலமாக இங்கே காத்துக்கொண்டிருக்கிறேன். எங்கள் ஊரில் சுற்றுலா மானியம் என்றாலே எதைப் பேசுவது, தேயிலையையும் மற்றும் சுற்றுலாவைத் தவிர ஊட்டியிலே என்ன இருக்கிறது பேசுவதற்கு? நிச்சயமாக, அதுதான் எங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை, நாங்கள் பேசியாக வேண்டும்.

2006 ஆம் ஆண்டு சுற்றுலா மானியக் கோரிக்கையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டவுடனேயே ரோப் கார் தருகிறேன் என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தக் கோரிக்கை என்ன ஆனது? எங்கு போனது? யாருக்கும் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதைப்பற்றி விளக்கத்தைச் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தேயிலைக்கு அறிவிக்கப்படும் சலுகைகள் எல்லாமே தொழிற்சாலை அதிபர்களுக்கே போய்ச் சேருகின்றன. ஏழை விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இதற்கொரு நிலையான தீர்வு காண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஐந்து ஏக்கருக்குக் குறைவான நிலம் வைத்திருப்போர்கள்தான் சிறு விவசாயிகள் என நிச்சயமாக தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



இந்த மன்றத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த உறுப்பினர்களில் 12 பேர் மட்டுமே இப்போது இங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கிறோம். இந்த 12 பேரில் நானும் ஒருவன் என்ற பெருமை எனக்கு இருக்கிறது. இந்தப் பக்கம் மூன்று பேர் இருக்கிறோம். அந்தப் பக்கம் நீங்கள் ஒன்பது பேர் உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள். அந்த உரிமையில் நான் பேசுகிறேன். நீண்டகாலமாகச் சொல்ல வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் சொல்கிறேன். அமைச்சர்கள் மாவட்டவாரியாக நியமிக்கப்படுகிறார்கள். ஒரு அமைச்சருக்கு கல்வித் துறை. ஒரு அமைச்சருக்கு சுற்றுலாத் துறை. ஒரு அமைச்சருக்கு கைத்தறித் துறை என்று சொல்லி ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ளவர்கள் இருந்தாலும், அந்தத் துறை மட்டுமே அவர்களுக்குச் சொந்தமானது என்று தயவு செய்து எண்ணிவிடக் கூடாது. அவர்கள் மற்ற பிற துறைகளிலும் அவர்களுடைய பணியை, அவர்களுடைய செல்வாக்கை அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பணியாற்றுவதற்கான அனுமதியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுக்க வேண்டும். அந்த அதிகாரம் அவர்களுக்கு இருந்தாக வேண்டும். சின்னச், சின்ன மாறுதல்களைச் சொல்லவேண்டுமென்றாலும்கூட, சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர்தான் செய்தாக வேண்டுமென்ற ஒரு நிலையினை மாற்றியாக வேண்டும். அந்த மாவட்ட அமைச்சர் கேட்டுக்கொண்டால், அதைச் செய்தாக வேண்டுமென்கின்ற நிலையையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊட்டியில் சுற்றுலாத் துறை மேலும் வளம்பெற, கலைஞர் பெயரில், நான் ஆண்டுதோறும் கேட்பேன், கட்டாயம் ஒரு திரைப்பட நகர் உருவாக்கித் தரப்பட வேண்டும். நீலகிரிக்கு அரசு பொறியியல் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரி, ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களோடு சேர்ந்து, குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நானும் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அவற்றை நிச்சயமாக முதல்வர் அவர்கள் மெல்ல, மெல்லத் தருவார் என்றாலும்கூட, இப்போது அவசியமான தேவை, ஊட்டி மருத்துவமனைக்கு ஒரு கார்டியாலஜி யூனிட் - இருதய நோய்க்கான மருத்துவப் பிரிவு நிச்சயமாகத் தேவையென்று நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

உதகை நகர் அழகுடன் திகழ மேலும், மேலும் பொலிவுபெற, பல தேவையான கடுமையான உத்தரவுகளை, நகராட்சித் துறை, உள்ளாட்சித் துறை பிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தையும்

மாண்புமிகு தளபதி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், நகரைச் சுத்தப்படுத்துகிறோம் என்ற பெயரில் சாலையோரங்களில் தற்காலிகக் கடைகள் வைத்து பிழைத்துவரும் ஏழை மக்களுடைய கடைகளை அகற்றும்பொழுது, அவர்களுக்குத் தகுந்த இடத்தில் நல்ல கடைகளைக் கட்டிக்கொடுத்து, காப்பாற்ற வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீலகிரியில் பரம்பரையாக வாழ்ந்துவரும் மக்கள் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. அப்படிப் பட்டா வழங்காத நிலையில், அவர்களுக்கு வங்கிக் கடன் கிடைக்காத நிலை இருக்கிறது. பட்டா இல்லாமல் போனாலும், கூட்டுப் பட்டாமூலமாக அனுபோகம்மூலமாக வங்கிக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நஞ்சநாடு என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கரிலே தேயிலைத் தொழிற்சாலைகளிலே தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயிர் செய்யும் தேயிலையை விற்க முடியாமல் இருக்கிறது. எனவே, நஞ்சநாடு பகுதியில் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

இந்தச் சிறிய மாவட்டத்தில் இரண்டே ஆண்டுகளில் ஒரு புதுமையான முறையில் போக்குவரத்துத் துறை 100-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை விட்டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, நெடுஞ்சாலைத் துறை முன்னேற்பாட்டோடு பல வசதிகளைச் செய்துகொண்டிருக்கிறது. அந்த நெடுஞ்சாலைத் துறையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூதூர்மட்டம் என்ற இடத்தில், ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. மேல்நிலைப் பள்ளியில் படிப்பதற்கு தொழிலாளர்களுடைய பிள்ளைகள் அத்தனைபேருமே குன்னூருக்கு 20 கிலோ மீட்டர் சென்றுதான் படித்தாக வேண்டும். அங்கே ஒரு மேல்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

100 ஆண்டுகளாக குன்னூரில் இயங்கி வந்த Pasteur Institute வெறி நாய்க்கடி மருந்தைக் கண்டுபிடிக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை நம்பி 300 குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அதை வேறு



இடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. அதை மைய அரசுக்கு, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முதல்வர் சொல்லி தடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலத்தான் HPF தொழிற்சாலையையும் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி, அன்னை சோனியா காந்தி மற்றும் மத்திய அரசிடம் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, நீங்கள் நீலகிரி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி. பரிதி சுட்டெரிக்கும், ஆனால், இந்த இளம்வழுதி மாண்புமிகுவாக இருப்பதைக் காட்டிலும் தன்னுடைய தலைவனுக்குத் துணையாக நிற்பதையே கடமையாகக் கருதுகிறார். அவருடைய நகைச்சுவை மிக்க பேச்சுகளும், சொன்ன பேச்சுகளுக்கும் செவி சாய்த்து உணர்வுமிக்க அமைச்சராக இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

சுற்றுலாப் பயணிகள் வசதியாக தங்கிச் செல்ல கோத்தகிரி, குன்னூர், குந்தா, கூடலூர் போன்ற இடங்களில் அவசியம் இளைஞர் விடுதிகளை ஏற்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், பருவ காலங்களில் அதிகமான வாடகையைப் பிடுங்குகிறார்கள். மக்களை வாட்டாமல் இருப்பதற்காக அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

கூடலூரில் பூவேலி போன்ற இடங்களிலே--வனத் துறையால் நீலகிரி மாவட்டத்தில் நாங்கள் பல்வேறு இடையூறுகளைப் பெறுகிறோம். அதற்காக மத்திய அரசோடு பேசி ஒரு நிரந்தரமான வழிவகையைக் காண வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், பழைய காலத்தில் இருந்ததைப்போல, நீலகிரியிலிருந்து கேரளாவிற்கு ஓடிப்போய்கூட பதிவு செய்யக்கூடிய நிலைமை எல்லாம் இப்போது மாறியிருக்கிறது. நீலகிரியிலே ஒழுங்கான முறையிலே பத்திரம் பதிவு செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

மத்திய அரசு அச்சகங்களில் காலிப் பணியிடங்கள் நிறைய இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு 5 சதவீத ஊதிய உயர்வைக் கொடுக்க வேண்டுமென்ற ஆசையைக்கூட நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறை தோழர்கள் அவர்களுடைய ஆசையை ஆண்டுதோறும் வற்புறுத்துவார்கள். ஆழியார், பாலாஜிகோயில், மங்கி ஃபால்ஸ், டாப் சிலிப் என்று பல்வேறு அழகான இடங்கள் அங்கே இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்கூட போன மாதம் சொல்லியிருக்கிறார்கள், சுற்றுலாத் தலமாக மாற்றுவேன் என்று. அந்த அழகான பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மக்களுடைய குறைபாடு வேறு ஒன்றும் இல்லை, சுற்றுலா வளர்ச்சி பெற்றோமேயானால், நாங்கள் பொருளாதார வளர்ச்சியை எய்துவோம், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதற்கான அனைத்து ஏற்பாட்டையும் நீங்கள் செய்திருந்தாலும், மேலும், மேலும் உற்சாகத்தோடு நீங்கள் சின்ன மாவட்டம் என்று ஒதுக்கிவிடாமல், அதிகமான நிதி உதவியையும், அதிகமான அக்கறையையும் காட்டி, எங்கள் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தின்மீது பேசியதிலே மகிழ்ச்சியடைகிறேன். என் பேச்சை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபாலன் அவர்கள் பேசுகின்றபோது, ஊட்டியில் கேபிள் கார் அமைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். கேபிள் காரைப் பொறுத்தமட்டில், மத்திய அரசிடமிருந்து நிதி உதவி 2003 ஆம் ஆண்டு பெறப்பட்டிருந்தாலும்கூட, முந்தைய ஆட்சியாளர்களால் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படவில்லை. இந்த ஆட்சி அமைந்த பிறகுதான் செப்டம்பர் 2006-ல் அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, செலவு மதிப்பீடு இடைப்பட்ட காலங்களில் அதிகமாகிவிட்ட காரணத்தால், அதிகத் தொகையை டெண்டர் எடுத்தவர்கள் கோரி இருக்கிறார்கள். இதற்கான காரணங்களை சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்திடம் கருத்தாய்வு அறிவிக்கை--feasibility report கேட்டிருக்கிறது. அது கிடைக்கப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருவண்ணாமலை மேம்பாட்டிற்காக சுற்றுலாத் துறைமூலம் 459 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள்



முடிக்கப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலைக்கு முதல் முறையாக, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சுற்றுலா அலுவலர் பணியிடத்தைப் புதிதாக உருவாக்குவதற்கான அனுமதியையும் தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய வேண்டுகோளையேற்று, வேலூருக்கும் புதிதாக சுற்றுலாப் பணியிடங்களை அமைப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

**திரு. போ. கோபாலன்:** அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு நல்வாய்ப்பைத் தந்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது நான் பேசுகின்றபோது, என்னுடைய மேல்மலையனூரில் நீண்டநெடுங்காலமாக பேருந்து நிலையம் இல்லாத நிலை இருந்ததைப் பற்றி பேசினேன். பேருந்து நிலையம் வழங்கிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செய்தித் துறையில் பணியாற்றும் பத்திரிகையாளர்களின் நலன் காக்க, நாட்டில் அரசின் நிகழ்வுகள், கட்சிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்களை ஒட்டுமொத்தமாக நாட்டின் அன்றாட நிகழ்வுகளை சுடச்சுட விரைவாக, மக்களுக்குச் செய்தியாகக் கொடுப்பவர்கள்தான் பத்திரிகையாளர்கள். இரவு பகல் பாராமல் செய்தி சேகரிக்கின்ற பத்திரிகையாளர்களின் நலன் பாதுகாக்க வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான் முதலில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்டத் தலைநகர், வட்டத் தலைநகர், ஒன்றியத் தலைநகரங்களில் பத்திரிகையாளர்களுக்கு என மன்றங்களும், மன்றக் கட்டடங்களும், தொலைபேசி வசதிகளுடன் கூடிய அறை போன்றவை ஒதுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். பத்திரிகை, தொலைக்காட்சி நிருபர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் சென்று வர இலவசப் பேருந்து பயணச்சீட்டு வழங்கப்படவேண்டும். பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிவரும் இக்காலத்தில் பத்திரிகை, தொலைக்காட்சி நிருபர்கள் அனைவருக்கும் இலவச மனைப் பட்டாவும், 50 சதவீத மானியத்துடன்கூடிய வீடுகட்டக் கடனும் வழங்கப்படவேண்டும்.

ஓய்வூதியம் முறையாக கூடுதலாக அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். விபத்துக்கால உதவியும், பத்திரிகையாளர் இறந்தால் 2 இலட்சம் ரூபாய் வழங்கும் குடும்பநல உதவியும் அறிவிக்கப்பட்டு, அது ஓரிருவரைத் தவிர பல குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன். பத்திரிகையாளர், ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்தால் காலதாமதம் ஆகின்றது. விண்ணப்பித்த அனைவருக்கும் விரைந்து ஓய்வூதியம் வழங்கவேண்டும்.

பத்திரிகையாளர் விலை கொடுத்து வாங்கியுள்ள படப்பையில் உள்ள வீட்டுமனை நிலத்திற்கு உடனே பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பத்திரிகையாளர் நல வாரியம் ஒன்றை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பத்திரிகையாளர்களுக்கென சென்னை நிருபர்கள் சங்கத்திற்கு கட்டடம் கட்டித்தர கடந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அப்பணி எந்த நிலையில் உள்ளது? அதற்கான ஆணையும் போடப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதிய வருமான வரம்பைத் தளர்த்தவேண்டும்.

தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் அறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சியின் உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் புரசைத் தம்பிரான் போன்றோரின் கூத்துகளை ஆவணப் படமாக எடுக்கவேண்டும் என்றார். எங்கள் மருத்துவர் அய்யா



அவர்களின் வழிகாட்டுதலோடு இயங்குகின்ற மக்கள் தொலைக்காட்சியில் சனி, ஞாயிறு நாட்களில் இரவு 11-00 முதல் விடிய விடிய புரசைத் தம்பிரானின் கூத்து மட்டுமல்ல, அனைத்து கூத்துகளையும் ஆவணப் படமாக எடுத்து மக்களுக்குக் காண்பித்து வருகின்றோம். அதைப்போல ஜெயா டி.வி.யில் காண்பிப்பதற்கு அவர் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கலை மற்றும் பண்பாடு. 1956 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளில் தமிழர்கள் வசிக்கின்ற பகுதிகளை உள்ளடக்கி தமிழ் மாநிலம் தனியாக உருவாக்கப்பட்டது. அந்நாளை நவம்பர் முதல் தேதியை அண்டை மாநிலங்கள் ஆண்டுதோறும் 'இராஜ்யோற்சவ' விழாவாகக் கொண்டாடி தங்களின் ஒற்றுமையையும், உரிமை உணர்வையும் தட்டி எழுப்புவதைப்போல, நாமும் தமிழ் மாநிலம் உருவான நாளை தமிழகப் பெரு விழாவாகத் தொடர்ந்து கொண்டாட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

நமது தொன்மையான கலைகளை வாழ வைக்கும் அறப்பணியாக தமிழகம் முழுவதும் கலை விழாக்களை அரசு நடத்தவேண்டும். கலை மற்றும் பண்பாட்டினை வளர்க்கும்விதமாக கிராமிய, நாடகக் கலைஞர்கள் பற்றிய ஆவணங்களைப் பாதுகாக்க, ஆவணக் காப்பகம் ஒன்றை உருவாக்கவேண்டும். நாட்டார் நிகழ்வுக் கலைகளை ஊக்குவித்தல், இசைத் தட்டுகள், இசை நூல்கள், இசைக் குறிப்பேடுகள், இசை ஆய்வுகள் போன்றவற்றைத் தொகுத்து 'தமிழ் இசை' நூலகம் ஒன்றைத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உருவாக்குவதோடு, சுற்றுலா மையங்களில் தமிழகக் கோயில் கலைகள் பற்றிய மாதிரி வடிவுகள் கொண்ட அருங்காட்சியகங்களை உருவாக்கவேண்டும்.

சிற்ப உலோகச் சிலைகளை உரிய படங்களுடன் கலைக் களஞ்சியமாக ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

தமிழ்க் கல்வெட்டுகளில் மையப்படுகைகளை மைசூர் மையக் கல்வெட்டியல் நிறுவனத்திடமிருந்து பெற்று அவற்றைப் பதிய வேண்டுமென்று கேட்கின்ற அதேவேளையில், சிற்றோலைச் சுவடிகளையும், அரிய கையெழுத்துக் காகிதச் சுவடிகளையும் சேகரித்து களஞ்சியமாக வெளியிடவேண்டும்.

நாட்டுப்புற இலக்கியங்களை சேகரித்து பதிவு செய்தல், நாட்டுப்புற அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்குவதோடு கோயில் களஞ்சியத் திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும். சித்த மருத்துவ நூல்கள்

அனைத்துக்கும் காப்புரிமை பெற்று பாதுகாத்தல், தமிழ் அருங்காட்சியகங்களை மாவட்டத் தலைநகரந்தோறும் விரிவாக்கம் செய்வதோடு, தமிழகத்திலுள்ள ஆவணக் காப்பகங்களில் கிடைக்கக்கூடிய ஆவணங்கள் பற்றிய அட்டவணைத் தொகுப்பினை மின்னணுப் பகிர்வு செய்திடவேண்டும்.

பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம் உள்ளிட்ட ஊடகங்களில் வரும் பெண்ணடிமை, ஆபாசம், மது, புகை, ஆண்டான் அடிமை, வன்முறை போன்றவற்றைப் பரப்புவதைத் தடுக்கவும், சமத்துவம், சகோதரத்துவம், சுயசிந்தனை பகுத்தறிவு ஆகியன வளர்ச்சியுறவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

*முற்பகல் 11-45*

நம்முடைய பண்பாட்டை சீரழிக்கும் வகையில் பள்ளி, கல்லூரிகளில் மேற்கத்திய மற்றும் திரைப்படம் சார்ந்த ஆடல், பாடல், கலை விழாக்கள் தடை செய்யப்பட வேண்டும். மாறாக, அங்கு தமிழிசை, தமிழர் கலைகள் நடத்த ஊக்குவிக்க வேண்டும். விளையாட்டிலும் கபடி உள்ளிட்ட தமிழர் விளையாட்டுகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். பள்ளிகளில் தமிழ் பண்ணிசை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதற்காக பயிற்சி பெற்ற தமிழ் இசைவாணர்கள் ஆசிரியர்களாய் அனைத்துப் பள்ளிகளிலும் நியமிக்கப்படவேண்டும்.

மாவட்டம் தோறும் தமிழிசைக் கல்லூரிகள் நிறுவப்படவேண்டும். சிந்து சமவெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம், தமிழகத்தில் கிடைத்துள்ள தொன்மையான கல்வெட்டுகள் குறித்து சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்படவேண்டும்.

திரைப்படம் மிகவும் சக்தி வாய்ந்த ஊடகம். குழந்தைகள் முதல், முதியோர் வரை மனிதர்களின் மனதை எளிதில் ஈர்க்கக்கூடிய ஊடகம். சில திரைப்படங்கள் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக, வக்கிர உணர்வுகளைத் தூண்டுவதாகவும், ஆபாசம், அருவருப்பு, பெண்ணடிமை, வன்முறை, தீவிரவாதம் போன்ற சீரழிவுகளை உருவாக்குவதாகவே உள்ளது. இதை மருத்துவர் அய்யா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியும் தொடர்ந்து சொல்லிவருவதால் நாங்கள் திரைப்படத்திற்கு எதிரானவர்கள் அல்ல. நல்ல திரைப்படங்களாக வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம்.



குறிப்பாக, சினிமா படங்களில் இப்போது பல பாடல் காட்சிகள் 'கட்டிப்புடி கட்டிப்புடிடா கண்டபடி கட்டிப்புடிடா, சக்கர வள்ளிக் கிழங்கு சமஞ்சது எப்படி,' இதைப்போன்ற பாடல்கள், அடுத்து, திரைப்படங்களுக்கு, 'ஐ லவ்யூடா' போன்ற திரைப்பட பெயர் தலைப்புகளை வைத்து இளைஞர்களை சீரழிக்கின்ற நிலை தொடர்ந்துகொண்டு வருவதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, அரைகுறை ஆடை அணிந்து வருதல், இழிவான வசனங்கள், அருவருப்பான பாடல்கள், அசிங்கமான அபிநயங்கள், காட்சிகள் அதிகமாக இடம் பெறுகின்றன. இது எவ்வளவு சமூகக் கேடானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குடும்பத்தோடு படங்கள் பார்க்க முடியாது. இம்மாமன்றத்தின் வாயிலாக, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வேண்டுகோளாக முன்வைக்கிறேன். திரைப்பட நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள், கதை ஆசிரியர்கள், வசனகர்த்தாக்கள், பாடல் ஆசிரியர்கள், இயக்குநர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். திரைப்படத் துறையினருக்கு சமூகப் பார்வை வேண்டும். சமூகத்தின் மீது அக்கறை கொள்ள வேண்டும். இது என் நாடு, என் மக்கள், என் நாடும், என் மக்களும், இளைஞர்களும் வீணாகிற நிலைக்கு திரைப்படங்கள் இருக்கக்கூடாது என்ற சிந்தனை வேண்டும். குழந்தைகளை, இளைஞர்களை, பெண்களை நெறிப்படுத்துகிற, அறிவை வளர்க்கக்கூடிய நாட்டுப்பற்றை உருவாக்குகின்ற, வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டுகின்ற, ஒட்டு மொத்த மனித வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்ற, கருப்பொருளை மையமாகக் கொண்டு திரைப்படங்கள் வெளிவரவேண்டும்.

இன்று உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு படிக்கின்ற, கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவிகளை வைத்துப் படம் தயாரிக்கிறார்கள். இது மாணவ, மாணவிகள் மத்தியில் பரவி, மாணவச் சமுதாயம் சீரழிகின்றது. இதைத் தடை செய்ய வேண்டும். புகைபிடித்தல், மது குடிக்கின்ற காட்சிகள் தடை செய்யப்படவேண்டும். ஒட்டுமொத்தமாக சமூகச் சீர்கேடுகளை விதைக்கின்ற படங்களைக் கண்டிப்பாகத் தடைசெய்ய வேண்டும். தணிக்கைத் துறையை மாநில அரசு வற்புறுத்தி கடுமையாக தணிக்கை செய்ய வழிவகுக்க வேண்டும்.

இன்று செய்தி ஏடுகளான ஊடகங்களில், பெண்களை ஆபாசமாகச் சித்தரிக்கின்ற, வன்முறைக்கு வித்திடுகின்ற படங்கள் அதிகம்

வெளிவருகின்றன. இதை நிறுவன உரிமையாளர்கள் தடுத்து நிறுத்த வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரால் மனிதப் பண்பை மாசுபடுத்துகின்ற, சமூகச் சீரழிவிற்கு வித்திடுகின்ற படங்கள் தடுக்கப்பட வேண்டும்.

அடுத்து செய்தி மற்றும் விளம்பரம். விளம்பரங்கள், வெட்டுருவப் படங்களை தடை செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பாராட்டுகிறோம். எங்களுடைய நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா அவர்களே, நேரடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து பாராட்டையும், நன்றியையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதேவேளையில், இன்று தமிழகத்தின் கலாச்சாரத்தை அழித்து வரும் செயல்களில், அருவருக்கத்தக்க செயல்களும், விளம்பரங்களும், தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. திரைப்படத் துறையில் அரசியல் கட்சிகள், தனியார் குழுமங்கள் செய்யக்கூடிய விளம்பரங்கள் நமது தமிழ் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் அழிக்கக்கூடிய வகையில் இருக்கும் நிலையை மாற்ற வேண்டும். சிற்றூர், பேரூர், நகரம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும், சாலையோரங்கள், பாலங்கள், சுவர்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சுவர் எழுதும் கலாச்சாரம், வான் உயர வெட்டுருவப்படங்கள் உருவ விளம்பரங்களும் பெருகி வருகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி, அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இம்மாதிரியான விளம்பரங்களில் ஈடுபடக்கூடாது என்ற நிலையை எடுக்க வேண்டும். பொது நலன் சார்ந்த விளம்பரங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிய அனுமதி பெற்று நாள் வாடகை பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கவேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் விளம்பரத்திற்காகக் கொண்டுவந்த நடைமுறைகளை அனைவரும், அனைத்துக் கட்சியினரும் பின்பற்ற வேண்டும்.

தமிழ் ஆய்ந்த தமிழ் மகன் முதல்வர் கலைஞர் அவர்கள் இப்போது தமிழுக்கு செம்மொழியும், செம்மொழி ஆய்வு மையத்தையும் கொண்டுவந்து, சிறப்புச் சேர்த்திருக்கின்ற அதேவேளையில், அரசுத் துறை சார்ந்த விளம்பரங்கள், ஆணைகள், காவல் துறையினர் அரசியல் கட்சிகளுக்கு வழங்குகின்ற அனுமதிகள், நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவை இன்னும் ஆங்கிலத்திலேயே வருவது வேதனைக்குரியது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் கொண்டுவந்த தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். தற்பொழுது



50 விழுக்காடுகூட தமிழில் வருவதில்லை என்பதை நான் இந்தநேரத்திலே வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சியிலிருக்கிற இந்தக் காலத்திலாவது சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர்சூட்டி மகிழ்ந்ததோடு, 1968-ல் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று முழங்கிய அண்ணாவின் கனவை நனவாக்க வேண்டும்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** ஆலயங்கள் அனைத்திலும் தமிழில் அர்ச்சனைசெய்ய வேண்டும் என்று உறுதியான ஆணைகளை மீண்டும் பிறப்பிக்க வேண்டும்.

அடுத்து, முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை. இன்றைக்கு போலிப் பத்திரங்களும், முத்திரைத் தாள்களும் புழக்கத்திலிருந்து வருவதை அறவே நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்திற்குப் பக்கத்திலே பெரமண்டூர் என்கிற ஊரில் அமுதா என்கிற ஒரு பெண்ணினுடைய நிலம் ஏறக்குறைய ஒரு ஏக்கர் 35 செண்ட் நிலம் 19-9-2006-ல் அவருக்குத் தெரியாமலேயே அது வேறு ஒருவருக்குப் பவர் பத்திரம் செய்யப்பட்டு, சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த முகிலன் என்பவருக்குப் பவர் பத்திரம் செய்யப்பட்டு 19-9-2006-ல் டெல்லியைச் சேர்ந்த அரிநாராயணன் அகர்வால் என்பவருக்குக் கிரயம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** அந்தப் பகுதியைச் சார்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 100-க்கும் மேற்பட்ட நிலங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது எல்லாம் Property Act-ல் வருகிறது. Purchaser should be beware. அப்படி என்றுதான் சட்டம் சொல்கிறது. எல்.ஐ.சி.-யை நான் விற்கலாம். ஆனால் நீங்கள் வாங்க தகுதியுடையவரா என்று நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். Purchaser should be beware, அதுதான் சட்டம்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** எனவே அரசாங்கம் அவற்றைக் கண்டுபிடித்து—இன்றைக்கு விழுப்புரம் மாவட்டத்திலே மிகப் பெரிய பீதியை உண்டாக்கி இருக்கிறது விவசாயிகள் மத்தியிலே. அதைக் கண்டுபிடித்து--கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் நிலத்தினை ஒப்படைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறை. என்னுடைய விழுப்புரம் மாவட்டத்தினுடைய, தலைநகராக இருக்கிற செஞ்சிக் கோட்டை. தமிழகத்திலே பிரசித்தி பெற்ற கோட்டை. அந்தக் கோட்டைக்கு தினம் தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் வந்து போகிற ஒரு நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு வேண்டிய தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், செஞ்சிக் கோட்டைக்கு ஒரு கேபிள் கார் வசதி செய்து தரவேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதை நிறைவேற்றித் தருவதோடு, செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், வணிக வரித் துறை இன்று வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு கட்டடத்தையும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூரில் இருக்கிற அங்காள பரமேஸ்வரி கோயிலுக்கு வருகிற இலட்சக்கணக்கான மக்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில்-- மாதம் ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிற ஒரு கோயில். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் வேண்டுமல்லவா?

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** அந்தக் கோயிலுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை செய்து தர வேண்டும். கடந்த நிதிநிலை அறிக்கையிலே 1¼ கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, டெண்டர் விடாமல் அந்தப் பணி தொடாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நன்மாறன், ஞானசேகரன் ஒரு point of order கேட்கிறார். ஒரு நாளைக்கு ஒரு point of order -ஆவது எழுப்பவில்லை என்றால் உங்களுக்குத் தூக்கம் வராது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சபாநாயகர் இருக்கையில் இருக்கிறபோது ஒரு வார்த்தை சொன்னீர்கள். நான் L.I.C.-யை வேண்டுமானாலும் விற்கலாம் என்று தாங்கள் அப்படிக் கூறியிருக்கக்கூடிய நிகழ்வு உதாரணத்திற்காக நீங்கள் சொன்ன ஒன்று. ஆனால் நீங்களே L.I.C. விற்கக்கூடிய அளவுக்கு இருக்கிறீர்கள் என்ற செய்தி பதிவாக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் அப்படி வராது.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, அப்படித்தான் வரும். எனவே உதாரணத்திற்கு நான் L.I.C விற்கலாம் என்று நீங்கள் சொல்லும்போது நீங்கள் அப்படிப்பட்ட நபரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அப்படிப்பட்ட நபர் அல்ல. சட்டத்தைத்தான் நான் சொன்னேன். திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களை இணைத்து சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். 3 அல்லது 5 நாட்கள் என்று ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். குறிப்பாக கோடைக் காலங்களில் இதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா மையங்களைக் குறித்து குறும்படம் வெளியிட வேண்டும். மதுரை மன்னர் திருமலைநாயக்கருடைய அரண்மனையில் ஒலி, ஒளிக் காட்சி நவீனக் கருவிகளுடன் மேம்படுத்தப்பட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய இருக்கைகள் பழுதுபார்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை புறநகர், வாடிப்பட்டி தாலுகா குட்லாடம்பட்டியில் உள்ள நீர் அருவி ஏழைகளின் குற்றாலம் என்று அழைக்கப்படுகிறது. மக்கள் சரியாகச் சென்று வர, அதனை முறையாகப் பயன்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் பாரம்பரியமிக்கது. மாலை நேரங்களில் மக்கள் அதிகம் கூடுகிறார்கள். அக்குளத்தில் தண்ணீர் நிரந்தரமாகத் தேக்கி வைக்க உரிய நடவடிக்கை எடுத்து சுற்றுலாவை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

சுற்றுலா அதிகாரி பணியிடங்களில், இட ஒதுக்கீடு நிறைவேற்றப்பட வேண்டும். வெளி மாநில சுற்றுலா தகவல் மையங்களில் பணியாளர் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர்களை அடையாளம் கண்டு அவர்களோடு தொடர்பு கொள்வதற்கு ஒரு தனி குறிப்பேடு, directory ஒன்று வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர்களுக்கு அடையாள அட்டை தருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

மதுரை முனிச்சாலை, சுண்ணாம்புக்கார தெரு போன்ற பல பகுதிகளிலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கிடையில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தனி நலவாரியம் அமைத்தது மகிழ்ச்சி. நிதியும் ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அக்கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலைமாமணி பட்டம் நாட்டுப்புறக் கலைஞர்களுக்குக் குறைவாகவே கிடைக்கிறது, கூடுதலாக வழங்க வேண்டும். நலிந்த கலைஞர்களுக்குத் தரும் உதவித் தொகையும் உயர்த்தப்பட வேண்டும். ஊருக்கு இன்பம் தருவோர் உள்ளுக்குள் துன்பம் அனுபவிக்கும் நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். Outsourcing முறை கூடாது. ஒலி, ஒளிக் காட்சி அமைக்க வேண்டும். அங்கு ஆவின் பால் நிலையம் அமைக்கப்பட வேண்டும். கருணை அடிப்படையில் வாரிசுகளைப் பணியமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மதுரையில் தமுக்கம் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைக்க வேண்டும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நான்மாடக்கூடல் என்ற பெயரில் நல்ல காட்சிக்கூடம் ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனை நிரந்தரமாகக் குறிப்பிட்ட இடத்தில் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் ஒன்றியம், இராமலிங்கம்பட்டியில் வாழ்ந்த, கவி ஆறுமுகனார் அவர்கள் காலமாகி இருக்கிறார். அவர் சிறந்த தேச பக்தர். சிறந்த கவிஞர், மிகச் சிறந்த படைப்பாளியாக இருந்திருக்கிறார். அவருடைய இல்லம் நினைவில்லம் ஆக்கப்படுவதும், திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி அவர்களைக் கலந்து உரிய நடவடிக்கை எடுத்தும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, அதங்கோடு என்னும் ஊரில் வாழ்ந்த அதங்கோட்டு ஆசானுக்கு நினைவு மண்டபம் கட்டப்பட வேண்டும். நாகையில் மறைந்த தமிழ் அறிஞர் தனித் தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகளாருக்கு நினைவு மண்டபம் வேண்டும்.

மதுரையில் 5,000 ரூபாய்க்குக் குறைவான முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ளது. அதனைப் போக்க வேண்டும்.

பத்திரத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தினமணி செய்தியாளர் ஜீவா பிரபாகரன் கடுமையான நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அவருடைய மருத்துவச் செலவை முதலமைச்சர் நிவாரண நிதியில் ஏற்க வேண்டும். இதன்மூலமாக வரையறை என்பது போக்கப்பட்டு, முழு மருத்துவச் செலவும் கிடைத்து அவர் குணமடைய உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தியாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும். அரசு வீட்டு மனை வழங்க வேண்டும்.

அரசு அச்சகத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, குறிப்பாக பைண்டர்களுக்கு 1-8-1992 முதல் 5 சதமான தனி ஊதியம் வழங்க வேண்டுகிறேன்.

உயர் கல்வியில் தமிழ் வேண்டும். உயர் நீதிமன்றத்தில் தமிழ் இடம் பெற வேண்டும், அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தமிழ் செம்மொழி என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதனால் இம்மொழி செம்மொழி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது மாணவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, ஒரு தனிப் பாடம் என்பது அமைக்கப்பட வேண்டும். தமிழ்வழியில் பயில்வோராக இருந்தாலும், ஆங்கில வழியில் பயிலக்கூடிய மாணவராக இருந்தாலும், ஆரம்பக் கல்வியில் இருந்து நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி ஆகிய அனைத்திலும் தனித் தனிப் பாடங்கள் வைத்து எதனால் தமிழ்மொழி செம்மொழி என்பதை தமிழர்களுக்கு, தமிழ் மாணவர்களுக்கு அறிவிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

திரையரங்குகளில் வாகனங்களுக்கு தனி வசூல் கூடாது. நிர்வாகமே அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுதுபொருள் அச்சுத் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும். சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக்குக் கடிதம் தர வேண்டும் என்றால், தட்டச்சு இயந்திரத்தைத்தான் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. போதுமான xerox வசதியும் இல்லை. ஆகவே, கணினியை அதிகப்படுத்த வேண்டும், Xerox வசதியும் கூடுதலாக அமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சியிலும் அதேபோன்று குறிப்பிட்ட துறையிலும் அரசு எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்ற அதே சமயத்தில், இந்தத் துறையிலே குறிப்பாக அரசு அருங்காட்சித் துறை என்பது மேலும் பலப்படுத்தப்படுவதற்கு மதுரையில் உள்ள அரசு அருங்காட்சியகம் காந்தி மியூசியத்தில் இயங்கி வருகிறது. அதனை உரிய இடத்தில் அமைத்து கூடுதலாக மக்கள் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் கேட்டு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

*நண்பகல் 12-00*

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரக்கூடிய துறைகளில் பத்திரப் பதிவுத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. முத்திரைத்தாள்கள் தேவைக்கேற்ப கிடைப்பதில் உள்ள தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், போலி முத்திரைத்தாள்களை புழக்கத்தில் உள்ளதை முறியடிக்கவும், முத்திரைத் தீர்வையினை மின்னணு முறையில் (e-Stamping) வசூலிக்கும் முறையை அனைத்துப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல போலி பத்திரப் பதிவினைத் தவிர்க்க அண்டை மாநிலங்களில் உள்ளதைப்போல மின்னணு ரேகைப் பதிவு முறை மற்றும் புகைப்படப் பதிவு முறை (Electronic Thumb Impression and Biometric Camera) முறையைச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

நிலத்தின் வழிகாட்டு மதிப்பு பலமடங்கு உயர்ந்திருப்பதால் சாதாரண ஏழையெளிய, நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் வீடுகளைக் கட்ட வாங்கியுள்ள 4, 5 சென்ட் நிலத்தைக் கூட பதிவு செய்ய 4, 5 இலட்சம் முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே, பத்திரப் பதிவு செய்ய முடியாத நிலை உள்ளது. ஆகவே, நிலத்தின் வழிகாட்டு மதிப்பை அரசு முறைப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பொது அதிகாரப் பத்திரம் வில்லங்கச் சான்றில் இடம் பெறாத காரணத்தால் ஒரே நிலத்தை, ஒரே நபர் 5, 6 நபர்களுக்கு விற்கின்ற பெரிய அளவு நில மோசடி என்பது நடைபெறுகிறது. ஆகவே, வருங்காலங்களில் பொது அதிகார பத்திரம் வில்லங்கச் சான்றில் Encumbrance Certificate -ல் இடம் பெறச் செய்ய வேண்டும். இதன்மூலம் பெரிய அளவுக்கு நடைபெறுகின்ற நில மோசடியைத் தடுக்க முடியும்.

பத்திரப் பதிவு செய்யும் உரிமையாளர்கள் அந்தப் பத்திரத்தைப் பெற 1 மாத காலம் 2 மாத காலம் தாமதம் ஆகிறது. ஆகவே, அனைத்து சார்பதிவு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கெலமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, அரசு சார்பிலே புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தளி பகுதியிலே புதிய சார்பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அதேபோல இராயக்கோட்டை சார்பதிவு அலுவலகத்திற்கு கணினி மயமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பதிவு அலுவலகங்களில் 90 சதவீதம் தகுதியுடைய பதிவு அலுவலர் இன்றி அல்லல்படும் பொதுமக்கள் நலன் கருதி உடன் நிறைவு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரசுக்கு வர வேண்டிய வருவாய் பல இலட்சம் ரூபாய் பல ஆயிரம் நிலுவை ஆவணங்களில் பல ஆண்டுகளாகத் தடைபட்டுள்ளது. நிலுவையை உடன் அகற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறை பயிற்சி நிலையம் ஜூன் 2006 முதல் செயலற்றுக் கிடக்கிறது. ஆகவே, அதனைச் செயல்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறை பணியாளர்களுக்குப் போதிய கணினி அறிவு இல்லாததால் தினசரி பொதுமக்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளைத் தவிர்க்க உரிய கணினி அறிவுள்ளவர்களை பணி நியமனம் செய்ய வேண்டுகிறேன்.

பெரும்பாலான பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. அதனால் அரசுக்கு பொருள் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

60 வயதுக்கு மேற்பட்ட ஆவண எழுத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது வேலைவாய்ப்பை உருவாக்குவதில் சுற்றுலாத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக அண்டை மாநிலமான கேரளா, இராஜஸ்தான், கோவா போன்ற மாநிலங்களில் மொத்த வருவாய் என்பது சுற்றுலாவைச் சார்ந்துள்ளது. தமிழகத்தில் நீண்ட கடற்கரைப் பகுதி, கிழக்கு கடற்கரை மாமல்லபுரம், முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனை, சிறந்த வழிபாட்டுத் தலங்களான தஞ்சை மற்றும் மதுரை நகரங்களில் உள்ள வழிபாட்டுத் தலங்கள், கோடை வாசஸ்தலங்களான ஏற்காடு, ஊட்டி, கொடைக்கானல், நீர்வீழ்ச்சிகளான குற்றாலம், ஒகேனக்கல் என இன்னும் பல சுற்றுலா மையங்கள் உள்ள போதிலும், 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில்தான் இன்றுவரை அடிப்படை வசதிகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளின் இன்றைய தேவைக்கேற்ப கழிவறை, குடிநீர், தங்கும் விடுதிகள் மற்றும்



போக்குவரத்து வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமச்சந்திரன், Reporters எழுதுகிற அளவுக்கு கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகப்படுத்த முடியும். ஆகவே, சுற்றுலாத் துறை மூலம் இவற்றைப் புனரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நமது கலை மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலாத் தலங்களில் நமது பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாத் துறை மூலம் நிகழ்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தளி தொகுதியில் ஆண்டு முழுவதும், குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவுவதால் ஆங்கிலேயர்களால் லிட்டில் இங்கிலாந்து என்று தளி அழைக்கப்படுகிறது.

500-க்கும் மேற்பட்ட தனியார் ரிசார்டுகள் என்னுடைய தொகுதியில் உள்ளன. தளி பெரிய ஏரியில் படகு இல்லம் மற்றும் பூங்கா அமைக்க பொதுப் பணித் துறை சார்பில் ரூ.80 இலட்சமும், ஏரியைச் சீரமைக்க 1 கோடியே 94 இலட்சமும் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் அந்தப் பூங்காவில் தங்கும் விடுதி ஒன்றை சுற்றுலாத் துறை சார்பிலே கட்டித் தர வேண்டுகிறேன்.

என்னுடைய தளி தொகுதியில் கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரமுள்ள பச்சைப்பசேல் என இயற்கை எழில்கொண்ட பெட்டமுகிலாளத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து அங்குள்ள ஏரியில் படகு இல்லம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள தேவர் பெட்டாவில் உள்ள சிவன் கோவில், நாருஒந்து சாமிமலை மற்றும் தப்பக்குளி போன்ற கோயில்களுக்கு ஏராளமான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலமான கர்நாடகாவிலிருந்தும் நாள்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள்

மவருகை தருகின்றனர். ஆகவே, அங்கு சுற்றுலாத் துறையின் சார்பில் குடிநீர் வசதி, சாலை வசதி, தங்கும் விடுதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் நீர் வீழ்ச்சியின் எழிலைக் காண மாநிலத்திலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். பயணிகள் அருவியின் எழிலைக் கண்டுகளிக்க ஏதுவாக ரோப் கார் வசதியையும், வனத் துறையின் மூலம் உயிரியல் பூங்காவும், குளிக்க கூடுதலாக இட வசதியும் அரசு சார்பில் தங்குவதற்கு நட்சத்திர விடுதி ஒன்றையும் ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-05

சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவிற்கு தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்திட வேண்டுகிறேன்.

இந்திய நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற 4 தூண்களிலே, பத்திரிகை ஜனநாயகமும் ஒரு தூணாகும். இப்பத்திரிகை ஜனநாயகத்தின் மூலம்தான் ஒரு நாட்டின் ஆட்சியின் ஆக்கபூர்வமான பணிகள், மக்களுக்கான நலத் திட்டங்கள், அறிவிப்புகள், தேச ஒற்றுமை, மத நல்லிணக்கம் போன்றவை கோடிக்கணக்கான மக்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த வகையில் செய்தித் துறை ஒரு முக்கியமான துறை ஆகும். இங்கு நமது சட்டப்பேரவையில் பேசப்படுபவை, விவாதிக்கப்படுபவை, அறிவிக்கப்படுபவை உடனுக்குடன் மக்களுக்குச் சென்று சேர்க்கின்றன என்பதும் இத்துறையின் சிறப்பான செயல்பாட்டினால்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையில் பணிபுரிகின்ற பத்திரிகையாளர்களுக்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமின்றி, குறிப்பாக, வட்டார அளவிலும், கிராமப்புறங்களிலும் உள்ள பத்திரிகையாளர்களுக்கும், பஸ் பாஸ், அடையாள அட்டை, வீட்டுமனை, Press sticker, ஒரு நிறுவனத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தால் அடையாள அட்டை ஆகியவை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்துள்ள 31 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் என்பது இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.



இப்போது 4,000 ரூபாய் என்று வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தை 10,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும்.

அதைப்போல, பத்திரிகையாளர்கள் இறந்தால் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை என்பது 45 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, ரூபாய் இரண்டு இலட்சம் என்பதை ஐந்து இலட்சம் ரூபாயாக அந்த நிவாரண உதவித் தொகையை பத்திரிகையாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் அதிக நடமாட்டமுள்ள பள்ளி, கல்லூரி மற்றும் கோயில்களுக்குச் செல்கின்ற பகுதிகளில் ஒட்டப்படுகின்ற ஆபாசச் சுவரொட்டிகளையும், அதேபோல ஆபாசம், வன்முறை, தமிழ் கலாச்சாரச் சீரழிவு போன்ற வியாபாரக் குறிக்கோளுடன் எடுக்கப்படுகின்ற தமிழ்த் திரைப்படங்களைத் தணிக்கை செய்து, அவற்றைத் தடை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அச்சக ஊழியர்களுக்கு 5 நாட்கள் வேலை முறை மற்றும் 5 சதவீதம் ஊதிய உயர்வு மற்றும் சிறப்பு ஊதியம் 300 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 150-க்கும் மேற்பட்ட தெலுங்குவழி ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. தமிழ் மொழியைக் கற்க அவர்கள் தயாராக உள்ளனர். தமிழைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்த பிறகு தாய்மொழி வழியில் கல்வி கற்க முடியாத நிலை இன்றைக்கு சிறுபான்மை மொழிப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ளன. தமிழ் கட்டாயப் பாடம் என அறிவித்த பிறகும் Part I-ல் தமிழும், Part II-ல் ஆங்கிலமும், Part III-ல் கணிதம், அறிவியல், சமூக அறிவியல், பிற பாடங்களும் உள்ளபோது விருப்பப் பாடமாகத்தான் தாய் மொழிக் கல்வி பயில வேண்டியுள்ளது. Part III-ல் உள்ள பாடங்களை அவர்கள் எந்த மொழியில் பயில்வது என்பது அவர்களுக்கு கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் சிறுபான்மை மொழிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து இதற்கு முன்பு ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்களும், திரு. ஜாண் ஜேக்கப் அவர்களும்கூடப் பேசியுள்ளனர். ஆகவே, சிறுபான்மை மக்களின் பாதுகாவலனாக உள்ள நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், ஆரம்பப் பள்ளிவரை தாய்மொழி வழியில் சிறுபான்மை மொழிப் பள்ளிகளில், தெலுங்கு, கன்னடம், உருது மற்றும் மலையாளம், பள்ளிகளில் தாய் மொழியில் கல்வி கற்க வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியிலே அரசு கலைக் கல்லூரியோ, தனியார் கல்லூரியோ இல்லை. ஆகவே, அரசு கலைக் கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. டி. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், 7 minutes over.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்பம் சார்பதிவாளர் அலுவலகம் எம்.எஸ். சிங்கராயர் காலத்தில் 1956-ல் கட்டப்பட்டது. மிகவும் பழமைவாய்ந்தது, பழுதான நிலையில் உள்ளது. அந்த சார்பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பித்து, நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன, எதைத்தான் கேட்கப் போகிறீர்கள்? உட்காருங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மேலும், சார்பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைத்தாள்கள் விற்பனை செய்ய வேண்டுமென்று அரசு ஆணையே உள்ளது. ஆனால், பொதுவாக தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான சார்பதிவாளர் அலுவலகங்களில் முத்திரைத் தாள்கள் விற்பதில்லை. குறிப்பாக, கம்பத்தில் விற்பதில்லை. முத்திரைத்தாள்கள் விற்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

வில்லங்கச் சான்றிதழ் வாங்குவதற்கு, அதிவிரைவாகப் பெறுவதற்கு ரூபாய் 100 கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால், அதிவிரைவாக வில்லங்கச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. ரூபாய் 100 கட்டணம் செலுத்தியும் வீண் ஆகிறது. ஆகவே, விரைவாக அந்த வில்லங்கச் சான்றிதழ் கிடைக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் அரசு வழிகாட்டி மதிப்பீடு உயர்த்தப்படவில்லை. ஆனால், 1-8-2007 அன்று முதல் சாதாரணக் காலியிடங்களுக்குக்கூட சதுர அடிக்கு ரூபாய் 20-லிருந்து ரூபாய் 120 வரைக்கும், ரூபாய் 40-லிருந்து ரூபாய் 200 வரைக்கும் உயர்த்தப்பட்டிருக்கின்றது. நஞ்சை



நிலங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் என்றிருந்த நிலையிலிருந்து, 4 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு உயர்த்தப்பட்டிருப்பதனால், ஏழை எளிய, விவசாய, நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதைப்போல, நகர மையப் பகுதிகளில் அதிக விலைக்கு விற்கக்கூடிய இடங்களில் சதுர அடிக்கு ரூபாய் 225 என அரசு மதிப்பீடு இருக்கிறது. அதைப்போல, கிராமங்களில் குறைந்த விலையில் விற்கக்கூடிய இடத்திற்குக்கூட ரூபாய் 225 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்கு, கம்பம் நகரத்தின் மையப் பகுதியில் ஒரு சென்ட் இடம் 10 இலட்சம் ரூபாய் விற்கக்கூடிய இடத்திற்கும் ரூபாய் 225 என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதைப்போல, ஆங்கூர்பாளையம் என்ற கிராமத்தில் சுடுகாட்டிற்குச் செல்கின்ற காலியிடங்களுக்குக்கூட அதே 225 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வேறுபாடுகள் களையப்பட வேண்டும்.

பத்திர எழுத்தாளர்களுக்கு நல வாரியம் அமைத்துத் தரவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

*மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து*

என்ற அய்யன் திருவள்ளுவர் கூறிய அந்தக் கருத்திற்கு ஏற்ப, சுற்றுலாப் பயணிகளை விருந்தினர்களாக இன்முகத்துடன் வரவேற்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

தேனி மாவட்டத்தில், மேகமலை 5,000 அடி உயரத்தில் இருக்கின்றன. 6 நீர்த் தேக்கங்கள் இருக்கின்றன. 39,000 ஏக்கர் நிலம் அரசு தனியாருக்கு lease-ஆகத் தந்திருக்கின்றது. எவ்வளவு நிலைத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். சீதோஷ்ணநிலையும் மிதமாக இருக்கின்றது. சுற்றுலாத் தலத்திற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றது. அதைச் சுற்றுலாத்தல மையமாக்க அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பம் தொகுதியில் குன்றக்குறவர் குடியிருப்பு என்ற பளியன்குடிசையில் மண்ணான்மார்கள், ஊராளிமார்கள், பழியர்கள் தங்கியிருக்கின்றார்கள். ஆதிவாசிகள் தங்கியிருக்கின்றார்கள்.

அவர்களைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆர்வத்தோடும், ஆவலோடும் சென்று வருகின்றார்கள். அங்கே அதிகமான குடில்களை அமைத்து, கூடலூரிலிருந்து-பளியன்குடிசைக்கு மாட்டு வண்டிப் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்தால், அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவரலாம்.

சுற்றுலாத் துறை என்பது, மனித நேயத்தை வளர்க்கக்கூடிய ஒன்று. வேலைவாய்ப்பை, அன்னியச் செலவாணியை, இன்னும்கூட கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்டிருக்கின்ற பிணக்குகளை நீக்கி இணக்கம் செய்வதற்கும், தேனிலவுத் தம்பதிகளுக்கு சுகத்தைத் தருவதற்குரிய அந்தச் சுற்றுலாத் துறையை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டும். தமிழ்நாட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளில் 77 சதவீதம் உல்லாசமாகவும், மகிழ்சியாகவும், பல செய்திகளைச் சேகரிக்கவும் வருகின்றார்கள். பெரும்பான்மையானவர்கள் கல்வி, ஆன்மீகம், அரசியல், சமயம் போன்றவற்றின் தொடர்புடையதாக வருகின்றார்கள். அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கு அவர்களது விருப்பத்திற்கேற்றவாறு நீங்கள் வசதிகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சுற்றுலாத் துறை என்பது பல துறைகளோடு இணைந்த ஒன்று. நிதித் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை இவை எல்லாம் இணைந்து ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் இந்தச் சுற்றுலாத் துறை மேம்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல, தமிழ்நாட்டிலே பல ஆலயங்கள் உள்ளன. மதுரை, கன்னியாகுமரி, பிள்ளையார்பட்டி, காஞ்சிபுரம் போன்ற இடங்களில் ஆலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களுக்குச் செல்கின்ற ஆன்மீகச் சுற்றுலா பக்தர்கள் என்ன வேண்டுகிறார்கள்? எங்களுக்கு நோய்நொடியில்லாமல் சுகம் வேண்டும் என்கிறார்கள். அதைப்போல, செல்வம் வேண்டும் என்று வேண்டுகிறார்கள். ஆனால் ஆலயங்களுக்குச் செல்கின்ற பக்தர்கள் திரும்பி வரும்போது பாதுகாக்கப்படாத குடிதண்ணீரைப் பருகிவிட்டு மஞ்சள்காமாலை நோயோடு வருவதும், அதைப்போல, செல்வம் வேண்டும் என்று செல்பவர்கள் ஜேப்படி திருடர்களால் அங்கே செல்வத்தை இழந்துவிட்டு வருவதும் வாடிக்கையாக இருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற ஆலயங்களில் நீங்கள் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை



பந்தோபஸ்து அதிகரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன் நீங்கள் 12.07-க்கு ஆரம்பித்தீர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. இதோ முடித்துவிடுகிறேன். அரசு வழிகாட்டிகள் அமைக்க வேண்டும். பிச்சைக்காரர்கள், இடைத்தரகர்களை ஒழிக்கவேண்டும். அதைப்போல தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பெருமளவு பயன்படுத்தவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இதோடு முடித்துவிடுகிறேன்.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் 1906 ஆம் ஆண்டு S.S. Gaelia, S.S. Lawoe என்ற இரண்டு கப்பல்களை இயக்கினார்கள். தற்போது 102 ஆண்டுகள் நிறைவடைகின்றவேளையில் இருக்கிறது. அதை நினைவுகூரும் வகையில், கடல் வாணிப நூற்றாண்டு விழாவினை இந்த அரசு சிறப்பாக எடுத்திடல்வேண்டும் என்ற கோரிக்கையை வைப்பதோடு, தேனி மாவட்டத்தில், சோத்துப்பாறை, கும்பக்கரை அருவி, மாவூத்து, கௌமாரியம்மன் கோவில், கண்ணகி கோயில், குச்சானூர் சனீஸ்வரன் கோயில், சுருளி அருவி, மேகமலை போன்ற இடங்கள் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்குத் தேவையான தகுதிகளையும் கட்டமைப்பு வசதிகளையும் கொண்டிருக்கின்றன. அங்கு அடிப்படை வசதிகள் செய்து சுற்றலாப் பயணிகளை ஈர்க்க வேண்டும். அந்தவகையில் இந்த மாவட்டத்தில் ஒரு சுற்றுலாத்தல, தகவல் தொடர்பு மையம் அமைத்து, சுற்றுலாப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடு)

***திரு. வி.பி. கலைராஜன்:** Speaker Sir, கொஞ்சம் விடுங்கள். One second, ரொம்ப நேரமாகப் போராடிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை பேசுகிறபோது நான் வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. பாண்டியர்கள் எல்லாம் இந்த நாட்டிலே தமிழ் மன்னர்கள் சோழர்கள், பாண்டியர்கள் எல்லாம் இந்த நாட்டிலே நல்ல முறையிலே ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சரித்திரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், சரித்திரம் எல்லாம் வேண்டாம்.

**திரு. வி.பி. கலைராஜன்:** சரித்திரம் சொல்லவில்லை. நேரடியாக வருகிறேன். மாராட்டியர்கள், நாயக்கர் மன்னர்களுக்குத்தான் கோட்டை, கொத்தளங்கள் இருப்பதாக நாம் பார்த்திருக்கிறோம். கும்பகோணத்திற்குப் பக்கத்தில் இராஜராஜ சோழனுடைய உடல் புதைக்கப்பட்டிருப்பதாகவும், அதை ஒரு ஏழைக் குடும்பம் நிர்வகித்து வருவதாகவும் பத்திரிகையிலே படித்தேன். நம்முடைய இராஜராஜ சோழன், கங்கைகொண்டான், கடாரம்கொண்டான் என்ற அளவிற்கு புகழ் பெற்றவர். எனவே, அவர் உண்மையிலேயே அந்த இடத்தில் புதைக்கப்பட்டிருந்தால், அரசாங்கம் சார்பிலே அவருக்கு அங்கே ஒரு நினைவு மண்டபம் எழுப்பவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பொதுவான வேண்டுகோள். இதை நான் நம்முடைய தமிழ் மன்னர்களுக்காக கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. செளந்திரபாண்டியன். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப்போல, தஞ்சைக்குப் பக்கத்திலே கும்பகோணத்திற்கு அருகே இருக்கக்கூடிய அந்த இடத்திலே இராஜராஜ சோழன் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்குப் பிறகு அங்கே புதைக்கப்பட்டதாக ஒரு செய்தியைக் கேள்விப்பட்டு, அந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற வகையிலே நான் குடந்தைக்குச் சென்றிருக்கின்றபோது, அந்தப் பகுதியிலே நேரடியாகச் சென்று பார்த்தேன். உண்மையிலேயே அவர் அங்கேதான் புதைக்கப்பட்டிருக்கிறாரா என்பதற்கு இன்னும் முழுமையான ஆய்வு முடிவுகள் வாவில்லை. அந்த இடத்தில் ஒரு தூண் இருக்கிறது. அந்தத் தூணிலே இருக்கக்கூடிய கல்வெட்டுக்களுடைய வாசகம், பொதுவாக இத்தகைய அரசர்கள் புதைக்கப்படுகிறபோது அங்கே எழுப்பப்படக்கூடிய, பள்ளிப்படையாக எழுப்பப்படக்கூடிய, சில இடங்களிலே அமைக்கக்கூடிய வாசகங்களை ஒத்திருக்கிறது. ஆனால், இந்த இடத்தில்தான் அவர் புதைக்கப்பட்டார் என்பதற்கான நேரடி ஆதாரங்கள் இல்லை. கும்பகோணத்தைச் சுற்றி இருக்கக்கூடிய பஞ்சவர்மாதேஸ்வரம் போன்ற இடங்களிலேகூட இராஜேந்திரச் சோழனுடைய மனைவியைப் புதைத்ததற்கு நேரடியான ஆதாரங்கள் கல்வெட்டுகளிலே அங்கே இருக்கின்றன. பள்ளிப்படைக் கோயிலிலே இருக்கிறது. ஆனால், இந்த இடத்திலே நேரடியாக அத்தகைய



ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இன்னொரு இடத்திலே இருக்கக்கூடிய கல்லிலே அதற்கான வாசகங்கள் இருக்கின்றன. துறையின் வாயிலாக அதிலே முழுமையாக ஆய்வினை மேற்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பெரிய மன்னனுடைய நினைவு மண்டபம் எழுப்பிடுகின்றபோது முதலிலே நாம் ஒரு முடிந்த முடிவுக்கு வந்ததற்குப் பிறகு அதைச் செய்வது பொருத்தமாக இருக்கக்கூடும் என்ற காரணத்தால், அந்த ஆய்வுகள் இன்னும் முறையாக முடிவு பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. செளந்திரபாண்டியன்.

**திரு. அ. செளந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யா பெரியார் அவர்கள் 200 ஆண்டு சாதனைகளை 20 ஆண்டில் சாதித்தார்கள் என்பது வரலாறு. அவரது கொள்கை வழித்தோன்றல் தலைவர் கலைஞர் அவர்களோ, கடந்த 60 ஆண்டு ஜனநாயக சமுதாயத்துக்குத் தேவையான நல்ல திட்டங்களை, செயல்களை சட்டங்களாகக் கடந்த 2 வருடத்தில் நிறைவேற்றியிருக்கிறார். அப்படிப்பட்ட தலைவரை, முதல்வரை நாம் பெற்றிருப்பதே பிறவிப் பயனாகக் கருதி வணங்குகிறேன்.

அய்யா பெரியார் தோன்றாமல் இருந்திருந்தால் பெருந்தலைவரும், கர்ம வீரருமான காமராசரும், பச்சைத் தமிழன் என்னும் பட்டம் பெற்றிருக்கமாட்டார் என்னும் கூற்றை, உண்மையை, உள்ளபடியே எடுத்துரைத்த இனமானப் பேராசிரியர் நம் நிதியமைச்சரை வணங்குகிறேன்.

இந்தியத் திருநாட்டிற்கே பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொணர்ந்தவர் மறைந்த பாரத இளம் பிரதமர் ராஜீவ் காந்தி என்றால், தமிழகத்தில் பஞ்சாயத்துக்களின் உரிமையை முழுமையாக நடைமுறைப்படுத்தியவர். குறிப்பாக, பாப்பாபட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துக்களின் தேர்தல் கண்டு, பஞ்சாயத்துக்களின் தனித் தன்மை, பணிகள், பயன்களை எல்லாம் மக்களிடம் நேரடியாகச் சேர்த்த பெருமைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியாரை வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, பண்பாட்டுத் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 1, 2-ல் சுற்றுலாவின்

நோக்கம், பயன்கள், அவசியம் குறித்து நம் முதல்வர் தலைவர் கலைஞரின் கூற்று இத்தாணிக்கே பொருந்தும் என்றால் அது மிகையாகாது.

இன்று உலகளவில் 82 சதவீதம் உலகச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை சுமார் 16 நாடுகள் தம் வசம் பெற்றுள்ளன என்றால், சுற்றுலாவின் அருமை, பெருமை மனித சமுதாயத்துக்கு எந்த அளவிற்கு பயனுள்ளதாக உள்ளது என்பதை இதன்வாயிலாக நன்கு அறியலாம்.

பொதுவாக, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்காக 2004 முதல் 2008 வரை நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், எந்த அரசு இந்த மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளது என்பதை நன்கு அறியலாம். 2004-2005 ஆண்டுகளில் சுமார் 30.35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 31.29 கோடி ரூபாய் செலவினம் செய்யப்பட்டிருக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டுகளில் 32.42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 37.04 கோடி ரூபாய் செலவினம் செய்யப்பட்டிருக்கின்றது. 2006-2007-ல் 46.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 63.57 கோடி ரூபாய் செலவினம் செய்யப்பட்டிருக்கிறது. 2007-2008 ஆம் ஆண்டுகளில் 45.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 51.53 கோடி ரூபாய் செலவினம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி எந்த அரசு சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கிறது என்பதை, மாநிலத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

குறிப்பாக, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், நீலகிரி மாவட்டம் என்றால் உலகளவில் சுற்றுலாத் தலமாகும். இயற்கையிலேயே சுற்றுலாத் தலமாக இருப்பதால், இங்கு அடிப்படை வசதிகளான car parking, கழிப்பிட வசதிகள், நிழற்குடைகள், மழை நேரங்களில் பொதுமக்கள் ஒதுங்கி நிற்பதற்கு நவீன வசதியுடன் இடங்களை அமைத்துக் கொடுக்குமாறு அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் புதியதாக சுற்றுலாத் தலங்களை உருவாக்கிட வேண்டுகிறேன். நீலகிரி மாவட்டம், கூடலூரில் தவளைமலையில் காட்சிமுனை அமைத்துப் புதிதாக உருவாக்க வேண்டும் என்றும், அதேபோல் குன்னூர் பக்காசூரன் மலையில் காட்சிமுனை அமைத்து மற்றும் சாலை வசதிகளும் செய்து தருமாறு அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதோடு, கொடநாடு காட்சி முனையினை நவீனப்படுத்த வேண்டும் என்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.



2008-2009 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள கடம்பாடி என்ற கிராமத்தை ஊரகச் சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்பாடு செய்யப்படுவதை வரவேற்கின்றேன்.

பிற்பகல் 12-20

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு ஓட்டல்களை நவீனப்படுத்த வேண்டுகிறேன். குன்னூரிலிருந்த தமிழ்நாடு ஓட்டலை தனியாருக்கு சென்ற அரசு தாரை வார்த்துவிட்டது. அதனை மீண்டும் அரசே ஏற்று நடத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

2009-இல் மாமல்லபுரத்தில் தேசிய நாட்டிய விழா நடத்தத் திட்டமிட்டிருப்பதையும், பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருப்பதையும் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாநிலத்தின் தொன்மையான துறைகளுள் ஒன்றாகத் திகழும் பதிவுத் துறை மற்றும் முத்திரைத்தாள்கள் துறை பொதுவாக பொது மக்களுடைய சொத்துப் பரிமாற்றங்களுக்கும், சிறப்புத் திருமணங்களைப் பதிவு செய்து சட்டப் பாதுகாப்பை சமூகத்திற்கு வழங்குவதால் இந்தத் துறையை மக்கள் வேண்டி, விரும்பி வரவேற்கிறார்கள். மக்கள் ஏற்றுக்கொள்ளும் உன்னதமான இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய அலுவலகப் பெருமக்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் பல்வேறு நலத் திட்டங்களை அரசு வழங்கியுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விளையாட்டுப் போட்டிகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதையும் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். பொதுவாக இத்துறையிலும் கழக அரசே சாதனை படைத்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் சமாதானத் திட்டத்தின்மூலமாக நிலுவையிலுள்ள ஆவணங்களை ஆய்வு செய்து, சுமார் 82.45 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளதன்மூலம், சுமார் 22,599 ஆவணங்கள் பொதுமக்களுக்குத் தீர்வு செய்யப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நிருவாக வசதிக்காக 50 பதிவு மாவட்டங்களும், சுமார் 568 சார் பதிவாளர் அலுவலகங்களும் இயங்குவதை வரவேற்பதோடு, நீலகிரி மாவட்டம் மலைப் பிரதேசம் என்பதால் கோத்தகிரி தாலுகா மற்றும் பந்தலூர் பகுதிகளில் சார்பதிவாளர் அலுவலகம் உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே சொத்திற்கு 2, 3 ஆவணங்கள் இருக்கின்ற ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. இந்தக் குறைகளைக் களைய வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் நிலம் வாங்குவதிலும் விற்பதிலும் இயற்கையைப் பாதுகாக்கும்வண்ணம், சிறப்புச் சட்டம் ஒன்றை இந்த மாமன்றத்தில் இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு தலைவர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மற்றும் பண்பாடு வாழ்வைச் செம்மையாக்குகிறது. ஓவியம், சிற்பம், இசை, நடனம் ஆகியவை சாதாரண வாழ்வில் மனித வாழ்வை மகிழ்ச்சியுறச் செய்கிறது. குறிப்பாக, கலையும் பண்பாடும் மனித மனம், உணர்வு ஆகியவற்றின் உச்ச பரிணாமம் என்று சொன்னால் மிகையாகாது. பொதுவாக அறிவியல், கலை இவ்விரண்டும் தேடல், ஆர்வம், படைப்புத் திறன் ஆகியவற்றை மையமாகக் கொண்டவை. அப்படியென்றால், நம் முதல்வரே, தலைவர் கலைஞர் அவர்களே, அறிவியலும் கலையும் என்றால் அது மிகையாகாது என நான் கருதுகிறேன். அதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கழக அரசின்போது 1997-1998 இல் 4 மண்டலங்களாக கலைப் பண்பாட்டு மையம் உருவாக்கப்பட்டது. அதேபோன்று 1998-1999 இல் 2 மண்டல கலைப் பண்பாட்டு மையமும் உருவாக்கப்பட்டிருக்கிறது. நாட்டுப்புறக் கலைஞர் நல வாரியத்தில் இன்றைக்கு சுமார் 7,000 பேர் உறுப்பினர்களாக இருந்து பல்வேறு நலத் திட்டங்களின்மூலம் பயன்பெறுகிறார்கள்.

திருவையாறு அரசு இசைக் கல்லூரி 1997 இல் கழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. அரசு இசைப் பள்ளிகள், அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பள்ளி அளவில் இசைப் பள்ளிகள் தொடங்கி, இளம் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற கழக அரசை பாராட்டுவதோடு, எதிர்காலத் தலைமுறை கலையைப் பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை உள்ளபடியே நாம் அனைவரும் வரவேற்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சௌந்திரபாண்டியன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** பொதுவாக, எந்த ஒரு மொழியும், கலையும் பாதிப்பு அடைகிறது என்றால் அந்த மக்களும் படிப்படியாக



பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதே உண்மையாகும். ஆகவே நம் எதிர்காலத் தலைமுறைக்கு நமது கலையை எடுத்துச் சொல்லும்வண்ணம், 'சென்னை சங்கமம்' இனி தமிழ்நாடெங்கும் பரவிட, ஆக்கமும் ஊக்கமும் தரும் சமூக சிந்தனையாளர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், கவிஞர் கனிமொழி, M.P. அவர்களுக்கு இத்துறையின் மானியக் கோரிக்கையில் நன்றி கூறுவது சாலப்பொருந்தும் எனக் கருதுகிறேன்.

உதகையில் அனைத்து சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த சுமார் 100 குழந்தைகளுக்கு 10 நாட்கள் கோடை காலப் பயிற்சியளிப்பதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சௌந்திரபாண்டியன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்*

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க நாட்டைப் பாதுகாக்க, மக்களைப் பாதுகாக்க, வளப்படுத்த, நல்ல ஆட்சியாளருக்கு முன்னுதாரணமாக, எடுத்துக்காட்டாக இருக்கின்றார் தலைவர் கலைஞர். அவர்கள் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், வருமுன் காப்போம் திட்டத்தின்வாயிலாக மருத்துவ வசதி, கால்நடைக்கு மருத்துவம், தாய்மார்களின் நலம் பேணுதல், ஏழைத் தாய்மார்கள் திருமண உதவி, உழவர்களுக்கு உழவர் அட்டை வழங்கி பல்வேறு நலத் திட்டங்கள், நெசவாளர்களுக்குப் பயன்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு நலத் திட்டங்கள், கல்வித் துறையில் சிறப்புக் கவனம், தாட்கோ கடன்கள் தள்ளுபடி, விவசாயக் கடன் தள்ளுபடி, (மணியடிக்கப்பெற்றது) நெசவாளர் கடன் தள்ளுபடி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம். (குறுக்கீடு)

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** இப்படி பல்வேறு சமூக நல நடவடிக்கைகளில் அக்கறைகொண்டவர் நமது முதல்வர் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

***திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை, செய்தி மற்றும் விளம்பரத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியத் திருநாட்டை வழிநடத்திச் செல்கின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) ஈடு இணையற்ற எங்களது அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் ஒப்பற்ற தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழ்ச் சமுதாயக் காவலர், அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த அன்பு மகன், திருக்குவளை ஈன்றெடுத்த திருமகன், (மேசையைத் தட்டும் ஒலி) தொல்காப்பியத் தென்றல், செம்மொழிச் செம்மல், சட்டப் பேரவையில் பொன் விழாக் கண்ட சரித்திர நாயகனே, சாதனைகள் படைக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு என் பணிவான வணக்கம். என் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர், இந்தியப் பேரரசின் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், எங்களது காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு அய்யா சுதர்சனம் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு அலுவலர்கள், பத்திரிகை நண்பர்கள், தொலைக்காட்சி நண்பர்களுக்கும், எனது திருமயம் தொகுதி மக்களுக்கும், என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்னர், எனது திருமயம் தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி, பொன்னமராவதி பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை, ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எஸ். ராஜசேகரன் அவர்களது கோரிக்கை, திருமயம் சட்டமன்ற உறுப்பினரான எனது கோரிக்கை, ஆக எங்களது கோரிக்கைகளை ஏற்று கறம்பக்குடி, பொன்னமராவதியைத் தனி வட்டமாக அறிவிக்க அனுமதியளித்த வணக்கத்திற்குரிய அய்யா மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பேரவையில் அந்த



அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு நிதி அமைச்சர், வணக்கத்திற்குரிய அய்யா பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய திருமயம் தொகுதியில் பொன்னமராவதி, திருமயம் ஒன்றியங்களில் சில ஊராட்சிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்து, திருமயம் பேருந்து நிலைய அடிப்படை வசதிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரிமளம் ஒன்றியம், கே. புதுப்பட்டியில் துணை மின்நிலையம் தொடங்க அனுமதி அளித்துள்ள மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருமயத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கிய மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ள போற்றுதலுக்குரிய அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், தொகுதி மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியத் திருநாட்டில் சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று முகவுரையில் கூறியுள்ள மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்து, உரையைத் தொடங்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுலாத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. மூன்று தேசிய விருதுகளைப் பெற்றிருக்கிறது. ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை, தாரமங்கலம், பழவேற்காடு, வேலூர் கோட்டை ஆகிய இடங்களில் மேம்பாட்டுக்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, பலருடைய கவனத்தையும் அவற்றின் பக்கம் திருப்பியிருக்கின்றது.

ஊரகச் சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா ஆகியவற்றில் கவனம் செலுத்தி, கலையையும், பண்பாட்டையும் அவற்றோடு இணைத்து ஏற்படுத்தும் புதிய முயற்சி வரவேற்கத்தக்கது.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து பிரபலமடையாத இடங்களை அதிக அளவில் விளம்பரம் செய்து, அங்கே வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருவது பாராட்டத்தக்கது. இத்துறை தொடங்கியிருக்கும் பணிகளையெல்லாம் குறித்த காலத்தில் விரைவாக முடிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்லணை மேம்பாடு, புளியஞ்சோலை அபிவிருத்தி, தஞ்சைப் பெரிய கோயில் கட்டமைப்பு வசதி, குற்றால அருவியில் அடிப்படை வசதி, குன்றக்குடி, பிள்ளையார்பட்டியில் வளர்ச்சிப் பணிகள், செட்டிநாடு பகுதியில் பல முன்னேற்றப் பணிகள் ஆகியவற்றின்மூலம் உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளுக்கு ஊக்கமளிப்பது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. Cycle Tourism, சாகசப் படகுகள், மாமல்லபுரத்தில் நாட்டுப்புறக் கலைகளுக்கும் சமமான மரியாதை, சிறப்பான பொருட்காட்சிகள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு விருந்தினர் போற்றுதும் திட்டம், சுற்றுலா விடுதிகள் மேம்பாடு, புதிய பேருந்துகள் அறிமுகம், வால்வோ பேருந்துகள் இயக்குதல், புதிய வழித்தடங்களில் சுற்றுப் பயணங்கள், எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம் (Hop-on Hop-off) என்ற புதிய முயற்சிகள் ஆகியவை இம்மாநிலத்திற்கு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இம்முயற்சிகளின்மூலம் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 29.2 சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழகப் பாரம்பரியக் கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளை ஊக்குவிக்கும் விதமாகவும், தமிழரின் பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றை உலகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்திடும்வகையிலும், அவர்களை சென்னைக்கு ஈர்க்கும்வகையிலும், சிறப்பான முறையில் இந்த ஆண்டு ‘சென்னை சங்கமம்’ விழா அமைந்தது அனைவரும் பாராட்டுதற்குரிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நமது கலை மற்றும் பாரம்பரியம்பற்றித் தெரிந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்பாக இது அமைந்தது. ‘சென்னை சங்கமம்’ நிகழ்ச்சி சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக இருந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களது அன்பு மகள் ராஜ்ய சபா உறுப்பினர் மாண்புமிகு கவிஞர் கனிமொழி அவர்கள். அவருக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பாராட்டும், நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தச் ‘சென்னை



சங்கமம்’ நிகழ்ச்சியைச் சென்னையில் நடத்தியதுபோல், தமிழகத்திலுள்ள மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற முக்கிய நகரங்களில் இனிவரும் ஆண்டுகளில் நடைபெற ஆவன செய்தால் மேலும் சிறப்பாக இருக்கும் என்று அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளபடி, சென்னைக்கு அருகே உள்ள முட்டுக்காட்டில் under water aquarium மிக விரைவில் அமைத்திட வேண்டுகிறேன். ஏனென்றால், இத்திட்டம் இந்தியாவில் வேறு எங்குமில்லை என்பதால், தமிழ்நாட்டிற்கு மிகப் பெருமையாக அமையும்.

என்னுடைய திருமயம் தொகுதியின் தலைமையிடமான திருமயத்தில், கல்லிலே 'கலைவண்ணம் கண்ட மகேந்திரவர்ம பல்லவர், நரசிம்மவர்ம பல்லவர் ஆகியோரது காலத்தில்தான் ஒரே மலையைக் குடைந்து வடிவமைக்கப்பெற்ற அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் சிவன் கோயிலும், அருள்மிகு சத்தியமூர்த்திப் பெருமாள் குடவரைக் கோயில்களும் அமைந்துள்ளன. இயற்கை எழில் கொஞ்சும் மலைக் கோட்டை அமைந்துள்ளது. ஆகவே, எங்களுடைய திருமயத்தைச் சுற்றுலா மையமாக அறிவித்து, அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு வேண்டுகிறேன்.

அதைப்போன்று, திருமயத்திற்கு அருகிலுள்ள காட்டுபாவா பள்ளிவாசல் என்ற ஊர் சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. தினந்தோறும் பல நூறு சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து செல்கின்றனர். அங்கும் அடிப்படை வசதிகளைச் செய்துதர அன்போடு வேண்டுகிறேன்.

அதைப்போன்று, என்னுடைய திருமயம் தொகுதியில், திருக்களம்பூர் என்ற கிராமத்தில் பாண்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட பிரசித்திபெற்ற ஸ்ரீகதலி வன ஈஸ்வரர் என்ற ஆலயம் உள்ளது. அங்கேயுள்ள லிங்கம் மிகவும் பழமை வாய்ந்தது. கோயிலுக்குள் உள்ள சுற்றுப் பகுதியில் நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் உள்ளன. அந்த வாழை மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில்லை. எந்தக் காலக் கட்டங்களிலும் அந்த மரங்கள் பசுமையாக நிறைய வாழைக் குலைகள் தள்ளியபடி காட்சியளிக்கின்றன. அந்த லிங்கத்தையும், அந்த வாழை

மரங்களையும் பார்ப்பதற்காகப் பல யாத்திரிகர்கள் அங்கு வந்து செல்கின்றனர். அங்கேயும் அடிப்படை வசதிகளைச் செய்துதர அன்புடன் வேண்டுகின்றேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில், நவபாஷாணம் என்று அழைக்கப்பெறும் தேவிபட்டணம், திருப்புல்லாணி கோயில் ஆகியவை பிரசித்தி பெற்றவை. இந்தியாவிலேயே மிகச் சிறந்த வெள்ளி மணற்பரப்பு-silver sand-கொண்ட அரியமான் என்ற கடற்கரை, ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்ற இடமாக உள்ளது. இங்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர அன்புடன் வேண்டுகின்றேன்.

'விருந்தினர் போற்றுதும்; விருந்தினர் போற்றுதும்' விளம்பர முகாம் சென்னையில் *23-7-2006*-ல் நடத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், காவல் துறையினர் மற்றும் விமான நிலைய ஊழியர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், ஏர்போர்ட் ஆகிய இடங்களில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன; இது பாராட்டுதலுக்குரிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் முழுவதும் உள்ள முக்கியச் சுற்றுலாத் தலங்கள், நீர் வீழ்ச்சிகள், அருவிகள், பழமையான கோயில்கள், ஆன்மீகத் தலங்கள் ஆகியவற்றைத் தொகுத்து, அவற்றின் சிறப்புகள், அங்கு செல்ல பஸ், இரயில், விமான வசதிகள், தங்குமிட வசதிகள் குறித்து தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளிலும் அச்சிட்டு, வருகின்ற வெளிநாட்டுப் பயணிகள், வெளி மாநிலப் பயணிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டு விடுதலைக்காகப் போராடி, கோவை மத்தியச் சிறையில் செக்கிழுத்த வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், செக்கிழுத்து *100* ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற இந்த *2008* ஆம் ஆண்டில், செக்கிழுத்தச் செம்மலுக்கு நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாகக் கொண்டாட அன்புடன் வேண்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓய்வூதியம் வழங்கி விடுபட்டுள்ள குமரி மாவட்ட எல்லைப் போர்த் தியாகிகளுக்கும், ஏற்கெனவே ஓய்வூதியம் வழங்கி, பின்னர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சில எல்லைப் போர்த்



தியாகிகளுக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்க அன்புடன் வேண்டுகின்றேன்.

பத்திரப் பதிவுத் துறை; பத்திரப் பதிவு செய்யும்போது, எங்கே அசையாச் சொத்துகள் இருக்கின்றனவோ, அந்தந்தப் பதிவு அலுவலகத்திலே பதிவு செய்யப்படவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். Power of Attorney வழங்கும்போது, அதுகுறித்த ஷரத்துப் பத்திரப் பதிவு, வில்லங்கச் சான்று E.C.-ல் இடம் பெறச் செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்திரைத்தாள் உயர் நீதிமன்றத்தில் பற்றாக்குறையாக உள்ளது என்று தெரிய வருகிறது. கூடுதலாக விற்பனைத் தாள் முகவர்களை நியமிக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டு நடப்புகளை, அன்றாடச் செய்திகளை, நாட்டு மக்களுக்கு, வெளி உலகிற்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஓர் அற்புதமான துறை, பத்திரிகை துறை. அந்தப் பத்திரிகையாளர்கள் பயன்பெறும் வகையில், சோழிங்கநல்லூரில் சுமார் *900* பத்திரிகையாளர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட *10* ஏக்கர் நிலத்தை வீட்டுமனைக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன் அல்லது பட்டப்பையிலுள்ள புறம்போக்கு நிலத்தில் பத்திரிகையாளர்களுக்கு வீட்டு இடம் ஒதுக்கித் தர வேண்டுகிறேன்.

ஓய்வு பெற்ற மற்றும் மறைந்து போன *31* பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கும் ஓய்வூதியம் மற்றும் குடும்ப நிதி வழங்கி உதவிட வேண்டுகின்றேன்.

*பிற்பகல் 12-35*

சென்னை மாநகரைப்போல, மற்ற மாவட்டங்களிலுள்ள ஊர்ப்புறப் பத்திரிகையாளர்களுக்கும் தமிழகம் முழுவதும் நலத் திட்ட உதவிகள்--Bus pass வழங்கப்பட வேண்டுமென அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமயம் தொகுதியின் தலைமையிடமான திருமயம், சென்னை நகருக்கே குடிநீர் தந்த, விடுதலைப் போராட்ட வீரர், தீரர் சத்தியமூர்த்தி பிறந்த மண். அந்த தீரர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு திருமயத்திலே ஒரு மணிமண்டபம் அமைத்துத்தர வேண்டி (மேசையைத் தட்டும் ஒலி) அன்போடு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இராமநாதபுரம்-சிவகங்கை இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து சுற்றுலாத் துறைக்கு ஓர் அலுவலர் உள்ள காரணத்தினால், சிவகங்கை மாவட்டத்திற்கு தனியாக அலுவலர் நியமனம் செய்ய வேண்டி அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம. சுப்புராம், உரையை முடியுங்கள்.

**திரு. ராம. சுப்புராம்:** ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கொடுமுடி கோகிலம் என்கின்ற திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்களின் நூற்றாண்டு விழாவினை அரசு நடத்த வேண்டுமென்றும், அரசின் சார்பில் தபால்தலை வெளியிடவேண்டுமென்றும் அன்போடு கோரிக்கை வைக்கின்றேன்.

நிறைவாக, சரித்திரத்திலே குப்தர் காலம் பொற்காலம். கடந்த கால ஆட்சியில் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலம் பொற்காலம் (மேசையைத் தட்டும் ஒலி) நிகழ் காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா, டாக்டர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலம் பொற்காலம். இந்தப் பொற்கால ஆட்சி தொடரும் என்று சொல்லி, வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றும், இன்றும், என்றென்றும் 7 கோடி தமிழர்களின் ஒப்பற்ற அன்னையாய், ஏழைகளின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் காவல் தெய்வம், எங்கள் அன்னை, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது தொகுதிக்குட்பட்ட பிரச்சினை சம்பந்தமாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு என்னவென்றால், தற்போது வைப்பாற்றிலிருந்து வரும் தரைப்பாலத்திற்குப் பதிலாக ரூபாய் ஒன்பது கோடி செலவில் மேம்பாலம் கட்டப்படும் என்பதுதான். இந்த அறிவிப்பு வெளியிட்ட நாள் முதல் இன்றுவரை அது வெறும் அறிவிப்பாக மட்டுமே உள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கான எந்த



அறிகுறியும் தெரியவில்லை. மழைக்காலம் வந்துவிட்டால் விளாத்திகுளம் தனித்தீவாக மாறிவிடுகிறது. தரைப்பாலத்தில் முற்றிலும் போக்குவரத்தை நிறுத்தும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, வைப்பாற்று மேம்பாலத்தின் பணி ஏன் தொடங்கப்படவில்லை என அறிய விரும்புகிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட வேடப்பட்டி புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியிலும், விளாத்திகுளம் அண்ணாமலை கவிராயர் மேல்நிலைப் பள்ளியிலும் சத்துணவு வழங்குவதை இந்த அரசு வந்தபின் நிறுத்தியுள்ளது. இதனால் பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் சத்துணவு பெறும் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இரண்டு பள்ளிகளிலும் மீண்டும் சத்துணவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் அரசுக் கல்லூரியோ, தனியார் கல்லூரியோ கிடையாது. எனவே, இரு பாலரும் பயிலும் வகையில் ஓர் அரசுக் கல்லூரியை விளாத்திகுளம் தொகுதியில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு பருவம் தவறிப் பெய்த கன மழை, கொட்டித் தீர்த்த வடகிழக்குப் பருவ மழை ஆகியவற்றால் சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. கிராமச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இவற்றைச் சரி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரில் கூறியும், மனு கொடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினரான நானும் அ.தி.மு.க., என் தொகுதிக்குட்பட்ட இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் அ.தி.மு.க. என்பதால், திட்டமிட்டு எனது தொகுதி புறக்கணிக்கப்படுகிறது. எங்களுக்கு ஓட்டுப்போட்ட மக்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதனை இந்த அவைக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

வீடுதோறும் கலர் டி.வி., குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கெல்லாம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என அறிவித்தீர்கள். இந்த அறிவிப்பின் உண்மைத்தன்மை என்ன என்பதனை என் தொகுதியில் நடந்த ஒரு சம்பவத்தை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எனது தொகுதியில் உள்ள வீரபாண்டியபுரத்தில், 6-5-2007 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்பட்டது. அதற்கான கூப்பனும்

வழங்கப்பட்டது. கூப்பன் வாங்கிய 32 நபர்களுக்கு மட்டும் இன்றுவரை இலவச டி.வி. வழங்கப்படவில்லை. காரணம், இந்த 32 நபர்களும் அ.தி.மு.க. அனுதாபிகள் என்ற காரணம்தான். அதுமட்டுமல்ல, தற்போது 32 கலர் டி.வி.-க்களும் வீரபாண்டியபுரம் கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்தில் ஒரு வருட காலமாக பூட்டி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். பொதுமக்களின் வரிப்பணத்தில், பல கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் இலவச கலர் டி.வி.க்கள் ஆளுங்கட்சியினருக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்யும் வகையில், அதற்கு ஆதாரமாக, 32 பேருக்கு வழங்கப்பட்ட கூப்பன்களில் ஒன்றை இந்த அவைக்கு ஆதாரமாக நான் சமர்ப்பிக்கின்றேன் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதிலே யாருக்கும் எந்த பாரபட்சமும் கிடையாது. கரூரில் இவர்களுடைய கட்சியைச் சேர்ந்த மகளிர் அணியைச் சேர்ந்த ஒருவர் வாங்கினார் என்பதற்காக அவரைக் கட்சியை விட்டே நீக்கியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் ஒரு வருட காலமாக 32 T.V.-க்கள் V.A.O. அலுவலகத்திலேயே வைக்கப்பட்டுள்ளன. டோக்கன் கொடுத்தும் இன்றும் வழங்கப்படாமல் இருக்கின்றன என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விளாத்திகுளத்தில் பிறந்த இசை மாமேதை, கர்நாடக இசைச் சக்கரவர்த்தி நல்லப்ப சுவாமிகளுக்கு விளாத்திகுளத்தில் மணிமண்டபம் கட்ட வேண்டும் என வலியுறுத்துகிறேன். வீரபாண்டிய கட்டபொம்மனின் படையில் உளவுப் பிரிவில் இருந்த மாவீரன் பொட்டிப்பகடைக்கு ஒரு தோரணவாயிலும், மணிமண்டபமும் அமைக்க வலியுறுத்துகிறேன்.

'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது உனக்கு எதற்கு வரி கட்ட வேண்டும்' என்று வலியுறுத்தி, வீர மரணம் எய்திய மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.



மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழகத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் மிக அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வந்தார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக இருந்ததுதான் என்பதை நான் பெருமையுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக இரயில் பயணம்மூலம் சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்வதற்கு உரிய திட்டத்தை 2002-2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். இப்பயணத்தில் பங்குபெறுவோருக்கு உறுதி செய்யப்பட்ட இரயில் பயணச் சீட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தில் இடவசதி, தமிழ்நாடு ஓட்டல்களில் தங்குமிட வசதி ஆகியவை சிறப்பாக செய்து கொடுக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் ஊக்குவிக்கப்பட்டனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2001 ஆம் ஆண்டில் 223 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின்புதான், மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில்தான் நஷ்டத்தை ஈடுகட்டி 352 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கக்கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைந்தது என சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தேசிய மற்றும் உலகளவில் பல பெருமைக்குரிய பாராட்டுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளது. மார்ச் 2004-இல் புதுடெல்லியில் நடைபெற்ற 'சாத்தே' சுற்றுலா பரிமாற்றம் நிகழ்ச்சியில் தமிழக அரசு சுற்றுலாத் துறைக்கு 'ட்டி 3' 'அமேடியஸ்' விருது வழங்கப்பட்டது. இதுபோன்ற சிறப்புகளைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை இங்கு நான் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் துறை ஏதோ இலாபத்தில் இயங்கியதுபோலவும், இப்பொழுது நஷ்டத்தில் இயங்குவதுபோலவும் எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் 9.6 கோடி ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டது உண்மை.

ஆனால் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் இரண்டாண்டு காலத்தில் 8.24 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைபோன்று இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் சிறப்பாகச் செயல்பட்ட காரணத்தால் ஒரு குறுகிய காலத்திற்குள்ளாக மூன்று தேசிய விருதுகளையும் பெற்றிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. போ. சின்னப்பன்:** தூத்துக்குடி மாவட்டம், கட்டாரம் குளத்தில் 28½ இலட்சம் ரூபாய் செலவில் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கு மணிமண்டபமும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவாக திருநெல்வேலியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபமும், திருப்பூர் குமான் நினைவிடத்தில் திருப்பூர் குமரன் வெண்கலச்சிலையும், ரெட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு சென்னையில் 19½ இலட்சம் செலவில் மணிமண்டபமும், வீரபாண்டிய கட்டபொம்மனுடைய போர்ப்படைத் தளபதி வெள்ளையத் தேவனுக்கு வல்லநாட்டிலே 25 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபமும், கவர்னகிரியிலே மாவீரன் சுந்தாலிங்கத்திற்கு 25 இலட்ச ரூபாய் செலவில் மணிமண்டபமும், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு மதுரையிலே 39.60 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபமும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டன என்பதை பெருமையோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு இட்லிக்குள் ஒரு இமயத்தையே மறைக்கப் பார்க்கிறார் மாண்புமிகு உறுப்பினர். இவர் சொன்ன அந்த மணிமண்டபங்கள் எல்லாம் என்னுடைய தலைமையில் நீங்கள்தான் திறந்து வைத்தீர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். நிகழ்ச்சி சென்ற மாதம் நடைபெற்றது. வல்லநாட்டிலே சுந்தாலிங்கத்திற்கும், அதேமாதிரி பாஞ்சாலங்குறிச்சியிலே வெள்ளையத்தேவனுக்கும், அதுபோல நீங்கள் சொன்ன மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மதுரையிலே இவையெல்லாம்



என்னுடைய தலைமையிலே முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். சபாநாயகர் திறந்துவைத்தார். இதை அப்படியே மாற்றிச் சொல்கிறீர்களே எந்த வகையில் நியாயம்?

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கியதும், அதை அறிவித்து, அதைக் கட்டியதும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கியதும் அவர்கள்தான், பணிகளைச் செய்ததும் அவர்கள்தான், திறந்து வைத்தது நாங்கள்தான் என்று சொல்கிறார். உதாரணத்திற்கு எவ்வளவோ சொல்லமுடியும். ஒன்றேயொன்றை மட்டும் சொல்கிறேன். அவர்கள் நெஞ்சத்திலே ஏற்றிப் போற்றுகின்ற மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, அவருடைய நினைவிடத்திலே எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் திறப்பதற்கான பணிகளெல்லாம் 2004 ஆம் ஆண்டிலே முடிவுற்றன. அவர்கள்தான் நிதியை ஒதுக்கினார்கள். ஆனால், 2006 ஆம் ஆண்டு வரைக்கும் அதைத் திறந்து வைக்கின்ற மனம் உங்களுக்கு இல்லை. கேட்டால், இப்போதைய கொறடா அவர்கள், பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காரணத்தால் திறந்து வைக்கவில்லையென்று அன்றைக்குச் சொன்னார்கள். பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்து, இரண்டு ஆண்டுகள் கழித்து, நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, நாங்கள்தான் உங்கள் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, பெருவெள்ளம் ஏற்பட்டு, அது சேதமுற்ற காரணத்தால், புதுப்பித்தல் பணி நடைபெற்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவனைப் பார்த்து ஏன் பால் கறக்கவில்லையென்று கேட்டால், உதட்டில் புண் இருக்கிறது என்று சொல்வதைப்போல் இருக்கிறது, கொறடா அவர்கள் சொல்வது.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள சுற்றுலாப் பூங்காக்களுக்கு வருகின்ற இளம் பெண்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 10 நிமிடங்கள் முடிவடைந்துவிட்டன. (குறுக்கீடு) சரி, திரு. சின்னப்பன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுலாப் பூங்காக்களுக்கு வருகின்ற இளம் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. சமூக விரோதிகளின் கூடாரமாகப் பூங்காக்கள் உள்ளன. எனவே, அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளேடுகளுக்கு வழங்கப்பட்டிருப்பதுபோல, வாரப் பத்திரிகை நிருபர்களுக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் செய்தி மற்றும் விளம்பரத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டது. பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை ஆதரவு பத்திரிகை, எதிர்ப்புப் பத்திரிகை என்று பார்க்காமல், அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் ஏராளமான சலுகைகளை அம்மா அவர்கள் வழங்கினார்கள். பணியிலிருந்து ஓய்வு பெற்று வறுமையில் வாடும் மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் 2 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியவர் எங்கள் அம்மா அவர்கள். ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர் இறக்க நேரிட்டால், அவாது துணைவியாருக்கு மாதம் ரூ.500/- என்றிருந்த பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதிய நிதியை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள் பெண்களைக் கொச்சைப்படுத்தும் வகையில், ஆபாசமாகவும், அருவருப்பாகவும் இளைஞர்கள் மத்தியில் வக்கிர எண்ணத்தைத் தூண்டுவதாகவும் உள்ளன. இதுபோன்ற விளம்பரங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.



திரைப்படப் பாடல்களில் சில திரைப்படங்கள் கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்தி வருகின்றன. அசிங்கமான வார்த்தைகளைக் கொண்டு பாடல்கள் அமைக்கப்படுகின்றன. இதுபோன்ற நிலையை மாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பத்திரிகையாளர்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றுகிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைப்போல, பத்திரிகையாளர்களுக்கு உரிய சலுகைகள், குடும்ப உதவித் திட்டம், ஓய்வூதியம் ஆகியவற்றை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) என்ன? திரு. வேல்முருகன், சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான நிகழ்வு குறித்துத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகம் முழுவதும் பத்திரப் பதிவுத் துறையில் உள்ள சில பிரச்சினைகள் குறித்து இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகம் முழுவதும் ஏழையெளிய மக்கள் முதல், பணக்காரர்கள், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், நேர்மையான ஐ.பி.எஸ். அதிகாரிகள் போன்றவர்கள்வரை, சென்னையையொட்டி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் ஒரு சென்ட் நிலத்தைக்கூட வாங்க முடியாத அளவிற்கு, ஒரு கிரவுண்டு விலை 12 கோடி ரூபாய், 15 கோடி ரூபாய் என்று வானுயர்ந்த நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிலத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) நீங்கள் உங்கள் பேச்சை நீட்டித்துக்கொண்டே சென்றால் என்ன அர்த்தம்? சரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலங்களை வாங்கி, அவர்கள் அவற்றைப் பயன்படுத்தாமல், தடுத்து வைத்துக்கொண்டு, விலையேற்றத்திற்காக வளைத்துப்போட்டு

வைத்துக்கொண்டு, சில அதிபர்கள் அதில் ஈடுபடுகின்றபோது, குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த இடத்தில் மனைகள் உருவாக்கப்படவில்லையென்று சொன்னால், அவற்றை அரசு தன்வசப்படுத்துவதற்கோ, அல்லது பாதி விலைக்குக் குறைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், அதற்கான திட்டங்களைத் துறை வகுக்குமா என்பதையும் பேரவையின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்கள், அவருடைய தொகுதியிலே 32 பேருக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவில்லை என்பதைப் புகாராகக் கூறினார். அதிகாரிகள் அதற்கு ஏற்பாடு செய்வார்கள். உறுப்பினர் அவர்கள் எந்தத் தேதியைக் குறிப்பிடுகிறார்களோ அந்தத் தேதியில் அதற்கான விழாவை வைத்துக்கொள்ளலாம். உறுப்பினர் வந்து, அந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கி அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன், ஒரு சட்டமன்ற உறுப்பினர் போய் கொடுத்தால் என்ன? இதிலே என்ன இருக்கிறது? உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது நீங்களே அந்த நிகழ்ச்சிக்கு வரலாம் என்று சொன்னார்கள். அதைச் செய்ய வேண்டியது உங்கள் கடமை, எங்கள் வேலையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டியில் ஏதாவது நீண்டத்தகாத விஷயங்கள் இருக்கின்றனவா என்பதை நண்பர் திரு. செங்கோட்டையன் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** சட்டப் பேரவையில் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கி மக்களாட்சி மரபுகளை நிலைநாட்டும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நூற்றாண்டு உழைப்பை ஒரு நொடிக்குள் நுழைத்து, தன் ஓய்வறியா உழைப்பினால் ஒளிர்ந்து நிறைந்த தமிழகமாக ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரே ஆண்டில் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி, இரண்டு ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் இந்தியத் துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு இணையற்ற சாதனைகளைப் படைத்துவரும் சரித்திரத் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்று இந்தியாவில் எந்த மாநிலத்தில் தேர்தல் நடந்தாலும், அதில் ஈடுபடும் எல்லாக் கட்சிகளும் வெளியிடும் தேர்தல் அறிக்கைகளில் இடம் பெறும் மக்கள் நலத் திட்டமாக இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும் இடம்பெறும் அளவுக்கு அடிநிலை மக்களின் அடிப்படைத் தேவையை அன்றே அறிந்து, அதனை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தந்து, ஏகடியம் பேசியோர் வெட்கித் தலைகுனிய அந்தத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வரும் அரும்பெரும் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) ஒளியின் வேகத்தில் செல்கின்ற பொருளெல்லாம் ஒளியாக மாறும் என்பது சார்பியல் தத்துவம்; உங்களின் உடன்பிறப்பாக இருக்கின்ற காரணத்தால், மலருக்கு அருகில் இருக்கின்ற கிளை போல மணம்பரப்பும் இயல்பு எங்கட்கும் உண்டு. ஏழை எளியோர் துயர்துடைக்கும் எண்ணற்ற திட்டங்களை அள்ளி வழங்கிடும் அரசுத் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுப்புறக் கலைஞர்கள், நலிந்த நரிக்குறவர்கள், குறையோடு பிறந்துவிட்டோமே என்று மனம் குமுறிய அரவாணிகள் என எல்லாப் பிரிவினருக்கும் வாரியங்களை அமைத்து, வரலாறு படைத்த வான்நிகர் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) வாணிகத் தலைவர்கள் வாழும் நாட்டில் வறியோர்க்கு வாஞ்சையோடு வாரி வழங்கி வரலாறாய் திகழும் வான் நிகர் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்னா செய்யாது, இனியவை கூறி இன்முகம் காட்டும் இனிய தலைவரின் ஆட்சியில், தைத்திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு; ஆதி திராவிடப் பெண்களுக்கு வானூர்தியில் பணி; வான் எட்டும் வள்ளுவர் சிலை சீரமைப்பு; சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வழங்கி சிகரம் ஏறிய செயல்பாடு; ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி நிதி அதிகரிப்பு; தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை; தமிழறிஞர்களுக்கு நினைவு

**இல்லங்கள்;** சின்னத்திரைக் கலைஞர்களுக்கு நல நிதியம்; இப்படி அடுக்கடுக்காய் சாதனைகளை அனுதினமும் புரிந்துவரும் அதிசயமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முந்தைய ஆட்சிபோல தடுக்கும் சுவர்களாக இல்லாமல், மக்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் இணைக்கும் பாலமாக அமைந்து நிருவாகத் திறனை நிலைநாட்டி, தொழில் வளர்ச்சியை எட்டியுள்ள தமிழ்நாடு என விந்திய மலையே வியந்து பார்க்கும் இந்திய அரசியலின் இரும்புத் தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) இளைய தலைமுறை வேலை பெற்று ஏற்றம் காண தாயினும் சாலப்பரிந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக தொழிற்சாலைகளைத் தமிழகத்திற்குக் கொண்டுவரும் தகைமைசால் பெருந்தகையே! (மேசையைத் தட்டும் ஒலி) பன்முக ஆற்றல் கொண்ட பார்புகழ் தலைவரே! பல ஆற்றல் பெற்றிருந்தாலும் நீங்கள் எங்களின் இதயத்திற்கு நெருக்கமான பத்திரிகையாளராக எங்கள் துறைக்குப் பெருமை சேர்க்கும் ஒப்பற்ற தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைப் பண்புக்கே இலக்கணம் வகுத்த வாழும் வள்ளுவரே முத்தமிழறிஞரே! மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றுத்தர பெரும்பணிபுரிந்து சமூக நீதி சரித்திரத்தில் முத்திரைபதித்து விழியசைவில் இந்தியாவையே வியக்கவைத்த அரசியல் அதிசயமே! எனது சுவாசக் காற்றே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே! உங்களை வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழால், தன்மான உணர்வால், அறிவார்ந்த செயலால், அன்புகாட்டும் பண்பால், நிறைந்து உயர்ந்து இயக்கப்பாடம் கற்பிக்கும் இனமானப் பேராசிரியர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைவருக்கும் அருளும் அருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சீரகம் அளவு சிறிதாய் இருக்கின்ற ஊரகப் பகுதிகளிலும் உயர்பணி ஆற்றி ஒளிவெள்ளம் பாய்ச்சும் எங்கள் அன்புத் தளபதி அவர்களே, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால் சிற்றூர்களுக்கும் அடிப்படை வசதிகளை அளித்துவரும் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டிடும் ஓசையில்லாப் புயலே! சாய்க்காத காற்றே! மனம் குளிரும் தென்றலே! மாவட்டங்களில் அடிக்கடி மையம் கொண்டு ஆய்வு மழை பொழியும் காற்றழுத்த மண்டலமே! சுழன்று பணியாற்றும்



சூறாவளியே! தங்களை வணங்குவதில் மனம் மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

செய்தித் துறை அரசின் திருவாய், அதுவே தகவல்களின் நுழைவாய், திட்டங்களைத் தெளிவாய், மக்களுக்கு எளிதாய், சென்று செரிக்க மென்று தரும் கடைவாய், மாநிலத்தின் கடைக்கோடிப் பகுதிக்கும் அரசு தரும் நிதி, சிந்தாமல் சிதறாமல் சென்று சேர எப்போதும் உதவும் அது நிறைவாய் என்று பெருமையோடு குறிப்பிடும் அளவுக்கு இடைவிடாது இயங்கும் செய்தித் துறை பெரும் ஆற்றலோடு செயல்பட்டு நிருவாகத் திறனோடு நித்தமும் உழைத்து அரசின் குறிக்கோளை எய்திடும் அயர்விலாப் பணியினைச் செய்து வருகிறது. அரசின் ஆக்கப்பூர்வமான அறிவிப்புகளை, பயன்மிகு திட்டங்களை, அன்றாடம் வழங்கி, மக்களின் இதயத்தில் நம்பிக்கை நாற்று நட்டு சந்தேகக் களையகற்றி, முன்னேற்ற உரமிட்டு, புன்னகை மகசூலை அறுவடை செய்கிறது செய்தித் துறை.

அப்படிப்பட்ட செய்தித் துறை, சென்ற நூற்றாண்டில் தோன்றிய தலைவர்கள் பலரோடு பழகி, அவர்களின் நன்மதிப்பைப் பெற்று நானிலம் புகழ நல்லாட்சி புரியும் தலைவர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஆண்டில், தூத்துக்குடி மாவட்டம் - திரு. சின்னப்பன் கவனிக்க வேண்டும் - தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரியில் சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகமும், வல்லநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகமும், எட்டயபுரத்தில் அமுதகவி உமறுப்புலவர் நினைவகமும், மதுரை மாவட்டத்தில் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் மணிமண்டபமும், மதுரை விளாச்சேரியில், பரிதிமாற் கலைஞர் நினைவு மண்டபமும், திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்த் தாத்தா உ.வே.சா. நினைவு இல்லமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் செய்தித் துறையால் பராமரிக்கப்பட்டுவரும் பல்வேறு தலைவர்களின் நினைவகங்கள், நினைவு மண்டபங்கள் மற்றும் மணிமண்டபங்கள் ஆகியவை 43.45 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைத்து மேம்படுத்தப்பட்டுள்ளன.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனார் அவர்களின் நினைவு இல்லம், 50 இலட்சம் ரூபாய் செலவில் பழமை மாறாமல்

புதுப்பிக்கப்பட்டு, அவாது நினைவிடத்தை வழிபடவரும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதோடு, கூடுதலாக 10 இலட்சம் ரூபாய் செலவில். முளைப்பாரி மண்டபமும். பால்குட மண்டபமும் அமைக்கப்பட்டது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை இல்லாத புதிய முயற்சியாக சென்னை காந்தி மண்டப வளாகம் பொதுப் பணித் துறையின் மேற்பார்வையில் ஏர்செல் நிறுவனத்தின் உதவியுடன் சீரமைத்து மேம்பட வைக்கவிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நூற்றாண்டு இந்திய வரலாற்றில் மிக முக்கியமானதாகும். சுதந்திரப் போராட்ட உணர்ச்சியும், திராவிட இயக்க எழுச்சியும், பொதுவுடமை இயக்கப் புரட்சியும் நிகழ்ந்த நூற்றாண்டாகும். இந்த இயக்கங்களில் பங்கேற்ற தலைவர்களைப் போற்றி, அவர்தம் நினைவுகளை இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும்வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் நூற்றாண்டு விழா, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்திலே நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்து, அந்த விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள்.

அதேபோல, பொதுவுடமை வீரர் ப. ஜீவானந்தம் அவர்களின் நூற்றாண்டு விழா சென்னை, கோவை, நாகர்கோவில் நகரங்களிலும், தியாகச் செம்மல் பகத்சிங் அவர்களுடைய நூற்றாண்டு விழா மாவட்ட தலைநகரங்களிலும் கொண்டாடப்பட்டன.

தலைவர்களின் பெயர்களில் அமைந்த விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு சான்றோர்கள் பெருமைப்படுத்தப்பட்டனர்.

அதேபோல அரசின் கொள்கைகளையும், சாதனைகளையும், திட்டங்களையும் மக்களுக்குத் தெரிவிக்கும்வகையில் பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய அரசுப் பொருட்காட்சிகள் கோவை, மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டு செய்தித் துறைக்கு ரூ.1.84 கோடி வருவாயை ஈட்டித்தந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவைதவிர, அரசின் அனைத்துத் துறையின் பங்கேற்போடு அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் அனைத்து



மாவட்டங்களிலும் பல்துறை பணி விளக்க முகாம்கள் மற்றும் கண்காட்சிகளும் சிறப்பாக நடத்தப்பட்டன. பொருட்காட்சிகளுக்கு மக்கள் காட்டும் பெருத்த ஆதரவை மனதில்கொண்டு இதுவரை இல்லாத அளவுக்கு, முதல்முறையாக, வரும் ஆண்டில் மாவட்டந்தோறும் ஆண்டுக்கு இரண்டுமுறை பல்துறைப் பணி விளக்க முகாம்களோடுகூடிய பொருட்காட்சிகளை நடத்திட செய்தித் துறை திட்டமிட்டிருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதன் வாயிலாக தமிழ்நாட்டின் எல்லா மாவட்ட மக்களுக்கும் இன்னும் விரைவாக அரசுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

செய்தித் துறையின் பல்வேறு அங்கங்களாகச் செயல்பட்டுவரும் நிறுவனங்களுக்கும் நவீன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மக்களுக்கு அரசின் செய்திகளைக் கொண்டு செல்லும் தூதுவனாகச் செயல்படும் தமிழரசு இதழினை அச்சிடும் தமிழரசு அச்சகத்திற்கு, ரூ.78.89 இலட்சம் செலவில் நவீன தொழில்நுட்ப அச்சுக் கருவிகளும், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.85.46 இலட்சம் செலவில் நவீன ஒளிப்பதிவுக் கருவிகளும் மற்றும் கூடுதல் ஒளி வசதியும், நிழற்படப் பிரிவுக்கு ரூ.13.94 இலட்சம் ரூபாய் செலவில் புதிய டிஜிட்டல் கேமராக்களும் வழங்கப்பட்டு நவீனப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு ஆற்றல்களின் கொள்கலனாகத் திகழ்ந்துவரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் தானொரு பத்திரிகையாளர் எனச் சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுபவர் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றே.

**பிற்பகல் 1-00**

தான் ஓர் இதழாளர் என்று சொல்லிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பத்திரிகையாளர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதிலும் முனைப்போடு செயல்படுபவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்திய அரசு தலைவர் கலைஞருடைய அரசுதான் என்பதை நினைவுபடுத்தும் இந்த நேரத்தில், கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் 13 நபர்களுக்கு மட்டுமே பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டன. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில்--திரு. எஸ்.வி. சேகர், இல்லையா? போய்விட்டாரா?--

கடந்த 2 ஆண்டுகளில் 18 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதிலே மகிழ்ச்சி அடைகின்றேன். அதேபோல பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்கீழ் கடந்த அரசின் 5 ஆண்டுகளில் 9 பேர்களுக்கு மட்டுமே குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் கழக அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த 2 ஆண்டுகளில் 14 பேர்களுக்கு பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதி வழங்கி இதழாளர்களின் இதயங்களை தலைவர் கலைஞர் அவர்களின் அரசு வெகுவாகக் குளிர்வித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதுமட்டுமல்லாமல், பத்திரிகையாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பணிக்காலத்தில் உயிரிழக்கும் பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவி பெறுவோர்க்கு எளிதாக நிதி உதவிகள் சென்றுசேர ஏதுவாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அத்தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு தனி நல நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசின் செய்தித் துறை மக்களுக்கான அறிவிப்புகளை உடனுக்குடன் அனுப்புவதில் இன்றைக்கு புதிதாக வந்துள்ள எல்லா புதிய தொழில்நுட்ப வசதிகளையும் செய்து தந்துள்ளதால், இணையதள அகன்ற கற்றை வசதி--Internet Broadband மூலமாக கடந்த ஓர் ஆண்டில் 893 செய்தி வெளியீடுகளையும், 133 செய்திக் குறிப்புகளையும், 747 புகைப்படங்கள், ஒளிப்பதிவு மற்றும் செய்தி சேகரிப்புக் கடிதங்களையும் அனுப்பி தகவல் தொடர்புப் பணியில் தன்னிகரில்லாத சேவையை இந்தத் துறை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி மக்களுக்குத் தொண்டாற்றி வரலாற்றில் வாழும் தலைவர்களின் பிறந்த நாள்களில் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை; பண்பாட்டைப் பேணிக்காக்கும் கலைகளுக்கு அரங்கம்; மறக்க முடியாத மாபெரும் பணிசெய்த மாமனிதர்களுக்கு நினைவு மண்டபங்கள்; அரசு விழாக்களின் அணிவகுப்பு; பொருட்காட்சிகளுக்கு புதுப்பொலிவு; திரைப்படங்களோடு சின்னத்திரைக் கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கிட ஏற்பாடு; செய்தி மலர்கள்வாயிலாக அரசின் பணிகளை பளிச்சிடும் வகையில் விளம்பரம் செய்து அரசின் சுவாசக் காற்றாய் விளங்கி வரும் வீரிய



துறையாக செய்தித் துறை விளங்கி வருகிறது என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்வதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை. அரசின் சுவாசக் காற்றாக விளங்கும் செய்தித் துறையைப் போலவே, அரசு நிர்வாகத் தேரோட்டத்திற்கு அச்சாணியாகத் திகழ்ந்து வருகிறது. அரசுத் துறைகளின் அச்சுத் தேவைகளைப் பூர்த்திசெய்து அனைத்துச் சான்றிதழ்கள், படிவங்கள், அரசு அலுவலகங்களுக்கான வெள்ளைத் தாள்கள் ஆகிய முதன்மையான எழுதுபொருள்கள் அனைத்தும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மூலமாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் இயங்கும் அரசு மைய அச்சகம், ஆணையரகம், சேலம் கிளை அச்சகம், மதுரை கிளை அச்சகம், மதுரை உயர் நீதிமன்ற கிளை அச்சகம் மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகம் ஆகியவற்றில் கணினிகள், சிறிய ஆப்செட் இயந்திரங்கள் உள்ளிட்ட அதிநவீன கருவிகள் ரூ.1.02 கோடி செலவில் வாங்கி நிறுவப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் உயர் தொழில்நுட்ப அச்சு இயந்திரங்களை அரசு இயக்கும் அச்சகங்களில் ஈடுபடுத்திட முடிவு செய்து, ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்குப் பிறகு நவீனமயமாக்குதலுக்காக 4.22 கோடி ரூபாயை தமிழக அரசு நடப்பு ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு நிர்வாகத்திற்கு உதவிபுரியத் தோற்றுவிக்கப்பட்ட அச்சகங்களுள் மூத்த அச்சகமாக விளங்கும் தமிழ்நாடு அரசு அச்சகம் 175 ஆண்டுகளாக செம்மையாகச் செயல்படுவதன் நினைவாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு அந்த அச்சகத்தில் பணியாற்றும் அனைவருக்கும் தலா 500 ரூபாய் மதிப்புள்ள அஞ்சலக சேமிப்புப் பத்திரம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு 11.10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது. அரசு மைய அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கணினிக் கல்வியை அளிக்கும் விதத்தில், பல ஆயிரம் ரூபாய் செலவில் பிற இடங்களில் பெறும் கணினிப் பயிற்சியை, மிகமிகக் குறைந்த கட்டணத்திலேயே வழங்கும் வகையில் கணினிப் பயிற்சி மையத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திடவும் அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றோடு விளையாட்டுப் போட்டிகளில்

பங்கேற்கும் தொழிலாளர்களுக்குப் பரிசுகள் தருவதற்காக வழங்கப்படும் தொகையான 45 ஆயிரம் ரூபாயை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தியும், காலத்திற்கேற்றவாறு புதிய தொழில்நுட்பப் பணியிடங்களை உருவாக்கி 333 பணியிடங்களில் பணியாளர்களை பணி நியமனம் செய்தும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

*பிற்பகல் 1-05*

நேரத்தின் அருமை கருதி, அறிவிப்புகளை முதலில் படித்துவிடுகின்றேன்: (குறுக்கீடு) இரண்டை மட்டும் படித்துவிடுகின்றேன்.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, எங்களையெல்லாம் ஆளாக்கிய, எங்களின் உயிர் மூச்சாக, இதயத் துடிப்பாக விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து இந்த ஆண்டுடன் நூறாண்டு நிறைவடைகிறது. அந்தப் பெருந்தகைக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் வாய்ப்பு, ஆளுங்கட்சியாக நாம் இருக்கும் ஆண்டில் அமைந்திருப்பதை நாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம்.

அண்ணாவின் நூற்றாண்டு விழாவினை இந்த உலகமே வியக்கும்வண்ணம், ஓராண்டு முழுவதும், கட்சி வேறுபாடின்றி, தமிழக அரசின் சார்பில் கொண்டாடுவோம். அண்ணாவின் அருமை பெருமைகளையெல்லாம் அவனிக்கு எடுத்துக் கூறுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா அவர்கள், ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்த குறுகிய காலக்கட்டத்தில், மக்களாட்சியின் மாண்பினை உலகிற்கு எடுத்துக்காட்டிய மாமேதையாகத் திகழ்ந்தார்.

தமிழ் மற்றும் ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கையை உறுதியாகக் கடைபிடித்து, இந்தியத் தலைவர்களுக்கெல்லாம் தேசியப் பிரச்சினைகளில் கொள்கைக் குன்றாக - கலங்கரை விளக்கமாக நின்றவர் பேரறிஞர் அண்ணா. சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கிய சீர்திருத்தச் செம்மல், மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வித்திட்ட சிந்தனைச் சிற்பி, எல்லாவற்றுக்கும் மேலாக, நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோமே, இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான மாபெரும் அந்த கோமகனின் சாதனைகளையும், இலட்சியங்களையும் இன்றைய இளைய சமுதாயத்தின் நெஞ்சங்களில் பதித்திட வேண்டுமென்ற



உயரிய நோக்கத்துடன், தென்னாட்டு காந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை, ஏழு கோடித் தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, அகிலமே வியக்கும் வண்ணம் கொண்டாட உறுதிபூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் செய்தி மற்றும் விளம்பரத் துறைகளுக்கான அறிவிப்புகளை அச்சிட்டு நான் இங்கே கொடுத்திருக்கின்றேன். அவற்றை நான் இந்த அவையில் படித்ததாக ஏற்றுக்கொண்டு,[@] அவைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.வி. சேகர் அவர்களும், திரு. செந்தமிழ்ச்செல்வன் அவர்களும் மற்றும் திரு. நன்மாறன் போன்றவர்களும் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். அதிலே நம்முடைய எஸ்.வி. சேகர் அவர்கள், ஜான் சுரேஷ்குமார் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். ஜான் சுரேஷ்குமார் புற்று நோய்க்கு ஆளாகி துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது, நம்முடைய அரசு அவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்தது. ஆனாலும், சிகிச்சை பலனளிக்காமல் அவர் காலமாகிவிட்டார். அவருடைய குடும்பத்திற்கு, அவருடைய மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். முறைப்படி அவர்களிடமிருந்து விண்ணப்பம் இன்னும் வந்து சேராத காரணத்தால், வழங்கப்படாமல் இருக்கின்றது. முறைப்படி விண்ணப்பம் வருமேயானால், நிச்சயமாக அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். அதேபோல இன்னும் சொல்வதற்கு நிறைய இருக்கின்றன. இருந்தாலும் நேரத்தின் அருமை கருதி, இரண்டு கருத்துகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

திரைப்படங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர் நிறைய கருத்துகளைச் சொன்னார், சில கோரிக்கைகளை வைத்தார்கள். அவர் இப்போது இங்கே இல்லையென்றாலும், நாளை பத்திரிகையைப் பார்த்துத் தெரிந்துகொள்வார், அதனால் நான் சொல்கின்றேன். சிறந்த திரைப்படங்கள், நடிக, நடிகையர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு விருதுகள்

[@] 778 முதல் 782 வரையிலான பக்கங்களில் இணைப்பு–VI மற்றும் VII ஆக அச்சிடப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. 2005-2006 ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, சென்னையிலே 16-10-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்றது. அதிலே தேர்வு பெற்ற திரையுலகக் கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசும், நினைவுப் பரிசும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சிறந்த திரைப்படத்திற்கு முதல் பரிசு ரூ.2 இலட்சமும், இரண்டாம் பரிசு ரூ.1 இலட்சமும், மூன்றாம் பரிசு ரூ.75,000/-, சிறப்புப் பரிசு ரூ.75,000/-, அதேபோல பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரித்து, அவர்களுடைய மேன்மையை சித்தரித்துக் காட்டும் வகையில் எடுக்கின்ற படங்களுக்கு 1.25 இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டன. சிறந்த நடிக, நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு, மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. திரையுலகில் குறிப்பிட்ட சாதனை புரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகளும் வழங்கப்படுகின்றன:

பேறிஞர் அண்ணா அவர்களின் பெயராலே பேரறிஞர் அண்ணா விருது, கலைவாணர் விருது, ராஜா சாண்டோ விருது, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். விருது, கவிஞர் கண்ணதாசன் விருது, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது, எம்.கே. தியாகராஜ பாகவதர் விருது என்று இப்படிப்பட்ட விருதுகளுக்கெல்லாம் 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

அதேபோல நமது சேகர் சொன்னார், குறைந்த செலவில் தயாரித்து வெளியிடுகின்ற low budget படங்களுக்கெல்லாம், உடனடியாக 90 நாட்களில் பார்த்து, அவர்களுக்கு பணத்தைக் கொடுத்தால், அவர்களைப் போன்றவர்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று சொன்னார். ஆண்டுதோறும் நூற்றுக்கும் மேற்பட்ட படங்கள் வெளியாகின்றன. அவ்வளவையும் 90 நாட்களில் போட்டுப் பார்க்க முடியாது. முதலில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யவேண்டும், பிறகு அதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள குழுவினர் அதைப் பார்வையிடவேண்டும், பார்வையிட்டு, ஆய்வு செய்து, அவர்கள் அதைத் தேர்வு செய்து அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவ்வளவு நடைமுறைகள் இருக்கின்றன.

பிற்பகல் 1-10

ஆனாலும், நிச்சயமாக அது மாதிரி சென்ற ஆண்டு 45 திரைப்படங்கள் தேர்வுக் குழுவிற்கு வந்தன. அதே மாதிரி 2005-ல் 45, 2006-ல் 49 திரைப்படங்கள் தேர்வுக் குழுவிற்கு வரப்பட்டன. இவை அனைத்தும் தேர்வுக் குழுவினால் பார்வையிடப்பட்டு, மானியத் தொகையாக ஒரு படத்திற்கு ஏழு இலட்சம் ரூபாய் வீதம் 70 படங்கள் தேர்வு செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல, சின்னத்திரை--சிறந்த சின்னத்திரை தமிழ் தொடர்களுக்கு, நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கும் முதல்முறையாக அரசு விருதுகள் 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளன. 14 சின்னத்திரை தொடர்கள், மெகா சீரியல்கள் வரப்பெற்றிருக்கின்றன. அவற்றை தேர்வுக் குழு பார்வையிட்டு அரசுக்குப் பரிந்துரை செய்ய இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சண்டைக் காட்சிகளில் நடிக்கின்றபோது, விபத்து ஏற்பட்டு காயமுற்றவர்களுக்கும், இறந்து போகின்றவர்கள் குடும்பத்திற்கும் உதவி செய்யப்படுகிறது. அந்த வகையிலே தமிழ் திரைப்படங்களில் சண்டைக் காட்சிகளில் நடிக்கின்றபோது காயமுற்றால் ரூபாய் ஐம்பதாயிரமும், உயிரிழக்க நேரிட்டால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இதன்படி சண்டைக் காட்சிகளில் நடிக்கின்றபோது உயிரிழந்த தோழர் லோகநாதன் என்ற ஸ்டண்ட் நடிகர் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, படப்பிடிப்புக் கட்டணங்களையும் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். உள்ளபடியே தெரிவிக்க விரும்புகிறேன், கடந்த ஆட்சிக் காலத்திலே முன்பிருந்த கட்டண விகிதத்தைக் குறைத்தது நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, இராஜாஜி மண்டபத்தில் படப்பிடிப்பு நடத்த வேண்டுமானால் நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். அதை, கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 10 ஆயிரம் ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். அதேபோல, வகை 1, வகை 2, Category 1, Category 2. வகை 1-க்கு ரூ.10 ஆயிரமாக இருந்தது உங்கள் ஆட்சியில். நாங்கள் வந்தபிறகு ரூ.5 ஆயிரமாகக் குறைத்திருக்கிறோம். அதேபோல, வகை 2-க்கு ரூ.5 ஆயிரமாக இருந்தது உங்கள் ஆட்சியில். அதை 3 ஆயிரம் ரூபாயாக குறைத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, படப்பிடிப்புக் கட்டண விகிதத்தில், சின்னத்திரை படப்பிடிப்பு நடக்கின்றபோது அவர்களுக்கு 50 சதவீதம், அதாவது

பாதிதான் நாங்கள் வாங்குகின்றோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள், Chennai Press Club-க்கு, பத்திரிகையாளர்களுக்கு புதிய கட்டடம் ஏற்கெனவே அறிவித்து நிதி ஒதுக்கீடெல்லாம் செய்யப்பட்டது. ஆனால், தற்போது அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய சட்டமன்றக் கட்டடமும் தலைமைச் செயலகமும் வரவிருக்கின்ற காரணத்தால், வேறு இடம் தேர்வு செய்து ஏற்கெனவே அறிவித்தவாறு அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏராளமான பேர்கள் இங்கே நிறைய கருத்துகளையெல்லாம் தெரிவித்தார்கள். நானே நேரம் எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்காது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.வி. சேகர், திரு. சின்னப்பன், திரு. நன்மாறன், திரு. செந்தமிழ்ச்செல்வன் ஆகிய எல்லோரும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, அதுமட்டுமல்ல (குறுக்கீடுகள்) திரு. ராம. சுப்புராம், நேற்றே விருந்திலே என் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு சொன்னார். என்னென்ன பேசப்போகிறோம் என்றும், அதற்கெல்லாம் நீங்கள் பதில் தயாராக வைத்துக்கொள்ளுங்கள் என்றும் சொல்லிவிட்டுச் சொன்னார். கொடுமுடி கோகிலம் திருமதி கே.பி. சுந்தராம்பாள் 'வேலைப் பிடித்தது என்ன என்ன, வேலைப் பிடித்தது என்ன,' என்ற அந்தப் பாட்டை கேட்டாலே திருமதி சுந்தராம்பாள் அவர்களுடைய ஞாபகம் வரும். அவ்வையாரை நினைத்தாலே அவர்கள் ஞாபகம்தான் வரும். அதுமட்டுமல்ல, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை முருகா என்றுதான் அவர்கள் அழைப்பார்கள். அப்படிப்பட்ட மேன்மைக்குரிய திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நடத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசென்று உரிய முறையிலே அதற்கான வழி காணுவோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துகளை எல்லாம், நான் சிந்தையிலே தேக்கி வைத்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் கவனத்துடன் படித்து, ஆய்வு செய்து வைத்திருக்கின்றோம். உரிய கால சூழ்நிலையிலே, உரிய நிதிச் சூழ்நிலையிலே அவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள்



தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் ஊற்றே, ஆற்றலின் உருவே, நிதிநிலையின் கருவே, ஏழையின் தருவே, வான சூரியனின் ஒளிபட்டு தாவரங்கள் வளர்வதைப்போல, ஞான சூரியனே, தமிழக முதல்வரே, உங்கள் பார்வைபட்டு வளர்ந்த நான் உங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நலமான தமிழகத்தைக் காண, வளமான நிதிநிலை தந்த, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, கழகத்தின் நிதியரே, கலைஞரின் ஏந்தலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் இளைஞர் சமுதாயத்தை உருவாக்கி, நமது முத்தமிழ் அறிஞர் செம்மொழி கண்ட நாயகர் பெற்றெடுத்த செம்மாதுளை, வருங்காலத் தமிழகம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, உங்களை வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

*பிற்பகல் 1-15*

இந்தத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் அரிய, பெரிய கருத்துகளை எடுத்து வைத்து அமர்ந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளில், நன்மாறன் அவர்கள் பேசுகின்றபோது சுற்றுலாத் துறையின் சார்பாக சுற்றுலா இடங்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்றும், பள்ளி மாணவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டுமென்றும் கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள்.

இந்தத் துறையின் சார்பாக ஏற்கெனவே 21 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்டளையை ஏற்று இந்த ஆண்டு குறும்படம் தயாரிப்பதற்காகவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், அதேபோன்று வெளிமாநில சுற்றுலாப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்றும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு

அதிகமாக வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள்.

ஆண்டுதோறும், டிசம்பர், ஜனவரி மாதங்களில் மாமல்லபுரத்தில் நடைபெறுகிற சுற்றுலா நாட்டிய விழா நிகழ்ச்சிகளில் இந்த முறை கிராமியக் கலைஞர்களுக்கு அதிகமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று முத்திரைத்தாள் தட்டுப்பாடு என்று சொன்னார்கள். முத்திரைத்தாள் தட்டுப்பாட்டைப் பொறுத்தமட்டில் மாநில அரசாங்கம் எந்த அளவுக்குத் தேவைப்படுகிறது என்பதைக் கணக்கிட்டு இந்திய மைய அரசு அச்சகத்திற்குத் தேவைப்பட்டியல் அனுப்பியவுடன் முத்திரைத்தாள்கள் முழுமையாக சென்னை அயனாவரத்திலுள்ள மாவட்டக் கருவூலத்தில் பெறப்படுகின்றன.

முத்திரைத்தாள்கள் கிடைக்கப்பெற்ற பிறகு ஒருங்கிணைப்பு மையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அது அனைத்துக் கருவூலங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, அதன்மூலமாக முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. முத்திரைத்தாள் தட்டுப்பாடு இருந்தாலும்கூட அதற்கு மாற்று வழியாக முத்திரைத் தீர்வை செலுத்தி முத்திரைச் சட்டத்தில் பலவகைகளில் வகைசெய்யப்பட்டுள்ளபோதிலும் பொதுமக்கள் முத்திரைத்தாள் பயன்படுத்துவதையே விரும்புகின்றனர். எனவே முத்திரைத்தாளைப் பொறுத்தமட்டிலும் முத்திரைத்தாள் இல்லாமல்கூட பதிவு செய்யக்கூடிய முறை நடைமுறையில் இருக்கிறது. ஆனால் அதை மக்கள் விரும்பாத காரணத்தால் இதையே திரும்பத் திரும்பச் சொல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதுபோன்று Guideline Value. சில இடங்களில் அதிகமான இடங்களுக்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு கோரிக்கை குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் இருக்கிறது. அதைத்தான் திரு. வேல்முருகன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். Guideline Value-ஐ பொறுத்தமட்டில் வட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வட்டாட்சியர் அவர்களுடைய தலைமையில் அந்த வட்டக் குழுக்கள் தருகின்ற நில மதிப்பீட்டை மாவட்ட குழுக்கள் பரிசீலனை செய்கிறது, மாவட்ட ஆட்சியருடைய தலைமையில்.



எனவே அந்தக் குழுக்களால் பரிசீலனை செய்யப்பட்டு பொதுமக்களுடைய பார்வையில் வைக்கப்படுகிறது. பொதுமக்கள் என்ன கருத்துகளைச் சொல்கிறார்கள் என்பதையும், அந்தக் கருத்துகளை எடுத்துக் கொண்டு, பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக பரிந்துரை செய்யப்படுகின்ற அந்த அளவை இந்தத் துறை எடுத்துக்கொண்டு இன்றைக்கு Guideline Value fix பண்ணப்படுகிறது. இருந்தாலும்கூட, ஒன்றிரண்டு இடங்களில் இதுபோன்ற குறைகள் இந்தத் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டவுடன் உடனடியாக இந்தத் துறையால் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பொழுது கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் திருப்பூரில் அதிகமான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, குறைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். உடனடியாக அந்தப் பகுதியினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே எடுத்துக் கூறி, அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவர்கள் பரிசீலித்து எந்த அளவுக்கு நில மதிப்பை பரிந்துரை செய்து அனுப்புகிறார்களோ அதை இந்தத் துறை நிர்ணயம் செய்யும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று கம்பம் இராமகிருஷ்ணன் அவர்கள் வில்லங்கச் சான்று உடனடியாக வேண்டும் என்று சொன்னார்கள். வில்லங்கச் சான்றைப் பொறுத்தமட்டில் உடனடியாக இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மணி நேரத்தில் வில்லங்கச் சான்று வழங்கக்கூடிய அளவுக்கு இந்தத் துறையினுடைய செயல்பாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று பொது அதிகார ஆவணங்களைப் பொறுத்தமட்டில் பொதுவாகச் சொன்னார்கள். அதனால் நில மோசடி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்படி அதிகார ஆவணங்கள் கட்டாயப் பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களின் பட்டியலில் இல்லை. மேலும் இவ்வாவணங்களை எந்தச் சார்பதிவாளர் அலுவலகத்தில் வேண்டுமானாலும் பதிவு செய்துகொள்ளலாம். இதனால் சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றிதழில், பொது அதிகார ஆவணங்கள் குறித்த பதிவுகள் இடம்பெறாது. இதுபோன்ற சட்ட நுணுக்கங்களை தெரிந்த நபர்கள் பொது அதிகார ஆவணங்களைப் பயன்படுத்தி நில மோசடிகளில் ஈடுபடுவது அரசுக்குத் தெரிய வந்திருக்கிறது. எனவே,

பொது அதிகார ஆவணத்தின் பதிவைக் கட்டாயமாக்கி, அவற்றை சொத்து சம்பந்தமான சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்திடவும், மேலும் அவற்றின் பதிவுகளை வில்லங்கச் சான்றிதழில் பிரதிபலிக்கும் விதமாகவும், 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் உரிய திருத்தத்தை மேற்கொள்ள, உடனடியாக நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்று சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய அந்தக் காலக் கட்டத்தில்தான் வல்லமை படைத்த உலக மொழிகளில் எல்லாம் நீதி நெறிகளை அள்ளித் தெளித்துக்கொண்டிருக்கும் உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் பெருந்தகைக்கு, வான்முட்டும் சிலையினை வைத்து, வரலாற்றிலே ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்ல, தமிழக சுற்றுலாத் துறைக்கும் தனி மகுடத்தைத் தந்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

பூம்புகாரை அளித்து, வள்ளுவர் கோட்டத்தை அமைத்து, பாஞ்சாலங்குறிச்சியைப் படைத்து, சுற்றுலாத் தலங்களை உருவாக்கிய உன்னதத் தமிழர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். 'அய்யாவின் துணிவும், அண்ணாவின் கனிவும், எந்நாளும் பஞ்சமில்லை, பொன்னுலகம் படைத்திடுவோம்' என்றார் நம் தலைவர் கலைஞர்.

அதேபோல் 'கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றி மூத்தகுடி' தமிழ்குடி என்பதால் தொன்மையின் அடையாளமாக பழங்கால நினைவுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்கும் பெட்டகமாக தமிழகம், இந்தியத் திருநாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழகமே சுற்றுலா மாநிலமாக, எங்கு நோக்கினும் மனதை வருடும் சீர்மிகு சிற்பங்கள், அலைகடல் பரப்புகள், வரலாற்றுச் சின்னங்கள், தொல்பொருள் தொன்மயங்கள், அருங்காட்சியகங்கள், கவர்ச்சிச் சித்திரங்கள், வளமான வளங்கள், வற்றாத அருவிகள் என்று வருகிற பயணிகளை ஈர்க்கிற எண்ணற்ற காட்சிப் பெட்டகங்கள் விரவிக் கிடக்கும் தமிழகத்தில், சுற்றுலாத் துறை முக்கியப் பங்கை முனைப்புடன் ஆற்றுகிறது.



நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, அரசாணைகள் அத்தனையும் பிறப்பிக்கப்பட்டு, தேக்கத்தில் இருந்த பணிகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. இந்திய அரசு அளிக்கும் நிதி உதவியில், அதிகத் திட்டங்களைத் தயாரித்து நிதி பெற்ற முதல் மாநிலமாக தமிழகம் விளங்கி இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரியப்படுத்திக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல 2007-2008 ஆம் ஆண்டு, மத்திய அரசாங்கம் நிதியில் இருந்து ரூ.28 கோடி செலவில், திருவரங்கத்திற்கும், ஏலகிரிக்கும், முதுமலை, ஆனைமலை, நீலகிரி, குடந்தை நகர், மெரினா மேம்பாட்டிற்கும் அதிகமான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று 2008-2009 ஆம் ஆண்டு, தரங்கம்பாடி, கொல்லிமலை, பூண்டி அணைப் பகுதிகளை அழகுபடுத்துவதற்கும், அதேபோன்று கல்லணை, குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, பாஞ்சாலங்குறிச்சி, கோவை, குற்றாலம், ஜவ்வாதுமலை, குச்சனூர் குற்றாலம், எட்டயபுரம், சிக்கல், அடவிநயனார் பூங்கா, மணிமுத்தாறு, திற்பரப்பு போன்ற 20 சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டிற்காக 12.12 கோடி ரூபாய் அளவிற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழகச் சுற்றுலாத் துறை பண்பாட்டு மேம்பாட்டு முகாம்களை வெளிநாடுகளில், வெளிமாநிலங்களில் ஏற்படுத்தி, நம் மாநிலத்தை நோக்கி ஏராளமான அளவிற்குப் பயணிகள் அதிகமாக வருவதற்காக, இந்தத் துறையினுடைய அதிகாரிகள் பல்வேறு பணிகளை மேற்கொண்டதன் விளைவாக, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் உள்நாட்டு பயணிகளின் எண்ணிக்கை சுமார் 5½ கோடி. உள்நாட்டு பயணிகளின் எண்ணிக்கை—தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 17.5 இலட்சம் பேர் தமிழகத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் துறையினுடைய அதிகாரிகள் விளம்பர முகாம்களை முறையாக வெளிநாட்டிலும், வெளி மாநிலத்திலும் நடத்திய காரணத்தினால், அதிகமான பயணிகள் இப்போது தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று பிரபலம் ஆகாத எழில் மிகுந்த இடங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்று அதற்காகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, அந்தப் பகுதிகளில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்த, ஊக்கத் தொகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

பாரம்பரிய விடுதிகளை அமைப்பவர்களுக்கு மானியத்தை முன்மொழிந்திருக்கின்றோம். சுற்றுலா பண்பாடு வளர வேண்டும் என்பதற்காக பல இடங்களில், ஆட்டோ ஓட்டுநர்கள், வாகன ஓட்டுநர்கள், அனைவருக்கும் 'விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்' என்ற முகாம்களை செம்மையாக நடத்தி முடித்து இருக்கின்றோம்.

அதேபோன்று 200 பட்டதாரி இளைஞர்களுக்கு வழிகாட்டிப் பயிற்சிகள் அளித்து, வருகின்ற பயணிகள் முறையாக அந்தந்த இடங்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்தத் துறையின் சார்பாக 200 பட்டதாரி இளைஞர்களுக்கு வழிகாட்டிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய அளவிற்கு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டிலே இருப்பதைப்போன்று, விரைவிலே கிழக்குக் கடற்கரைச் சாலையிலே 'எங்கும் ஏறலாம், இறங்கலாம்' என்ற பேருந்து வசதிகளையும் அறிமுகப்படுத்த இருக்கின்றோம்.

அதேபோன்று, கடந்த தடவை நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சிகளில் இதுவரை இல்லாத அளவிற்கு எல்லோரின் பாராட்டையும் பெறக்கூடிய அளவிற்கு, சுமார் 15 இலட்சம் பேர் வருகை தந்து பாராட்டக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய பொருட்காட்சிகளை நடத்தி அதன்மூலமாக 1.5 கோடி ரூபாய் இலாபத்தை இந்தத் துறை ஈட்டியிருக்கின்றது.

*பிற்பகல் 1-25*

இவ்வாறு, பல்வேறு பணிகளை இந்தத் துறையின் சார்பாக நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். இந்தத் துறையின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள்கூட பல்வேறு பகுதிகளில் விடுதிகளை மேலும் உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் 1971 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 5 விடுதிகள், 2 பேருந்துகளோடு தொடங்கப்பட்ட இந்தத் துறை ஆலமரமாக விரிந்து சுமார் 55 விடுதிகளையும், 21 போக்குவரத்து சொகுசுப் பேருந்துகளையும் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறது. இதன்மூலமாக அதிகமான இலாபத்தை ஈட்டக்கூடிய அளவுக்கு பல்வேறு பணிகளை இந்தத் துறை செய்து கொண்டிருக்கிறது.



நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆணைகளை ஏற்று, அறிவுரைகளை ஏற்று செயல்பட்டதன் விளைவாக தமிழகச் சுற்றுலாத் துறை 2 ஆண்டு காலத்தில் 3 தேசிய விருதுகளை, முதல்முறையாகப் பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று இந்தத் துறைக்காக பட்டுலா விருதுக்கு நமது மாநிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் பல்வேறு சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று எங்களுடைய துறையினுடைய அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அலையகச் சுற்றுலா, மலையகச் சுற்றுலா, கலையகச் சுற்றுலா, தொல்பொருள் சுற்றுலா, பண்டிகைச் சுற்றுலா, ஓய்வுச் சுற்றுலா, ஆய்வுச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, அறிவியல் சுற்றுலா, வரலாற்றுச் சுற்றுலா, ஊரகச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, விடுதலைச் சுற்றுலா, வீரச் சுற்றுலா என பல்வேறு சுற்றுலாக்களையும் செயல்படுத்தவிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் பல்வேறு பணிகளை— மாண்புமிகு உறுப்பினர்கள் விடுதிகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். கலைஞருடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு 2 ஆண்டு காலத்தில் சுமார் 9.05 கோடி ரூபாய் செலவில் அனைத்து விடுதிகளும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுற்றுலாத் துறையின் சார்பாக இயங்கக்கூடிய விடுதிகளைச் சென்று பார்த்தால் அதனுடைய பயன் நன்றாக உங்களுக்குத் தெரியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தலைவர் கலைஞர் அவர்களின் துறையான கலை மற்றும் பண்பாட்டுத் துறையைப் பற்றி சில கருத்துகளையும் கூற விரும்புகிறேன். கலை மற்றும் பண்பாட்டுத் துறையைப் பொறுத்தமட்டில் கலை பண்பாட்டுத் துறை இயக்ககம் அல்ல; அது ஏக்கம். கல்லில் உளி நடனம் ஆடினால் சிற்பம், தூரிகை மயில் இறகாய் அசைவது ஓவியம்; உடலில் ஒவ்வொரு அங்கமும் உன்னதங்களை உணர்த்துவதே நடனம்; அன்பும், கருணையும் அமிழ்தமாய் திகழ்வதே பண்பாடு; மக்களின் மனதில் மென்மையும், மேன்மையும் துலங்கச்

செய்வதுமே இத்துறையின் நோக்கம். கலைக் கல்வி அளித்தல், கலைகளை வளர்த்தல், கலைஞர்களைக் காத்தல் ஆகிய மூன்று முக்கியக் கடமையாகக் கட்டட சிற்பக் கல்லூரி, கவின் கலைக் கல்லூரி, இசையினை இயம்பக் கல்லூரிகள், பாடகர் பயில இசைக் கல்லூரிகள், முத்தமிழைப் பரப்ப இயல், இசை, நாடக மன்றம், நுண்கலை துளிர்க்க ஓவிய நுண்கலைக் குழு, பள்ளி மாணவர்கள் திறன் பெற்று திறமையுடன் திகழ, ஜவகர் சிறுவர் மன்றம் என்று கிளைகளைப் பரப்பி இதயத்தை குளிர்விக்கும் இனிய விருட்சமாய் இத்துறை நறுமணம் பரப்பி முத்தமிழை வளர்க்கிறது. நாட்டுப்புறக் கலைஞர்கள் நலியாமல் இருக்க நயமாய் நல்ல வாரியம் அமைத்து, நல்கை வழங்கி, கலைகள் அழியாது இருக்க தடுத்தாட்கொண்டது நமது அரசு. இசைக் கல்லூரி மாணவர்களுக்கு திங்கள்தோறும் உதவித் தொகை 200 ரூபாய், மாமல்லபுரத்தில் திறந்தவெளி சிற்பக்கூடம், சென்னை இசைக் கல்லூரியில் தாகூர் அரங்க மேம்பாடு, 1,000 நலிந்த கலைஞர்களுக்குப் புதிதாக உதவித் தொகை ரூ.500 லிருந்து 1,000 ரூபாயாக இரட்டிப்பு. பல்வேறு விழாக்களில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உரிய மரியாதை, சென்னை கவின் கல்லூரிகளை மேம்படுத்த நடவடிக்கை, இப்படி எண்ணற்ற இனிய திட்டங்களை, கலை மற்றும் பண்பாட்டுத் துறை சீரிய முறையில் பணியாற்றி சிறப்புச் சேர்க்கின்றது.

அதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம் அவர்கள் பேசும்போதுகூட, சென்னை சங்கமம் நிகழ்ச்சியை இன்னும் பல்வேறு இடங்களில் பரப்ப வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த ஆண்டைப் பொறுத்தமட்டில் அதிகமாக சுமார் 15, 20 இடங்களில் பல்வேறு பகுதிகளில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழகத்தைச் சார்ந்த சுமார் 2,000 கலைஞர்கள், சென்னைக்கு வருகைதந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி பாராட்டைப் பெற்றார்கள். வருங்காலத்தில் அதனை மதுரை, கோவை, திருச்சி போன்ற பகுதிகளிலும் நடத்த வேண்டுமென்று இந்தத் துறை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

தமிழகம் எங்கும் மீண்டும் இயல், இசை, நாடகம் ஆகியவை மூலம் மகிழ்ச்சியைக் கொண்டாட இத்துறை பல முயற்சிகளை எடுத்துள்ளது. சென்னை வருகின்ற கலைஞர்கள் தங்க விடுதி ஒன்று விரைவில் உருவாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் 2 ஆண்டு காலமாக நமது கலைஞருடைய ஆட்சி எண்ணற்ற சாதனைகளைப்



புரிந்திருக்கிறது. கடந்த ஆட்சியைப் பொறுத்தமட்டில் 2001-2006 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில் அடைந்த வருவாய் 9,970.28 கோடி ரூபாய், ஆனால் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற 2 ஆண்டு காலத்தில் 7,638.86 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** கடந்த ஆட்சியில் மூடப்பட்ட 40 சார்பதிவாளர் அலுவலகங்களைத் திறக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னவுடன் படிப்படியாகத் திறக்கலாம் என்ற உறுதிகளைத் தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டைப் பொறுத்தமட்டில் 10 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கான அனுமதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு புதிதாக 5 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறப்பதற்கான அனுமதியையும் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, 1-7-2006 முதல் ஆள் மாறாட்டம் மற்றும் போலி ஆவணப் பதிவுகளைப் பதிவு செய்வதை முழுமையாகத் தடுக்கவும், பினாமி நடவடிக்கைகளைத் தடுக்கவும், கிரய ஆவணங்களில் பதிவின்போது வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களின் புகைப்படம் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டது. விரல் ரேகை பெறுவதும் கட்டாயமாக்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு ஆற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதில் பத்திரப் பதிவுத் துறை எப்போதும் முன்னிலை வகித்து வருகிறது. பழைய நடைமுறைகளை, ஆவணங்களுக்கேற்ப பல நாட்களான நிலை மாறி பதிவு நடவடிக்கைகளை ஒரு மணி நேரத்திற்குள்ளாக முடித்திட ஏதுவாக STAR திட்டத்தின்கீழ் 450 பத்திரப் பதிவு அலுவலகங்கள் செயல்படுகின்றன. மீதமுள்ள 118 அலுவலகங்களையும் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இணையதள அடிப்படையில் Reginet என்னும் வலைப்பின்னல் அலுவலகங்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கப்பட்டிருக்கின்றன. சான்றுகள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் மற்றும் வகுப்புகளின் துறைகளில் தனிப்பட்ட இணையதள வழியாக மனு செய்யப்படின், இல்லத்திலேயே பெற வசதி செய்யப்படுகிறது.

பொதுவாக தகவல் அளிப்பதோடன்றி இணையதளத்திலும் சொத்து மதிப்பீடு செய்தல், பதிவு நடவடிக்கைகள் மற்றும் பொதுப் பயன்பாட்டின் படிவங்கள், மாதிரி வரைவு ஆவணங்கள் பொதுமக்கள் பெற அளிக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், திருமணச் சான்றிதழ்கள் மற்றும் இதர ஆவணங்களின் உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்திடும் வகையில் அந்த ஆவணங்களின்மீது Hologram ஒட்டு வில்லைகள் ஒட்டும் முறை 1-8-2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணத்தைத் தடை செய்திடவும், இந்து திருமண முறையை முறைப்படுத்திடவும் 22-10-2007 அன்று முதல் இந்து திருமணப் பதிவு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

18 நிர்வாக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு வாகனங்கள் மற்றும் ஓட்டுநர்களை நியமிக்க ஆண்டுதோறும் 15.12 இலட்சம் செலவிற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 6 பணியிடங்கள் டெக்ஸ்கோ மூலம் நிரப்பப்பட்டுள்ளது. மீதிப் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

223.80 இலட்சம் ரூபாய் செலவில் 250 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 250 நகல் பெருக்கி இயந்திரங்கள் xerox machines வழங்கப்படவுள்ளன. அவ்வாறே 34 இலட்சம் ரூபாய் செலவில் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு 510 அலமாரிகள் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது. 19 மாவட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் 19 சீருந்துகள், ஓட்டுநர் மற்றும் எரிபொருள்கள் ரூபாய் 1.2 கோடி செலவில் வாங்கப்படவிருக்கின்றன.

பதிவுத் துறையில் 6 மாவட்டத் தலைநகரங்களிலும், 5 துணைப் பத்திரப் பதிவு தலைவர் அலுவலகங்கள் மற்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு 9.57 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவதற்குப் பரிசீலனையில் உள்ளது.



அவ்வாறே 5 கோடி ரூபாய் செலவில் 20 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கும் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இங்கே புதிய கட்டடங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்தார்கள். சார்பதிவாளர் அலுவலகங்களைப் பொறுத்தமட்டில் 568 சார்பதிவாளர் அலுவலகங்களில், பல்வேறு சார்பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக மாற்ற, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இதுவரை 35 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள். எனவே, வருங்காலத்தில் படிப்படியாக அது உயர்த்தப்பட்டு, முழுவதுமாக சொந்தக் கட்டடத்தில் இயங்கக்கூடிய அளவிற்குப் பணிகளை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் அதிகமான வருவாயைப் பெற்றிருந்தாலும்கூட இந்தத் துறை பல்வேறு வசதிகளை, மக்களுடைய தேவைகளைப் புரிந்து--guideline value கூட்டப்பட்டிருக்கிறது என்ற கோரிக்கைகள்கூட ஒருசில இடங்களில்தான் அந்தப் பிரச்சினைகளும் இருக்கின்றன. அதனையும் தீர்த்து வைக்கக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பல்வேறு பணிகளை இந்தத் துறையினுடைய அதிகாரிகள், இந்தத் துறையினுடைய சுற்றுலா, கலை பண்பாடு மற்றும் பத்திரப் பதிவுத் துறைகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக இயக்குநர்கள், ஆணையாளர்கள் ஆகியோர் பல்வேறு பணிகளை மேற்கொண்டதன் அடிப்படையில், மற்ற மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தமிழகம் இன்றைக்கு முதல் மாநிலமாக கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்படும் என்ற நல்ல செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளுக்கு நான் அளித்த பதில் திருப்திகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்புகளை # நான் இந்த

# 783 முதல் 790 வரையிலான பக்கங்களில் இணைப்பு–VIII மற்றும் IX–ஆக அச்சிடப்பட்டுள்ளன.

அவையிலே படித்ததாகப் பதிவு செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது நான் ஒரு கோரிக்கையினை வைத்தேன். வாரப் பத்திரிகையாளர்களுக்கு இந்த Accreditation Card கொடுக்கப்படும், அது பரிசீலிக்கப்படும் என்று இந்த அவையிலே அறிவித்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? வாரப் பத்திரிகையாளர்களுக்கு அந்த Accreditation Card கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொண்டு, 175 ஆண்டுகள் பழமையான அரசு அச்சகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஊழியர்களுக்கு, ஒரு Increment, 5% தனி ஊதியம் விடுபட்டுப் போயிருக்கிறது. Special Pay 25 சதவீதம் உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியைச் சார்ந்த கே.பி. சுந்தராம்பாள் அவர்களுக்கு இந்த ஆண்டு நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்திய தேசத்தினுடைய சுதந்திர எழுச்சியை ஏற்படுத்திய ஒரு மாபெரும் பழம்பெரும் நடிகை அவர்கள். கொடுமுடி கோகிலம் என்று அனைவராலும் அறியப்பட்டவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள், நட்புள்ளவர்கள், இன்னும் சொல்லப்போனால் அன்பு பாராட்டப்பெற்றவர்கள். அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு, எனது தொகுதி சார்பிலே, நம்முடைய தமிழகம் சார்பிலே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்த நாட்டிலே சுதந்திர வேட்கையை ஏற்படுத்திய கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறை சென்று, வருகின்ற 7-7-2008 அன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன. அந்த 100 ஆண்டுகளைப் போற்றுகின்ற வகையிலும், வ.உ. சிதம்பரனாருக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், தமிழக முதலமைச்சர் அவர்களை நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கலந்து பேசி, ஒரு நல்ல விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், விடுதலைப் போராட்டத் தியாகிகளையும், இந்த அரசு பெருமை சேர்ப்பதிலே இன்றையவரைக்கும் தவறியது கிடையாது. உதாரணமாக, பொதுவுடைமை இயக்கத்தின் தலைவர் ஜீவா அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியதும் இந்த அரசுதான். தேவர் திருமகனார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியதும் இந்த அரசுதான். புரட்சி வீரன் பகத்சிங் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியதும் இந்த அரசுதான். அதுபோல, மாண்புமிகு அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களது கோரிக்கையினை இந்த அரசு கண்டிப்பாகப் பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையில் ஒரு புதிய தங்கும் விடுதி என்ற முறையில் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். Introduction of bed and breakfast scheme என்று சொல்லி, உண்டு உறைவிடங்கள் என்று சொல்லக்கூடிய வகையில் புதிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, வீடுகளை ஒட்டி இருக்கக்கூடிய அறைகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற

ஓர் அறிவிப்பு. அப்படி குடியிருக்கின்ற வீடுகளில் ஓர் அறையை ஒதுக்கிக் கொடுக்கின்ற நேரத்தில், யாராவது வெளியில் இருப்பவன், வெளி மாநிலத்தைச் சார்ந்தவன் இங்கு வந்து தங்கும்போது, அங்கே சமூகச் சீர்கேடுகள், கொலை, கொள்ளை, களவு போன்றவை எல்லாம் நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அவ்வாறு அறிவிப்பது ஏற்புடையதாக இருக்குமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, பத்திரிகையாளர்கள் டெல்லி செல்கின்ற நேரத்தில் புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு சலுகைக் கட்டணம் வழங்க வேண்டும் என்பது பத்திரிகையாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அதையும் அரசு நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். நீங்கள் முதலில் பேசிவிட்டீர்கள். திரும்பத் திரும்ப எழுந்து நின்றீர்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கலைஞர்களுக்கு விருதுகள், பரிசுகள், தங்க நாணயங்கள் எல்லாம் வழங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இவையெல்லாம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த தெருக்கூத்துக் கலைஞர்களை, இந்த அரசு எந்த அளவுக்கு கௌரவப்படுத்துகிறது? அவர்களுக்குப் பரிசுகளையும், நாணயங்களையும், விருதுகளையும் வழங்கி--சின்னத்திரை, வண்ணத்திரை வருவதற்கு அடித்தளமாக இருந்த--தெருக்கூத்துக் கலைஞர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தனி நல வாரியம் அமைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலை பண்பாட்டுத் துறை சார்பாக அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் இடம்பெறவில்லை. அதேபோன்று, சுற்றுலா அலுவலர்கள்--மாவட்டத்தினுடைய சுற்றுலா அலுவலர்கள் இந்தியாவிலும், உலக அளவிலும் எப்படிப்பட்ட சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு ஒரு சுற்றுலாவை நீங்கள் ஏற்பாடு செய்து--தமிழ்நாட்டினுடைய சுற்றுலாப் பெருக்கத்திற்கு வழிவகை காண்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)



பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்கட்டும்சேவல் பகுதியில் ஒண்டிவீரன் அவர்களுக்கு மணி மண்டபம் எழுப்ப வேண்டும் என்பதற்கு ஏற்கெனவே பரிசீலிப்பதாக நம்முடைய செய்தி, விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சிலையும், மண்டபமும் அமைக்க முன்வருவார்களா என்பதையும், அதேபோன்று ஏற்கெனவே மதுரையில் I.T. Park அமைக்க அடிக்கல் நாட்டு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தபோது மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் விடுபட்டிருந்தன. அதுபோன்ற தவறு எதிர்காலத்தில் நிகழாத வகையில் உரிய ஏற்பாடு செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியில் நாட்டியப் பேரொளி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** உலக நாட்டியப் பேரொளியாக இருக்கக்கூடிய பத்மா சுப்ரமணியம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பாத நாட்டியத்தைத் தோற்றுவித்த பாத முனிவருக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று சொல்லி, 5 ஏக்கர் இடம் ஒதுக்கினார்கள். இன்றைக்கு உலகம் முழுவதும் இருந்து மேலை நாடுகளில் இருக்கக்கூடியவர்கள்கூட பரத நாட்டியத்தை இப்போது கற்றுக்கொள்வதற்கு இங்கே வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பாத முனிவருக்கு ஆலயம் அமைப்பதற்கு அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு. (குறுக்கீடு) சொல்லுங்கள். நான்தான் திரு. அருள் அன்பரசு என்று சொல்லிவிட்டேனே!

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக டாக்டர் கலைஞர் இருந்தபொழுது காங்கிரஸ் கட்சியின் மூத்த அமைச்சரும், வன்னியர் சமூகத்தின் பெரும் தலைவரான இராமசாமி படையாச்சியினுடைய திருவுருவச் சிலையை Guindy, Halda சந்திப்பில் திறந்து பெருமைப்படுத்தினார்கள். ஆனால், அந்தச் சிலை பராமரிப்பின்றிக் கிடக்கின்றது. பொதுப்பணித் துறையைக் கேட்டால் சிலையை அமைப்பதுதான் எங்களுடைய வேலை, பராமரிப்பது செய்தித் துறையின் வேலை என்று சொல்கின்றார்கள். செய்தித் துறையைக் கேட்டால் அவர்கள் அரசு விழாவாக அறிவித்தால் நாங்கள் பராமரிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். பெரும்பான்மை சமுதாயத்தின் தலைவரான படையாச்சியின் சிலை மிகவும் அவலமான நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமசாமி படையாச்சியின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்து, அவருக்குப் பெருமை சேர்க்க வேண்டும். அமைச்சர் முன்வருவாரா என்பதை சற்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இதிலே குறிப்பாக பத்திரப் பதிவு செய்கிறபொழுது, அதற்குரிய பத்திரங்களை நாமே விற்பனை செய்கிறோம். அது 1,000 ரூபாய், 500 ரூபாய் என்ற அளவிலே பல்வேறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அந்த முத்திரைத் தாள் விற்பனையிலே மோசடிகூட நடந்து, மிகப் பெரிய செய்தியாக நமது நாட்டிலே நிலவி வருகிற நிலையில், என்னுடைய ஆலோசனையாக நாங்கள் சொல்வது என்பது, பத்திரப் பதிவுக்கு இந்தக் கட்டணத்தோடு கூடிய முத்திரைத் தாள் விற்பனை என்பதற்குப் பதிலாக, அதற்குரிய தொகையை நிர்ணயித்து, அந்தத் தொகையை வங்கியிலோ அல்லது பதிவுத் துறை அலுவலகத்திலோ, காசோலை மூலமாக செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட மோசடிகள் நடைபெறாமல் தடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதைப் பற்றி இந்த அரசு சிந்திக்குமா என அறிய விரும்புவதோடு, பத்திரிகையாளர்கள் இறந்துபோகிறபொழுது அவர்களுடைய குடும்ப நல நிதி 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட 49 பேர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று



சொல்கிற காரணம் இருக்கிறது. அதிலே ஒரு காரணம், பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களுக்கு, சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனம் சான்று வழங்கப்படவேண்டும் என்று கோரப்படுகிறது. அப்படிச் சான்றினை அவர்கள் வழங்க மறுக்கிறார்கள். ஆகவே, அந்த அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர் சங்கம் சான்று அளித்தால், அந்தக் குடும்ப நிதி வழங்கலாம் என்பதற்குரிய முயற்சியை இந்த அரசு ஏற்படுத்தி, அந்த 49 பேர்களுக்கும் நிவாரணத் தொகையை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன். (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்து நிற்காதீர்கள். உட்காருங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரதக் கலைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர, மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அத்தனை கருத்துகளையும் முதலமைச்சரோடு கலந்து, அரசு ஆவன செய்யும்.

பிற்பகல் 1-15

## (அ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை 29 - சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை). (குறுக்கீடுகள்) No. உட்காருங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,49,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.70,24,60,000/-,

கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.147,99,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



**(இ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கை எண் 28-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.36,16,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.97,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஈ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30 - எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.74,09,86,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,00,09,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-5-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

60. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

202. மானியக் கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)



203. மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

204. மானியக் கோரிக்கை எண் 29-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

205. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலா-பண்பாட்டுத் துறை அறிவிப்புகளின் மீதான நடவடிக்கைகளின் தொகுப்பு. (தமிழ்)

206. மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

207. மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

208. 2007-2008 ஆம் ஆண்டிற்கான எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

209. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை, 2008 என்கிற சிறுநூல். (தமிழ்)

210. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் மானிய சலுகை திட்டங்கள் பற்றிய கேள்வி-பதில் கையேடு என்கிற சிறுநூல். (தமிழ்)

211. நெசவாளர் கையேடு-2008 என்கிற சிறுநூல். (தமிழ்)

212. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

213. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

214. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

215. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினேழாவது அறிக்கை. (2007-2008)

216. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினெட்டாவது அறிக்கை. (2007-2008)

217. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பத்தொன்பதாவது அறிக்கை. (2007-2008)

218. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2007-2008)

219. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

220. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை. (2007-2008)

221. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2007-2008)

222. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2007-2008)

223. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2007-2008)

224. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது அறிக்கை. (2007-2008)

225. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2007-2008)

226. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2007-2008)





## இணைப்பு I

(506 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா

## கொள்கை விளக்க குறிப்பு, 2008-2009

சுற்றுலா என்பது
இடங்களைத் தெரிந்து கொள்வது மட்டுமல்ல;
இதயங்களை அறிந்து கொள்வதும்தான்.
உணவை நுகர்வது மட்டுமல்ல
உணர்வைப் பகிர்வதும்தான்.
அலைகளை தரிசிப்பது மட்டுமல்ல;
கலைகளை இரசிப்பதும்தான்.
பாட்டைக் கேட்பது மட்டுமல்ல;
பண்பாட்டைக் காப்பதும் தான்.
திறந்த மனத்துடன் சுற்றுலா செல்பவர்கள்
இனிய அனுபவங்களுடன்
திரும்பி வருகிறார்கள்.
அவர்கள் உள்ளம் கடற்கரையாய் விரிந்தும்,
விண்வெளியாய் உயர்ந்தும்
உவகையுடன் துள்ளிக் குதிக்கிறது.
சுற்றுலா பெருந்தன்மையை வளர்க்கிறது,
தனித்தன்மையைக் காப்பாற்றுகிறது.
சுற்றுலாவினால்,
இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு;
கலைஞர்களுக்கு வாய்ப்பு,
தொல்லியல் சின்னங்களுக்குப் பாதுகாப்பு
வணிகர்களுக்கு வர்த்தகம்,
பொதுமக்களுக்கு கட்டமைப்பு வசதி,
அரசுக்கு அந்நியச் செலாவணி,
நாடுகளிடையே நட்புறவு.

வருகின்ற விருந்தினரைப் போற்றி,
சுற்றுலாத் தலங்களின் தூய்மையைப் பேணி,
பயணிகளிடம் வாய்மையைக் கடைப்பிடித்து,
நம் தமிழகம் உலகத்தின் ஒப்பற்ற சுற்றுலாத் தலமாக
ஓங்கி ஒலிக்கப் பாடுபடுவோமாக !

**கலைஞர் மு. கருணாநிதி**
தமிழ்நாடு முதலமைச்சர்

மனிதன் மட்டுமே உடலாலும், உள்ளத்தாலும் தொடர்ச்சியாக பரிணாம வளர்ச்சியடைகிறான். வெளி உலகத்தோடு இருக்கும் தொடர்பால் சிறந்த செயல்பாடுகளை உறிஞ்சிக் கொள்கிறான். பயணமும், சுற்றுலாவும் நாகரிக வளர்ச்சிக்கு வெகுவாகப் பங்களித்து இருக்கின்றன. எழுத்து, வேளாண்மை, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அனைத்துமே உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு மக்கள் மேற்கொண்ட பயணங்களால் ஏற்பட்டவை. வாழ்க்கையின் பல்வேறுவிதமான நிகழ்வுகளில் தகவல்களைப் பரப்பி, தொழில், வர்த்தகம், பண்பாடு, பரிமாற்றம் ஆகியவை நடக்க உறுதுணையாக இருக்கிறது. வசதிகளும், தகவல்களும் உரியவாறு அளிக்கப்படாவிட்டால் பயணம் துயரமாக ஆகித் தொய்வுறும்.

அரசு, சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்த்த ஏராளமான முயற்சிகளை மேற்கொள்கிறது. அது இவ்வுலகத்தைப் பிரபஞ்ச கிராமமாக மாற்றும். மக்கள் அனைவரையும் இந்தப் பேரண்டத்தின் பிரதிநிதிகளாக மாற்றவும் பாடுபடுகின்றது. நாடுகளுக்குள் நட்புறவையும், கண்டங்களின் ஒத்திசைவையும் உண்டாக்குவதற்கு சுற்றுலாவின் வளர்ச்சி உந்துதலைத் தருகிறது. இன்றைய மனிதன் கடும் பணிகளின் அழுத்தத்தாலும், தனிமைப்படுத்துதலாலும் நெருக்கடியோடு வாழ்கிறான். ஒவ்வொருவரைச் சுற்றியும் கண்ணுக்குத் தெரியாத கம்பி வேலிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அன்றாட வேலைகள் நம்மை மூச்சுத் திணற வைக்கின்றன. சுற்றுலா இளைப்பாறுதலையும், உடலுக்கு ஓய்வையும், ஆன்மாவுக்கு ஆனந்தத்தையும் அளிக்கிறது. அது அவனுக்கு புத்துணர்வூட்டி, தன்னுடைய வாலாயப் பணிக்கு இரட்டிப்பு சுறுசுறுப்புடனும், பலத்துடனும் திரும்ப வழிவகை செய்கிறது.

சுற்றுலாவின் தாக்கம் வலுவானது. அது நடுத்தர வருமானக் குடும்பங்களிடத்திலும் கணிசமான சலன வட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது. பயணம் செய்ய வேண்டும், பலவற்றைக் கூர்ந்து





ஆய்ந்து உணர வேண்டுமென்ற ஆர்வம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. சேமிக்கும் பழக்கத்தையும் ஊக்குவிக்கும் ஆக்கபூர்வமான காரணியாகச் சுற்றுலா இருக்கிறது.

**உலகளாவிய அளவில் சுற்றுலா**

எத்தனை நபர்கள் பயணிகளாகப் பயணிக்கிறார்கள், அவர்கள் உலக அளவில் பயணத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறார்கள் என்பதே சுற்றுலாவின் அடிப்படை அளவுகோலாக உள்ளது. இச்சிறப்பியல்புகளால் சுற்றுலா உலகளவிலான வளர்ச்சி விகிதத்தில் அதிவேகமாக வளர்ந்துவரும் தொழிலாக உள்ளது. சுற்றுலாவின் இச்சிறப்பே அமெரிக்கா போன்ற மிகப் பெரிய நாடுகளில் ஒட்டுமொத்த மக்களும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சுற்றுலா மேற்கொள்ள தூண்டுதலாக உள்ளது. உலகச் சுற்றுலா நிறுவன ஆய்வின்படி, உலக நாடுகள் அளவில் 82 விழுக்காடு உலகச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை 16 நாடுகள் தம்வசம் பெற்றுள்ளன. இந்த ஒட்டுமொத்த சுற்றுலா இனம், உள்ளூர் மற்றும் மண்டல அளவிலும் பரிணமிக்கிறது. வளர்ந்து வரும் நாடுகள் சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகளில் உயரிய வளர்ச்சி விகிதத்தைக் கொண்டுள்ளன. இனிவரும் காலங்களில் உலகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நாடுகள், உலகச் சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் நாடுகளாகத் திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகச் சுற்றுலா வளர்ச்சியில், வளமான மற்றும் நிதான வளர்ச்சியில் சுற்றுலாவுக்குச் சிறப்பான எதிர்காலம் உள்ளது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

கீழ்க்காணும் இனங்கள் இவ்வளர்ச்சிக்குக் காரணிகளாக அமைகின்றன:

அ) தேசிய அளவில் எதிர்பார்க்கும் வளர்ச்சி

ஆ) எதிர்பார்க்கும் அளவில் தனிமனித வருமானம் அதிகரிப்பு

இ) தனிமனித நுகர்தல் மற்றும் செலவழிக்கும் நிலை உயர்வு

ஈ) அதிக அளவில் மனமகிழ் நடவடிக்கைகளில் நாட்டம்

**இந்திய அளவில் சுற்றுலா**

சமூக, பொருளாதார, கலாச்சார, சுற்றுச்சூழல் இனங்களில் சுற்றுலா தொடர்ந்து பெரும் பங்கு வகிக்கின்றது. வானூர்தி நிர்வாகம், விருந்தோம்பல் பணி, வளர்ச்சி மேலாண்மை, கட்டுமானப்

பொறியாளர்கள், நகரமைப்பு திட்ட வல்லுநர்கள், தோட்டக்கலை நிபுணர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் ஆடை உற்பத்தித் தொழிலாளர்கள் போன்ற பிரிவுகளில் வேலைவாய்ப்பை இந்தியாவில் சுற்றுலா உருவாக்கியுள்ளது. சுற்றுலா, தானே தனியாக பெரிய அளவில் வளர்ச்சி பெற்று, சமூக, பொருளாதார மற்றும் மனித வளங்களின் வளர்ச்சிக்கு, எதிர்காலங்களில் வளர்ந்து வரும் இனமாக உருவாகி உள்ளது. சுற்றுலாவின் ஓர் அங்கமான விருந்தோம்பல்மூலம் பெறும் பொருளாதார வளர்ச்சி, அப்பகுதியில் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துகிறது. போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்டுள்ள வளமான வளர்ச்சியினால் இந்தியாவில் இலட்சக்கணக்கான மக்கள் நாள்தோறும் பயணித்து வருகின்றனர். நாகரீக உடைகள், இல்லங்கள், முதலீடுகள் போன்ற பயன்பாட்டின்போது இளைஞர்களின் மத்தியில் சுற்றுலா ஒரு மாற்று நுகரினமாக உள்ளது. இந்தியாவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய அளவு சுற்றுலா வளர்ச்சியினால் சுற்றுலாத் தொழிலில், விருந்தோம்பல் (தங்கும் விடுதிகள்) பகுதி அபரிதமான பலனை அடைந்துள்ளது. இந்தியாவில், சுற்றுலாச் சேவையில் இணைந்திருக்கும் பணியாளர்களும், அதன்மூலம் ஈட்டப்பெறும் பொருளாதார வளர்ச்சியை மட்டுமல்லாது, மக்களின் பல்லின பண்பாட்டு சிறப்பியல்புகளையும் உலகுக்கு உணர்த்துகிறது. இத்தகைய பண்புகளினால், வாழ்க்கையில் ஏற்படும் சுணக்கங்களிலிருந்து விடுபடும் சூழலை வரலாற்று ரீதியாக மனித சமுதாயம் பெற்றுள்ளது.

## இந்தியாவிற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை

2007 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வியக்கத்தக்க 5 மில்லியன் என்ற எண்ணிக்கையைத் தொட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில் வருகை தந்தோர் 4.45 மில்லியன் என்றிருந்த எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டில் 12 விழுக்காடு அளவு அதிகரித்துள்ளது. இக்காலக் கட்டத்தில் சுற்றுலா மூலம் இந்தியா பெற்ற அன்னியச் செலாவணி வருவாய் 11.96 பில்லியன் டாலர். இவ்வருவாய் கடந்த ஆண்டு பெற்ற வருவாயான 8.92 பில்லியன் டாலரைவிட, 33.8 விழுக்காடு அதிகமாகும். இந்தியா, "ஆசியாவின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களுக்கான" 2007 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பெற்றுள்ளது.

மத்திய மற்றும் மேற்காசிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே இந்தியச் சுற்றுலாவின் தற்போதைய இலக்கீடாகும். மைய அரசு சுற்றுலா அமைச்சகம், வெளிநாடுகளில் நடைபெறும் அகில உலகச் சுற்றுலாச் சந்தைகளில் இந்தியச்





சுற்றுலாவை மேம்படுத்திடும் வகையில் இந்தியச் சுற்றுலா வளங்களை, பொருட்காட்சிகள் மற்றும் கலாச்சார விழாக்கள்மூலம் பிரபலப்படுத்தி வ்ருகிறது. கடந்த ஓராண்டு காலமாக "அதிசயக்கத்தக்க இந்தியா" (Incredible India) என்ற மேம்பாட்டுச் சொற்றொடரை வலியுறுத்தி வெளிநாட்டுச் சுற்றுலா சந்தைகளில் விழாக்கள், சுற்றுலா மாநாடு, பொருட்காட்சிகள்மூலம் நடத்தி வந்தமையால், இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஜெர்மன் நாட்டின் பெர்லின் நகரில் மைய அரசின் சுற்றுலாத் துறை "இந்தியக் கலாச்சாரத்தை அறிந்து கொள்ளுங்கள்" என்ற நிறுவனத்துடன் இணைந்து நடத்திய நிகழ்ச்சிமூலமாகவும், லண்டனில் நடைபெற்ற "இந்தியா தற்போது" நிகழ்ச்சிமூலமாகவும், நியூயார்க் நகரில் நடைபெற்ற "அறுபதுகளில் இந்தியா" என்ற கண்காட்சியும், இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்ற ஆசியச் சுற்றுலா பயண முகவர்கள் கூட்டமைப்புச் சந்தையிலும் மற்றும் சீன நாட்டில் குன்மிங் நகரில் நடைபெற்ற சுற்றுலாப் பயணச் சந்தையிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

## தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழகத்தில் எண்ணிலடங்கா சுற்றுலா வளங்கள் உள்ளன. சுற்றுலா உலகின் பார்வைக்கு இவற்றை வெளிக்கொணர்ந்தாலே, இந்தியாவில், சுற்றுலாவில் முதல் மாநிலம் தமிழகம்தான் என்ற நிலை தானாகவே நிலை கொள்ளும். தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பின்வருமாறு மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது:

அ) தமிழகத்திற்குள் பயணம் செய்யும் உள்ளூர்ப் பயணிகள்;

ஆ) பிற மாநிலங்களிலிருந்து வருகை தரும் தேசிய பயணிகள்;

இ) பிற நாடுகளில் இருந்து வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகள்;

## சுற்றுலாவை இரு பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம்.

அ) முதலாவதாக சுற்றுலா செல்வதற்காக மனமகிழ்ச்சியுடன் பயணத் திட்டம் மேற்கொள்ளுதல்;

ஆ) இரண்டாவதாக, பிற பல்வகை தேவைகளுக்காகப் பயணம் மேற்கொண்டு, இடைப்பட்ட வேளைகளை / நாட்களை சுற்றுலாப் பயணமாகப் பயன்படுத்திக் கொள்வது.

[2008 மே 8

தமிழகச் சுற்றுலா நடவடிக்கைகள், ஆன்மீகப் பயணம், வியாபாரம், மருத்துவச் சிகிச்சை பெறுதல் போன்ற தேவைகளுடன் இணைந்த வகையில் ஒவ்வொரு சுற்றுலாப் பயணமும் அமையப் பெற்றுள்ளதாகும். தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாப் பயணங்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

அ) சுற்றுச்சூழல் சுற்றுலா

ஆ) ஊரகச் சுற்றுலா

இ) மருத்துவச் சுற்றுலா

ஈ) பண்பாட்டுச் சுற்றுலா

உ) பாரம்பரியச் சுற்றுலா

எ) ஆன்மீகச் சுற்றுலா

ஏ) வியாபாரச் சுற்றுலா

ஒட்டுமொத்தமாக, அனைத்து வகைப்பாடுகளும் "உவகை கொள்ளும் தமிழகம்" என்ற தாரக மந்திரத்திற்குள் அடக்கம் என்று சொல்லலாம்.

**சுற்றுலா இனங்களின் காரணிகள்**

**பார்வையாளர்கள் (Visitors):**

"தனது தேவைகளுக்காக எந்தப் பிற காரணங்களின் அடிப்படையில், தான் வழக்கமாக வசிக்கும் தலத்திலிருந்து, பிற இடங்கள் அல்லது பிற நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள் தான் பார்வையாளர்கள்" என்று உலகச் சுற்றுலா முகவர்கள் கூட்டமைப்பு (International Union of Official Travel Organization) கூறுகிறது.

சுற்றுலாப் பயணிகள் (Tourists): ஒரு நாளில் 24 மணி நேரத்திற்கு மேலாக தான் வசிக்கும் இடம் அல்லாது பிற இடங்களில் தங்கி நுகர்வோர் சுற்றுலாப் பயணிகள் என்றழைக்கப்படுகிறார்கள்.

**சிற்றுலாப் பயணிகள் (Excursionists):**

மனமகிழ்ச்சி அல்லது பிற காரணங்களுக்காக தான் வசிக்கும் தலமல்லாத பிற இடங்களுக்கு 24 மணி நேரத்திற்குள் சென்று திரும்பிவரும் பயணிகள் சிற்றுலாப் பயணிகள் என்றழைக்கப்படுகின்றனர்.



2008 மே 8]

**பயணிகள் (Travellers):**

பல்வேறு நோக்கங்களைக் கொண்டு ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று திரும்புபவர்கள் பயணிகள் (Travellers) என்றழைக்கப்படுகிறார்கள்.

**உள்ளூர்ப் பயணியர்கள் (Domestic Travellers):**

தான் வசிக்கும் நாட்டிற்குள் பல காரணங்களின் அடிப்படையில் பயணிப்பவர்கள், உள்ளூர்ப் பயணியர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

**உலகப் பயணியர்கள் (International Travellers):**

தான் வசிக்கும் நாடுகளல்லாது, பிற நாடுகளில் பயணம் செய்பவர்கள் உலகப் பயணியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

**சுற்றுலா மகிழ்விடங்கள் (Tourist Attractions):**

சுற்றுலா மகிழ்விடங்களைப் பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தலாம்:

1. முதன்மை மகிழ்விடம்

2. மகிழ்விடத்தை மையப்படுத்தி இணைந்த சுற்றுலாப் பயன்பாட்டு நடவடிக்கைகள்:

**சுற்றுலா முதன்மை மகிழ்விடங்கள்**

சுற்றுலா முதன்மை மகிழ்விட இனங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

**அ) இயற்கை மகிழ்விடங்கள்:**

ஏரி, மலைத்தொடர், வனங்கள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் முதலியன

**ஆ) மனிதரால் உருவாக்கப்பட்ட மகிழ்விடங்கள்:**

பொழுதுபோக்குப் பூங்கா, நீர்விளையாட்டு பூங்காக்கள் மற்றும் அழகுபடுத்தப்பட்ட தாவரவியல் பூங்காக்கள் முதலியன

**இ) வரலாற்று மகிழ்விடங்கள்:**

கோட்டைகள், மாளிகைகள், பழமையான மாளிகைகள், மற்றும் புராதனச் சின்னங்கள் முதலியன

**ஈ) பாரம்பரிய பண்பாட்டு மகிழ்விடங்கள்:**

கைவினைத் தொழில், விழாக்கள், கிராமிய நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்கள் போன்றவை

## இணைந்த மகிழ்விடங்கள் (Supporting Attractions)

முதன்மை சுற்றுலா மகிழ்விடத்தை மையப்படுத்தி, அதனுடன் இணைந்த சுற்றுப்புற இதர சுற்றுலா மகிழ்விடங்கள் மற்றும் அதனால் விளையும் சுற்றுலா நடவடிக்கைகள் இணைந்த மகிழ்விடங்கள் என வரையறுக்கப்படுகிறது. உதாரணமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மாமல்லபுரம் முதன்மை மகிழ்விடமாகவும், மாமல்லபுரம் வழியிலுள்ள கேளிக்கை வளாகங்கள் இணைந்த மகிழ்விடங்களாகவும் விளங்குகின்றன.

## தமிழகத்தின் சுற்றுலா மகிழ்விடங்கள்

தமிழகத்தில் உள்ள சுற்றுலா மகிழ்விடங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

- விடுமுறைக் கால மகிழ்விடங்கள் - விடுமுறைக் காலங்களில் மனமகிழ் நோக்குடன் மலைவாசஸ்தலங்களுக்குச் செல்லுதல், பிற தலங்களுக்குச் செல்லுதல், கடல், ஆகாயம் மற்றும் இரயில் மார்க்கமாக பயணம் மேற்கொள்ளல் போன்றவை.
- விளையாட்டுகள் - மீன்பிடித்தல், வேட்டையாடுதல், நீர் விளையாட்டு, பரந்த புல்வெளியில் மட்டைப்பந்து அடித்தல், மிருகக் காட்சி சாலைக்கு செல்லல் போன்றவை.
- வரலாற்று இடங்கள்-அகழ்வாய்வு மையங்கள், கட்டட அழகு மையங்கள், பாரம்பரியத் தலங்கள், கோட்டைகள் மற்றும் மாளிகைகள் முதலியன.
- பண்பாட்டு மகிழ்விடங்கள் - இயல், இசை, நாடகம், படக்காட்சிகள், வண்ணப்படங்கள் மற்றும் கண்காட்சிகள் முதலியன.
- கல்விப் பயிலகங்கள், அருங்காட்சியகங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி மையங்கள் போன்றவை.
- தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், வியாபாரச் சந்தைக் கூடங்கள் முதலியன.



- பொழுதுபோக்குப் பூங்காக்கள், பயனீட்டுப் பொருட்கள் வாங்கும் மையங்கள், நவீன மற்றும் பாரம்பரிய உணவு வகைக் கூடங்கள்.

## தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை

உலக நாடுகள், தேசிய மற்றும் உள்நாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில் நவீன விளம்பரச் சாதனங்கள் மற்றும் சுற்றுலா வெளியீடுகள் மூலம் சுற்றுலாவை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அதிவேகத்தில் மேற்கொண்டமையாலும், சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகள், சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் பல மேற்கொண்ட நடவடிக்கைகளாலும் தமிழகத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட பட்டியல்மூலம் அறியலாம்:—

| ஆண்டு | உள்நாட்டினர் (இலட்சத்தில்) | வெளிநாட்டினர் | மொத்தம் |
|---|---|---|---|
| 2002 | 246.61 | 8.05 | 254.66 |
| 2003 | 270.59 | 9.02 | 279.61 |
| 2004 | 300.77 | 10.58 | 311.35 |
| 2005 | 323.39 | 11.79 | 335.18 |
| 2006 | 392.14 | 13.35 | 405.49 |
| 2007 | 506.47 | 17.53 | 524.00 |

தமிழகத்தில் சராசரியாக 4 முதல் 5 நாட்கள் உள் நாட்டுப் பயணியும், 7 நாட்கள் வரை வெளிநாட்டுப் பயணியும் தங்குகிறார்கள். ஒரு வெளிநாட்டுப் பயணி நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.2,252/- செலவழிக்கிறார். உள்நாட்டுப் பயணி நாள் ஒன்றுக்கு ரூ.711/- செலவழிக்கிறார். பகல் பார்வையாளர் (Day Visitor) நாள் ஒன்றுக்குச் சராசரியாக ரூ.449/- செலவழிக்கிறார். வெளிநாட்டுப் பயணிகளில் 23 விழுக்காடு, நட்சத்திரத் தகுதி பெற்ற தங்கும் விடுதிகளிலும், 44 விழுக்காடு நடுத்தர தங்கும் விடுதிகளிலும், 13 விழுக்காடு விருந்தினர் விடுதிகளிலும் ஓய்வில்லங்களிலும் தங்குவதாக புள்ளிவிவரம் கூறுகிறது. இந்த வகைப்பாடுகளை உள்நாட்டுப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் முறையே 10 விழுக்காடு, 49 விழுக்காடு மற்றும் 19 விழுக்காடு என்பதாக உள்ளது.

[2008 மே 8

## தமிழ்நாடு சுற்றுலா வகைகள்

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா மகிழ்விடங்களை, சாதி, இனம், மதம், வயது ஆகிய வேறுபாடுகளைக் கடந்து தமிழ்நாட்டிலிருந்தோ, பிற மாநிலங்களிலிருந்தோ அல்லது பிற நாடுகளிலிருந்தோ பார்வையிடுவோர் பயணிகள் என்றழைக்கப்படுகின்றனர். கடந்த முப்பது வருடங்களாக பல்வேறு இனப் பயணிகளை எதிர்கொண்டு சிறந்த அனுபவங்களைப் பெற்றுள்ளது சுற்றுலாத் துறை. இதை ஆராய்ந்து வகைப்படுத்துகையில், ஒவ்வொரு பயணியும், ஒரு விருப்பத்தை தன்னகத்தே கொண்டுள்ளார் என்பது அறியப்படுகிறது. எந்த வகையான பயணியையும் மகிழ்வூட்டும் வகையில், தமிழகம் அனைத்துச் சுற்றுலா வளங்களையும் கொண்டுள்ளது. பயணிகளின் பல்வகை விருப்பமார்ந்த சுற்றுலாப் பயணங்களைக் கீழ்க்காணும் இனங்களாக வகைப்படுத்தலாம்:

### 1. பொழுதுபோக்கு சுற்றுலா

சில பயணிகள் பொழுதுபோக்கும் நோக்கில் வழக்கமாக மலைவாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சிகள், விலங்கியல் பூங்காக்கள் மற்றும் கடற்கரைத் தலங்களுக்குப் பயணிப்பது போன்ற நடவடிக்கைகள்.

### 2. ஆன்மீகச் சுற்றுலா

தாங்கள் விரும்பும் வழிபாட்டுத் தலங்களுக்கு விரும்பிச் செல்லும் பயணம். இடையில் நாட்கள் / பொழுதுகள் கிடைப்பின் இதனுடன் இணைந்த சுற்றுலா மகிழ்விடங்களுக்கும் பயணம் மேற்கொள்வார்கள்.

### 3. பாரம்பரியச் சுற்றுலா

பிற நோக்கங்கள் இல்லாது பாரம்பரியச் செல்வங்களை மட்டும் பார்வையிடுவது என்பதை நோக்கமாகக் கொண்ட பயணம். பாரம்பரியத் தலங்கள் தமிழ்நாட்டில் பின்வருமாறு :-

(அ) யுனெஸ்கோ அமைப்பால் அறிவிக்கப்பட்ட 5 உலகப் பாரம்பரியச் சின்னங்கள்

(ஆ) தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 18 பாரம்பரிய நகரங்கள்.

(இ) மைய மற்றும் மாநில தொல்பொருள் துறையால் அறிவிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள எண்ணிலடங்கா பாரம்பரியச் சின்னங்கள்.



2008 மே 8]

### 4. சாகசச் சுற்றுலா

இளைஞர்கள் சுற்றுலா மகிழ்விடங்களில் மேற்கொள்ளும் வான் விளையாட்டுப் பயணம், நீர் விளையாட்டுப் பயணம், மலை நடைப்பயணம் மற்றும் மலையேறும் பயணம் போன்றவை.

### 5. கப்பல் சுற்றுலா

இரயில் மற்றும் சாலை மார்க்கத்தில் செல்லும் பயணங்களை விட சில பயணிகள் வான் மற்றும் கடல் பயணங்களை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதுபோன்ற பயணங்களை மேற்கொண்டு, தான் காண விரும்பும் தலத்திற்குச் செல்ல ஆகும் பயணச் செலவு பற்றி கணக்கிடாமல் செல்ல ஆயத்தமாக உள்ளனர்.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கப்பல் (Cruise) மூலம் வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகள், துறைமுகத்திற்கு அருகில் உள்ள மாமல்லபுரம் மற்றும் மதுரைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

### 6. ஊரகச் சுற்றுலா

அதிவேகமாக வளர்ந்துவரும் தொழில் நகரங்கள் உருவாக்கத்தால், மக்கள் குறிப்பாக இளைஞர்கள் வாழ்விற்காக உந்தப்பட்டு கிராமங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்கு குடிபுகும் சூழல் அதிகரித்துள்ளது. இதனால் நகரில் வளரும் இளைஞர்களுக்குக் கிராமியப் பண்பாடு மற்றும் அன்றாட நடைமுறைகள் தெரியாமலே போகிறது. எனவே, தங்களது கிராமிய வளத்தை, நடைமுறைகளை இளைஞர்களுக்குப் புகட்டிடும் நிலைக்கு, அவர்களது பெற்றோர்கள் ஆளாகியுள்ளனர்.

### 7. சமூகப் பொறுப்புணர்வுச் சுற்றுலா

சுற்றுலா வளர்ச்சி என்பது, அத்தலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கொண்டதாக இருக்க வேண்டும். சுற்றுலாவை மேம்படுத்தும் போது அந்தச் செல்லிடத்தின் தகுதி, அடிப்படை வசதிகள், கழிவு மேலாண்மை (Waste Management), சமூகப் பொருளாதார நிகழ்வுகள், சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும்.

### 8. வணிகச் சுற்றுலா

வணிகத்தில் சிறந்த நிர்வாகிகள், தம் வணிக மேம்பாட்டிற்காக பயணங்கள் மேற்கொள்வர். இவ்வகை வணிகர்களுக்கு நேரம்

[2008 மே 8

கிடைப்பது அரிது. அத்தகைய இடைநோம் / நாள் கிடைக்கும் பட்சத்தில், அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அருகில் உள்ள சுற்றுலா மகிழ்விடங்களுக்குச் செல்ல தயங்கமாட்டார்கள். இவ்வகைச் சுற்றுலா, வணிகச் சுற்றுலா என்றழைக்கப்படுகிறது.

**9. மருத்துவச் சுற்றுலா**

தமிழக அரசும், அரசு சாரா நிறுவனங்களும், மனித சமுதாயம் தனது உடல் நலம் பேணும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதனால் நவீன மருத்துவ வசதிகளை தகுதிக்குட்பட்ட செலவில் பராமரிக்கும் வகையில் தமிழகம் சிறந்த இடத்தில் உள்ளது. இதனால் மருத்துவ சிகிச்சைக்காக வரும் பயணிகளின் எண்ணிக்கை தமிழகத்திற்கு அதிகரித்துள்ளது. மருத்துவம் முடிந்த பின்னர் இவ்வகைப் பயணிகள் அருகிலுள்ள சுற்றுலா மகிழ்விடங்களைக் கண்டுகளித்து மருத்துவப் பயனோடு மனமகிழ்வும் பெறுகின்றனர்.

**10. சுற்றுச்சூழல் சுற்றுலா**

இயற்கை வனப்பழகை மட்டும் கண்டுகளிக்கும் பயணிகள் உள்ளனர். இத்தகைய பயணிகள் மாசற்ற இயற்கை வாசஸ்தலங்கள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள், வனவிலங்கு நடமாட்டங்கள், பல்வகைப் பறவைகள் நடமாட்டங்களை அறிதல் போன்றவற்றிற்காகப் பயணம் மேற்கொள்கின்றனர்.

**11. பண்பாட்டுச் சுற்றுலா**

விடுமுறை மற்றும் விழாக் காலங்களிலும் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று, தாங்கள் விரும்பும் நபர்கள், நண்பர்கள், உறவினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்வர். இவ்வகை உவகை தரும் சுற்றுலாக்கள், பண்பாட்டுச் சுற்றுலா எனப்படும்.

**12. கல்விச் சுற்றுலா**

மாணவர்கள் உயர் கல்வி / கூடுதல் அனுபவக் கல்வி போன்றவற்றைப் பெற வெளிநாடு / உள்நாட்டுப் பயணங்களை மேற்கொள்வர். அவ்வாறு மேற்கொள்ளும் பயணங்களில் சுற்றுலாப் பயணமும் இணைகிறது. கல்வியுடன் சுற்றுலாவும் இணைந்த பயணம் கல்விச் சுற்றுலா.



2008 மே 8]

**13. விளையாட்டுச் சுற்றுலா**

ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை இன்றைய காலத்திய தொலைக்காட்சி / இணையதளம்மூலம் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஆர்வமாகக் கண்டு களிக்கின்றனர். இவற்றில் ஒரு பகுதியினர் தனக்கு விருப்பமான விளையாட்டு நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்திற்குப் பயணம் மேற்கொள்கின்றனர். இத்தகைய விளையாட்டு நிகழ்வுகளுடன் சுற்றுலா இணையும் பயணம் விளையாட்டுச் சுற்றுலா என்றழைக்கப்படுகிறது.

**14. இணைந்த சுற்றுலா அமைவுகள்**

விழாக்களில் கலந்து கொள்ளவும், சமூக நல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், பல மாணவர்கள் ஒருங்கிணைந்து குறும் பயணம் மேற்கொள்ளுதல் போன்ற பயணங்களில் சுற்றுலா மகிழ்விடங்களைப் பார்க்கும் பயணமும் இடம் பெறுகிறது. ஆக பல்வேறு காரணங்களுக்காகப் பயணம் மேற்கொள்ளும்போது, அப்பகுதிகளிலுள்ள சுற்றுலா மகிழ்விடங்கள் செல்லும் பயணமும் இடம் பெறுகிறது. இத்தகைய சுற்றுலாக்கள் இணைந்த சுற்றுலா அமைவுகளாகக் கருதப்படுகின்றன.

**சுற்றுலா ஆணையரகம்**

சுற்றுலாப் பயணிகள் தமிழகத்தை அடைந்த நாள் முதல், தன்னுடைய மகிழார்ந்த பயணங்களை முடித்து, தமிழகத்தை விட்டுப் புறப்படும் வரையில் அரசு மற்றும் அரசு சாரா தனியார் நிறுவனங்களின் உதவியை, தன்னுடைய பயணங்களின் தேவைக்கு நாடுவது இயல்பான ஒன்று. இத்தகைய உதவி, மேம்பாட்டுப் பணிகளைச் செவ்வனே செய்வதற்கும் பயணித்தவர் பயணிக்கும் நாட்களில் பாதுகாப்பு, நிறைவான பயணம், தங்குமிடத்தில் உரிய வசதிகள் போன்றவற்றைச் செய்வதற்கும் அரசுக்குக் கடமை உள்ளது. பயணிகளின் தேவையறிந்து உதவும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா மிகச் சிறந்த பணியமைப்பைக் கொண்டுள்ளது. சுற்றுலா ஆணையரகம் என்ற துறைத் தலைமை அமைப்பு, சுற்றுலா ஆணையரைத் தலைமை அலுவலராகக் கொண்டு, ஓர் இணை இயக்குனர், இரண்டு துணை இயக்குனர்கள், மூன்று உதவி இயக்குனர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் 200-க்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் பல்வேறு தலங்களில் பணிக்களமாக 20 சுற்றுலா அலுவலர்களைக் கொண்டும்

(14 அலுவலகங்கள் தமிழகத்திலும், 6 அலுவலகங்கள் பிற மாநிலங்களிலும் உள்ளவை) 27 சுற்றுலாத் தகவல் மையங்களைக் கொண்டும் (19 தமிழகத்திலும், 8 பிற மாநிலங்களிலும்) சிறப்பாகச் சுற்றுலா சேவை மற்றும் வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகிறது.

**நிதி ஒதுக்கீடு**

சுற்றுலா வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது போதுமான நிதி ஒதுக்கீடு என்பதை உணர்ந்த தமிழக அரசு, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து வருகிறது என்பதனைக் கீழ்க்கண்ட அட்டவணைமூலம் அறியலாம்:

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | ஆண்டுச் செலவினம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2004-2005 | 30.35 | 31.29 |
| 2005-2006 | 32.42 | 37.04 |
| 2006-2007 | 46.04 | 63.57 |
| 2007-2008 | 45.45 | 51.53 |

**வேலைவாய்ப்புகள்**

சுற்றுலா, பின்வரும் தொழிற்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குகிறது:

**(1) வான்வழிப் பயணம்**

வான்வழி, தரைவழி, உள்விமானச் சேவைகள், அலுவலக மேலாண்மை போன்றவை.

**(2) தரைவழிப் போக்குவரத்து**

பேருந்து, சீருந்து, வாடகை ஊர்தி, இரயில் போன்றவை.

**(3) நீர்வழிப் போக்குவரத்து**

கப்பல் மற்றும் சுற்றுலா பயணக் கப்பல்கள்.





**(4) பயண அமைப்பாளர்கள்**

**(5) பயண முகவர்கள்**

**(6) உணவு மற்றும் குளிர்பான வகைகள்**

**(7) தங்கும் விடுதிகள் மற்றும் சாலையோர வசதிகள்**

**(8) கேளிக்கை பூங்காக்கள், கேளிக்கை விடுதிகள், பத்திரிகை பொழுதுபோக்கு அம்ச பூங்காக்கள் முதலியன**

**(9) அரசு நிறுவனங்கள் – சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலா வளர்ச்சிக் கழக அமைப்புகள்**

சுற்றுலாமூலம் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலா எடுத்து வருகிறது.

மைய அரசு சுற்றுலாத் துறை கணக்காய்வின்படி ஒவ்வொரு ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் 47.5 விழுக்காடு வேலைவாய்ப்பு உருவாகிறது. இதே முதலீட்டைச் சுற்றுலா அல்லாத பிறவகை இனங்களில் முதலீடு செய்தால் 12.6 விழுக்காடாகத்தான் வேலைவாய்ப்பு உருவாகும் என்பது கணக்கீடு. உலகச் சுற்றுலா குழு, சுற்றுலா செயற்கைக்கோள் கணக்கீடு (Tourism Satellite Account) அடிப்படையில், சுற்றுலாமூலம் புதிய வேலைவாய்ப்புகள், வரும் 10 ஆண்டுகளில் 2.4 விழுக்காடில் இருந்து 6.8 விழுக்காடாக உயரும் என்றும், இதனால் 80 இலட்சம் வேலைவாய்ப்புகள் புதிதாக உருவாகும் என்றும் தெரிவிக்கிறது. இது போலவே, தங்கும் விடுதி சுற்றுலா இனத்தில், முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூ.10 இலட்சத்திற்கும் 12 நேரடி வேலைவாய்ப்பும், ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட தங்கும் விடுதிகளில் உள்ள ஐந்து அறைகள் மூலம் எட்டு நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**2007–2008-ம் ஆண்டில் சுற்றுலாத் துறையின் சாதனைகள்**

**முதலீட்டுக்கு ஊக்குவிப்பு**

பிரபலமாகாத தலங்களில், உதாரணமாக ஏலகிரி, திருக்கடையூர், வேதாரண்யம், தரங்கம்பாடி, திருமணஞ்சேரி, சித்தன்னவாசல், புளியஞ்சோலை, தாரமங்கலம், கொல்லிமலை, ஒகேனக்கல், பவானி

கூடுதுறை, வால்பாறை, மேகமலை, சிறுமலை, திருப்புடைமருதூர், திற்பரப்பு போன்ற தலங்களில் நட்சத்திர தகுதிகொண்ட தங்கும் விடுதிகள், சுற்றுலா தொடர்பான வசதிகள் கொண்ட பொழுதுபோக்குப் பூங்காக்கள், கம்பி வழிப்பயணம். (Rope Car) படகு குழாம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட ஊக்கத்தொகைகள் கீழ்க்கண்டவாறு அளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது :

**தங்கும் விடுதிகளுக்கு ஒருமுறை ஊக்கத்தொகை**

| வ.எண் | நிலை/அந்தஸ்து | ஊக்கத்தொகை |
|---|---|---|
| அ | ஒரு நட்சத்திரம் | 10 விழுக்காடு மொத்த திட்ட மதிப்பீடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சமாக ரூ.25.00 இலட்சம் |
| ஆ | இரண்டு நட்சத்திரம் | 10 விழுக்காடு மொத்த திட்ட மதிப்பீடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சம் ரூ.50.00 இலட்சம் |
| இ | மூன்று மற்றும் அதற்குமேல் நட்சத்திர நிலை | 10 விழுக்காடு மொத்த திட்ட மதிப்பீடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம் |

**மிதமான கடன்வசதி**

சுற்றுலா மேம்பாட்டு வசதிகளை ஏற்படுத்துகையில் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி பளுவை இலகுவாக்க முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டு வருமானத்தில் 0.1 விழுக்காடு மிதமான கடன் வசதி அளிக்கப்படும்.

**பாரம்பரியக் கட்டடங்களை பாரம்பரியத் தங்கும் விடுதிகளாக மாற்றுதல்**

தமிழகத்திற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை மேற்கொண்டு வருகிறது. பாரம்பரியக் கட்டடங்களை, பாரம்பரியத் தங்கும் விடுதிகளாக மாற்றும் மேம்பாட்டுப் பணிகளில்



ஈடுபடுவோருக்கு, கட்டுமானப் பணிகளுக்காக முதலீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

**சுற்றுலா தோழமை முகாம்**

**(விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்)**

தமிழகத்தில் தமிழர்கள், விருந்தோம்பலையும் விருந்தினர்களை உபசரிப்பதையும் தொழிலாகக் கருதமாட்டார்கள். அத்தகைய நடவடிக்கைகள் தமிழர்களின் வாழ்வின் ஓர் அங்கமாகும் என்பதே சிறப்பு. தெய்வப்புலவர் அய்யன் திருவள்ளுவர் திருக்குறளில் "விருந்தோம்பல்" அதிகாரத்தில் விருந்தினரை உபசரிக்கும் மாண்பினை திறம்பட வரையறுத்துள்ளார். சுற்றுலாப் பயணிகளை அவர்கள் மனம் மகிழும்படி கையாளுவதன்மூலம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இக்கருத்தினை மையமாக வைத்து **"விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்"** என்ற தாரக விருந்தோம்பல் சொற்றொடரை நிகழ்வுபடுத்தி, சுற்றுலா சேவைப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்ட பணியாளர்களுக்கு சுற்றுலா தோழமை உணர்வு முகாம்களை தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்தி வருகிறது.

இதுபோன்று, சுற்றுலா மையங்களில் பணிபுரியும் போக்குவரத்து காவல் பணியாளர்களிடையே, பயணிகளுக்கு மென்மேலும் உதவிடும் சுற்றுலாத் தோழமை உணர்வு முகாம்களும் நடத்தப்பெற்றன. இதன் அங்கமாக, பயணிகளுக்கு நற்சேவை புரியும் பாங்கில், போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் காவலர்கள், அலுவலர்கள் மற்றும் பணியார்களிடையே **"விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்"** என்ற விழிப்புணர்வு உறுதிமொழியேற்புடன், முகாம்கள் நடத்தப்பெற்றன. இத்தகைய முகாம்கள்மூலம் சுற்றுலாப் பயணிகளை இன்முகத்துடன் வரவேற்பதுடன் பயணிகளுக்குத் தரகர்களால் ஏற்படும் தொல்லைகளில் இருந்தும், உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஏதுவாக அமைந்தன.

வான்வெளிப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு செம்மையுறச் சேவைபுரியும் நோக்கில், விமான நிலையப் பணியாளர்களிடையே சுற்றுலா தோழமையுணர்வு முகாம் சென்னை விமான நிலையத்தில், சுற்றுலாத் துறையால் நடத்தப்பெற்றது. இது போன்ற சுற்றுலா தோழமையுணர்வு முகாம்கள் சேலம், ஈரோடு, தருமபுரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம்

[2008 மே 8

மாவட்டங்களில் நடத்தப்பெற்றன. இத்தகைய முகாம்கள் பிற சுற்றுலாத் தலங்களிலும் தொடர்ந்து நடத்தப் பெற உள்ளன.

**சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி**

சுற்றுலா மகிழ்விடங்களை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் வகையிலும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடும் நோக்கிலும் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வழங்கிடும் வகையில் தமிழகத்தில் 400 பட்டதாரி இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முதற்கட்டமாக 180 வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் 220 வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**மருத்துவச் சுற்றுலா**

தமிழக மக்களுக்கும், பிற மாநிலத்தவர்களுக்கும், பிற நாட்டினர்களுக்கும் மருத்துவச் சேவை புரிவதில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. அதி நவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்ட உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனைகளும், சிறந்த மருத்துவ வல்லுநர்களும், சேவைகளுக்கு சிறப்புபெற்ற தமிழக அரசு மருத்துவமனைகளும் தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து வந்து மருத்துவ நலம் பேணி திரும்பச் செல்லும் பாங்குடன் அமைந்துள்ளது. தமிழகத்திற்கு உடல்நலம் நாடி வந்து, நலமுடன் திரும்பிச் செல்லும் பயனாளிகள் அருகில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று பார்க்கும் வகையில் வசதிகள் செய்வது அவசியமாகிறது. இதனால், நலம் நாடி வரும் பயனாளிகள் மனமகிழ்வுடன் சுற்றுலாப் பகுதிகளுக்கும் சென்று புத்துணர்வு பெறுவர்.

சுற்றுலாத் துறையின் சீரிய முயற்சிகள்மூலம் தனியார் மருத்துவ அமைப்புகள் மற்றும் அரசு மருத்துவ வசதிகள் உள்ளடக்கிய மருத்துவச் சுற்றுலா சேவை, மருத்துவம் பேணவரும் பயனாளிகளுடன் அவர்களுடன் வருவோருக்கும் பயனாக அமையும் வகையில் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருத்துவச் சுற்றுலாமூலம் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அவர்கள் புத்துணர்ச்சி பெறுகின்றனர். இத்தகைய முன்னேற்ற நடவடிக்கைகளால் கணிசமான அளவில் மருத்துவச் சுற்றுலா வளர்ச்சி பெற்றுள்ளது என்பதோடு மருத்துவ நலம் பேண வரும் பயனாளிகள் மனநிறைவுடன் செல்கின்றனர் என்பதே சிறப்பாகும்.



2008 மே 8]

உலகத்தரம் வாய்ந்த மருத்துவச் சேவைகள் நியாயமான தகுதிக்குட்பட்ட செலவினங்களுக்குள் தமிழகத்தில் கிடைக்கின்றன என்ற உயரிய சிறப்பால் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் மருத்துவ நலம் பேண தமிழகத்திற்கு வருகைபுரிகின்றனர் என்ற சிறப்பைத் தமிழகம் பெற்றுள்ளது. இத்தகைய சிறப்பைக் கருத்தில்கொண்டு, சேவைபுரியும் நோக்கில் மருத்துவச் சுற்றுலா தகவல் மையம் ஒன்று, சென்னை தமிழ்நாடு சுற்றுலாத் தலைமை அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

**"எங்கும் ஏறலாம்– இறங்கலாம்" (Hop-on, Hop-off Tours) சுற்றுலாப் பயணம்**

பயணிகளின் தேவையறிந்து சென்னையில் இருந்து மாமல்லபுரத்திற்கு சுற்றுலா மகிழ்வுடைய எந்த இடத்திலும் ஏறலாம் - இறங்கலாம் என்ற வசதிகளுடன் ஓர் சுற்றுலாப் பயணத் திட்டம் தமிழ்நாடு சுற்றுலாமூலம் 2008-2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்காக ரூ.72.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் இது போன்ற திட்டம் சென்னை மாநகரிலும் அறிமுகப்படுத்தப்படும்.

**அறுபடைவீடுகள் குறித்த குறும்படம்**

மலேசியா, சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா மற்றும் மொரீசியஸ் நாடுகளில் உள்ள தமிழ் வம்சாவழியினர், தமிழகத்திலுள்ள அறுபடைவீடுகள் மையங்களுக்கு புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். இதன் பொருட்டு அறுபடைவீடு தலங்களில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய ரூ.798.77 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, பிற நாடுகளில் வசிக்கும் தமிழ் வம்சாவழியினரை ஈர்க்க அறுபடைவீடுகள் பற்றி 20 நிமிடம் கொண்ட குறும்படம் ஒன்றை சுற்றுலாத் துறை தயாரித்துள்ளது.

**சுற்றுலா மேம்பாடு மற்றும் வர்த்தகம்**

தமிழ்நாடு அனைத்து பருவ காலங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மாநிலமாகத் திகழ்கிறது. எனவே, தமிழகத்தின் இந்த சிறப்புச் சுற்றுலாச் செல்வங்களை உலக அரங்கில் பரிணமிக்கச் செய்வது அவசியமான ஒன்று. 2008-2009 ஆம் ஆண்டு சுற்றுலா மேம்பாடு மற்றும் வர்த்தக நோக்கில் ஓர் விடியல் ஆண்டாகவே விளங்கும். அதற்கான புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 மே 8

2008-2009 ஆம் ஆண்டில் குறைந்த செலவில் திறமையான மருத்துவ வசதியை அளிக்கும் மருத்துவச் சுற்றுலா மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும் ஊரகச் சுற்றுலா மேம்பாட்டை மையப்படுத்தி, தமிழகத்திற்கு வருகை தரும் பயணிகளில் பெரும்பாலானோர் கிராமிய மணம் கமழும் ஊரகச் சுற்றுலாவையும் நுகர்ந்து பலனடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விளம்பர முகாம்கள்**

கடந்த 2007-2008 ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டு சிறப்பு விளம்பர முகாம்கள், புதுதில்லி, மும்பை, அகமதாபாத், ஜெய்ப்பூர், புவனேஸ்வர், கொல்கொத்தா மற்றும் பெங்களூரு நகரங்களில் நடத்தப்பெற்றன. இதனால் அப்பகுதிகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. பிற மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க 2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் நகரங்களில் சிறப்பு விளம்பர முகாம்கள் நடத்தப்பட உள்ளன:

(1) கொச்சி (கேரளா)

(2) கள்ளிக்கோட்டை (கேரளா)

(3) பூனா (மகாராஷ்டிரா)

(4) ஜெய்சால்மீர் (இராஜஸ்தான்)

(5) வாரணாசி (உத்திரப்பிரதேசம்)

(6) லக்னோ (உத்திரப்பிரதேசம்)

(7) சிலிகுரி (மேற்கு வங்காளம்)

**உலகச் சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்**

பசிபிக் ஆசியப் பகுதி சுற்றுலாப் பயண முகவர்கள் மாநாடு (Pacific Asia Travel Association)

இந்தோனேஷியாவின் பாலி நகரில், கடந்த ஆண்டு செப்டம்பர் 25 முதல் 28 முடிய நான்கு நாட்கள் பசிபிக் ஆசியப் பகுதி சுற்றுலாப் பயண முகவர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு சுற்றுலா கலந்துகொண்டது. இதற்காக இந்தோனேஷியா விருந்தோம்பல் துறை வல்லுநர்கள் தமிழகத்திற்கு தங்களது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். ஏனெனில் இந்தோனேஷிய மக்கள் பெரும் செலவில் மருத்துவ நலம் நாடி சிங்கப்பூர் சென்று வந்துள்ளனர்.



2008 மே 8]

ஆனால், மிகக் குறைந்த செலவில், உலகத்தரம் வாய்ந்த மருத்துவம் தமிழகத்தில் கிடைப்பதால், எகிப்து, தென் ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விருந்தோம்பல் பிரதிநிதிகள் தமிழ்நாடு சுற்றுலாவிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களிடம் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தமிழகத்தில் கிடைக்கும் சிறந்த மருத்துவச் சேவைகளை விளக்கிக் கூறியதில் அவர்கள் மெத்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உலகச் சுற்றுலா சந்தை (World Travel Mart)**

ஒரு குடையின்கீழ் உலகச் சுற்றுலா விற்பன்னர்கள் சுற்றுலா சந்தைக்காக கூடும் இடம்தான் லண்டனில் ஆண்டுதோறும் நடைபெறும் உலகச் சுற்றுலாச் சந்தை. இச்சந்தை கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதி முதல் 15 முடிய லண்டனில் நடைபெற்றது. இச்சந்தையில், தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் கலந்துகொண்ட இந்தச் சந்தையில், தமிழகச் சுற்றுலாவின் விளம்பர நோக்கு திறம்பட வெளிப்பட்டதாக கருத்துத் தெரிவித்தனர். தமிழகத்தின் சுற்றுலா வளங்கள் சிறப்பான முறையில் எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த உலகச் சந்தையில் கலந்துகொண்ட பல்வேறு நாடுகளின் விருந்தோம்பல் துறை முகவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

**உலகச் சுற்றுலா சந்தை (International Tourism Bourse)**

ஜெர்மன் நாட்டின் பெர்லின் நகரில் உலகச் சுற்றுலா சந்தை 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 முதல் 9 வரை நடைபெற்றது. இச்சந்தையில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. உலக அளவில் தமிழகச் சுற்றுலாச் செல்வ வளங்கள் விளம்பரப்படுத்தப்பட்டன. பல்வேறு பயண முகவர்கள், பயண அமைப்பினரிடையே கலந்தாய்வுகள் நடத்தப்பெற்றன. ஸ்பெயின், இத்தாலி, பெல்ஜியம் மற்றும் ஜெர்மனி நாட்டு முகவர்களிடம் நடத்திய சந்தைப் பேச்சு பயனுள்ளதாக அமைந்தது. தமிழகத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட கிராமியக் கலை நிகழ்ச்சியான கரகாட்டம் இச்சந்தையில் நடத்தப்பட்டு, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நாட்டவர்களின் கவனத்தையும் பயணிகளையும் ஈர்க்கவும், தமிழகத்தின் மாசற்ற பெருமைமிக்க சுற்றுலாச் செல்வங்களை உலகுக்கு

[2008 மே 8

உணர்த்திடும் வகையிலும் தமிழ்நாடு சுற்றுலா கீழ்க்காணும் சுற்றுலாச் சந்தைகளில் தொடர்ந்து பங்கேற்க முடிவு செய்துள்ளது:

(1) பசிபிக் ஆசிய சுற்றுலாப் பயண முகவர்கள் சந்தை

(2) உலகச் சுற்றுலா சந்தை, லண்டன்

(3) உலகச் சுற்றுலா சந்தை, பெர்லின்

மேலும், 2008-2009 ஆம் ஆண்டில் சிறப்புச் சுற்றுலா முகாம்களை தெரிவு செய்யப்பட்ட பிற நாட்டு நகரங்களில் நடத்த உத்தேசித்துள்ளது.

## சுற்றுலா கையேடுகள் வெளியிடுதல்

2007-2008 ஆம் ஆண்டில் தமிழகச் சுற்றுலா கையேடுகள், சுற்றுலா வரைபடம், வண்ணப்படங்கள் கொண்ட குறுந்தட்டு, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு நாட்காட்டி, பொதுவான கையேடுகள் மற்றும் 10 சுற்றுலா வண்ணச் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன. சுற்றுலாத் தகவல் சேவையை மென்மேலும் மேம்படுத்திட 2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் சுற்றுலாத் தலங்களின் கையேடுகள் புதிதாக வெளியிடப்படும்:

1. கன்னியாகுமரி
2. மதுரை
3. இராமேஸ்வரம்
4. மாமல்லபுரம்
5. திருச்சிராப்பள்ளி
6. சிதம்பரம்
7. ஏற்காடு
8. தஞ்சாவூர்

## இந்தியப் பயண முகவர்கள் சங்க மாநாடு (Travel Agents Association of India Convention)

இந்தியப் பயண முகவர்கள் சங்கமும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையும் இணைந்து சுற்றுலா கருத்தாய்வு மாநாடு ஒன்றினை சென்னையில் 5-10-2007 முதல் 8-10-2007 வரை நடத்தியது. தமிழக சுற்றுலாவின்



2008 மே 8]

கொள்கைகளும், சுற்றுலா வளங்களும் இந்த மாநாட்டில் விளம்பரப்படுத்தப்பட்டன.

## இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள் நிகழ்ச்சி (Know India Programme)

பிற நாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவழி இளைஞர்களிடையே தமிழகத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட மைய அரசின் அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை இணைந்து சனவரி 2008-ல் 12 நாள் சிறப்புச் சுற்றுலா பயணத்தை நடத்தியது. புதுதில்லியில் நடைபெற்ற பிரவாசி பாரதிய திவாஸ் என்ற சுற்றுலா கண்காட்சியிலும் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. தமிழகச் சுற்றுலா வளங்களை விளம்பரப்படுத்தும் வகையில் வம்சாவழி தமிழர்கள் அதிகம் வசிக்கும் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில், 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுற்றுலா நிகழ்ச்சிகளில் தமிழக சுற்றுலாத் துறை பங்கேற்றது.

## தமிழ்நாடு சுற்றுலா பெருந்திட்டம்

வளர்ந்து வரும் நவீன வசதிகளுடன் தமிழக சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஒரு பெருந்திட்டம் தயாரித்து வருகிறது. திட்டப் பணி தயாரிக்கும் பொறுப்பு, மைய அரசு நிதி நிறுவனமான வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் (HUDCO) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டம் தமிழ்நாட்டு சுற்றுலாச் செல்வங்களை அடையாளம் காட்டுவதோடு அவற்றை உலகுக்கு அறிமுகப்படுத்த வழிவகைகளைக் கூறும். சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் திட்டங்கள் தயாரிக்கும்.

## வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் பூச்சிகள் அருங்காட்சியகம்

சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் பூச்சிகள் அருங்காட்சியகம் நிறுவ ரூ.150.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (பல்வேறு வகையான வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கை முறை இந்தப் பூங்காவில் இடம் பெறும்) வண்ணத்துப்பூச்சியை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த, இந்த வண்ணத்துப்பூச்சி பூங்கா பெரும் பங்காற்றும். பார்வையாளர்கள், நடைபாதைமூலம் பூங்காவைச் சுற்றிப் பார்க்கலாம். வண்ணத்துப்பூச்சி மாதிரிகளும் அதன் பல்வேறு பரிணாம வளர்ச்சியும் பூங்காவில்

நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிப் பலகைகள்மூலம் விளக்கப்படும். இந்த வண்ணத்துப் பூச்சி பூங்கா தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மிகப்பெரிய அளவில் கவரும்.

### மைய அரசு நிதி உதவித் திட்டங்கள்

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருக்கின்றது. சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் சுற்றுலாச் செல்வங்கள் அனைத்தும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக மைய அரசு, மாநில அரசுகளுக்கும், மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாநிலங்களுக்கும் (Union Territories) சுய அதிகாரம் படைத்த நிறுவனங்களுக்கும், சில குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்த நிதி உதவி வழங்குகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் மைய அரசின் சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட சுற்றுலாப் பகுதிகள்/ சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு ஒப்பளிப்புச் செய்த தொகை | மைய அரசு விடுவித்த தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மேம்பாடு | 475.35 | 380.28 |
| 2 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் திருச்சிராப் பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் மேம்பாடு | 372.70 | 298.16 |
| 3 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் மெரினா கடற்கரையை அழகுபடுத்தல் | 492.76 | 394.21 |
| 4 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் வேலூர் கோட்டை அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மேம்பாடு | 89.32 | 71.46 |
| 5 | சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் உதகமண்டலம்-முதுமலை-ஆனைமலை மேம்பாடு | 439.50 | 351.60 |
| 6 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், ஏலகிரி மேம்பாடு | 365.72 | 292.57 |
| 7 | சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் சப்தவிடங்கள் ஸ்தலம் மேம்பாடு | 314.45 | 251.56 |
| 8 | சுற்றுலாத் தலங்கள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மேம்பாடு | 187.00 | 149.60 |
| 9 | சுற்றுலா சேவை புரிபவர்களுக் கான பயிற்சி (Capacity Providers) | 12.116 | 6.00 |
| | மொத்தம் | 2748.916 | 2195.44 |

[2008 மே 8

2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் சுற்றுலாப் பகுதிகள்/ சுற்றுலா சுற்றுச் சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:

**I. சுற்றுலாப் பகுதிகள் மேம்பாடு**

(1) கொல்லிமலை - நாமக்கல் மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் அமைந்துள்ள அழகிய சுற்றுலாத் தலம்

(2) தரங்கம்பாடி - நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள டேனிஷ்கோட்டை கலைநயம் வெளிப்படுத்தக்கூடியது

(3) பூம்புகார் - எழுநிலை மாடங்கொண்ட கலைக்கூடம், சங்ககால பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகார நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சிறந்த சுற்றுலா கடற்கரைப் பகுதி.

(4) பழவேற்காடு - தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரி (உப்பளங்கள்) இங்குள்ளது.

(5) ஏற்காடு - சேர்வராயன்மலைப்பகுதியில் உள்ள அருமையான சுற்றுலாப் பகுதி

**II. சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு**

**(அ) விடுதலைப் போராட்டத் தல மேம்பாடு (முதல் கட்டம்)**

தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட தியாகச் செம்மல்கள் வாழ்க்கையுடன் இணைந்த கீழ்க்காணும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் பயணித்த களங்கள், சிறப்புப் பெற்ற சுற்றுலாத் தலங்களாக மேம்பாடு செய்யப்பட உள்ளன. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தொடர்புடைய கீழ்க்கண்ட இடங்கள் முதல் கட்டமாக மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படும் :

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தலக்குளத்தில் வீரன் வேலுத்தம்பி தளவாய் நினைவிடம்.

(2) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வ.உ.சி. நினைவிடம்.

(3) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டையில் வீரன் வாஞ்சிநாதன் நினைவிடம்.



2008 மே 8]

(4) சிவகங்கை மாவட்டத்தில் அரண்மனை சிறுவயல்

(5) தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு

**(ஆ) வேலூர் – (ஸ்ரீபுரம் பொற்கோயில்) – பாலமதிமலை – அமிர்திமலை சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு**

கீழ்க்கண்ட இடங்கள் வேலூர்-பாலமதிமலை-அமிர்திமலை சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படும் :

ஸ்ரீபுரம் பொற்கோயில்

அமிர்தி காடு

பாலமதி மலை

முத்துமண்டபம்

இரத்தினகிரி

செண்பகம்

விருஞ்சிபுரம்

பள்ளிகொண்டா

வெட்டுவானம்

திருப்பாற்கடல்

மேகமண்டலம் கோட்டை

விண்ணம்பள்ளி அகஸ்தீஸ்வரர் கோயில்

**III. மிகப் பெரிய சுற்றுலாப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாமல்லபுரம் மேம்பாடு**

பல்லவர்களின் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாகவும், தமிழகத்தின் சொத்தாகவும் மாமல்லபுரம் திகழ்கிறது. ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ள ரதங்களும் அதன் அருகிலுள்ள சிற்பங்களும் உலகப் புராதனச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த புராதனச் சின்னங்கள் மேம்படுத்தப்பட்டு உலகினர் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

முதற்கட்டமாக, ஐந்து ரதப்பகுதி மற்றும் கடற்கரை கோயில் பகுதி மேம்பாட்டிற்கு ரூ.5.00 கோடி செலவிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட பணிகளுக்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 432.00 இலட்சம்

வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப்பகுதியில் கீழ்க்கண்ட பணிகள் இடம் பெற்றுள்ளன :

| வ. எண் | பணி விவரம் | மைய அரசு வழங்கியுள்ள தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அர்ச்சுனன் தபசு முன்புறம் உள்ள பகுதி மேம்பாடு | 100.00 |
| 2. | தொடக்கப் பள்ளி கட்டுதல் | 35.80 |
| 3. | மேல்நிலைப் பள்ளி கட்டுதல் | 76.40 |
| 4. | பேருந்து நிலையம் கட்டுதல் | 93.00 |
| 5. | அணுகுசாலை மேம்பாடு | 36.00 |
| 6. | பேருந்து நிறுத்துமிடம் மேம்பாடு | 10.00 |
| 7. | ஸ்தல சயனப் பெருமாள் கோயில் மேம்பாடு | 43.40 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில், அர்ச்சுனன் தபசுக்கு எதிரே உள்ள பகுதி மேம்பாடு, ஆரம்பப் பள்ளி கட்டுமானப் பணிகள் மற்றும் பேருந்து நிலையம் கட்டுதல் தவிர இதர பணிகள் யாவும் முடிவடையும் தருவாயில் உள்ளன. எனவே, 2008-2009 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டமாக மிகப் பெரிய சுற்றுலாப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பின்வரும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:

(அ) பிடாரி ரதம் பகுதி மேம்பாடு மற்றும் நிலச் சீரமைப்பு

(ஆ) ஸ்தல சயனப் பெருமாள் கோயில் பகுதி மேம்பாடு மற்றும் நிலச் சீரமைப்பு

(இ) நிலத்தடியில் மின்கம்பிகள் பதித்தல்

(ஈ) திடக் கழிவு மேலாண்மை

(உ) சாலை விரிவுபடுத்துதல்

(ஊ) குளங்களை அழகுபடுத்தி புனரமைத்தல்



(எ) ஒலி-ஒளிக் காட்சி அமைத்தல்

(ஏ) பேருந்து நிலையம் மேம்பாடு மற்றும் சார்ந்த பகுதி மேம்பாடு

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்த ரூ.306.25 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதே போன்று 2008-2009-இல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதி மேம்பாடு**

2007-2008 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களுக்காக ரூ.114.52 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது:

1. குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் - ரூ.34.52 இலட்சம்
2. கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் - ரூ.50.05 இலட்சம்
3. அருவிக்கரை, கன்னியாகுமரி மாவட்டம் - ரூ.30.00 இலட்சம்

இதே போன்று 2008-2009 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்**

**அதிகப் பிரபலமாகாத சுற்றுலாப் பகுதிகள் மேம்பாடு**

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களைப் படிப்படியாக மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் துறை அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே 10-வது ஐந்தாண்டுத் (2002-2007) திட்டக் காலத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அதிகம் பிரபலமாகாத, ஆனால் முக்கியமான சுற்றுலாத் தலங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் உதவியுடன் கண்டறியப்பட்டு, அவை மேம்படுத்தப்பட்டுள்ளன. திட்ட மதிப்பில் பாதியை சுற்றுலாத் துறை ஏற்றுக் கொண்டுள்ளது. எஞ்சிய பாதியை மாவட்ட நிர்வாகம் (சட்டமன்ற உறுப்பினர்/

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உதவி) ஏற்றுக் கொண்டுள்ளது.

**2007–2008 ஆம் ஆண்டில் மாநில நிதி உதவித் திட்டத்தின்கீழ் பின்வரும் இடங்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன:**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாகப் பங்கு | சுற்றுலாத் துறை பங்கு | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| | **பகுதி–2 திட்டம்** | | | |
| 1. | தஞ்சாவூர் மாவட்டம் கல்லணைப் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 100.00 | 100.00 |
| 2. | கோவை மாவட்டம் கோவை குற்றாலத்தில் சுற்றுச்சூழல் மேம்பாடு | 0.00 | 36.90 | 36.90 |
| 3. | சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 43.25 | 43.25 |
| 4. | சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 25.00 | 25.00 |
| 5. | தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை புனரமைப்பு | 0.00 | 28.50 | 28.50 |





| | **சுற்றுலாத் துறையும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள்** | | | |
|---|---|---|---|---|
| 6. | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலம் மேம்பாடு | 44.00 | 44.00 | 88.00 |
| 7. | கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள வன பத்திர-காளியம்மன் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 34.49 | 34.49 | 68.98 |
| 8. | தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் கடற்கரைப் பூங்கா அமைத்தல் | 22.00 | 22.00 | 44.00 |
| 9. | வேலூர் மாவட்டம் ஏலகிரியில் யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு (மத்திய அரசு திட்டம்) | 0.00 | 14.00 | 14.00 |
| 10. | 'எங்கும் ஏறலாம்-எங்கும் இறங்கலாம்' சுற்றுலாப் பயணத் திட்டம் (Hop-on, Hop-off Tours at Mamallapuram) | 0.00 | 72.00 | 72.00 |
| 11. | சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் பூங்கா மேம்பாடு | 59.00 | 59.00 | 118.00 |
| 12. | திருவண்ணாமலை மற்றும் ஜவ்வாது மலையில் சுற்றுலா வளாகம் கட்டுதல் | 40.00 | 40.00 | 80.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி, வலங்கைமான் மற்றும் வடுவூர் ஆகிய புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 5.38 | 5.37 | 10.75 |
| 14. | தேனி மாவட்டம் குச்சனூர் அ/மி சனீஸ்வரர் பகவான் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 23.25 | 23.25 |
| 15. | காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் பூச்சிகள் அருங்காட்சியகம் அமைத்தல் | 0.00 | 150.00 | 150.00 |
| 16. | தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம் மேம்பாடு | 31.25 | 31.25 | 62.50 |
| 17. | நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் அ/மி நவநீதேஸ்வரர் சுவாமி திருக்கோயில் மேம்பாடு | 14.98 | 14.97 | 29.95 |
| 18. | திருவாரூர் மாவட்டம், கண்கொடுத்தவனிதம் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 62.30 | 62.30 |



| | | | | |
|---|---|---|---|---|
| 19. | மதுரை எல்லீஸ் நகரில் பக்தர்களுக்கான ஓய்வறை மற்றும் அ/மி மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் ஐந்து நுழைவுவாயிலிலும் பொருட்கள் வைப்பறை மற்றும் காலணிகள் கடைகள் கட்டுதல் | 42.45 | 42.45 | 84.90 |
| 20. | திருநெல்வேலி மாவட்டம், அடவிநயினார் அணை (ம) பூங்கா, குண்டார் அணை மற்றும் பூங்கா, மணிமுத்தாறு மேம்பாடு, கிருஷ்ணாபுரம் கோயில் பகுதி மேம்பாடு | 34.93 | 34.93 | 69.86 |
| | மொத்தம் .. | 328.48 | 883.66 | 1212.14 |

2008-2009-இல் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து மேலும், பல பகுதிகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

அடிப்படை வசதிகள் தொடர தொய்விலா (Infrastructure Gap filling Fund) நிதி (பிற துறைகளின் ஒத்துழைப்புடன்)

வளமும் வனப்புமுள்ள கிராமங்கள் நாள் முழுவதும் பரபரப்பாகத் திகழ்கின்றன. சிறப்பான கிராமியக் கட்டமைப்புகள், மண் சாலைகள், தொடர்புப் பாதைகள், கிராமிய மணம் கமழும் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுக் களங்கள் மற்றும் செயல்பாடுகள், கூரையானாலும் அழகுற வேயப்பட்டிருக்கும் குடில்கள், உள்ளூர் கோயில் விழாக்கள், முதற்கட்ட வேளாண்மை நடப்புகள், கால்நடை நிழல் கொட்டகைகள், நீர்த் தடாகங்கள் மற்றும் கலைநயமிக்க எண்ணற்ற வனப்புமிகு காட்சிகள், காண்போரைக் கவரும் வளங்களை கிராமங்கள் பெற்றுள்ளன. இத்தகைய கட்டுக்கடங்கா கவின்மிகு தமிழகக் கிராமிய நிகழ்வுகள், வெளிநாட்டினரைக் கவர்ந்து வருகின்றன. மைய அரசும் தமிழக அரசும் இணைந்து, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் கிராமச் சுற்றுலாவை மேம்படுத்த அதிக கவனம் செலுத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை, கிராமச் சுற்றுலாத்

தலங்களையும் அதனுடன் இணைந்த சுற்றுலாத் தலங்களையும் மேம்பாடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை "கட்டமைப்பு வசதிகள் தொடர தொய்விலா நிதி"யினை உருவாக்கி உள்ளது. சுற்றுலாத் துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஊரக வளர்ச்சித் துறை கீழ்க்கண்ட சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டிற்காக, 2007-2008 ஆம் ஆண்டில் இந்த தொய்விலா நிதி உதவித் திட்ட அடிப்படையில் நிதி உதவி அளித்துள்ளது:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்கா .. | ரூ.65.55 |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சிக்கல் சிங்காரவேலர் ஆலயம் .. | ரூ.39.33 |
| 3. | வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் அடிப்படை வசதிகள் .. | ரூ.98.57 |
| 4. | நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அடிப்படை வசதிகள் .. | ரூ.20.00 |
| 5. | திருவண்ணாமலை மாவட்டம் பல்லவ குகைக் கோயில், அலங்காரவளைவு, சாலை மற்றும் அடிப்படை வசதிகள் .. | ரூ.57.51 |
| 6. | காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூரில் உள்ள ஓட்டேரி ஏரி மேம்பாடு .. | ரூ.52.20 |
| 7. | திருவாரூர் மாவட்டம் ஓடாச்சேரி சிவன் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் .. | ரூ.36.80 |
| 8. | திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் அடிப்படை வசதிகள் .. | ரூ.40.84 |
| | மொத்தம் .. | ரூ.410.80 |

முக்கிய கிராமத் தலங்களும், ஆன்மீகத் தலங்களும் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன்



சுற்றுலாத் துறையும், மாவட்டச் சுற்றுலா அலுவலர்களும், மேற்குறிப்பிட்ட நிதியில் சம்பந்தப்பட்ட தலங்கள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிப்பர். இந்நடவடிக்கைகளால் சுற்றுலாப் பயணிகள் பயனடைவதோடு மட்டுமல்லாமல், அத்தலங்களில் வாழும் மக்களும் பயன்பெறுவர். இவ்வகைப் பயணங்கள் மேற்கொள்ளப்படும் வேளையில், கிராமத்தின் சூழலுக்கு எந்தவித இடையூறும் இல்லாத வகையில் மிகவும் கவனமாகக் 'கையாளும் பாங்கு கடைப்பிடிக்கப்படும்.'

### புராதன நகரங்கள் மேம்பாடு

புராதன நகரங்களை போற்றிப் பாதுகாக்கும் திட்டத்தின்கீழ் 48 நகரங்கள் தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நகரங்கள், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை நிதிமூலம் மேம்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் புராதன நகரங்களை மேம்படுத்த திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளன. அவை பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் மேம்பாடு செய்யப்படும்.

சுற்றுலாப் பகுதிகளுக்குச் செல்லும் அணுகுசாலைகளை மேம்படுத்த நெடுஞ்சாலைத் துறை ஒப்புக்கொண்டுள்ளது. புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இந்து சமய அறநிலையத் துறை, மதிப்பீட்டில் சரிபாதியை ஏற்றுக்கொள்கிறது.

2008-2009 ஆம் ஆண்டு பிற துறைகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு சுற்றுலாப் பகுதிகள் மேம்படுத்தப்படும்.

### பொருட்காட்சி மற்றும் விழாக்கள்

தமிழகம் உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட பிரம்மாண்டமான கோயில்களையும், தனிச் சிறப்பு வாய்ந்த விழாக்களையும் தன்னகத்தே கொண்டது. ஒவ்வொரு விழாவும், மகிழ்ச்சியோடும் குதூகலத்துடனும் கொண்டாடப்படுகிறது. விழாக் காலங்களில் கோயில் வளாகம் மற்றும் அதனுடன் இணைந்த இடங்கள் அனைத்தும் அழகுற அலங்கரிக்கப்பட்டு, கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், பாரம்பரிய நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள் வழக்கமாக நடத்தப் பெறுகின்றன. இத்தகைய பாரம்பரியச் செறிவுடன் நடத்தப்பெறும் விழாக்களைக் காண, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்புவதால், இத்தகைய விழாக்கள் பயணிகளைக் கவரும் மிகச் சிறந்த சுற்றுலாச் செல்வங்களாகத் திகழ்கின்றன. 2008-2009 ஆம் ஆண்டில்,

[2008 மே 8

இத்தகைய விழாக்களை முதன்மைப்படுத்தி பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்படும். இப்பணிகளுடன், பிரபலமாகாத இடங்களில் நடக்கும் விழாக்களையும், பயணிகள் அறிந்திடும் வகையில் விளம்பரப்படுத்தப்படும்.

**மாமல்லபுரம் நாட்டிய விழா – 2008**

மாமல்லபுரத்தில் இந்த ஆண்டு நாட்டிய விழா மாறுபட்ட வகையில், பயணிகள் பயன்பெறும் வகையில் ஒரு மாத கால அளவுக்கு, வார விடுமுறை நாட்களில் மட்டும் நடத்துவதற்கு மாறாக, நாள்தோறும் நடத்தப்பட்டது. செவ்விய கலை நிகழ்ச்சிகளுக்கும் கிராமிய கலை நிகழ்ச்சிகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட்டது. அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற பிற நாடுகளிலிருந்தும் மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் கலைஞர்கள் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். ஒரு மாத காலம் நடைபெற்ற 128 வகை கலை நிகழ்ச்சிகளை (28-12-2007 முதல் 27-1-2008 வரை) உள்ளூர் மக்களுடன் 8,500-க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பயணிகளும், 18,000-க்கும் மேற்பட்ட உள்நாட்டுப் பயணிகளும் கண்டு களித்துள்ளனர். இவ்விழாவிற்கு கிடைத்தப் பேராதரவினால், இவ்விழாவினை, 2009 ஆம் ஆண்டில் **"தேசிய நாட்டிய விழாவாக"** நடத்தலாம் என திட்டமிடப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் மாமல்லபுரம் நாட்டிய விழாவைக் கண்டு களிக்க ஜப்பான், ஜெர்மனி, கனடா, லண்டன் பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும் இப்பயணிகள் தென்னக பாரம்பரிய நாட்டியங்களைப் பயில்வதற்கு ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

**சென்னை சங்கமம்**

2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை சங்கமம் விழா தொடர்ந்து, இரண்டாம் ஆண்டாக சனவரி 2008-ல் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. **"திருவிழா - நம்மத் தெருவிழா"** என்ற சிறப்பைத் தாங்கிய இவ்விழா, தெருக்களிலும், பூங்காக்களிலும், பொருட்காட்சிகளிலும், மக்கள் கூடும் பொது இடங்களிலும், மக்களோடு சங்கமித்து, 2000-க்கும் மேற்பட்ட கலைஞர்களுடன், 20-க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்டது. இவ்விழாவை தமிழ்நாடு சுற்றுலாத் துறையும், தமிழ் மையமும் பிற ஆதரவாளர்களோடு இணைந்து நடத்தின. சென்னை சங்கமம் விழாவின் முத்தாய்ப்பாக, உணவு தயாரிப்பில் தலைசிறந்த வல்லுநர்கள் கலந்து கொண்ட



2008 மே 8]

உணவுத் திருவிழாவும் இடம் பெற்றது. இலவச அனுமதியாக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகளை மக்கள் கூட்டம் கூட்டமாகக் கண்டுகளித்தனர். இவ்விழாவிற்கு சென்னை மக்களிடையே கிடைத்த அபரிமிதமான வரவேற்பைக் கண்டு, இவ்விழாவினை தொடர்ந்து, மதுரை மற்றும் கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தங்கும் வசதி**

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால், விருந்தோம்பல் துறை புதிய பரிணாம வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்பம், மருந்தக மேலாண்மை, வாகன உற்பத்தித் துறை, வங்கித் துறை போன்ற துறைகளின் வளர்ச்சிகளில் தமிழகம் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டில், தங்கும் விடுதிகளில், பயணிகள் தங்கும் விகிதம் 80 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

**2007 ஆம் ஆண்டில் தரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத தங்கும் வசதிகள்**

| வகை | ஓட்டல்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 நட்சத்திரம் (சொகுசு) | 5 | 695 |
| 5 நட்சத்திரம் | 7 | 988 |
| 4 நட்சத்திரம் | 10 | 925 |
| 3 நட்சத்திரம் | 74 | 4467 |
| 2 நட்சத்திரம் | 44 | 1699 |
| 1 நட்சத்திரம் | 39 | 1569 |
| பாரம்பரிய வகை | 2 | 74 |
| வரையறுக்கப்படாதவை | 16 | 703 |
| மொத்தம் | 197 | 11120 |

இவற்றுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பிலுள்ள 'ஓட்டல் தமிழ்நாடு' என்ற 55 தங்கும் விடுதிகளும் இடம் பெறுகின்றன.

[2008 மே 8

மைய அரசு சுற்றுலாத் துறை, தமிழகத்தில் 29 தங்கும் விடுதித் திட்டங்களை அங்கீகரித்துள்ளது. இதில் 5 ஐந்து நட்சத்திர விடுதிகளும், 2 நான்கு நட்சத்திர விடுதிகளும், 3 மூன்று நட்சத்திர விடுதிகளும், 2 ஒரு நட்சத்திர விடுதிகளும் உள்ளடங்கும். 2010 ஆம் ஆண்டுக்குள் வருகைதர இருக்கும் பயணிகளின் தேவைக்காக 4,000 அறைகள் கூடுதலாக சென்னை நகருக்குத் தேவைப்படுகின்றன. இரண்டு அடுக்கு நகரங்களுக்குள் இதே மாதிரி வசதிகளை அளிக்கும் சூழல் உள்ளமையால், சுற்றுலா தொடர்புடைய வனப்புமிகு தலங்களில் தங்கும் வசதி வளாகங்களைக் கட்ட முன்வரும் தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். வசதிகளை உருவாக்கும் சேவையைப் புரியும் துறையாக சுற்றுலாத் துறை செயல்படும். தங்கும் விடுதி திட்டங்களின் செயல் வளமையைப் பொறுத்து, சுற்றுலாத் துறை அதற்கான அரசு நிலங்களை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்க சாத்தியக் கூறுகளை ஆராயும்.

### புதிய திட்டங்கள்

### (அ) வான்வழிச் சுற்றுலா (Aviation Tourism)

தமிழகச் சுற்றுலாவின் சமீப கால வளர்ச்சிக்கு, வான்வழிப் பயணம் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. வான்வழிச் சுற்றுலாப் பயணிகளுக்கு, குறைவான கட்டணங்களில் பாதுகாப்பு மற்றும் வசதியான பயணங்களை, தனியார் நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு ஏற்பாடு செய்து வருகின்றன. வான்வழிச் சுற்றுலாவின் வளர்ச்சியைப் பின்வரும் புள்ளியியல் விவரங்கள்மூலம் அறியலாம்:

### வளர்ச்சி—ஓர் கண்ணோட்டம்

- 2007-ல், சென்னை விமான நிலையத்திற்கு வருகை புரிந்த உலக சுற்றுலாப் பயணிகளின் வருகை 20 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- 2008 சனவரி மாதம் முடிய கடந்த ஒன்பது மாதங்களில், 22,977 வெளிநாட்டு விமானங்களும் 72,979 உள்நாட்டு விமானங்களும் சென்னை விமான நிலையத்தில் கையாளப்பட்டுள்ளன. ஏறக்குறைய நாள் ஒன்றுக்கு 350 விமானங்கள் கையாளப்பட்டுள்ளன.
- நாள்தோறும் 33,000 பயணிகள் சென்னை விமான நிலையத்திற்கு வந்து செல்கின்றனர்.



2008 மே 8]

- ஏப்ரல் 2007 முதல் ஜனவரி 2008 வரை 28.4 இலட்சம் பன்னாட்டுப் பயணிகளையும், 60.5 இலட்சம் உள்நாட்டுப் பயணிகளையும் சென்னை விமான நிலையம் கையாண்டுள்ளது.
- தமிழ்நாட்டுக்கு வருகை தரும் பயணிகளுக்கு பின்வரும் வசதிகள் அவசியத் தேவையாக உள்ளன.
- விமான நிலையத்தில் பயணிகளைக் கையாளுவதில் துரித சேவை
- விமான நிலையத்திற்கும் நகரத்திற்குமிடையே சிறந்த தரைவழிப் போக்குவரத்து சேவை
- நியாயமான கட்டணத்தில் நல்ல தங்குமிட வசதிகள்
- குறைவான கட்டணங்களில் குறுகிய தூர விமான சேவை

மேற்கூறப்பட்டுள்ள வசதிகள் வான்வழிப் பயணிகளுக்குக் கிடைத்திடும் வகையில் சுற்றுலாத் துறை தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

### (ஆ) ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்களை வழிகாட்டிகளாக நியமித்தல்

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் மற்றும் தலங்கள் பல பயணிகளிடையே பிரபலமாகாத நிலையில் உள்ளன. இத்தலங்களை பிரபலப்படுத்திடவும் தலங்களின் பெருமையை உலகிற்கு உணர்த்திடவும் வழிகாட்டிகளாகப் பணிபுரிய விருப்பம் தெரிவித்து, ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் சுற்றுலாத் துறைக்கு வரப்பெற்றுள்ளன. இவர்களில் தேர்வு பெறுவோருக்கு தக்க பயிற்சி அளிக்கப்படும். இவர்கள் பிரபலமாகாத தலங்களில் வழிகாட்டிகளாக சேவை புரிவர்.

### (இ) ஊரகச் சுற்றுலா

சுற்றுலா பன்முகப் பரிமாணங்களைக் கொண்டது. அவற்றுள் கிராம வாழ்க்கை நிலைகளின் யதார்த்த சூழல் அனைவரையும் கவரும் நிலையில் வளர்ந்து வருகிறது. ஊரகச் சுற்றுலா, எவ்வகையிலும் மனித நடவடிக்கைகளில் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாகாது. மனித நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் சூழல்களில் அதன் இயற்கைத் தன்மையையும், சிறப்பையும்

இழக்க நேரிடும். இதைக் கருத்தில் கொண்டு, தமிழகச் சுற்றுலா, ஊரகச் சுற்றுலாவை அதன் இயற்கை வனப்பு குறையாமல் மேம்படுத்த முனைந்துள்ளது. இந்த மேம்பாட்டில், கிராமத்தில் வாழும் மக்கள் பெருமளவில் பங்கு வகிப்பார்கள். இத்திட்டம் அவர்களுக்கே உரிய ஒன்றாகும்.

பயணிகளை வரவேற்கும் விதத்தில், ஒவ்வொரு கிராமச் சுற்றுலாத் தலத்திலும் வரவேற்பு வளைவுகள் இருக்கும். இதன் கட்டமைப்பு, கிராமிய மணம் கமழும் வகையில் கலை வண்ணமாக அமையப் பெறும். சுடுமண் வண்ணத்தில் சித்திர வேலைப்பாடுகளுடன் வரவேற்பு வளைவுகள் அமையும்.

ஊரகச் சுற்றுலாவிற்கு வருகை தரும் பயணிகள் மாட்டு வண்டி மூலம் கிராமத்தை வலம் வர ஏற்பாடு செய்யப்படும். பயணிகள் தங்கும் வகையில் கிராமத்திலுள்ள வீடுகள் மெருகு குலையாமல் அமைத்துத் தரப்படும். பயணிகள் இந்தக் கிராமத்து வீடுகளில் தங்கி மகிழும் வண்ணம், கிராமத்து இனிப்பு வகைகள், கேழ்வரகு கஞ்சி அல்லது கூழ் உணவு போன்ற குளுமை தரும் பானங்கள் வரவேற்பு விருந்தாகக் கருதும் வகையில் வழங்கப்படும். இத்தகைய உண்டு மகிழும் கிராமப் பதார்த்தங்கள் அவர்களுக்கு நேரே தயாரித்து பின்னர் பயணிகள் நுகரும் வகையில் தரும் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகள் விரும்பும் பட்சத்தில், அவர்களின் உடல் நலம் பேணும் வகையில் கிராமங்களில் கிடைக்கும் எண்ணெயைக் கொண்டு உடல் முழுதும் தேய்த்து, செம்புப் பாத்திரத்தில் நிரப்பப்பட்ட சுடுநீரால் சுகமாகக் குளிக்கும் வசதி செய்யப்படும். பின்னர் மிதமான சிற்றுண்டியை உண்டபின் அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று, பாரம்பரிய முறையிலான இறைவழிபாடு மேற்கொள்ள வகை செய்யப்படும்.

கிராமச் சூழலுடன் கூடிய இத்தகைய பண்பாட்டு முறையை நேரில் காணும் பயணிகள் வியப்புறுவார்கள். பயணிகள் பெண்களாயிருப்பின் கிராமிய அழகு மேலும் மிளிரச் செய்யும் சேலை கட்டும் முறை கற்றுத்தரப்படும். இந்தப் புதிய சூழலின் நடுவில் கோலம், பாண்டி, முத்தாட்டம் மற்றும் பல்லாங்குழி போன்ற தமிழ்நாட்டுக்கே உரித்தான விளையாட்டுக் கலைகளில் பயணிகளை ஈடுபடுத்தி மனம் மகிழச் செய்யப்படும். ஒட்டுமொத்தத்தில், பயணிகள் கிராம ரம்மியத்தில் மனதைப் பறிகொடுத்து மகிழ்வர்.

பயணிகளுக்கு வாழை இலையில் கிராமிய மதிய உணவு பரிமாறப்படும். உணவருந்திய பின், கயிற்றுக் கட்டிலில் கண்ணயர்ந்து





ஓய்வெடுத்தபின் மாலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்து, பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இத்தகைய ஊரகச் சுற்றுலாவை செயல்படுத்த, உரிய அம்சங்கள் பொருந்திய சுற்றுலாத் தலங்களுக்கு அருகிலுள்ள இடங்கள் தெரிவு செய்யப்பட்டு மேம்படுத்தப்படும்.

*2008-2009* ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள **"கடம்பாடி"** என்ற கிராமத்தை ஊரகச் சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்பாடு செய்யப்படும்.

**ஊரகச் சுற்றுலாவைத் தெளிவாக எடுத்துக்காட்டும் குறும்படம் தயாரிக்கப்படும்.** இக்குறும்படம் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் திரையிடப்படும்.

## (ஈ) உடனடி தகவல் அறியும் திட்டம்

இன்றைய காலகட்டத்தில், எல்லா துறைகளிலும் அனைத்து நுகர்வோர் வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றை ஒரே இடத்தில் பயன்படுத்தக் கூடிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய நவீன யுக்திகள்மூலம் வர்த்தக மேலாண்மை நடந்து வருகிறது. சுற்றுலாத் துறையும் நவீன வசதிகள் மூலம் தமிழகச் சுற்றுலா வளங்களை தகுந்த ஊடகங்கள்மூலம் விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்கும். 'வளம் யாவும் உண்டு' என்ற கருத்துருவை மையப்படுத்தி சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல் தரும் சிறப்பு கையேடுகள் வெளியிடப்படும். தமிழகத்தில் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மின் ஆளுமைமூலம் உடனடி தகவல் அறியும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## (உ) மருத்துவச் சுற்றுலா கையேடு

தமிழத்தில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனைகளும் மற்றும் மருத்துவ வல்லுநர்களும் உள்ளனர். இதனால் பிற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளிலிருந்தும் பயணிகள் பெருமளவில் மருத்துவ நலம் நாடி தமிழகத்திற்கு வருகை தருகின்றனர். மருத்துவ நலம் பேணுவதில் தமிழகம் சிறப்புப் பெற்றுள்ளது என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் சுற்றுலா வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னை தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில், மருத்துவச் சுற்றுலாத் தகவல்கள் வழங்கும் வகையில் மருத்துவச் சுற்றுலா தகவல் மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தமிழக மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவமனைகள் குறித்த விரிவான தகவல்கள்

அடங்கிய மருத்துவ சுற்றுலா கையேடு வெளியிடப்படவுள்ளது. ஆங்கிலம் தெரிந்திராத வெளிநாடுகளைச் சார்ந்த பயணிகள் பயன்பெறும் வகையில் ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மருத்துவச் சுற்றுலா கையேடு வெளியிடப்படும்.

**(ஊ) ஆண்டு விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள் கையேடு**

தமிழகம் பழமையான திருவிழாக்களுக்கான உறைவிடம். இத்தகைய விழாக்கள் பற்றிய தகவல்கள் பயணிகளுக்கு அளிக்கப்படும் பட்சத்தில், பயணிகள் வருகை அதிகரிக்கும். எனவே, தமிழகத்தில் நடைபெறும் ஆண்டு விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள் பற்றிய கையேடு வெளியிடப்படும்.

**(எ) சுற்றுலா மேலாண்மை வெளிப்பாடு**

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் இயற்கை அளித்த சுற்றுலாச் செல்வங்களும், மேம்பாட்டு நடவடிக்கைகள்மூலம் உருவாக்கப்பட்ட சுற்றுலாத் தலங்களும் உள்ளன. ஒவ்வொரு மாநிலமும் தங்களது சுற்றுலா வளங்களைப் பயணிகளுக்கு வெளிப்படுத்தும் வர்த்தக நடவடிக்கைகளில், போட்டி போட்டுக்கொண்டு தங்களின் மாநிலங்களுக்குப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஒரு சுகாதாரமான சுற்றுலா வர்த்தகப் போட்டி, அரசு நிறுவனங்களிடையே நிலவி வருகிறது. இவ்வகை வர்த்தக நடவடிக்கைகளில், தனியார் நிறுவனங்களையும் எதிர்கொள்ளும் நிலைமை அமைகிறது. பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் சுற்றுலா வர்த்தக நடவடிக்கைகளில் புதுமையையும், நவீனத்தையும் இணைத்து விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இந்த வகை யுக்திகளைக் கையாளுவதில், பிற மாநிலங்களின் செயல்பாடுகள் ஆராயப்பட்டு, தேவைப்படும் பட்சத்தில் நமது மாநிலத்திலும் அவ்வகைச் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தும் சூழல் உள்ளது. தமிழகம் பல்வகை வளங்களைப் பெற்றிருந்தாலும் அவ்வளங்களைச் சரியான முறையில் விளம்பரப்படுத்த பிற மாநிலங்களின் செயல்பாடுகளையும் ஆராய வேண்டி உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, முதற்கட்டமாக , பல்வேறு மாநிலங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் கண்டறிந்து வர, தமிழகத்தில் பணிபுரியும் சுற்றுலா அலுவலர்கள் மற்றும் உதவி சுற்றுலா அலுவலர்கள் வெளி மாநிலத்திற்கு அனுப்பிவைக்கப்படுவர். அவர்கள் அந்தந்த மாநிலத்தில் சுற்றுலாத்





துறை மேற்கொள்ளும் நடைமுறைகளைக் கண்காணித்து அறிவியல் ரீதியில் உரிய வல்லுநர்களுடன் கலந்தாலோசித்துத் திரும்புவார்கள். பின்னர் அலுவலர்கள் பிற மாநிலங்களில் மேற்கண்ட பயணத்தின் அடிப்படையில் வழங்குகின்ற சுற்றுலா மேலாண்மை நடவடிக்கைகளின் திட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, அதற்குத் தக்கவாறு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் தயாரிக்கப்படும்.

**(ஏ) பயிலும் போது வருவாய் ஈட்டல்**

தமிழகத்தில் செயல்பட்டு வரும் சுற்றுலா அலுவலகங்களும், சுற்றுலா தகவல் மையங்களும் சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல் தரும் சேவை புரிந்து வருகின்றன. இவற்றின் முக்கியப் பணியானது பயணிகளுக்குச் சரியான முறையில் சுற்றுலா இடங்களுக்குச் செல்ல வழிகாட்டுவதாகும். சுற்றுலா தகவல் மையங்கள் இரயில் நிலையங்களிலும், விமான நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தற்போது, இந்தத் தகவல் மையங்களில் சுற்றுலாத் துறைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கல்லூரிகளில் சுற்றுலாவியல் பயிலும் மாணவர்களைச் சுற்றுலா மேம்பாட்டுச் செயல்முறைகளில் ஈடுபடுத்தவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், சுற்றுலாத் தகவல் மையங்களில் மாணவர்கள் செயல்புரிய அமர்த்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல் மையங்களில், மாணவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலா பயணத் திட்டங்களின் பயணச் சீட்டு விற்கும் பணியையும், தங்கும் விடுதிகளுக்கு முன்பதிவு வசதி செய்யும் பணியையும் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். இப்பணியை மேற்கொள்ளும் அவர்களுக்கு 10 விழுக்காடு ஊக்கத் தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, சென்னையில் உள்ள சென்ட்ரல், எழும்பூர் இரயில் நிலையத் தகவல் மையங்கள் மற்றும் கோயம்பேடு பேருந்து நிலையத் தகவல் மையம் ஆகியவற்றில் மேற்கூறப்பட்ட பணிகளைப் புரிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். மாணவர்களின் செயல்திறனைப் பொறுத்து, பிற இடங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**(ஐ) கோயில் வளாகங்களில் சுற்றுலா தகவல் மையங்கள் அமைத்தல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்காணும் பல்வகை ஆன்மீகச் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது:—

(அ) ஒரு நாள் திருப்பதி சுற்றுலா

[2008 மே 8

(ஆ) நவக்கிரகச் சுற்றுலா

(இ) வேலூர் ஸ்ரீபுரம் தங்ககோயில் சுற்றுலா

(உ) சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா

(ஊ) தேவியர் தரிசன சுற்றுலா (சென்னையைச் சுற்றியுள்ள முக்கியக் கோயில்களைக் காணல்)

இவ்வகை ஆன்மீகச் சுற்றுலாப் பயணங்கள், உள்நாட்டுப் பயணிகள் மத்தியில் பிரபலமாக உள்ளன. இப்பயணத்திற்கான பயணச் சீட்டுகள் சென்னை தமிழக சுற்றுலா வளாகத்தில் முன்பதிவு மூலமும் உடனடியாக பயணம் செய்யும் விதமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பயணிகளுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் முக்கியக் கோயில்களில் பயணச் சீட்டுகள் விற்பனை செய்யும் முறையும் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்து சமய அறநிலையத் துறையிடம் இதற்கான அனுமதி பெறப்படும். இந்தப் பயணச் சீட்டுகள் மாணவர்கள் மூலம் விற்பனை செய்யப்படும். அதற்கான ஊக்கத் தொகையும் விற்பனை செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும். முதற்கட்டமாக, சென்னையில் உள்ள கீழ்க்காணும் முக்கிய கோயில்களில் சுற்றுலாத் தகவல் மையங்கள் திறக்கப்படும்:

(1) கபாலீஸ்வரர் கோயில், மைலாப்பூர்.

(2) பார்த்தசாரதி கோயில், திருவல்லிக்கேணி.

(3) காளிகாம்பாள் கோயில், பாரிமுனை.

இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதையொட்டி பிற கோயில்களிலும் சுற்றுலாத் தகவல் மையங்கள் திறக்க ஆவன செய்யப்படும்.

**(ஒ) உணவு மற்றும் உறைவிடத் திட்டம்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் தமிழகத்தின் விருந்தோம்பல் சேவையினை நுகரும் வகையில், 2008-2009 ஆம் ஆண்டில் உணவு மற்றும் உறைவிடத் திட்டம் மேம்பாடு செய்யப்படும். இத்திட்டத்தில் பங்கு வகிப்பவர்களாக, தங்களிடத்தே உள்ள உபரி சொகுசு அறைகளைப் பயணிகளுக்காக ஒதுக்கி காலைச் சிற்றுண்டியுடன் தரும் இல்லத்து உரிமையாளர்களிடமிருந்து



2008 மே 8]

விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. இவை, இத்திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களுடன் கூடிய கையேடு ஒன்று வெளியிட ஏதுவாக இருக்கும். இத்திட்டத்தினால், பண்பாட்டை நுகர்ந்து, நியாயமான கட்டணத்தில் நிறைவான விருந்தோம்பல் சேவையினை சுற்றுலாப் பயணிகள் பெறுவர். இத்திட்டம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கள் இல்லத்தில் இருப்பதைப் போன்றே உணரும் வகையில் பயன் தரும். இந்த வகைத் திட்டத்தில் நுகரும் பயணிகள் நிறைவான சேவையைப் பெறுவார்கள்.

**(ஓ) வண்ணத்தில் தமிழகம்**

**'தூரிகையில் தமிழகம்'** என்ற சிறப்பு முகாம், கடந்த 1-12-2007 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் சுற்றுலாத் துறையால் நடத்தப்பட்டது. தமிழகத்திலுள்ள 27 ஓவிய வல்லுநர்களும், கலைக் கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்டனர். இந்த முகாமில் தமிழகத்தின் சுற்றுலாத் தலங்கள், பல வண்ணங்களில் தூரிகைமூலம் வரையப்பட்டு சிறந்த வெளிப்பாடுகளாக மிளிர்ந்தன. இத்தகைய சிறந்த வண்ண வெளிப்பாடுகளை ஒருங்கிணைத்து **'தூரிகையில் தமிழகம்'** என்ற வண்ணக் கையேடு 2008-2009 ஆம் ஆண்டில் வெளியிடப்படும்.

**தேசிய விருதுகள்**

2006-2007 ஆம் ஆண்டிற்காக மூன்று **தேசிய சுற்றுலா விருதுகளை** தமிழ்நாடு சுற்றுலாத் துறை கீழ்க்காணும் சிறந்த பணிகளுக்காகப் பெற்றுள்ளது :

(1) சிறந்த ஊரகச் சுற்றுலாத் திட்டம்.

(2) சிறந்த ஒருங்கிணைந்த சுற்றுலா வர்த்தக விளம்பரம்.

(3) சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம்.

செட்டிநாடு பகுதியை சிறப்பான வளர்ச்சிப் பணிகளால் மேம்படுத்தி, ஊரகச் சுற்றுலாவை ஊக்குவித்தமைக்காக சிறந்த விருது பெறப்பட்டுள்ளது. தமிழக சுற்றுலா வளங்களை பன்முகங்களில் நவீன முறையில் வெளிப்படுத்தி சிறந்த சுற்றுலா விளம்பரப் பணி செய்தமைக்காக விருது பெறப்பட்டுள்ளது. மேலும், செங்கல்பட்டு அருகே உள்ள தண்டரை என்ற ஊரில் இயங்கி வரும் இருளர் பெண்கள் நல மேம்பாட்டுச் சங்கம், சுற்றுலாச் சேவையுடன் கூடிய கிராமப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கான விருது பெற்றுள்ளது.

[2008 மே 8

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சுற்றுலா தொடர்பான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வர்த்தக ரீதியில் ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கோடு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஐந்து அரசு தங்கும் விடுதிகளுடன் (Govt. Bungalows) மற்றும் இரண்டு பேருந்துகளுடன் தனது முதற்கட்டப் பணியைத் தொடங்கியது. தொடர்ந்த அதிவேக மேம்பாட்டு நடவடிக்கைகள்மூலம் ஆலவிருட்சமாக வளர்ந்து, இன்று "ஓட்டல் தமிழ்நாடு" என்ற 55 தங்கும் விடுதிகளைக் கொண்டு, தென்னிந்தியாவில் பெருமைப்படத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. பேருந்துகளின் வளர்ச்சி எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.

முக்கிய சுற்றுலாத் தலங்களில், தங்கும் விடுதிகள், இளைஞர் விடுதிகள், உணவகங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்குக் கருவி இல்லங்கள், ஏரிப் பூங்காக்கள், பெட்ரோல் பங்க் போன்ற வசதிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முக்கிய சுற்றுலாத் தலங்களான, உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் இளைஞர் விடுதிகளை நடத்தி வருகிறது. இளைஞர் விடுதியில் உள்ள பலர் தங்கும் அறையில் பருவ காலங்களில், நடுத்தர வர்க்க சுற்றுலாப் பயணிகளும் ஏற்கக்கூடிய வகையில் மிகக் குறைந்த தங்கும் வசதி கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

### நிதி நிலவரம்

| விவரங்கள் | 2006-07 | 2007-08 | வளர்ச்சி விழுக்காடு |
|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | |
| விற்பனை அளவு | 51.70 | 58.40 | 13 % |
| நிகர இலாபம் | 7.84 | 9.20 | 21 % |



2008 மே 8]

### தங்கும் விடுதிகள் (Hotels)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளின் ஆண்டு வருவாய் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.41.43 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வருவாய், கடந்த 2006-2007 ஆம் ஆண்டின் வருவாயான ரூ.36.44 கோடியை விட 14 விழுக்காடு அதிகமாகும். தங்கும் விடுதிகள், உணவகங்கள் மற்றும் மதுபானங்கள் விற்பனை மூலமான ஆண்டு வருவாய் 2007-2008 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. பெரிய தங்கும் விடுதிகளில் வசதிகளை மேம்படுத்தியதால் ஓட்டல்களில் தங்கியோரின் விகிதம் முந்தைய ஆண்டுகளைவிட 2007-2008 ஆம் ஆண்டு 4 விழுக்காடு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பயணிகள் தங்கும் விகிதம் (Occupancy rate level) 2005-2006 ஆம் ஆண்டில் 50 விழுக்காடாகவும், 2006-2007 ஆம் ஆண்டில் 55 விழுக்காடாகவும் 2007-2008 ஆம் ஆண்டில் 59 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

பல்வேறு படகு இல்லங்களில் நவீன படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டதால், படகு இல்லங்கள்மூலம் கிடைத்த வருவாய் 25 விழுக்காடு உயர்ந்துள்ளது.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களைக் குத்தகைக்கு (Franchise) விடுதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 21 தங்கும் விடுதிகளும், ஏழு உணவகங்களும் ஆண்டுக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் மீதமுள்ள தங்கும் விடுதிகளின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

### பயணங்கள் (Tours)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரை நாள் முதல் 14 நாட்கள் வரை கொண்ட 35-க்கும் அதிகமான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இப்பயணத் திட்டங்களில், தமிழகம் மற்றும் தென்னிந்தியாவில் உள்ள சுற்றுலாத் தலங்கள் இடம்பெற்றுள்ளன. மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தென் ஆப்பிரிக்கா நாடுகளில் உள்ள பயணிகளைக் கவரும் வகையில் அவர்கள் விருப்பத்திற்கேற்ப சிறப்புச் சுற்றுலாப் பயணங்களும் நடத்தப்படுகின்றன. மாநில அரசுப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்படும் விடுப்பு சலுகை பயணத் திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

[2008 மே 8

2006-2007 ஆம் ஆண்டு போக்குவரத்துப் பிரிவின் மூலம் ரூ. 7.25 கோடி ஆண்டு வருமானம் ஈட்டப்பட்டு, அதன் மூலம் ரூ. 1.27 கோடி இலாபம் பெறப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் ஆண்டு வருவாய் ரூ. 7.72 கோடியாகவும், இயக்க இலாபம் ரூ. 1.36 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

**பொருட்காட்சிகள்**

1974 ஆம் ஆண்டு முதல் சென்னை தீவுத் திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. கடந்த 2007 ஆம் ஆண்டில் 12 இலட்சம் பார்வையாளர்கள் பொருட்காட்சியைக் கண்டுகளித்தனர். 2008 ஆம் ஆண்டு நடத்தப் பெற்ற பொருட்காட்சி மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்று, 15 இலட்சம் பார்வையாளர்களின் வருகையால் 25 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி கடந்த பல ஆண்டுகளில் காணாத வளர்ச்சியாகும். கடந்த "காணும் பொங்கல்" நாளன்று மட்டும் 1.16 இலட்சம் பார்வையாளர்கள் பொருட்காட்சியைக் கண்டு களித்துள்ளனர். 2008 ஆம் ஆண்டில் பல புதுமையான பொழுதுபோக்கு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அண்ணா கலை அரங்க மேடையில், மாமல்லபுரம் அர்ச்சுனன் தபசுக் காட்சி தத்ரூபமாக, புதுமையான வடிவமைப்புடன் அமைக்கப்பட்டிருந்தது பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்தது. பட்டிமன்றம் மற்றும் புகழ்பெற்ற கலை விற்பன்னர்களின் கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் இந்தக் கலை அரங்கில் நடத்தப்பட்டன. கிராமியக் கலைகள் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2007 ஆம் ஆண்டில் ரூ.2.66 கோடி என்றிருந்த பொருட்காட்சி வருவாய் 2008-இல் ரூ.3.17 கோடியாகவும், ரூ.1.36 கோடி என்றிருந்த இலாபம் ரூ.1.51 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

**கணினிமயமாக்குதல்**

(அ) முட்டுக்காடு, கொடைக்கானல், பிச்சாவரம் மற்றும் ஏற்காடு ஆகிய நான்கு இடங்களில் உள்ள படகு குழாம்கள் முழுவதுமாக ரூ.10.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

(ஆ) கணக்குகளை கணினிமயப்படுத்த ரூ.17.00 இலட்சம் செலவில் 28 கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டன.



2008 மே 8]

(இ) சிறந்த முறையில் கோப்புகளைக் கையாளுவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் சுற்றுலா ஆணையரகத்தில் கடிதங்களை கணினியால் கையாளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**இணையதளம் மூலம் நேரடி முன்பதிவு செய்யும் முறை**

இணையதளம் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளின் அறைகள் முன் பதிவு, சுற்றுலாப் பயணங்கள் முன்பதிவு செய்யும் முறை 2-7-2004-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இணையதளம் மூலமாக முன்பதிவு செய்யும் முறையை, இந்தியாவில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் முதல் முறையாக அறிமுகப்படுத்தியது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான். இதன்மூலம், பயணிகள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து கொண்டே, அறைகளை முன்பதிவு செய்யலாம், சுற்றுலாப் பயணத் திட்டத்தில் உறுதி செய்யப்பட்ட பயணச் சீட்டும் பெறலாம். இந்த இலகுவான முன் பதிவு வசதியால், 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.14.97 இலட்சமாக இருந்த வருவாய், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.101.75 இலட்சமாக உயர்ந்துள்ளது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1997 ஆம் ஆண்டு தனது வலைதளத்தை அமல்படுத்தியது. 2007 ஆம் ஆண்டு வலைதளத் தகவல்கள் மேம்பாடு செய்யப்பட்டு, கோயில்கள், மலைவாசஸ்தலங்கள், கடற்கரைகள் போன்ற தனித்தகவல் பக்கங்கள் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி இணைக்கப்பட்டன.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வலைதளத்தை மாதமொன்றிற்கு 50,000 பேர் பார்வையிடுகின்றனர்.

- மாமல்லபுரம், ஏற்காடு, திருச்சிராப்பள்ளி, கொடைக்கானல், உதகமண்டலம், கோயம்புத்தூர், மதுரை-I, மதுரை-II, திருச்செந்தூர், இராமேஸ்வரம், தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய முக்கிய 12 ஓட்டல்களை இணைத்து ஓட்டல் மேலாண்மை முறையையும், சுற்றுலா வளாகம் மற்றும் இதர இடங்களில் உள்ள விற்பனைப் பிரிவுகளை இணைத்து சுற்றுலாப் பயண மேலாண்மை முறையையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

[2008 மே 8

## திருவள்ளுவர் சிலை

2002 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து, கன்னியாகுமரியிலுள்ள திருவள்ளுவர் சிலை பராமரிப்பை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்றுக்கொண்டது. சுற்றுலா கட்டமைப்பு வசதிகளான பயணிகள் நடைபாதை, கைப்பிடிகள், கருங்கல் தளம் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.90.00 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில் மேற்கொண்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கடற் காற்றினால் திருவள்ளுவர் சிலை சேதமடையாமல் பாதுகாக்கும் பொருட்டு, 2008-2009 ஆம் ஆண்டு ரூ.80.00 இலட்சம் செலவில் பாலிசிலிகான் என்ற இரசாயனப் பூச்சு பூசப்படும்.

## வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள்

- விமான நிலையப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளில் அறைகளை வாடகைக்குக் கொடுப்பதற்காக இந்திய விமான நிலையங்கள் குழுமத்துடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இதர பொதுத் துறை நிறுவனங்களுடனும் இதுபோன்ற ஒப்பந்தங்களை ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஒரு நாள் சுற்றுலாவான பொற்கோயில் சுற்றுலா (ஸ்ரீபுரம், வேலூர்) டிசம்பர் 2007-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- டெல்லி, ஜெய்ப்பூர், மும்பை, அகமதாபாத், கொல்கத்தா சண்டிகர் மற்றும் பெங்களூரு நகரங்களில் சுற்றுலா விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.
- மாமல்லபுரம் கடற்கரை குடில்களில் தங்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மன மகிழ்ச்சிக்காக "மாட்டு வண்டி இன்பச் சவாரி" வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, அவர்களுக்கு சைக்கிளில் செல்லும் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.
- படகுப் பந்தயங்கள், படகுச் சவாரி பாதுகாப்பு விழிப்புணர்ச்சி முகாம், புதிய நவீன படகுகளின் அறிமுகம் என பல்வேறு வழிகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகுக் குழாம்கள் வியாபாரப்படுத்தப்பட்டன. ரூ. 65.00 இலட்சம் செலவில் 'வேவ் ரன்னர்ஸ்' எனப்படும் நீர் ஸ்கூட்டர்களும்,



2008 மே 8]

ஜயாக்குகளும், புதிய படகுகளும் வாங்கப்பட்டன. 2006-2007 ஆம் ஆண்டில் படகுக் குழாம்களின்மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ. 447.00 இலட்சம் மட்டுமே. ஆனால் மேற்சொன்ன முயற்சிகளின் காரணமாக, 2007-2008 ஆம் ஆண்டில் இந்த வருவாய் 25 விழுக்காடு வளர்ச்சியுடன் ரூ.560.00 இலட்சமாக அதிகரித்துள்ளது.

- மாமல்லபுரம் கடற்கரை குடில்கள் வளாகத்தில் ரூ.3.50 இலட்சம் செலவில் கூடார தங்குமிட வசதி (Tented Accommodation) அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் இந்த கூடார தங்குமிட வசதிகளுக்கு முன்னதாகவே முன்பதிவுகள் முடிந்துவிடும் சூழல் உள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதி வசதிகள் பற்றிய தகவல்களும், சுற்றுலாப் பயணத் திட்டங்கள் பற்றிய தகவல்களும் சென்னை வாழ் மக்களைச் சென்றடையும் வகையில், நடைபயணவாசிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன், சென்னை நகர பெரிய பூங்காக்களில் விழிப்புணர்ச்சி நாள் கடைபிடிக்கப்பட்டது.
- தஞ்சாவூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஏற்காடு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் உள்ள தங்கும் விடுதிகள் ரூ.137.45 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டன.
- பல்வேறு தங்கும் விடுதிகளுக்கு ரூ.45.00 இலட்சம் செலவில், 1,066 புதிய மெத்தைகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- படகு இல்லங்களுக்கு ரூ.29.00 இலட்சம் செலவில் 17 படகுகளை இயக்கும் விசைக் கருவிகள் (Outboard Motors) வாங்கப்பட்டுள்ளன.
- புதிய நவீன வசதி கொண்ட 'வால்வோ' பேருந்து ஒன்று ரூ.65.10 இலட்சம் செலவில் கூடுதலாக வாங்கப்பட்டுள்ளது.
- ரூ.32.50 இலட்சம் செலவில் 250 கிலோ வாட் திறன் கொண்ட மின் ஆக்கிகள் வாங்கப்பட்டு மாமல்லபுரம் மற்றும் கொடைக்கானலில் உள்ள தங்கும் விடுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

[2008 மே 8

**திருவள்ளுவர் சிலை**

2002 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து, கன்னியாகுமரியிலுள்ள திருவள்ளுவர் சிலை பராமரிப்பை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்றுக்கொண்டது. சுற்றுலா கட்டமைப்பு வசதிகளான பயணிகள் நடைபாதை, கைப்பிடிகள், கருங்கல் தளம் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.90.00 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில் மேற்கொண்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கடற் காற்றினால் திருவள்ளுவர் சிலை சேதமடையாமல் பாதுகாக்கும் பொருட்டு, 2008-2009 ஆம் ஆண்டு ரூ.80.00 இலட்சம் செலவில் பாலிசிலிகான் என்ற இரசாயனப் பூச்சு பூசப்படும்.

**வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள்**

- விமான நிலையப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளில் அறைகளை வாடகைக்குக் கொடுப்பதற்காக இந்திய விமான நிலையங்கள் குழுமத்துடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இதர பொதுத் துறை நிறுவனங்களுடனும் இதுபோன்ற ஒப்பந்தங்களை ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஒரு நாள் சுற்றுலாவான பொற்கோயில் சுற்றுலா (ஸ்ரீபுரம், வேலூர்) டிசம்பர் 2007-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- டெல்லி, ஜெய்ப்பூர், மும்பை, அகமதாபாத், கொல்கத்தா சண்டிகர் மற்றும் பெங்களூரு நகரங்களில் சுற்றுலா விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.
- மாமல்லபுரம் கடற்கரை குடில்களில் தங்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மன மகிழ்ச்சிக்காக "மாட்டு வண்டி இன்பச் சவாரி" வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, அவர்களுக்கு சைக்கிளில் செல்லும் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.
- படகுப் பந்தயங்கள், படகுச் சவாரி பாதுகாப்பு விழிப்புணர்ச்சி முகாம், புதிய நவீன படகுகளின் அறிமுகம் என பல்வேறு வழிகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகுக் குழாம்கள் வியாபாரப்படுத்தப்பட்டன. ரூ. 65.00 இலட்சம் செலவில் 'வேவ் ரன்னர்ஸ்' எனப்படும் நீர் ஸ்கூட்டர்களும், கயாக்குகளும், புதிய படகுகளும் வாங்கப்பட்டன. 2006-2007 ஆம் ஆண்டில் படகுக் குழாம்களின்மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ. 447.00 இலட்சம் மட்டுமே. ஆனால் மேற்சொன்ன முயற்சிகளின் காரணமாக, 2007-2008 ஆம் ஆண்டில் இந்த வருவாய் 25 விழுக்காடு வளர்ச்சியுடன் ரூ.560.00 இலட்சமாக அதிகரித்துள்ளது.



2008 மே 8]

- மாமல்லபுரம் கடற்கரை குடில்கள் வளாகத்தில் ரூ.3.50 இலட்சம் செலவில் கூடார தங்குமிட வசதி (Tented Accommodation) அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் இந்த கூடார தங்குமிட வசதிகளுக்கு முன்னதாகவே முன்பதிவுகள் முடிந்துவிடும் சூழல் உள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதி வசதிகள் பற்றிய தகவல்களும், சுற்றுலாப் பயணத் திட்டங்கள் பற்றிய தகவல்களும் சென்னை வாழ் மக்களைச் சென்றடையும் வகையில், நடைபயணவாசிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன், சென்னை நகர பெரிய பூங்காக்களில் விழிப்புணர்ச்சி நாள் கடைபிடிக்கப்பட்டது.
- தஞ்சாவூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஏற்காடு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் உள்ள தங்கும் விடுதிகள் ரூ.137.45 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டன.
- பல்வேறு தங்கும் விடுதிகளுக்கு ரூ.45.00 இலட்சம் செலவில், 1,066 புதிய மெத்தைகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- படகு இல்லங்களுக்கு ரூ.29.00 இலட்சம் செலவில் 17 படகுகளை இயக்கும் விசைக் கருவிகள் (Outboard Motors) வாங்கப்பட்டுள்ளன.
- புதிய நவீன வசதி கொண்ட 'வால்வோ' பேருந்து ஒன்று ரூ.65.10 இலட்சம் செலவில் கூடுதலாக வாங்கப்பட்டுள்ளது.
- ரூ.32.50 இலட்சம் செலவில் 250 கிலோ வாட் திறன் கொண்ட மின் ஆக்கிகள் வாங்கப்பட்டு மாமல்லபுரம் மற்றும் கொடைக்கானலில் உள்ள தங்கும் விடுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

[2008 மே 8

**புதிய வர்த்தக முயற்சிகள்**

- முட்டுக்காட்டில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான 15 ஏக்கர் நிலத்தில், ரூ.150.00 கோடி திட்ட மதிப்பீட்டில், 'கடலடி நீர் மீன்காட்சியகம்' ஒன்று அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம், அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் அமைக்கப்படும்.
- அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் முதலியார்குப்பத்திலுள்ள படகுக் குழாமில் படகு வீடுகள் (House Boats) அமைக்கப்படும்.
- முதலியார்குப்பம் படகுக் குழாமில் மிதக்கும் உணவகம் ஒன்று அமைக்கப்படும்.
- முட்டுக்காடு படகு இல்லத்தில், அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் 'லேசர் கண்காட்சி' நடத்தப்படும்.
- மாமல்லபுரம் கடற்கரை குடில்கள் வளாகத்தில், அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் 'மூங்கில் குடிசைகள்' அமைக்கப்படும்.
- மே 2008 முதல் பெங்களூரு நவக்கிரகக் கோயில்களைக் தரிசிக்கும் வகையில் 7 நாள் இரயில் மற்றும் சாலைவழி சுற்றுலா இயக்கப்படும்.
- மாமல்லபுரத்தில் 20 நடுத்தர வசதி கொண்ட குடில்களை தரம் உயர்த்தி, 20 குடில்கள் கூடுதலாகக் கட்டும் பணிகள் ரூ.220.00 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஆறு மாதத்திற்குள் முடிக்கப் பெறும். இந்த நடவடிக்கைகளால், ஆண்டொன்றுக்கு ரூ.40.00 இலட்சம் கூடுதல் இலாபம் கிடைக்கும்.
- மதுரையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு-II ரூ.42.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.
- கன்னியாகுமரியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு ரூ.50.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.
- கன்னியாகுமரியில் உள்ள கேப் ஓட்டல் ரூ.70.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.



2008 மே 8]

- முட்டுக்காடு படகு இல்லத்தை ரூ.88.00 இலட்சம் செலவில் மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008 ஜூன் மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.25.00 இலட்சம் இலாபம் அதிகமாகக் கிடைக்கும்.
- 2008 மே மாதத்தில், சென்னை தீவுத் திடலில் கோடை விழா நடத்தப்படும். பனி உலகம், பொழுதுபோக்கு அம்சங்கள், வியாபார விற்பனை மையங்கள், உணவுக் கூடங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்ற முக்கிய அம்சங்கள் இவ்விழாவில் இடம்பெறும். ஏப்ரல் முதல் நவம்பர் முடிய, தொடர் பொருட்காட்சிகளை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பயணிகள் வருகை அதிகம் உள்ள சுற்றுலாத் தலங்களில் நட்சத்திர வசதிகளுடன் கூடிய 'பட்ஜெட் ஓட்டல்கள்' அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் கட்டப்படும்.
- வலைதளம்மூலமாக தமிழ்நாட்டிலுள்ள பாரம்பரியத் தலங்களைக் கண்டுகளிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வலைதளத்தில், மின் ஆளுமை முறை சுற்றுலா (Virtual Tour) அறிமுகப்படுத்தப்படும்.
- மாமல்லபுரத்தில் அரசு மற்றும் தனியார் பங்கேற்பு திட்ட அடிப்படையில் இசை நீரூற்று ஒன்று நிறுவப்படும்.
- தமிழ்நாட்டில் ஹெலிகாப்டர் சுற்றுலா நடத்தப்படும்.
- நான்கு புதிய பேருந்துகள் ரூ.57.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்
- முதலியார்குப்பம் மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் கூடார தங்குமிடங்கள் அமைக்கப்படும்.
- முதலியார்குப்பம், பிச்சாவரம், உதகமண்டலம் மற்றும் பைகாரா படகு இல்லங்களில் மர உச்சியில் குடில்கள் அமைக்கப்படும்.
- உதகமண்டலத்தில் நடன நீரூற்று ஒன்று அமைக்கப்படும்.
- ரூ.50.00 இலட்சம் செலவில் கூடுதல் படகுகள் வாங்கப்படும்.

[2008 மே 8

**முடிவுரை**

ஒட்டுமொத்த செழுமையின் பிரதிபலிப்பே சுற்றுலாவின் வளர்ச்சி. சுற்றுலா தனிமையாக செழிக்க இயலாது. அனைத்துத் துறைகளின் ஆதரவும் அதற்குத் தேவை. அது பல்வேறு துறைகளுக்கு வள ஆதாரங்களை பிரித்தளிக்கும் கால்வாயாகச் செயல்பட்டு, சராசரி மனிதனின் வருமான மகசூலுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. சுற்றுலா, வேலைவாய்ப்பை அதிகரிக்கிறது; பண சுழற்சியை உயர்த்துகிறது; வாழ்சூழலை வளப்படுத்துகிறது; தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துகிறது; மாநிலத்தின் பண்பாட்டுச் சூழலை பண்படுத்துகிறது. நமது மாநிலத்தில் உள்ள அளவற்ற வளங்களை முழுமையாகப் பயன்படுத்த, அரசும், தனியாரும் இணைந்து செயல்பட வேண்டும். தமிழ்நாடு சுற்றுலா, நமது மாநிலத்தில் புதிய செல்லிடங்களை உருவாக்கி, சுற்றுலாவின் பல்வேறு கோட்பாடுகளை பிரபலப்படுத்தி வருகிறது. அது உள்ளூர் சுற்றுலாவையும், பன்னாட்டுச் சுற்றுலாவையும் திறமையான முறையில் சமனாக கையாளுகிறது. தமிழ்நாடு தனது விளம்பர முகாம்கள் மூலமாகவும், மாறுபட்ட திட்டங்களினாலும் தனக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. ஒரு பொருத்தமான திட்டத்தை (mission) வடிவமைத்து இத்துறையின் எதிர்காலத் திட்டங்களை (vision) நிறைவேற்றும் வகையில், இந்த அரசு அனைத்துத் துறைகள் மற்றும் நிறுவனங்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்கும். அது எல்லாச் சுற்றுலாப் பயணிகளின் மனத்திலும் மறக்க முடியாத அனுபவங்களை ஏற்படுத்தும். இந்த நினைவுகளை உருவாக்கிக் கொள்ளவும் அதனை நெடுங்காலத்திற்கு பாதுகாத்துக் கொள்ளவும் அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு வருகை புரிவார்கள்.



# வரைபடம் மற்றும் புகைப்படங்கள்

[2008 மே 8






2008 மே 8]



சுற்றுலா புள்ளி விவரம்














## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்












## நிறைவடைந்த திட்டங்கள்



மாமல்லபுரத்தில் மேம்பாட்டுப் பணிகள்



மாமல்லபுரத்தில் (நடைபாதை) மேம்பாட்டுப் பணிகள்

## நிறைவடைந்த திட்டங்கள்



இராமேசுவரத்தில் உள்ள அக்னி தீர்த்தம் மேம்பாட்டுப் பணிகள்



ஏலகிரி மேம்பாட்டுப் பணிகள்



## 2008-2009ல் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்



கொல்லிமலை



ஸ்ரீபுரம் பொற்கோவில்

## 2008-2009ல் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்



தரங்கம்பாடி



பழவேற்காடு



## மருத்துவச் சுற்றுலா



## கிராமியச் சுற்றுலா



**சுற்றுலா நிகழ்வுகள்**



தமிழ்நாடு சுற்றுலா பெற்ற மூன்று தேசிய சுற்றுலா விருதுகள்




தமிழ்நாடு சுற்றுலா பெற்ற மூன்று தேசிய சுற்றுலா விருதுகளை மைய அரசின் மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தமிழ்நாடு அரசு சுற்றுலா-பண்பாட்டுத்துறை செயலர், சுற்றுலா ஆணையர் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள். மைய அரசின் மாண்புமிகு சுற்றுலா-பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் உடன் உள்ளார்கள்.





**சுற்றுலா நிகழ்வுகள்**



விழாக்களில் வெளிநாட்டினர் பங்குகொள்ளுதல்



[2008 மே 8

**சுற்றுலா நிகழ்வுகள்**



“விருந்தினர் போற்றுதும்” சுற்றுலா முகாம்

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**



தீவுத்திடலில் நடைபெற்ற இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சியில் நாட்டுப்புறக்கலைகள்



2008 மே 8]

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**



ஓட்டல் தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி.



மேம்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஓட்டலின் படுக்கை அறை

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிகழ்வுகள்**



புதிய சுற்றுலா பேருந்துகள் துவக்கவிழா



புதிய ஓல்வோ பேருந்து





## இணைப்பு II

*(506 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கலை பண்பாட்டு இயக்ககம்

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது)*

கலையும், பண்பாடும் மனித மனம், உணர்வு ஆகியவற்றின் உச்ச பரிணாமம். அழகியல் முன்னேற்றத்தின் பரிமாணம். அறிவியலும், கலையும் ஒன்றுக்கொன்று அனுசரணையாய் இருந்து முன்னேற்றமடைய உதவுகின்றன. இரண்டும் தேடல், ஆர்வம், படைப்புத் திறன் ஆகியவற்றை மையமாகக் கொண்டவை.

கலை, வாழ்வைச் செம்மையாக்குகிறது. ஓவியம், சிற்பம், இசை, நடனம் ஆகியவை சாதாரண வாழ்வில் மகிழ்ச்சியை நெய்கின்றன. கலை, வாலாயமான வாழ்வில் இருந்து அசாத்தியமான உயரத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. ஆர்வத்தை அதிகரிக்கச் செய்து, நம் துயரங்கள், துன்பங்களுக்கிடையே நம் இருத்தலை ரசவாதம் செய்கின்றது. நம் தவறுகளையும், பிழைகளையும் மென்மையாகப் பிரதிபலித்து புதிய மனிதர்களாக நம்மைப் புலரச் செய்கின்றது. சமூகச் சீர்திருத்தங்களுக்கும், புரட்சிகரமான கருத்துக்களுக்கும் கட்டியங்காரராக விளங்குகிறது.

கலை பண்பாட்டுத் துறை, கலை வடிவங்களைப் பரப்பியும், கலைஞர்களின் கலை முயற்சிகளை ஊக்குவித்தும், அவர்களைப் போற்றியும் பணியாற்றி வருகிறது. நம் பண்பாட்டு நெறிகளை எதிர்காலத்திற்குப் பாதுகாக்கிறது. தொன்மைக் கலை மரபுகளையும், நாட்டுப்புறக் கலைகளையும், செவ்வியல் கூறுகளையும் தமிழகத்தின் அனைத்துத் திக்குகளிலும் பரப்பும்பொருட்டு அயராது பணியாற்றும் துறையே கலை பண்பாட்டுத் துறை.

### மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

கலை பண்பாட்டுப் பணிகளை மக்களிடையே கொண்டு செல்லும் வாயிலாக 1997-1998 ஆம் ஆண்டில் நான்கு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், 1998-1999 ஆம் ஆண்டில் இரண்டு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக்கலை பண்பாட்டு மையங்கள் மாவட்டக் கலைமன்றங்கள், மாவட்ட அரசு இசைப்

[2008 மே 8

பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து அரசு திட்டங்களைச் சிறப்புடன் மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கலை பண்பாட்டுத் துறை சார்பாகத் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் தமிழிசை விழா, கார்த்திகை ஒளி விழா, பொங்கல் கலை விழா, நாட்டுப்புறக் கலை விழா, பாவை விழா, சாரல் விழா, சீர்காழி மூவர் விழா முதலிய கலை விழாக்களும், கலைப் பயிற்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

## மாவட்டக் கலை மன்றங்கள்

கலைஞர்களை அடையாளம் கண்டு உதவவும், மறைந்து கிடக்கும் கலைகளை மக்களிடையே கொண்டு செல்லவும் மாவட்டந்தோறும் மாவட்டக் கலை மன்றங்கள் பணியாற்றி வருகின்றன.

மாவட்டக் கலை மன்றங்கள்மூலம் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசிடமிருந்து உதவியைப் பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்தல், பயணச் சலுகை பெறுதல் ஆகியவற்றிற்கு அடையாள அட்டைகள் பயன்பட்டு வருகின்றன.

## நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

நலிந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அவர்கள் திறமைகளைப் போற்றி, அவர்களைப் பாதுகாப்பதும் முக்கியம் என்பதை தமிழக அரசு உணர்ந்து, அவர்களுக்குத் தேவையானபோது நிதியுதவி அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கம், தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல உதவி அளிக்கவும், நலிந்த நிலையில் உள்ளவர்கள் பொலிவு பெறும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தவும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இது செயல்பட்டு வருகிறது. துறையின் மாவட்ட முகாம்களின் மூலமாக இவ்வாரியத்தில் இதுவரை 7,000-த்திற்கும் அதிகமான நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.



2008 மே 8]

## அரசு இசைக் கல்வி பயிலகங்கள்

இந்திய இசை மரபில் தமிழிசைக்குத் தனி இடம் உண்டு. தமிழகத்தில் இசையை ஓங்கி ஒலிக்கச் செய்ய இசைக் கல்லூரிகளும், இசைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இசைக் கல்லூரிகளில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகையாக திங்கள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் வழங்கப்படுகின்றது.

### 1. அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதசுரம், தவில் ஆகிய இசைக் கருவிகளில் பயிற்சி, நாட்டுப்புறக் கலைகள், பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில் மேல்நிலை இசைக்கலைமணி ஈராண்டு முதுநிலை பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 319 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

### 2. அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை, அரசு இசைக் கல்லூரி 1979 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சியில் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 174 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

### 3. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரி 1993 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2007-2008ஆம் கல்வியாண்டில் 85 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

[2008 மே 8

**4. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

திருவையாறு, அரசு இசைக் கல்லூரி 1997 இல் தொடங்கப் பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, முழவு (மிருதங்கம்), பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், இளங்கலை இசையில் மூன்றாண்டு குரலிசைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 120 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

**5. மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள்**

சென்னையில் இரண்டு மாலை நேர இசைக் கல்லூரி மையங்களும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையமும் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்) ஆகியவற்றிலும், இசைக் கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன. 2007-2008 ஆம் கல்வியாண்டில், சென்னை மாலைநேர இசைக் கல்லூரி மையத்தில் 53 மாணவ மாணவியர்களும், மதுரை மாலைநேர இசைக் கல்லூரி மையத்தில் 38 மாணவ மாணவியர்களும் பயின்று வருகின்றனர்.

**ஆ) மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்**

இசைக் கல்வியை மேலும் பரவலாக்கும் நோக்கத்திலும், பள்ளிசாரா முறையில் இசை பயிலும் சிறுவர் சிறுமியருக்குப் பள்ளிசார் முறையைக் கொண்டு வரவும் அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

இளம் பருவத்திலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும், அவர்களைப் புகழ்மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடனும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 1997 ஆம் ஆண்டு திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 1998 ஆம் ஆண்டு விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர் ஆகிய 5 மாவட்டங்களிலும், 1999 ஆம் ஆண்டு காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சீர்காழி, கிருட்டிணகிரி, சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களிலும், 2000 ஆம் ஆண்டு ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய 2 மாவட்டங்களிலும் ஆக மொத்தம் இதுகாறும் 17 மாவட்ட



2008 மே 8]

அரசு இசைப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டுச் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு முதல் கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகிய பாடப் பிரிவுகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் கல்வியாண்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் 916 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**அரசு கவின் கலைக்கல்லூரிகள்**

**1. அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை**

இக்கல்லூரி 1850 இல் தொடங்கப்பெற்றது. தலைசிறந்த ஓவியர்களை உருவாக்கிய பெருமை பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுகால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன:

**இளங்கலைப் பட்டப் படிப்பு :**

1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு
3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
4) வண்ணக்கலை
5) சிற்பக்கலை
6) பதிப்போவியம்

**முதுகலைப் பட்டப் படிப்பு :**

1) வண்ணக்கலை
2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
3) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு
4) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றவையாகும். இக்கல்லூரியில்

2007-2008 ஆம் கல்வியாண்டில் 514 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். இக்கல்லூரியில் உள்ள தொன்மை மிக்க கட்டடங்களைப் புதுப்பிக்க ஒரு கோடி ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்பட உள்ளன. பணிகள் முடிவுற்றபின் சென்னையின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக அது திகழும்.

**2. அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்**

இக்கல்லூரி 1887 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப் படுகின்றன:

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

1) வண்ணக்கலை
2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு
3) சிற்பக்கலை

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

1) வண்ணக்கலை
2) சிற்பக்கலை

இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 282 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

மாமல்லபுரம் சிற்பச் சரித்திரத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்திய சிற்பக் கட்டடக் கலையின் அருங்காட்சியமாக அது திகழ்கிறது. திறந்தவெளி சிற்பம், குடவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்சிற்பம் ஆகிய மூன்றும் ஒரே இடத்தில் அமைந்திருப்பது அதன் சிறப்பு. இத்தகு வரலாற்றுப் புகழுடைய மாமல்லபுரத்தில் அரசு கட்டடக்கலை சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 2000-2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப்பெற்று பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.



மரபு கட்டடக் கலைப் பிரிவில் தொழில்நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக் கலை, மரபு ஓவியக்கலை-வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 129 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மாமல்லபுரத்தில் அமைக்கப்படவிருக்கின்ற சிற்பப் பூங்கா, சிற்பிகள் பணியாற்ற பட்டறையையும், பயணிகள் கண்டுகளிக்கும் பாடசாலையையும் அமைத்துத் தரவிருக்கின்ற அரிய முயற்சி.

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம் 2000-2001 ஆம் கல்வி ஆண்டு முதல் கலை பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம்மூலம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்புகள், மூன்றாண்டு பட்டப் படிப்புகள், முதுகலை பட்டப் படிப்புகள் பின்வரும் பாடப்பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன:

1) பரதநாட்டியம்
2) குரலிசை
3) கின்னரம் (வயலின்)
4) வீணை
5) முழவு (மிருதங்கம்)

இவை தவிர பரதநாட்டியத்திலும், இசையிலும் முழு நேர, பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பும் உள்ளது. இக்கல்லூரியில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் 208 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூலநிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு

ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. தென்னகப் பண்பாட்டு மையம் தனித்தும், மாநிலக் கலை பண்பாட்டுத் துறை வழியாக நிதி உதவி வழங்கியும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், சங்கங்கள் பதிவு சட்டம் 21/1860 இன்படி, 27-11-1956 இல் முறையாகப் பதிவு செய்யப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. மாநில அரசு வழங்கும் நல்கைத் தொகைமூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 1. கலைப்பணித் திட்டங்கள்

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகை நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின்மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்கு சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்கு கலைமாமணி என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்து தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு நல்கை வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலைத் தன்மைகளை வருங்கால மரபினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழி ஊரகக் கலைகள், கவின்மிகு நுண்கலைகளைப்பற்றிய



ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முதன்மைப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செய்து வருகின்றது.

### 2. கலைமாமணி விருது வழங்குதல்

புலன்களுக்கு விருந்து படைக்கிற கலைஞர்களுக்கு 'விருது' வழங்குவது, அவர்கள் மகிழ்ச்சிக்காகவும், நம் மனநிறைவிற்காகவுமே. கலைத் துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டி சிறப்பு செய்யும் பொருட்டு, அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை, 1,450 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 324 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ரூ. 1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ. 5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ. 10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ. 15,000/- வீதம் 22 கலைஞர்களுக்கும் ஆகமொத்தம் 199 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 27 கலை நிறுவனங்களுக்கும், 18 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்களும், சுழற்கேடயங்களும் வழங்கப்பெற்றுள்ளன.

### 3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

கலையையே வாழ்வாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ. 500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. 2006 ஆம் நிதியாண்டிலிருந்து இந்நிதியுதவித் தொகை ரூ. 1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 6,391 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெறும் வகையில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 4. மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்குதல்

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ்

[2008 மே 8

ரூ. 2,000/- வீதம் 88 குடும்பங்களுக்கும், ரூ. 3,000/- வீதம் 77 குடும்பங்களுக்கும், ரூ. 5,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும், ரூ. 6,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டு ஆக மொத்தம் 327 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**5. மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம்**

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை-பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

**6. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கிவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து, அதன்வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. 2007-2008 ஆம் நிதியாண்டில் தெரிவு செய்யப்பெற்றுள்ள 32 இளங்கலைஞர்களை உள்ளடக்கி, இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,792 இளங்கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**7. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்**

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/-வீதம் தொகையும், ஒவ்வொரு கலைக் குழுவிற்கும் ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1,425 ஊரகக் கலைஞர்களும் / கலைக்குழுக்களும் பயன் அடைந்துள்ளனர். இவ்வகையில், பதிவு செய்யப்பெற்ற நாட்டுப்புறக் கலைக் குழுக்களுக்குத் தற்போது நல்கை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



2008 மே 8]

**8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழ்க்கலை பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**9. புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 13 நாட்டிய நாடகங்கள் மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**10. அரிய கலை நூல்களுக்கு நல்கை வழங்குதல்**

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு**

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு அரசால் 1975 இல் தொடங்கப்பட்டது. நுண்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும் ஓவிய நுண்கலைக் குழு செயல்படுகிறது. மாநில அரசு வழங்கும் நல்கைத் தொகைமூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

**1. "கலைச் செம்மல்" விருது வழங்கும் திட்டம்**

'கலைச் செம்மல்' விருதுகள் மரபு வழி, நவீன கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ. 20,000/- வழங்கப்படுகிறது. மரபு வழிப் பிரிவில் ஐந்து ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

[2008 மே 8

**2. மாநில அளவில் மரபு வழிக் கலைக்காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு மரபுவழி ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/-வீதமும், 30 அகவைக்குட்பட்ட "இளங்கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/-வீதமும் வழங்கப்படுகிறது. 73 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு, மரபு வழிக் கலைக் காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

**3. மாநில அளவில் நவீனபாணிக் கலைக்காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில் நவீனபாணிக் கலைக்காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/-வீதமும், 30 அகவைக்குட்பட்ட "இளங் கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/- வீதமும் வழங்கப்படுகிறது. இதுவரை 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு நவீனபாணிக் கலைக்காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**4. தனியர் கலைக்காட்சி அல்லது கூட்டுக் கலைக்காட்சி நடத்த நிதி உதவி வழங்கும் திட்டம்**

தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக்காட்சிகளைத் தனியாகவோ, குழுவாகவோ இணைந்து நடத்திட கலைக்காட்சிகளுக்குக் காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 143 கலைஞர்கள் தனியர் கலைக்காட்சி நடத்துவதற்காகவும், பத்து குழுக்கள் கூட்டுக் கலைக்காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



2008 மே 8]

**5. நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்**

சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.5,000/- வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.3,000/- வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் நிதியாண்டில் முதுகலைப் பிரிவில் ஆறு பேருக்கும், இளங்கலைப் பிரிவில் இருபது பேருக்கும், ஆக மொத்தம் இதுவரை இளங்கலைப் பிரிவில் 498 பேருக்கும், முதுகலைப் பிரிவில் 62 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**"நுண்கலை" கலையிதழ் வெளியீடு**

கலை ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் கொண்ட "நுண்கலை" என்னும் கலையிதழ், ஓவிய நுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது.

**பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி முகாம்**

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவும், சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியும் இணைந்து 26-1-2008 முதல் 28-1-2008 வரை 3 நாட்கள் கிருட்டிணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியில் உள்ள 5 ஊரகப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை**

சிறுவர் சிறுமிகளுக்குப் பொதுக் கல்வியுடன் கலைக் கல்வி அளிப்பதை அடிப்படை பணியாகக் கொண்டு 1979 இல் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் தொடங்கப்பெற்றது. ஐந்து அகவை முதல் பதினாறு அகவைக்கு உட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சிகள் அளிப்பதும், கலைத் திறமைகளை வெளிக்கொணர்வதும், கலைகளை வெளிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 36 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன.

24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும், பத்து இடங்களில் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரண்டு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் பின்வருமாறு இயங்கி வருகின்றன. அண்மையில் தொடங்கப்பெற்ற அரியலூர் மாவட்டத்தில் மையத்தை அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:

**1) மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்**

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர், விழுப்புரம், கிருட்டிணகிரி.

**2) சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை, மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நாமக்கல்.

**3) சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்புதுப்பட்டி, மதுரை எல்லீஸ் நகர் ஆகிய சிறுவர் மன்றங்கள் அரசு வழங்கும் நல்கைத் தொகை மூலம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

**பயிற்றுவிக்கப்படும் கலைகள்**

சவகர் சிறுவர் மன்றங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம்-தபேலா, கணினி, விசையிசை (கீபோர்டு), வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்ஸ்), தையல், ஓவியம், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா, சிலம்பம் ஆகிய இருபது கலைகளில் கீழ்வருமாறு பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது:

சென்னையில் 16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்து சிறுவர்



மன்றங்களிலும் 6,680 சிறுவர், சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரண்டு ஊரக மையங்கள், கிருட்டிணகிரி மாவட்டச் சிறுவர் மன்றம் நீங்கலாக 33 சவகர் சிறுவர் மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் சிறுவர்கள் அனைவரும் பயன்பெற்றிட ஏதுவாகவும், சவகர் சிறுவர் மன்றப் பயிற்சிகளைப் பரவலாக்கிடவும் சவகர் சிறுவர் மன்ற மையங்கள் தொடங்கப்பட்டு, சென்னை பெரியார் நகரில் 17-11-2007 முதல் 16 வகையான கலைகளிலும், சென்னை வியாசர்பாடி முத்தமிழ் நகரில் 12-12-2007 முதல் 7 வகையான கலைகளிலும் சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன. 11-4-2008 அன்று சேலையூரில் உள்ள சியான் பதின் நிலைப் (மெட்ரிகுலேஷன்) பள்ளியில் மூன்றாவது மையம் தொடங்கப்பட்டது.

மணிப்பூர் மாநிலம் இம்பால் நகரில் நடைபெற்ற கலை பரிமாற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டில் இருந்து 13 சிறார்கள் கலந்துகொண்டனர். புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம், திருவனந்தபுரம் நகரில் நடத்திய தென் மண்டல தேசிய இளந்திரு விருது தெரிவு முகாமில், தமிழ்நாட்டில் இருந்து 56 குழந்தைகளும், தேசிய இளந்திரு விருது தெரிவில் 10 சிறார்களும், புதுதில்லி குழந்தைகள் முகாமில் 42 சிறார்களும், குசராத் மாநிலம் சாம் நகரில் நடைபெற்ற தேசிய சுற்றுச்சூழல் முகாமில், 6 சிறார்களும் கலந்துகொண்டனர்.

உதகமண்டலத்தில் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 100 குழந்தைகளுக்கு 10 நாட்கள் கோடைக்காலப் பயிற்சி முகாம் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாவட்டங்கள்தோறும் கலைப் போட்டிகள் நடத்தியும் அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கிடையே காஞ்சிபுரத்தில் மாநிலக் கலைப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டம், ஆற்காட்டில் நடைபெற்ற மாநில உடல் திறன் போட்டியில் 16 குழந்தைகளும், மதுரையில் நடைபெற்ற மாநில உடல் திறன் போட்டியில் 6 குழந்தைகளும், ஆக்ராவில் நடைபெற்ற தேசிய உடல்திறன் போட்டியில் 3 குழந்தைகளும் கலந்துகொண்டனர். மகாராட்டிரா மாநிலம் தானே நகரில் நடைபெற்ற தேசிய உடல் திறன் போட்டியில் ஒரு மாணவி கலந்துகொண்டார்.

சென்னையைச் சேர்ந்த செல்வன் சித்தார்த் சந்திரசேகரன், புதுக்கோட்டையைச் சேர்ந்த செல்வி அவிப்சாதாசு ஆகியோர்

எழுத்துக் கலைக்காகவும், செல்வன் தினேசு படைப்புக் கலைக்காகவும் 2006 ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதிற்காகப் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு, 1-6-2007 அன்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் குடியரசுத் தலைவர் மாளிகையில் இவ்வுயரிய விருதினைப் பெற்றுள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த செல்வி சுவேதா விசுவகர்மா படைப்புக் கலைக்காகவும், புதுக்கோட்டையைச் சேர்ந்த செல்வி ஸ்ரீநிதி மேடைக் கலைக்காகவும், 2007 ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதிற்கு புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

22-9-2007 முதல் 30-9-2007 முடிய நாமக்கல் நகரில் நடைபெற்ற மாநில கைவினை கலைப் பயிற்சியில் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 சிறார்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**முடிவுரை**

கலை பண்பாட்டுத் துறை, கலை வடிவங்களைப் பேணிக் காப்பதில் அனைத்து ஆதாரங்களையும் திரட்டி இடைவெளியின்றித் தொடர்ந்து பணியாற்றும்; மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் பாரம்பரியக் கலைகளைக் கண்டு களிப்பதற்கும், போற்றுவதற்கும் தீவிரமாகச் செயலாற்றும். ஒவ்வொரு தமிழனும் கலையாலும், பண்பாட்டாலும் மேன்மையுறத் தொய்வின்றிப் பாடுபடும் துறையாக விளங்கும்.





## தொல்லியல் துறை

"தொல்லியல் துறை என்பது ஓர் அறிவியல். இது மனித இனப் பண்பாட்டின் பதிவுகளைச் சுற்றுப்புற விவரக் குறிப்புகள் மற்றும் எஞ்சியுள்ள பொருட்களைக் கொண்டும், கட்டடக் கலை, கலைப்பொருட்கள், சூழல் சார்ந்த பொருட்கள்மூலமாகவும் மீட்டுருவாக்குதல், ஆவணப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்வதுமாகும்" - **(விக்கிபீடியா, இலவச கலைக் களஞ்சியம்).** மனிதப் பண்புகளைப் புரிந்து கொள்வதே தொல்லியல் துறையின் நோக்கமாகும். மனித இனப் பண்பாட்டின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினை விளக்குதல், ஆவணப்படுத்துதல், பண்பாட்டு வரலாற்றினைப் புரிந்து கொள்வதில் துணைநிற்றல், பண்பாட்டு வரலாற்றினை கால வரிசைப்படுத்துதல், வரலாற்றுக் கால - வரலாற்றுக்கு முந்தைய கால சமுதாயங்களின் இயற்கை - மனித இன குணாதிசயங்கள் குறித்து அறிவதும் தொல்லியல் துறையின் நோக்கங்களுள் அடங்கும். தொல்லியலாளர்கள் கடந்த காலத்தில் புதைந்து கிடக்கும் தத்துவம் மற்றும் நடைமுறை முறைமைகளை அறிய வல்லவர்கள் ஆவர். மேற்கள ஆய்வு, பரப்பாய்வுகளின்மூலமாக ஆய்வுகள் செய்து கண்டறிதல் தொல்லியல் நடைமுறையாகும். பழங்கால மனிதர்களின் பண்பாட்டுப் பதிவுகளை அறிய உதவுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பெற்றது. இத்துறையின் அகழாய்வுப் பிரிவுடன், கல்வெட்டுப் பிரிவு, அச்சுப் பிரிவு, மாவட்ட அகழ்வைப்பகங்கள், இரசாயனப் பிரிவு, தொல்பொருட்களை நிழற்படப் பிரிவு வாயிலாகப் பதிவு செய்தல் மற்றும் பழம்பொருட்கள் பதிவு எனப் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

### அகழாய்வு மற்றும் அகழ்வைப்பகப் பிரிவு

வரலாற்றுச் சிறப்புமிக்க 31 இடங்களில் இதுவரை அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 14 தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில்

[2008 மே 8

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள செம்பியன்கண்டியூர் என்னும் இடத்தில் அகழாய்வுப் பணி நடைபெற்றுவருகிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின்கீழ் பாதுகாக்கப்பட்டுவரும் சின்னமான தரங்கம்பாடி கோட்டையின் அன்றாட வாழ்க்கை நிலையினை அறியும் வகையில், தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை, மைய அரசு தொல்லியல் துறை, டென்மார்க் தேசிய அருங்காட்சியத் துறை ஆகிய மூன்று துறைகள் இணைந்து 2008, பிப்ரவரி 4 முதல் 26 வரை அகழாய்வுப் பணி மேற்கொண்டன. இந்த ஆய்வில் இக்கோட்டையினைச் சுற்றி அகழி இருந்ததற்கான தடயங்கள் காணப்பட்டன.

**பாதுகாப்புப் பிரிவு**

சமயஞ்சார்ந்த மற்றும் சமயஞ்சாரா 86 வரலாற்றுச் சின்னங்கள் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பன்னிரெண்டாம் நிதிக் குழுவின்கீழ் 36 வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க அரசு ரூ.7.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையில் 2007-2008 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.201.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பொதுப் பணித் துறை வாயிலாகப் பணிகள் நடைபெறவுள்ளன.

**கல்வெட்டுப் பிரிவு**

ஆணையரகத்தில் செயல்பட்டுவரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு ஓராண்டு கால கல்வெட்டு, தொல்லியல் முதுகலைப் பட்டயப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகிறது. இதுவரை 184 மாணவர்கள் இப்பயிற்சியை முடித்துள்ளனர். 2007-2008 ஆம் நிதியாண்டு முதல், இம்மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணம் ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகக் கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 13,600 கல்வெட்டுகள் இத்துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் போது காவிரி டெல்டா பகுதியில் சிந்து சமவெளி குறியீடு கொண்ட புதிய கற்காலக் கருவி கண்டெடுக்கப்பட்டதும் அடங்கும். 2600 படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள், துறை கல்வெட்டாய்வாளர்களால் படிக்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடத் தயார் நிலையில் உள்ளன. மேலும் 10,000 படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளை 11-வது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



2008 மே 8]

**வெளியீடுகள்**

இத்துறையின் அச்சுப் பிரிவின் வாயிலாகத் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்ட தொல்லியல் கையேடுகள், தொல்லியல் சின்னங்கள் குறித்த கையேடுகள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. 'கல்வெட்டு' காலாண்டு இதழ் ஒன்றும் இத்துறை அச்சுப் பிரிவு வாயிலாக வெளியிடப்படுகிறது. இதுவரை 74 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் அகழாய்வு அறிக்கைகள், கல்வெட்டு, தொல்லியல் மற்றும் அகழ்வைப்பக வழிகாட்டி நூல்களும், தமிழ்நாட்டுப் பாறை ஓவியங்கள் தொடர்பான அரிய நூல் என இதுவரை மொத்தம் 40 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**தொல்லியல் துறை இரசாயனக் கூடங்கள்**

தொல்லியல் துறையில் அகழாய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கும், அகழாய்வின்போது கிடைக்கப்பெறும் தொல்பொருட்களை இரசாயன முறையில் சுத்தம் செய்து பாதுகாப்புப் பணி மேற்கொள்வதற்கும், அதுபோன்று துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 86 நினைவுச் சின்னங்களையும், 14 அகழ்வைப்பகங்களையும் பாதுகாப்புப் பணிகளின் கீழ் இரசாயனப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, 1979 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் சென்னை, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் இரசாயனக் கூடங்கள் துவக்கப்பட்டன.

**நிழற்படப் பிரிவு**

இப்பிரிவு பல்வேறு கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் பிற பழம்பொருட்களை நிழற்படம் எடுப்பதாகும். அகழாய்வின் பல்வேறு நிலை, அகழாய்வு இடங்கள், மரபுச் சின்னங்கள் ஆகியவை படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டுப் படிகள் டிஜிடல் முறையில் படமெடுக்கப்பட்டு வருகின்றன.

**பழம் பொருட்களை பதிவு செய்தல்**

பழமையான கலைப் பொருட்களை இந்தியாவில் இருந்து கடத்தப்படுவதைத் தடை செய்வதற்கு 1972 ஆம் ஆண்டு பழம் பொருள் பாதுகாப்புச் சட்டத்தினை இந்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தினைத் திறம்பட நடைமுறைப்படுத்த இரண்டு பதிவு அலுவலர் அலுவலகங்கள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில்

[2008 மே 8

இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்காக அனைத்துச் செலவினத்தையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாட்டில் 1974 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, தமிழ்நாட்டில் 41,608 பழம் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

**அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையம்**

அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில், கணிதம், வானசாத்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக் கலை, இசை, வரலாறு, கவின் கலைகள் மற்றும் பல்வேறு பொருண்மைகள் தொடர்பான தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் அமைந்த 72,000-க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தில் 450-க்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

**புதிய திட்டங்கள்**

2008-2009 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் செலவில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளவும், ரூ.3.25 இலட்சம் செலவில் மதுரை மற்றும் தஞ்சாவூர் சார் அலுவலகங்களுக்குக் கணினிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் வாங்கவும், ரூ.2.35 இலட்சம் செலவில் மதுரை மற்றும் தஞ்சாவூர் சார் அலுவலகங்களுக்கு ஒளியச்சு இயந்திரங்கள் வாங்கவும், ரூ.17.00 இலட்சம் செலவில் கல்வெட்டுப் பிரிவுக்கு காண்டெக்ஸ் கிரிஸ்டல் ஸ்கேனர், டி.டி.எஸ்.450 பிளாட்டர் பிரிண்டர் மற்றும் கணினி வாங்கவும், ரூ.15.80 இலட்சம் செலவில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வேலையில்லாத மாணவர்களையும், வல்லுநர்களையும் கொண்டு கல்வெட்டுகளை வெளியிடும் சிறப்புத் திட்டத்திற்கும், ரூ.2.95 இலட்சம் செலவில் கல்வெட்டுகள், தொல்லியல் அகழ்வைப்பக வழிகாட்டி நூல்கள் மற்றும் மாணவர்களது இரண்டு ஆய்வு நூல்கள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகமொத்தம் ரூ.44.35 இலட்சத்திற்கான புதிய திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படவுள்ளன.



2008 மே 8]

## அருங்காட்சியகங்கள் துறை

சமூகத்திற்குச் சேவையாற்றி, அதன் மேம்பாட்டிற்கு உறுதுணையாகத் திகழும் நிரந்தர நிறுவனம் அருங்காட்சியகம். அத்தனை சாராருக்கும் பொதுவான அமைப்பாக அது விளங்குகிறது. கல்வி வளர்ச்சிக்கும், ஆய்வு நிகழ்த்துவதற்கும், மனமகிழ்ச்சி அடைவதற்கும், மனித குலத்தின் அருவ மற்றும் உருவப் பாரம்பரியக் கூறுகளையும், அவற்றின் சூழலையும் தன்னகத்தே கொண்டு, பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்திக் காலப்பெட்டகத்தின் கண்ணாடியாக அருங்காட்சியகம் திகழ்கிறது. மக்களிடையே தேடலையும், கற்றலையும், ஊக்கத்தையும், உத்வேகத்தையும் உண்டாக்கி அரும்பணியாற்றுகின்றன அருங்காட்சியகங்கள்.

அறிவியல், கலையியல், வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பொருட்களைத் திரட்டியும், பாதுகாத்து, ஆர்வலர்களுக்குக் காட்சிக்கு வைக்கின்ற கூடங்களாக, சரித்திரத்தின் சுருக்கொப்பங்களாக அருங்காட்சியகங்கள் இருக்கின்றன. பெரியவர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முறை வல்லுநர்கள் ஆகிய அனைவருக்கும் தேவையான செய்திகள் அவற்றில் பொதிந்து கிடக்கின்றன. நம் நாட்டின் அறநெறி, பண்பாடு ஆகியவற்றைப் பத்திரப்படுத்துவதால், அவை அறிவின் ஊற்றுக்கண்களாக இருக்கின்றன. கலை அருங்காட்சியகம் ஓவியங்களையும், சிற்பங்களையும் காட்சிப்படுத்துகின்றன. வரலாற்று அருங்காட்சியகங்கள் சரித்திரச்செறிவின்மூலம், நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் அவை கொண்டிருக்கும் தொடர்பைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவின் தலைசிறந்த அருங்காட்சியகங்களில் ஒன்றான சென்னை அரசு அருங்காட்சியகம் 1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அருங்காட்சியகத் துறையின்கீழ், இருபது மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள தென்னிந்தியப் படிமங்களும் மற்றும் வரலாற்றுப் புகழ்வாய்ந்த மரபுச் சின்னங்களும், குறிப்பாக ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகளும், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகளும், புத்த, சமண, இந்து சமய சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் அமராவதி சிற்பங்கள் சிறப்பானவை. பல மதிப்புமிக்க அரிய விலங்கியல் மற்றும் தாவரவியல் சேகரிப்புகளும் இங்கே உள்ளன. இதன் படிமக் கூடத்தில் அரிய சேகரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றது.

[2008 மே 8

அருங்காட்சியகம் பொதுவாக அறிவியல், கலைப் பொருட்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பொருள்களைப் பாதுகாக்குமிடமாகவும், ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் இடமாகவும், கல்வியறிவு வளர அவற்றைக் காட்சிப்படுத்தும் இடமாகவும் திகழ்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகமும் மாவட்ட அருங்காட்சியகங்களும் பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் விரிவாக்க மையங்களாக விளங்குகின்றன. உலகின் இயற்கை அமைப்புகளையும், வரலாறு - கலைப் பண்புகளையும், அறிவியல்; தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பொது மக்கள் அறிந்து கொண்டு பாராட்டும் வகையில் அருங்காட்சியகங்கள் அமைந்துள்ளன. அவற்றைக் காணும் பார்வையாளர்கள் அறிவில் மேம்படவும், பாரம்பரியம் பற்றிப் புரிந்துணரவும் அவை சாளரங்களாகத் திகழ்கின்றன. சிறுவர் முதல் பெரியவர் வரை அவர்களது திறமை, விருப்பத்தைப் பொறுத்து அவர்களுக்குத் தேவையான கல்வி மற்றும் கள ஆய்வுப் பணிகளுக்கான தகவல்களை அளிக்கும் கல்விச் சாலைகளாக, தொல்பொருள் நூலகங்களாகத் திகழ்கின்றன. பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக் கழக மாணவர்கள் வரை பார்வையிடவும், பயன்பெறவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றன.

**அருங்காட்சியகங்களின் முக்கியப் பணிகள்**

அரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்,

அறிவியல் பூர்வமாகக் காட்சிப் பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் கலைநயம் மிக்க வகையில் காட்சிப்படுத்தல்,

ஆய்வாளர்களுக்குச் சேகரிப்புகளை ஆய்வு செய்வதற்காக உதவிகளைத் தனித்தோ அல்லது பிற நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களுடன் இணைந்தோ ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல்,

ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சேகரிப்புகளைக் காண வழிவகுத்தல்,

சேகரிப்புகளின் விவரங்கள் தயாரித்தல், பெயர்ப் பட்டியல் தயாரித்தல், புத்தகங்கள் மற்றும் மலர்கள் வெளியிடுதல்,

கல்விப் பணிகளாக அவ்வப்போது சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல், வல்லுநர்களைக் கொண்டு விரிவுரைகள் ஆற்றுதல்,



2008 மே 8]

வேதியப் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக் கூடத்தின் வாயிலாக புத்தாக்கம் செய்து சுட்டுப்பொருட்களை சீர்கேட்டிலிருந்து பாதுகாத்தல், தேசிய கையெழுத்துப்படி குழு விருப்பப்படி, கையெழுத்துப் படிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாகக் கையெழுத்துப் படிகளைப் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்துதல் ஆகியன அருங்காட்சியகங்களின் முக்கியப் பணிகளாகும்.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

சிற்பக் கூடம், விலங்கியல் மற்றும் தாவரவியல் கூடங்கள் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரதான கட்டடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதில் முன்கட்டடத்திலுள்ள மானிடவியல் கூடங்களில் கட்டடப் பணிகள் 2005-2006 மற்றும் 2006-2007 பகுதி-II திட்டத்தின்கீழ் சீர்படுத்தும் பணி முடிவுற்று, (2007-2008 நிதியாண்டில்) காட்சிப் பெட்டிகள் அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.100.00 இலட்சம் ஆகும்.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

தற்போது, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர் ஆகிய இடங்களில் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் புதுக்கோட்டை அருங்காட்சியகம் அன்றிருந்த சமஸ்தான காலத்திலிருந்து செயல்படுகிறது. மற்ற அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன.

**2007-2008 பகுதி II திட்டத்தின்கீழ் மதுரை அருங்காட்சியகத்தைப் புதுப்பித்தல்**

மதுரை அருங்காட்சியகம், காந்தி அருங்காட்சியக வளாகத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய காட்சிக்கூடங்களை அமைக்கும் பணி மற்றும் பழைய காட்சிக்கூடங்களைப் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள 2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தில் ரூ.28.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு ரூ.18.40 இலட்சத்திற்குப் பின்வரும் 5 பல்வேறு திட்டப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள காப்பாட்சியர்களுக்குக் கணினிகள் வாங்குதல்.

2. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள பவளங்கள் காட்சிக் கூடத்தை நவீனப்படுத்துதல்.

3. சென்னை அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தில் ராஜா ரவிவர்மா ஓவியங்களைப் புதிய காட்சிப் பெட்டிகளில் காட்சிப்படுத்துதல்.

4. திருச்சி அருங்காட்சியகத்திற்காகப் புதிய இரும்பு அலமாரிகள் வாங்குதல்.

5. திருச்சி அருங்காட்சியகத்திற்கு எல்.சி.டி. புரொஜக்டர் வாங்குதல்.

நடுவண் அரசின் நிதி உதவியுடன் ஆவணக் காப்பறை கட்டும் பணியின் பெரும் பகுதி முடிவுற்றது. பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் மானியமாக ரூ.77.00 இலட்சம் பெறப்பட்டு சென்னை அருங்காட்சியக தென்மேற்கு பகுதி சுற்றுப்புறச் சுவர் செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

நடுவண் அரசு திட்டமான உள்ளூர் மற்றும் வட்டார அருங்காட்சியகங்கள் வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் என்ற திட்டத்தின்கீழ் ரூ.56.00 இலட்சம் (மைய அரசு நிதி ரூ.42.00 இலட்சம், மாநில அரசு நிதி ரூ.14.00 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



# இணைப்பு III

(506 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

இந்த மாநிலத்தில் தொன்மையான துறைகளுள் ஒன்றாகத் திகழும் பதிவுத் துறை, பொது மக்களின் சொத்துப் பரிமாற்றங்களுக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கும் பணியில் அருஞ்செயல் ஆற்றி வருகின்றது. விற்பனை, கொடை, அடமானம், குத்தகை, ஏற்பாடு ஆகிய ஆவண வகைகள் அசையாச் சொத்துப் பரிமாற்றம் செய்ய முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆவணங்களைப் பதிவு செய்கையில், பதிவுத் துறை அவற்றின்மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விதிக்கின்றது. அரசுக்கு வருவாயை ஈட்டுவதில் மூன்றாவது பெரிய துறையாகத் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ள பதிவுத் துறை மாநில கருவூலத்திற்கு நிதியீட்டிக் கொடுப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றது. ஆவணங்களைப் பதிவு செய்வதால் அவற்றிற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைக்கின்றது. பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படுவதன்மூலம் தங்கு தடையற்ற விரைவான சேவை பொது மக்களுக்குக் கிடைப்பதால் அவர்களின் ஒருமித்த பாராட்டுதல்களைத் துறை பெற்றுள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில், பதிவுத் துறை ரூ. 4232.36 கோடி அளவுக்கு வருவாய் ஈட்டியுள்ளது. இது கடந்த 2006-2007 ஆம் நிதியாண்டில் ஈட்டப்பட்ட வருவாயான ரூ. 3,407.50 கோடியை விட 24.21 விழுக்காடு அதிகமாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவுத் துறையின் வருவாய் சீரான வளர்ச்சியை அடைந்துவருகின்றது என்பதைக் கீழ்க்கண்ட பட்டியல் மூலம் அறியலாம்:

| ஆண்டு | பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை | வளர்ச்சி விழுக்காடு | ஈட்டப்பட்ட வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2002-2003 | 1581764 | 13.76% | 1648.86 | 30.43% |
| 2003-2004 | 1592934 | 0.71% | 1732.91 | 5.10% |
| 2004-2005 | 1761696 | 10.59% | 1881.53 | 8.58% |
| 2005-2006 | 2011566 | 14.18% | 2348.64 | 24.83% |
| 2006-2007 | 2492294 | 23.90% | 3407.50 | 45.08% |
| 2007-2008 | 2691002 | 7.97% | 4232.36 | 24.21% |

## சட்டபூர்வமான கடப்பாடுகள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வரி அல்லது தீர்வை வசூலிக்க சட்டபூர்வமான அதிகாரம் தேவையாகும். முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் போன்றவற்றை வசூலிக்க வழிவகை செய்யும் பின்வரும் சட்டங்களைப் பதிவுத் துறை நிருவகிக்கின்றது:

1. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
2. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
3. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)
5. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

## துணைமைப் பணிகள்

ஆவணங்களைப் பதிவு செய்வதன்மூலம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பதைத் தலையாய



கடமையாகப் பதிவுத் துறை கொண்டிருப்பினும், பொதுமக்களின் திருமணம் பற்றிய நிலையினை வரைமுறைப்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் நடைபெறும் திருமணங்களைத் துறை பதிவு செய்கின்றது:

1. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
3. 1932 ஆம் ஆண்டு பார்சி திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 3/1932)
4. 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
5. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

பதிவுத் துறை அலுவலர்கள் கீழ்க்கண்ட சட்டங்களின் சில வரையறுக்கப்பட்ட பணிகளைச் செய்ய அதிகாரம் பெற்றுள்ளனர்:

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
2. 1961 ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)
3. 1969 ஆம் ஆண்டு பிறப்புகள் மற்றும் இறப்புகள் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

## துறையின் படிநிலை அமைப்பு

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அலுவலரான பதிவுத் துறைத் தலைவர் துறையின் தலைவராவார். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் ஆகியவற்றின்கீழ் இவர் பதிவாளராகச் செயல்படுகின்றார். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் மேற்படி இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-A இன்கீழ்

[2008 மே 8

சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீது செய்யப்படும் மேல்முறையீடுகளின்மீது ஆணையிடும் அதிகாரமும் மற்றும் அவற்றைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் இவருக்கு உள்ளது. பதிவுத் துறைத் தலைவர் தமது கடமைகளைச் செவ்வனே செய்ய தலைமையிடத்தில் பின்வரும் அலுவலர்கள் அவருக்கு உதவியாகப் பணிபுரிகின்றனர்:

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டுப் பதிவாளர்
5. நேர்முக உதவியாளர் (பொது)
6. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)
7. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)
8. நேர்முக உதவியாளர் (சீட்டு)
9. கணக்கு அலுவலர்

மிகுந்த வருவாயை ஈட்டும் பதிவுத் துறையைத் திறம்பட நிர்வகிக்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் ஒன்பது மண்டலங்களாகவும் 50 பதிவு மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

**மண்டல அலுவலகங்கள்**

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள ஒன்பது மண்டல அலுவலகங்கள் ஒவ்வொன்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. மண்டலம் முழுவதையும் நிருவகிப்பது, திடீராய்வு மற்றும் விசாரணைகள் மேற்கொள்வது ஆகியவற்றை முக்கியப் பணிகளாகக் கொண்ட துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளர்களாகவும், முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் மாவட்டப் பதிவாளர்களின் ஆணையின்மீது பெறப்படும் மேல்முறையீடுகளில் ஆணையிடும் அலுவலர்களாகவும் உள்ளனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு உதவிட, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் வட்டார உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். சார்பதிவாளர் அலுவலகங்களில் திடீராய்வு மேற்கொள்வது



2008 மே 8]

மற்றும் தணிக்கை மாவட்டப் பதிவாளர்களின் பணியினைச் சோதனை ஆய்வு செய்வது இவர்களின் முக்கியப் பணிகளாகும்.

**மாவட்ட அளவிலான அலுவலகங்கள்**

சீரிய நிருவாகத்திற்காகவும் பொதுமக்களுக்கு விரைவான சேவையை ஆற்றிடவும் மாநிலம் முழுமையும் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு நிருவாக மாவட்டப் பதிவாளரின் தலைமையில் இயங்குகின்றன. இந்த 50 பதிவு மாவட்டங்களில், வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, வேலூர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பதிவு மாவட்டங்கள், பணிப்பளு மற்றும் தன்மையைக் கருதி ஒவ்வொன்றும் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிருவகிக்கப்படுகின்றன. மாவட்டப் பதிவாளர்கள், சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டுகளின் துணைப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களை நியமிக்கும் அலுவலர்களாகவும் உள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் தன்மை மற்றும் அவற்றில் வசூலிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை குறித்து தணிக்கை செய்ய 45 தணிக்கை அலகுகள் ஒவ்வொன்றும் ஒரு தணிக்கை மாவட்டப் பதிவாளரின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**சார்பதிவாளர் அலுவலகங்கள்**

பொதுமக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, மாநிலத்திலுள்ள 568 சார்பதிவாளர் அலுவலகங்கள், முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் செயல்படுகின்றன. ஆவணப் பதிவுடன், இந்து திருமணமும் மற்றும் சிறப்புத் திருமணமும் இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் உதவி பதிவாளர்களாகவும் சார்பதிவாளர்கள் செயல்படுகின்றனர்.

**பயிற்சி நிலையம்**

பதிவுத் துறை அலுவலர்கள் தங்களது பணிகளை ஆற்றும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் விதிகளைப் பயிற்றுவிக்க பயிற்சி நிலையம் ஒன்று துணைப் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையில் சென்னையில் இயங்கி வருகின்றது. தகவல் தொழில்நுட்பப் பயிற்சியும் இந்நிலையத்தில் வழங்கப்படுகின்றது.

[2008 மே 8

### புலனாய்வுப் பிரிவு

சொத்துரிமை மாற்றம் நடைபெறும்போது அவற்றில் உள்ள கட்டடங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டால் அவற்றின் மதிப்பிற்கும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். அரசின் வருவாயைப் பாதுகாக்கவும், முத்திரைத் தீர்வை ஏய்ப்பினைத் தடுக்கவும், ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் 8 மாவட்டப் பதிவாளர்கள், 4 சார்பதிவாளர்கள் மற்றும் 2 உதவி செயற்பொறியாளர்களைக் கொண்ட ஒரு புலனாய்வுப் பிரிவு இத்துறையில் செயல்படுகிறது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விரைவாகத் திரும்ப வழங்கும்பொருட்டு அனைத்து பதிவு அலுவலர்களும் கட்டடங்களின் மதிப்பை நிர்ணயிக்க கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### விழிப்புப் பணிப் பிரிவு

பொதுமக்களிடமிருந்து பதிவுத் துறை அலுவலர்கள் குறித்து பெறப்படும் புகார் மனுக்களை விசாரிக்கும்பொருட்டு ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் ஒரு சார்பதிவாளரைக் கொண்ட விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது.

### மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை)

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி உரிமை மாற்றப்படும் சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். சொத்துக்களின் சந்தை மதிப்பை அறிந்திட ஏதுவாக, அனைத்து பதிவு அலுவலர்களுக்கும் கிராம வாரியான வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் ஆவணதாரர்கள் முத்திரைத் தீர்வை செலுத்த முன்வராத நேர்வுகளில், பதிவு அலுவலர்கள், ஆவணத்தைப் பதிவு செய்தவுடன், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47ஏ(1)-ன்படி, சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயம் செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்புகின்றனர். சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி



2008 மே 8]

மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் இத்தகைய ஆவணங்களில் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றனர்.

## முக்கியச் சாதனைகள்

பதிவுத் துறையில் பேணப்பட்டு வரும் வழிகாட்டி மதிப்புகளிலுள்ள குறைபாடுகளைக் களையும்பொருட்டு, வட்டக் குழுக்கள், மாவட்டக் குழுக்கள் மற்றும் மைய மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டன. இக்குழுக்கள் மாநிலம் முழுவதிலும் கள ஆய்வு செய்து வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கும் கடினமான பணியினை மேற்கொண்டது. இக்குழுக்களின் பரிந்துரைகளைப் பெற்றபின் மாநிலம் முழுமைக்குமான சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1-8-2007 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதில் நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கான 'சமாதான் திட்டம்' ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு 24-4-2007 முதல் 23-8-2007 வரை நான்கு மாதங்கள் அமலில் இருந்தது. இத்திட்டத்தின்மூலம் ரூ. 82.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டு 22,599 ஆவணங்கள் தீர்வு செய்யப்பட்டன.

## முத்திரைத்தாள்கள்

### கொள்முதல் மற்றும் வழங்கல்

ஆவணங்கள் எழுதுவதில் உபயோகப்படுத்தப்படும் நீதி சாரா முத்திரைத்தாள்கள் நாசிக்கில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்திலும் ஐதராபாத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு அச்சகத்திலும் அச்சடிக்கப்பட்டு, இவ்வச்சகங்களிலிருந்து கருவூலம் மற்றும் கணக்குத் துறையின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு மாநிலத்திலுள்ள அனைத்து கருவூலங்கள்/சார்நிலைக் கருவூலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள், முத்திரைத்தாள்களை கருவூலம்/சார்நிலைக் கருவூலத்திலிருந்து வாங்கி பொதுமக்களுக்கு வழங்குகின்றனர். சார்பதிவாளர்களும் அலுவல் முறையில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் என்பதால் அவர்களும் முத்திரைத்தாள்களை விற்பனை செய்கின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களால் முறைகேடுகள் நடைபெறாமல் தடுத்திட அவர்களது கணக்குகள் பதிவுத் துறை அலுவலர்களால் கால முறையில்

சோதனை செய்யப்படுகின்றன. தற்போது மாநிலத்தில் மொத்தம் 2,376 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

### மாற்று நடவடிக்கைகள்

முத்திரைத்தாள்கள் கிடைக்கப்பெறவில்லையெனில், முத்திரைத் தீர்வையை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செலுத்தலாம். அரசு, முத்திரைத் தீர்வையை மாற்று வழிகளில் [மின்னணு முறையில் (e-stamping) மற்றும் பிராங்கிங் இயந்திரம் (Franking machine) மூலம்] வசூலிக்கும் முறைகளையும் பரிசீலித்து வருகிறது.

### ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்

பொதுமக்களின் ஆவணங்களை எழுதுவதில் ஆவண எழுத்தர்களும், நகலெடுப்பதில் நகல் எழுத்தர்களும் உதவி புரிகின்றனர். ஆவண எழுத்தர் உரிமம் மூன்று விதமாக அதாவது மாநில உரிமம், பதிவு மாவட்ட உரிமம் மற்றும் சார்பதிவக உரிமம் என வழங்கப்படுகின்றது. தற்போது மொத்தம் 4,969 ஆவண எழுத்தர்களும் 5,725 நகல் எழுத்தர்களும் உள்ளனர்.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

முத்திரைத்தாள்களின் மெய்ப்புத் தன்மையை அறிய அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

விற்பனை ஆவணங்களில் வாங்குபவர் மற்றும் விற்பவர்களின் புகைப்படங்களும், மற்ற ஆவணங்களில் ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் புகைப்படமும் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அசல் மற்றும் போலி ஆவணங்கள்/சான்றிதழ்களிடையிலான வேறுபாட்டை அறிந்துகொள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் துறையால் வழங்கப்படும் சான்றுகளில் ஹாலோகிராம் ஒட்டு வில்லைகள் ஒட்டப்படுகின்றன.





## பல்வகைப் பணிகள்

### சங்கங்கள் பதிவு

1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுத் துறையால் சங்கங்களைப் பதிவு செய்து அவை மேற்பார்வையிடப்படுகின்றன. 29-2-2008 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 1,33,405 பதிவு பெற்ற சங்கங்கள் உள்ளன.

### சீட்டுகள்

சீட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சீட்டுகள் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம் மற்றும் 1984ஆம் ஆண்டு சீட்டு நிதி விதிகள் ஆகியவற்றின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராகச் செயல்படுகிறார். சீட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏதுவாக பதிவுத் துறைத் தலைவருக்கு ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், நேர்முக உதவியாளர் ஒருவரும் (சீட்டு) உதவி புரிகின்றனர்.

மண்டல அளவில் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும், பதிவு மாவட்ட அளவில் மாவட்டப் பதிவாளர்கள் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் தத்தமது எல்லைக்குள் உள்ளனர். மேலும், மாநிலம் முழுவதிலும் உள்ள 47 சார்பதிவாளர்கள் (சீட்டு மற்றும் சங்கம்) சீட்டுகளைச் சீராக நடத்துவதை உறுதி செய்கின்றனர். சீட்டுகள் தொடர்பான நடுவர் தீர்ப்பு வழக்குகளைத் தீர்வு செய்யும் பொருட்டு மத்திய சென்னையிலும், வட மற்றும் தென் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தனியாக மூன்று சீட்டு நடுவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

### கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களை மாவட்டப் பதிவாளர்களிடம் பதிவு செய்ய வழிவகை செய்கின்றது. 29-2-2008 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 4,76,080 பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் உள்ளன.

## திருமணப் பதிவு

நவீன யுகத்தில், திருமணங்கள் பதிவு செய்யப்படுவது முக்கியத்துவம் அடைந்துள்ளது. திருமணங்கள் எந்தச் சடங்குகளின்படி நடைபெறுகின்றதோ அதற்கேற்ப பல்வேறு சட்டங்களின்கீழ் அவை பதிவு செய்யப்படுகின்றன.

## 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையே ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்கள் சார்பதிவாளர்களால் இச்சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றன. உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப 22-10-2007முதல் அனைத்து இந்து திருமணங்களையும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் இரு வேறு மதத்தினரிடையே நடைபெறும் திருமணங்கள் சார்பதிவாளர்/மாவட்டப் பதிவாளரால் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி, உத்தேசிக்கப்பட்ட திருமணம் குறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட திருமண அலுவலரிடம் தாக்கல் செய்து 30 நாட்களுக்குப்பின் ஆட்சேபனை ஏதும் பெறப்படாத பட்சத்தில் திருமணம் பதிவு செய்யப்படுகிறது.

உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப இச்சட்டத்தின்கீழ் நடைபெறும் திருமணங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க அரசு பரிசிலித்து வருகிறது.

## 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம்

இந்தியக் கிறித்துவர்களிடையே நடைபெறும் திருமணம் இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களாலும், மத குருக்களாலும் நடத்தி வைக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களின் வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

## மின்னணு ஆளுமை

தகவல் தொழில்நுட்பத் திறன் கொண்ட சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக பதிவுத் துறையில் விரைவான மற்றும் தங்கு தடையற்ற சேவையை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 568 சார்பதிவாளர் அலுவலகங்களில், 450 சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி





மயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள அலுவலகங்களும் விரைவில் கணினிமயமாக்கப்படவுள்ளன. கணினிமயமாக்கப்பட்ட அலுவலகங்களில் வழங்கப்படும் சேவைகளின் விவரம் பின்வருமாறு:-

(அ) பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைக் குறுந்தகடுகளில் ஒளி வருடல் (Scanning) மூலம் பதிவு செய்வதால், பதிவு விவரங்களை விரைவாகச் சரிபார்க்கவும் நகலெடுக்கவும் ஏதுவாகிறது.

(ஆ) வில்லங்கச் சான்றுகள் விரைவாக வழங்கல்.

(இ) சொத்து மதிப்பு குறித்த பட்டியலை விரைவாகத் தயார் செய்தல்.

(ஈ) திருமணம்/சங்கங்கள்/நிறுவனங்கள்/சீட்டுகள் பதிவு செய்தல்.

பதிவுத் துறையின் இணைய தளமான www. tnreginet.net-ன் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன:

(அ) வில்லங்கச் சான்றுகள் பெற விண்ணப்பிக்கலாம்.

(ஆ) பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக அனைத்துப் பகுதிகளுக்குமான வழிகாட்டி மதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

(இ) பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களில் கூறப்பட்டுள்ள படிவங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஈ) ஆவணங்களின் மாதிரி வரைவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்

பதிவுத் துறைக்கு 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்களின் கீழ் பின்வரும் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:

(1) ஐம்பது மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) அலுவலகங்களுக்கு 50 நிகரிகள் வாங்குதல்.

(2) சார்பதிவாளர்/மாவட்டப் பதிவாளர்/துணைப் பதிவுத் துறைத் தலைவர்/பதிவுத் துறைத் தலைவர் மற்றும் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களுக்கு 500 இரும்பு அலமாரிகள் வாங்குதல்.

[2008 மே 8

## இணைப்பு IV

*( 507 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### மானியக் கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

**முகவுரை**

*தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு.*

என்ற வான் புகழ் தந்த அய்யன் திருவள்ளுவரின் 'குறளுக்கிணங்க, தமிழ்நாடு அரசு மக்கள் நலன் காப்பதில் விழிப்புணர்வு கொண்டு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது. அரசு அறிவிக்கும் அனைத்துத் திட்டங்களையும் துறைகளின் செயலாக்கங்களையும் மக்களுக்குக் கொண்டு செல்கின்ற தலைசிறந்த பணியினை செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்து வருகிறது.

ஏழையர் வாழ்வு ஏற்றம் பெறவும், மங்கையர் வாழ்வு மகிழ்வுறவும் அனைத்துத் தரப்பு மக்களின் நலன் காக்கவும், அரசு தரும் உன்னதமான திட்டங்களையும், அவை அளிக்கும் பயன்களையும், மக்கள் அறியும் வண்ணம் அவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதும் இத்துறையின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கங்கள், வெற்றியடையும் பொருட்டு, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் விளம்பரப் பணிகளை பல வழிகளில் இத்துறை முனைப்போடு செய்து வருகிறது.

"தம்பி!
மக்களிடம் செல்,
மக்களின் மத்தியில் வாழ்.
அவர்களிடமிருந்து கற்றுக்கொள்.
அவர்களை நேசி,
அவர்களுக்கு என்ன தெரியுமோ
அதிலிருந்து தொடங்கு,
அவர்களிடம் என்ன இருக்கிறதோ
அதைக்கொண்டு நிர்மாணம் செய்"



2008 மே 8]

என்றுரைத்தார் பேரறிஞர் அண்ணா. அவர்தம் அறிவுரைகளை நெஞ்சில் பதித்து, இத்துறை, அரசின் நல் தூதுவனாய் அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்களைப் பற்றிய செய்திகளைப் பொதுமக்கள் அறியச் செய்யும் அரும்பணியைத் தொடர்ந்து செம்மையாக மேற்கொண்டு வருகின்றது.

மக்களாட்சியில் நான்காம் தூணாக விளங்கும், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் வாயிலாக, அரசின் திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களுக்கு நாள்தோறும் கொண்டு செல்ல சிறப்புமிகு செய்தி வெளியீட்டுப் பிரிவு.

நாட்டுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த சான்றோர்கள் மற்றும் தமிழ் அறிஞர்களுக்கு திருவுருவச் சிலைகள், நினைவகங்கள் அமைத்துப் பராமரித்தல், அவர்களின் புகழுக்கு மகுடம் சேர்க்கும் வகையில், விழாக்கள் எடுக்க—ஏற்றமிகு நினைவகங்கள் பிரிவு.

அரசின் வளர்ச்சித் திட்டங்களை எழிலுற விளம்பரப்படுத்த விளம்பரப் பிரிவு, நாளிதழ்களைப் பல ஆண்டுகள் பாதுகாத்து, தேவை ஏற்படும்போது செய்தி நறுக்குகள் தர மேற்கோள் பிரிவு;

மக்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்பட மாநிலத் தகவல் மையம்.

அரசின் சாதனைகளை விளக்கச் செய்திப் படங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து குறும்படங்கள் தயாரிக்க தமிழ்நாடு திரைப்படப் பிரிவு.

திரைப்படத் துறையில் உள்ள பல்வேறு தொழில்நுட்பக் கலையை விரும்பிப் படிக்க மாணவர்களுக்கு உதவும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்.

அரசுத் திட்டங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வண்ணம் அச்சிட 'தமிழரசு'.

அரசின் திட்டங்களை மக்களுக்கு விளங்க வைக்கும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்திட—பொருட்காட்சிப் பிரிவு.

[2008 மே 8

மாவட்டங்களில், பல்வேறு அரசுத் துறைகளின் சாதனைகளையும், செயல்பாடுகளையும், விளக்கும் வகையில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்திடவும், பல்வேறு ஊடகங்களின் துணையோடு அரசுத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்லவும், செயலாற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.

அரசின் திட்டங்களும், பணிகளும், பயன்களும், கடைக்கோடியில் வாழும் மக்களைச் சீராகச் சென்றடையும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் நவீனத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தொடர்ந்து சிறப்புறப் பணியாற்றி வருகிறது.



2008 மே 8]

## அத்தியாயம்- 1

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து நாள்தோறும் அரசின் அறிவிப்புகள், திட்டங்கள், நடைபெறும் நிகழ்ச்சிகளின் விவரங்கள், தொடர்புடைய வண்ணப் புகைப்படங்கள் ஆகியன அனைத்து ஊடகங்களுக்கும் உடனுக்குடன் மின் அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டு, அவை, மக்களுக்கு அறியச் செய்யப்படுகிறது.

இப்பிரிவில் தொடக்கக் காலங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து பெறப்படும் செய்தி வெளியீடு/செய்திக் குறிப்புகள் தட்டச்சு செய்யப்பட்டு, அதனைப் பிரதிகள் எடுத்து, இப்பிரிவில் உள்ள இருசக்கர ஊர்திப் பணியாளர்மூலம் நாளிதழ்களுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. காலமாற்றத்தினைத் தொடர்ந்து தொலைநகல் இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வந்த பின்னர், செய்தி வெளியீடுகள் அனைத்தும் தொலைநகல்மூலம் அனுப்பப்பட்டு வந்தன. இந்நிலையில் மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், செய்தி வெளியீடுகள்/செய்திக் குறிப்புகள் அனைத்தும் மின் அஞ்சல்மூலம் ஏறக்குறைய 100 முதல் 200 பத்திரிகைகள், காலமுறை இதழ்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் ஒரே சமயத்தில் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

17-4-2007 முதல் 16-4-2008 வரை 893 செய்தி வெளியீடுகளும், 133 செய்திக் குறிப்புகளும், 747 புகைப்படம் / ஒளிப்பதிவு / செய்தி சேகரிப்புக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

கோப்புகளைக் கையாளுதல் மற்றும் காகிதப் பயன்பாடு இல்லா நிருவாகத்தை ஏற்படுத்துவதற்காக, இப்பிரிவில் செயல்படுத்தும் நோக்கோடு, 6 கணினிகள் இணையதள வசதியுடனும், சர்வர் வசதியுடனும் நிறுவப்பட்டுள்ளன. இதன் தரத்தினை நிலை உயர்த்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் கணினிமூலமாக உதவி இயக்குநர் நிலை வரை உரிய ஆணைகள் பெற வசதி உருவாக்கப்படுகிறது.

[2008 மே 8

## பத்திரிகையாளர் நலன்

### பத்திரிகையாளர் ஓய்வூதியம்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-ஆக உயர்த்தப்பட்டு 19 நபர்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 62 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளர்களின் துணைவியாருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தப்பட்டு, தற்போது 17 நபர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது.

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் பணிகளில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களுடைய குடும்பங்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் நலன் கருதி, 20 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான், குடும்ப உதவி நிதி வழங்கப்படும் என்பதை மாற்றி, 5 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ. 50 ஆயிரம் எனவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.1.00 இலட்சம் எனவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ. 1.50 இலட்சம் எனவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ. 2.00 இலட்சம் எனவும் வழங்க இவ்வரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 14 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டது. இதுவரை மொத்தம் 43 நபர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.



2008 மே 8]

### பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு நான்கு பத்திரிகையாளர்களின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவியும், ஒரு பத்திரிகையாளர் மகளின் அறுவை சிகிச்சைக்கு நிதியுதவியும் என மொத்தம் ரூபாய் நான்கு இலட்சம் வழங்கியுள்ளது.

### பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகை வீடு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகம் முழுவதும் 166 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 25 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது.

### பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி

பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி வழங்கும் திட்டத்தின்கீழ் 11 மாவட்டங்களில் 428 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது.

### பத்திரிகையாளர் நல நிதியம்

14-1-2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணைமூலம், தமிழ்நாடு அரசு பத்திரிகையாளர் நல நிதியம் என்னும் புதிய நிதியத்தை ஏற்படுத்தி, ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூபாய் 83,333/- கிடைக்கும். கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக இந்த வட்டித் தொகையிலிருந்து ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்படும்.

### பத்திரிகையாளர் அறைக்கு இணையதள வசதி

தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் அறையிலிருந்து ஒரே நேரத்தில் 20 பத்திரிகையாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு செய்திகளை/புகைப்படங்களை மின் அஞ்சல் அனுப்புவதற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி செய்து தரப்பட்டுள்ளது.

[2008 மே 8

**செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை**

செய்தியாளர்களுக்கு அரசு அமைத்துள்ள "பத்திரிகையாளர் அங்கீகாரக் குழு" வின் பரிந்துரையின்பேரில் ஆண்டுதோறும் செய்தியாளர் அங்கீகார அட்டை (Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2008 ஆம் ஆண்டிற்கான செய்தியாளர் அங்கீகார அட்டையை சென்னையில் 396 செய்தியாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 82 செய்தியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள்மூலம் 426 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டை**

அங்கீகார அட்டை மற்றும் அடையாள அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது இலவசமாகச் செல்வதற்கு ஏதுவாக ஓராண்டிற்கு இலவச பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுகிறது. சென்னையில் அங்கீகார அட்டை பெற்ற 300 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் அடையாள அட்டை பெற்ற 946 பத்திரிகையாளர்களுக்கும் இலவச பேருந்துப் பயண அட்டை நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. இதற்குரிய தொகையினை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இத்துறை ஈடு செய்கிறது.

**காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை**

காலமுறை இதழ்களின் செய்தியாளர்களுக்கு "செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழு"வின் பரிந்துரையின்பேரில் செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2008 ஆம் ஆண்டிற்கு சென்னையில் 180 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய பத்திரிகை தினம்**

மத்திய அரசின் செய்தி — ஒலிபரப்புத் துறையின் இந்திய பத்திரிகைகள் கூட்டமைப்பு (Press Council of India) நிறுவப்பட்ட நாளான நவம்பர் 16-ஐ தேசிய பத்திரிகை தினமாகக் கடைப்பிடித்து, மாணவ-மாணவிகளிடையே பேச்சுப் போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, கருத்தரங்குகள், விழாக்களை



2008 மே 8]

நடத்துமாறு கேட்டுக்கொண்டது. அதற்கேற்ப, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், "ஊடகம் மக்களின் குரலாக-சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும்" என்ற தலைப்பில் கல்லூரி மாணவ/மாணவியரிடையே தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

**புகைப்படப் பிரிவு**

புகைப்படப் பிரிவில் தொடக்கக் காலங்களில் எடுக்கப்பட்டு வந்த கருப்பு-வெள்ளைப் புகைப்படங்கள், இப்பிரிவிலேயே பிரதிகள் எடுக்கப்பட்டு, நாளிதழ்களுக்கும், காலமுறை இதழ்களுக்கும், இருசக்கர ஊர்திப் பணியாளர்மூலம் அனுப்பப்பட்டு வந்தன. மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், தற்போது புதிய வகை டிஜிட்டல் கேமிராக்கள்மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை மின் அஞ்சல்மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு தலைமையிடத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்தே எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணையதள வசதியுடன் கூடிய 3 புதிய மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இப்புகைப்படங்கள் அனைத்தும், குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு, அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

[2008 மே 8

## அத்தியாயம்–2

### மேற்கோள் பிரிவு

அன்றாடம் வெளியாகும் ஆங்கிலம், தமிழ்-காலை மற்றும் மாலை நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்தி நறுக்குகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களுக்கும், பார்வைக்கெனவும், நடவடிக்கைக்கெனவும் தொகுத்து அனுப்பும் முக்கியப் பணியை மேற்கோள் பிரிவு மேற்கொள்கிறது. இப்பிரிவில் 2001 ஆம் ஆண்டு முதலான முக்கிய நாளிதழ்களும், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் இல்லத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான நாளிதழ்களும் எதிர்காலத் தேவைக்கெனப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், புத்தகப் பதிவாளராகவும் (Registrar of Books) இருப்பதால், புத்தக வெளியீட்டாளர்களால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு இப்பிரிவில், பதிவு செய்யப்படுகிறது.



2008 மே 8]

## அத்தியாயம்–3

### நினைவகங்கள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைப் புரிந்த தலைவர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும், வருங்காலச் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தி அவர்களுக்கு சிறப்புச் செய்து போற்றிடும் வகையில் அவர்களின் நினைவாக 47 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை இத்துறையால் உருவாக்கப்பட்டு, பேணிக்காக்கப்பட்டு வருகின்றன.

1. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.
3. தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.
4. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
5. தீரன் சின்னமலை மணிமண்டபம், அரச்சலூர் கிராமம், ஈரோடு மாவட்டம்.
6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
7. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டம்.
8. வ.வே.சுப்பிரமணியம் நினைவகம், வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
10. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
11. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவில்லம், உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்.

[2008 மே 8

12. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

13. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

14. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

15. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

16. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

17. பரிதிமாற் கலைஞர் மணிமண்டபம், விளாச்சேரி கிராமம், மதுரை மாவட்டம்.

18. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் மணிமண்டபம், சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்.

19. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

20. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு மணிமண்டபம். விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

21. மகாகவி பாரதியார் மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

22. மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

23. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

24. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், கட்டாரங்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

25. சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம், கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம்.

26. சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம், வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்.



2008 மே 8]

27. உமறுப்புலவர் நினைவகம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

28. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்.

29. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், திருநெல்வேலி மாவட்டம்.

30. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

31. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

32. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

33. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

34. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

35. முத்து மண்டபம், (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) வேலூர், வேலூர் மாவட்டம்.

36. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை மாவட்டம்.

37. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை மாவட்டம்.

38. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்கம் பெருமாள்கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

39. பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், திருமலைச் சாலை, தியாகராயநகர், சென்னை மாவட்டம்.

40. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை மாவட்டம்.

41. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

[2008 மே 8

42. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

43. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

44. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை கிண்டி, சென்னை மாவட்டம்.

45. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

46. பெருந்தலைவர் காமராஜர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

47. கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் மணிமண்டபம், காயிதேமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில், சென்னை மாவட்டம்.

**அரங்கங்கள்**

1. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை மாவட்டம்.
2. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை மாவட்டம்.
3. அண்ணா கலை அரங்கம், வேலூர், வேலூர் மாவட்டம்.
4. மகாமகம் கலை அரங்கம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

**நினைவுத் தூண்கள்**

1. "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.
2. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்), காமராஜர் சாலை, சென்னை மாவட்டம்.
3. குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண், (காந்தி சிலை அருகில்) காமராஜர் சாலை, சென்னை மாவட்டம்.



2008 மே 8]

4. சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண், வேலூர், வேலூர் மாவட்டம்.
5. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

**நினைவுப் பூங்கா**

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா, கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 100-வது ஜெயந்தி விழா தொடர்பாக இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் ரூ.50.00 இலட்சம் செலவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களது நினைவு இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரண வாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்பட்டதோடு மேலும் ரூ.10.00 இலட்சம் செலவில் பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுக்கும் இடத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

2007 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டம், சாத்தமங்கலம் என்ற இடத்தில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு ரூ.39.60 இலட்சம் செலவிலும், தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு என்ற இடத்தில் சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத் தேவன் அவர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவிலும், கவர்னகிரியில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவிலும் சிலையுடன் கூடிய மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் மதுரை மாவட்டம், விளாச்சேரி கிராமத்தில் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு ரூ.7.90 இலட்சம் செலவில் நினைவில்லத்தைப் புதுப்பித்து சிலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, எட்டயபுரத்தில் அமுதகவி உமறுப்புலவர் அவர்களுக்கு ரூ.22.50 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு சிலையுடன் கூடிய நினைவில்லம் அமைக்க ரூ.1.37 இலட்சம் செலவில் அவர் வாழ்ந்த இல்லம் கையகப்படுத்தப்பட்டு ரூ.23.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

[2008 மே 8

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கேரள மாநில வைக்கம் தந்தை பெரியார் நினைவகம், கிருஷ்ணகிரி மாவட்ட, மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், நாகப்பட்டினம் மாவட்ட தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், கோயம்புத்தூர் மாவட்ட திருப்பூர் குமரன் நினைவகம், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், சென்னை காந்தி அருங்காட்சியகம், தியாகிகள் மணிமண்டபம், மகாகவி பாரதியார் நினைவு இல்லம் மற்றும் மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் ஆகியன ரூ.43.45 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முன்பு சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி செண்பகராமன் அவர்களுக்கு ரூ.1.77 இலட்சம் செலவில் பீடம் மற்றும் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில், அதியமான் கோட்டம் மற்றும் 400 நபர்கள் அமரக்கூடிய பார்வையாளர்கள் மண்டபம் அமைத்திடும் வகையில், ரூ.115 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ரூ.19.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.



2008 மே 8]

## அத்தியாயம்–4

## அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட, தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களுடைய தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடும், அவர்களுடைய பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினத்தில் அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ள தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, அவர்களின் பிறந்த நாளின்போது, அவர்களின் புகைப்படம் வைத்து அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். |
| 2. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் |
| 3. | ஜனவரி 30 | மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் |
| 5. | ஏப்ரல் 27 | சர். பிட்டி. தியாகராயர் |
| 6. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் |
| 7. | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் |
| 8. | ஜூன் 24 | கவியரசர் கண்ணதாசன் |
| 9. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் |
| 10. | ஜூலை 17 | தியாகிகள் தினத்தன்று பாஷ்யம் (எ) தியாகி ஆர்யா |
| 11. | ஜூலை 17 | தியாகிகள் தினத்தன்று தியாகி சங்கரலிங்கனார் |
| 12. | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. |
| 13. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா |
| 14. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் |

| | | |
|---|---|---|
| 15. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் |
| 16. | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் |
| 17. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் |
| 18. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு |
| 19. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி |
| 20. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் |

ஒவ்வோர் ஆண்டும், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழாவும், ஒட்டப்பிடாரத்தில் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழாவும், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழாவும், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழாவும், எட்டயபுரத்தில், மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவும், இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழாவும், ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழாவும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரி விழாவும், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழாவும், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவும், கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில், மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

மகாத்மா காந்தியடிகளின் நினைவு நாள் ஆண்டுதோறும் ஜனவரி 30 அன்று அரசின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. அன்று காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

தியாகிகள் தினம் ஆண்டுதோறும் ஜூலை 17 அன்று தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தல் நிகழ்ச்சி அரசின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

**சிறப்பு விழாக்கள்**

1. சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் 100 ஆவது பிறந்த நாள் விழா 28-9-2006 முதல் 27-9-2007 வரை ஓராண்டிற்கு சென்னை மற்றும் பிற மாவட்டங்களின் தலைநகரங்களில் கொண்டாடப்பட்டது.



2. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் அவர்களின் 100 ஆவது பிறந்த நாள் விழா 21-8-2007 அன்று சென்னை, கோவை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கொண்டாடப்பட்டது.

3. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 100 ஆவது பிறந்த நாள் விழா 30-10-2007 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.

4. திருவள்ளுவர் திருநாள் 16-1-2008 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடப்பட்டது.

[2008 மே 8

## அத்தியாயம்–5

### விளம்பரம்

அரசின் கொள்கைகள், திட்டங்கள், அதன் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்த விவரங்களையும் நாளிதழ்களில் விளம்பரம் செய்வதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் முழுமையாக அறிந்துகொள்ளச் செய்யும் மகத்தான பணியை இத்துறை செய்து வருகின்றது.

தமிழ்நாடு அரசின், அனைத்துத் துறைகள், பல்வேறு கழகங்கள், அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடுதல், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டு, வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரங்களின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**அரசின் நலத் திட்டங்களான**

(1) வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

(2) இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

(3) நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல்

(4) ஏழைகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு

(5) சேலம் மாவட்டத்தில் அதி நவீன அரசு மருத்துவமனை திறக்கப்பட்டது

(6) இளம் சிறார்களுக்கான இதய அறுவை சிகிச்சைத் திட்டம்

(7) வேலூர் மாவட்டத்தில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அடிக்கல் நாட்டப்பட்டது

(8) மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தொடங்கப்பட்டது

(9) அனைத்துப் பேரூராட்சிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது



2008 மே 8]

(10) சத்துணவுடன் வாரத்தில் மூன்று நாட்கள் முட்டை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது

(11) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாநகராட்சி குடிநீர் விரிவாக்கத் திட்டம் தொடங்கப்பட்டது

(12) புதிய அரியலூர் மாவட்டம் தொடங்கப்பட்டது

(13) தமிழர் திருநாளை முன்னிட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல்

(14) இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் தொடங்கப்பட்டது

(15) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பேருந்து நிலையம் துவங்கப்பட்டன. தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

(16) மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பல்வேறு வழித்தடங்களுக்கு புதிய பேருந்துகள் இயக்கி வைக்கப்பட்டன.

(17) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது

(18) தமிழ்நாடு வஃக்பு வாரிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

(19) தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம் ஊனமாஞ்சேரியில் திறந்து வைக்கப்பட்டது

(20) பணி செய்யும் மகளிருக்கான தங்கும் விடுதிக்கு (சென்னை சாலிகிராமத்தில்) அடிக்கல் நாட்டப்பட்டது.

போன்ற அரசு நலத் திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைந்து, அரசு நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் முன்னணி நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து, அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. விளம்பரங்களுடன் இலவசக் கட்டுரைகளை வெளியிட நாளிதழ்களின் வெளியீட்டாளர்களுடன் கலந்துபேசி கட்டணத்தில் சலுகை பெற்று விளம்பரச் செலவில் சிக்கனம்

கடைபிடிக்கப்படுகின்றது. இத்தகைய, தமிழ்நாட்டின் அடிப்படை கட்டமைப்புகளை வெளிப்படுத்தும் விளம்பரங்கள் அயல்நாட்டு நேரடி மூலதனத்தையும், பிற மாநிலங்களின் தொழில் முனைவோர்களிடமிருந்து புதிய கூடுதலான மூலதனத்தையும் ஈர்க்க வகை செய்துள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசியத் தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுவதுடன், www.tender.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து டெண்டர் படிவங்களை இலவசமாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், ஆகியவற்றின்படி அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது எடுக்கப்பட்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.



## அத்தியாயம்–6

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் திரைப்பட மானியம்

தன்னிகரற்ற தமிழ்த் திரையுலகைப் போற்றி வளர்க்கவும் அதனை ஊக்கப்படுத்தவும், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் 1968 ஆம் ஆண்டு முதல் திரைப்பட விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் நியமிக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | - | ரூ.2 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 2. | இரண்டாம் பரிசு | - | ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | மூன்றாம் பரிசு | - | ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறப்புப் பரிசு | - | ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |

பெண்களின் நிலையை உயர்த்திக் காட்டி, அவர்களின் மேன்மையை விளக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

2000 ஆம் ஆண்டிலிருந்து விருது பெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் குரல்வளக் (Dubbing) கலைஞர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கான விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. அளவான குடும்பம் மற்றும் திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படங்களுக்கு முதல் பரிசு

ரூ.50,000/-, இரண்டாம் பரிசு ரூ.25,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 16-10-2007 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

**கலைத் துறை வித்தகர் விருதுகள்**

தமிழ்த் திரையுலக வரலாற்றில் புகழிடம் பெற்று மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற தியாகராஜ பாகவதர், அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அரசு மானியம்**

சமுதாய நோக்குடன் கூடிய தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டு தேர்வுக்கு 45 திரைப்படங்களும் 2006 ஆம் ஆண்டு தேர்வுக்கு 49 திரைப்படங்களும் வரப்பெற்றன. மொத்தம் 70 படங்களுக்கு மானியம் வழங்க தேர்வுக் குழுவின் பரிந்துரை பெறப்பட்டது. இவற்றிற்கு விரைவில் மானியம் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007 ஆம் ஆண்டில், வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் நடித்த சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கிட தேர்வுக் குழுவும், 2007 ஆம் ஆண்டில், வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கிட தேர்வுக்குழுவும் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007 ஆம் ஆண்டில், வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படங்களை தேர்வுக் குழுவினர் பார்வையிட்டு அரசு மானியத்திற்குப் பரிந்துரை செய்வர். தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மானியம் வழங்கப்படும்.



**சின்னத்திரை விருதுகள்**

1. 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சின்னத்திரை கலைஞர்களுக்கு தொடர்ந்து விருதுகளை வழங்கி, கலையுலகை ஊக்குவிக்கும் பணிகள் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததையொட்டி, முதன் முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2006 ஆம் ஆண்டு முதல் சின்னத்திரை கலைஞர்களுக்கான விருதுகளை வழங்கிட தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2. சின்னத்திரை விருதுக்கு 11 நெடுந்தொடர், 3 வாரத்தொடர் வரப்பெற்றன. தேர்வுக் குழு தெரிவு செய்து பரிந்துரைக்கும் சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு ரூ.2 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த நெடுந்தொடருக்கு இரண்டாம் பரிசு ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த வாரத்தொடர் ஒன்றிற்கு ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (பெண்), சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

ஆண்டின் சிறந்த சாதனையாளர், ஆண்டின் சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

'இனமுரசு' சத்யராஜ் நடித்த 'பெரியார்' என்ற திரைப்படத்திற்கு ரூ.95 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

**தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள்**

1. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

[2008 மே 8

2. சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு, ரொக்கப்பரிசு, நினைவுப்பரிசு மற்றும் தங்கப் பதக்கம், சான்றிதழ்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

3. திரைப்படத் துறையில் சீரிய சாதனை புரிந்தவர்களுக்கு கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

4. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

5. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

6. சண்டைக்காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ. 1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ. 50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

7. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

8. தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு அந்த விருதுகள் பெற்றமைக்காக தமிழ்நாடு அரசு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழில் தலைப்பு**

தமிழ் மொழி ஆர்வத்திற்கு மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், புதிய திரைப்படங்களுக்கு தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால், அந்தத் திரைப்படங்களுக்கு 22-7-2006 முதல் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து, வணிக வரித் துறையால் ஆணை வெளியிடப்பட்டது.



2008 மே 8]

## அத்தியாயம்–7

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

திரைப்படம், ஒலி-ஒளி ஊடகத்தில் பெருமளவில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், அவற்றை மக்களுக்கும் அரசுக்கும் இடையே ஒரு சிறந்த இணைப்புக் கருவியாகப் பயன்படுத்தவும், அரசு, 1968 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவைத் தோற்றுவித்தது. தொடக்கத்தில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வந்தது. பின்னர் 1973 ஆம் ஆண்டு முதல் சென்னை அடையார் தகவல் தொழில்நுட்பப் பெருவழியை (IT Corridor) ஒட்டியுள்ள திரைப்பட நகரத்தில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தனியாகச் செயல்படத் தொடங்கியது.

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் முக்கியமான நடவடிக்கைகள்

**சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் ஒளிபரப்பு**

சட்டமன்றப் பேரவையின் அன்றாட நிகழ்ச்சிகளை வீடியோவில் பதிவு செய்து அவற்றைத் தொகுத்து, தனியார் தொலைக்காட்சிகளுக்கு வழங்கப்படுகிறது.

**(அ) 35 மி.மீ. செய்தி மலர் தயாரிப்பு**

செய்தி மலர்கள் படப்பிடிப்புகள் 10 நிமிட படங்களாகத் தொகுக்கப்பட்டு, மத்திய அரசு திரைப்படப் பிரிவின் சென்னை மற்றும் மதுரை கிளைகளின் உதவியுடன் தமிழகமெங்கிலும் உள்ள திரையரங்குகளில் வெளியிடப்படுகின்றன.

**(ஆ) செய்திப் படப்பிடிப்பு**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளையும், தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து முக்கிய அரசு நிகழ்ச்சிகளையும் திரைப்படங்களாகவும் மற்றும் ஒளிப்பதிவு நாடாக்களாகவும் தயாரிக்கிறது.

[2008 மே 8

**(இ) 35 மி.மீ. திரைப்படம் மற்றும் ஒளிப்பதிவு நாடா விளக்கப்படம் தயாரிப்பு**

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள்/வாரியங்கள்/ கழகங்களுக்குத் தேவைப்படும் விளக்கப்படங்களை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை குடும்ப நலம், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு, கூட்டுறவு போன்ற முக்கியமான பொருண்மைகள் குறித்து, 10-லிருந்து 20 நிமிடம் வரை ஓடக்கூடிய, திரைப்படம் மற்றும் ஒளிப்பதிவு நாடாக்களைத் தயாரித்துள்ளது. விளக்கப்படங்கள் திரையரங்குகளிலும் செய்தித் துறையின் (மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின்கீழ் செயல்படும்) கள விளம்பர அலகுகள்மூலமும் வெளியிடப்படுகின்றன.

**(ஈ) வீடியோ செய்தி மலர் தயாரிப்பு**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு முக்கிய மக்கள் நலத் திட்டங்கள் அடங்கிய வீடியோ செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது. வீடியோ செய்தி மலர்கள் செய்தித் துறையில் கள விளம்பர அமைப்பு மற்றும் முன்னணி தனியார் தொலைக்காட்சிமூலம் விளம்பரப்படுத்தப் படுகின்றன.

**(உ) அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள்**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு விளக்கப்படங்கள் தயாரிக்க இயலாத நேரங்களில் தனியார் தயாரிப்பாளர்களின் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கென 105 தனியார் திரைப்படத் தயாரிப்பாளர் அடங்கியப் பட்டியலை அரசு அங்கீகரித்துள்ளது. இந்தப் பட்டியலில் உள்ள படத் தயாரிப்பாளர்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்காக (திரைப்படம்/ஒளிப்பதிவுநாடா) விளக்கப்படங்கள் தயாரித்துள்ளனர். மேலும் திரைப்படம்/ஒளிப்பதிவு நாடா கோப்புக் காட்சிகளை தனியார் படத் தயாரிப்பாளர்களுக்கு அவர்கள் விருப்பத்தின் பேரில் விற்கப்படுகின்றன.



2008 மே 8]

## அத்தியாயம்–8

## எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதாகும்.

இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி தரும் மூன்று நிறுவனங்களில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இது செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன:

| வ. எண் | பட்டயப் படிப்புகளின் பெயர் | காலம் | கல்வித் தகுதி | இருக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் | 3 ஆண்டுகள் | ஏதாவது ஒரு பட்டப்படிப்பு | 14 |
| 2. | ஒளிப்பதிவு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 3. | ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 4. | படத்தொகுப்பு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |
| 5. | படம் பதனிடுதல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | 14 |

[2008 மே 8

ஒவ்வோர் ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் வெளியிடப்பட்டு ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஜூலை மாதத்தில் மாணவர்களின் சேர்க்கை நடைபெறுகின்றது.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லா பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

இறுதி ஆண்டில், அனைத்துத் துறைகளில் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், தமிழக அரசால் ஆண்டுதோறும் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ரூ. 14 இலட்சம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு "எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் குறும்பட விருது" என்ற பெயரில் இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் பட்டய குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம், ரூ.5,000/- ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கி வருகிறது.

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்துகொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும், தமிழக அரசு ரூ. 75,000/- நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலுள்ள சீர்வளி வசதிசெய்யப்பட்ட படப்பிடிப்புத் தளத்தினை, இந்நிறுவன கட்டுப்பாட்டில் விட்டு அதன் சீரமைப்புப் பணிகளுக்காக, ரூ. 1.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பொதுப்பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்களது பயன்பாட்டிற்காக மாணவர்கள் படப்பிடிப்புத் தளம் ரூ.17.86 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 67.47 இலட்சம் செலவில் ஒளிப்பதிவுப் பிரிவில் படப்பிடிப்புக் கருவிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.



2008 மே 8]

## அத்தியாயம்–9

## திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் முக்கியத் தொழிலாக தொடர்ந்து விளங்குகிறது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு திரையரங்குகளில் திரைப்படங்களைப் பார்ப்பது என்பது ஒரு முக்கியமான பொழுதுபோக்காகும். எனவே அரசு திரைப்படத் தொழிலுக்குச் சலுகைகளை வழங்கி வருகிறது.

2. தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகையிலான மொத்தம் 1,526 திரையரங்குகள் உள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. நிரந்தரத் திரையரங்குகள் | : | 1,219 |
| 2. ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள் | : | 121 |
| 3. நிரந்தரமற்ற திரையரங்குகள் | : | 179 |
| 4. திறந்த வெளித் திரையரங்குகள் | : | 7 |
| **மொத்தம்** | : | **1526** |

3. தற்போதுள்ள திரைப்படச் சட்டம் அதாவது 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படச் (முறைப்படுத்துதல்) சட்டம் மிகவும் பழைமையான ஒன்று. அதில் சினிமாத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களைக் கையாள போதுமான வழிவகைகள் இல்லை. எனவே தற்போதுள்ள 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படம் (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளை மாற்றி அமைக்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. எனவே, மேற்படி சட்டம் மற்றும் விதிகளுக்கு தகுந்த மாற்றங்களைத் தெரிவிக்கும் வகையில் நில நிருவாகத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் அலுவல் மற்றும் அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்ட குழுவை 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு அமைத்தது. அந்தக் குழு அரசுக்கு தன்னுடைய அறிக்கையை விரைவில் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழில் பெயரிடப்பட்ட பழைய மற்றும் புதிய தமிழ்த் திரைப்படங்களுக்கு

[2008 மே 8

கேளிக்கை வரி விலக்களித்தல், பொது இடங்களில் எடுக்கப்படும் படப்பிடிப்பிற்கான கட்டணங்களைப் பெருமளவில் குறைத்தல் போன்ற பல்வேறு சலுகைகளை திரைப்படத் தொழிலுக்கு வழங்கியுள்ளது. இந்தப் பயன்கள் பொதுமக்களைச் சென்றடையும் வகையில் 1-1-2007 முதல் திரையரங்க நுழைவுக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பல்வேறு அமைப்புகள் கொண்ட திரையரங்குகளில் உள்ள வசதிகளைக் கருத்திற்கொண்டு அரசு சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த திரையரங்கங்களுக்கு தனியாக நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. அரசு புதிதாக நிர்ணயித்துள்ள கட்டணங்களை செயற்படுத்தவும், அரசு நிர்ணயித்த குறைந்த கட்டணங்களின் பலன்கள் பொதுமக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யவும் எந்தவொரு திரையரங்கும் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக வசூலிக்கவில்லை என்பதை உறுதி செய்யும்படி திரையரங்கிற்கு உரிமம் வழங்கும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் வருவாய், வணிக வரி மற்றும் காவல் துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளைக் கொண்ட குழுவின்மூலம் திரையரங்குகளில் கூட்டாய்வு மேற்கொள்ளவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## 5. கம்பிவடத் (கேபிள்) தொலைக்காட்சி கட்டமைப்பு

1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது. 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (சட்டம் 36/2000) படி மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள், உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர் ஆகியோர், இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு, 9-1-2004ஆம் நாளிட்ட அதன் அறிவிக்கையின் மூலம், கேபிள் தொலைக்காட்சி சேவையை இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (TRAI) ஒப்படைத்துள்ளது.

6. 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 4A பிரிவு கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறையில் (CAS) ஒளிபரப்ப வகை செய்கிறது. இது, சந்தாதாரர்கள் தாங்கள் காண விரும்பும் கட்டண அலைவரிசைகளைக் காண்பதற்கு ஏதுவாக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையாகும். பார்வையாளர்கள், தாம் காண விரும்பும்



2008 மே 8]

அலைவரிசைகளுக்கு மட்டுமே கட்டணம் செலுத்துவதற்கு இது வழிவகை செய்யும். கட்டண அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண்பதற்கு கம்பிவட மேல்நிலைப் பெட்டி (செட்-டாப் பாக்ஸ்) என்னும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் கட்டணமில்லாத அலைவரிசைகளைக் காண 'செட் டாப் பாக்ஸ்' தேவையில்லை. கட்டண அலைவரிசைகளை பார்க்கும் ஏற்பாட்டுமுறை, சென்னை மாநகரில், 1-9-2003 முதல் செயல்படுத்தப்பட்டு 31-12-2006 முதல் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

## 7. வீடியோ சட்டமும் விதிகளும்

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டி திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புச் செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல் துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாக செயல்படுகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவு கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

## 8. திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

தமிழ்நாடு புலானாய்வுத் துறை குற்றப்பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம், 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்க, இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பன்னிரெண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

[2008 மே 8

**9. 2004 ஆம் ஆண்டிலிருந்து திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவின் செயல்பாடுகள் :**

| ஆண்டு | பதிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப் பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்துகளின் மதிப்பு (ரூபாயில்) | கேபிள் தொலைக் காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1180 | 1206 | 12,06,43,647/- | 53 |
| 2005 | 826 | 950 | 9,44,55,557/- | 13 |
| 2006 | 1153 | 1193 | 19,00,04,502/- | 10 |
| 2007 | 1844 | 1866 | 17,38,74,360/- | 9 |
| 2008 (31-3-08 வரையில்) | 392 | 401 | 36,59,070/- | -- |

மாநில அளவில் அதிகார எல்லையைக் கொண்டுள்ள திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு மாநில முழுவதிலும் திருட்டு வீடியோவை நன்கு கட்டுப்படுத்தியுள்ளது.



2008 மே 8]

## அத்தியாயம்–10

### தமிழரசு

தமிழ்நாடு அரசின் கொள்கைகள், செயல்பாடுகள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே கொண்டு சேர்க்கும் தமிழக அரசின் அச்சு ஊடகமாக 'தமிழரசு' இதழ் திகழ்கிறது.

'தமிழரசு' தமிழ் இதழ், மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ. 10/- ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ. 120/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ. 1,000- ஆகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' ஆங்கில இதழின் விலை ரூ. 15/- ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ. 60/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ. 500/- ஆகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வாசகர்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ள பல தகவல்களை தமிழரசு இதழ் வழங்கி வருகிறது. தமிழக அரசின் சாதனைகள், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள், தமிழக அரசால் மக்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கட்டுரைகள் மற்றும் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் மற்றும் வெற்றிக் கதைகள் ஆகியவை வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம் மற்றும் சமூக நலம் சார்ந்த திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், இலக்கியச் சிந்தனைகள், சிறு கதைகள், கவிதைகள் ஆகியனவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், சிறப்பு வெளியீடுகள், மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றையும் அழகு மிளிர வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் சிறப்புற அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் இதர பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் அச்சிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் மற்றும் நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆக்கப் பணிகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும்

வகையில், செய்திகள் தொகுத்து வடிவமைக்கப்பட்டு, 'அரசுச் செய்தி' சுவரொட்டி அரசு மைய அச்சகத்தின் மூலம் மாதம் இருமுறை (ஒரு முறைக்கு 20,000 சுவரொட்டிகள் வீதம்) அச்சடிக்கப்பட்டு, மாவட்டங்கள் மற்றும் மாநகராட்சிகளிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக பொதுமக்கள் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டு நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2008 வரையில், தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் சந்தாக்களின் எண்ணிக்கை 73,978 ஆகும். இதில் 51,518 ஆயுள் சந்தாக்களாகும்.

**சிறப்பு வெளியீடுகள்**

1. புத்தர் சுவரொட்டி மற்றும் கையேடு.
2. செய்தித் துறை மானியக் கோரிக்கை 2006 - 2007 அறிவிப்புகள் மீது நடவடிக்கை - கையேடு.
3. அரசு நலத் திட்ட உதவிகள் தகவல் கையேடு தொகுதிகள் I, II மற்றும் III.
4. மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை தேசியமயமாக்க வேண்டும் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29-5-2007 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற 53 ஆவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை என்ற சிறப்பு வெளியீடு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை - 2007 (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 2007-2008ஆம் ஆண்டிற்கான காவல் துறை மற்றும் தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது ஆற்றிய பதிலுரை.
7. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 2007 ஜூலை 30, 31 ஆகிய நாட்களில் ஆற்றிய உரை.





8. முதல்வர் கலைஞரின் ஆற்றல்மிகு தலைமையில் தன்னிகரற்ற சாதனைகள். (ஆங்கிலத்தில்)
9. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் வாழ்க்கைக் குறிப்பு - கையேடு
10. தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் வாழ்க்கைக் குறிப்பு - கையேடு.
11. இந்திய பன்னாட்டு வணிகப் பொருட்காட்சி - 2007, புதுதில்லி (தமிழ்நாடு அரங்கம்) கையேடு. (ஆங்கிலத்தில்)
12. இந்திய ஆட்சிப் பணி அலுவலர் விவரக் குறிப்பு நூல் - சிறப்புப் பதிப்பு 2007 (ஆங்கிலத்தில்)
13. தமிழக நாட்டார் கலைகள் - கையேடு
14. தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005.
15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புதுடெல்லியில் 19-12-2007 அன்று நடைபெற்ற 54 ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் 20-12-2007 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம்.
16. தமிழக அரசின் விருதுகள் பெற்றோருக்கான தகுதியுரை தொகுப்பு - 16-1-2008.
17. சலுகை... சலுகை... சகல உழவர்க்கும் உவகை - சிறப்பு வெளியீடு
18. தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு.

தமிழரசு இதழ் அரசின் இணையதளத்திலும் (www.tn.gov.in) உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப மேன்மைக்கு வழிவகுக்கும் வகையில், 2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் தமிழரசு அச்சகத்திற்கு ரூ.78.89 இலட்சம் செலவில் இரண்டு வண்ண சீட்ஃபெட் அச்சு இயந்திரமும், காகிதம் வெட்டும் இயந்திரமும், இருபுறம் இணைத்துத் தைக்கும் இயந்திரமும், 30 கி.வா. மின்னாக்கியும், வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

[2008 மே 8

## அத்தியாயம்–11

## பொருட்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், சமூக விழிப்புணர்ச்சி மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்களைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் ஆண்டுதோறும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் ஏப்ரல் - ஜூன் மாதங்களிலும், சேலம் மாநகரில் ஜூலை - செப்டம்பர் மாதங்களிலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருநெல்வேலி அல்லது வேலூர் நகரில் நடத்திடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சிகளில், பல்வேறு மாநில, மத்திய அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை கலந்து கொள்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு பலருக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன. மேலும், இப்பொருட்காட்சிகளில் பல்சுவை கலைநிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நன்முறையில் விற்பனை செய்யும் பொருட்டு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் நடுவர் குழு அமைக்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சிறு கண்காட்சிகள், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. இதற்கென ஆண்டுதோறும் ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு நடத்தப்பட்ட பொருட்காட்சிகளின் மூலமாக ரூ. 1.48 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவில் (Phool Walon Ki Saire) பங்கேற்று பரிசு பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



2008 மே 8]

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். 2007 மற்றும் 2008 ஜனவரித் திங்களில் சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்குபெற்ற இத்துறையின் ஊர்தி பரிசு பெற்றுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று அரங்கு அமைத்து வருகிறது. புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டத்தில் அரசு பொருட்காட்சி நடத்தப்பட்டது.

**பல்துறை பணி விளக்க முகாம்கள்:**

அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், கொள்கை விளக்கங்களையும், பொதுமக்களுக்குப் பயன்தரும் வகையில் விளக்கக்கூடிய வகையில், பல்துறை பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல் துறைப் பணி விளக்க முகாம்கள் நடைபெறும்போது, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், மாவட்ட அளவில் கிராமங்களில், பொதுமக்கள் குறைகள் கேட்கும் மனுநீதி நாள் நிகழ்ச்சிகளின்போதும் சிறிய அளவிலான பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு நல்வாழ்வுத் திட்டங்களைப் பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், விளம்பரப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆலோசித்து, முடிவுகள் மேற்கொண்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2008 மே 8

## அத்தியாயம்–12

### மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழக அரசு அறிவிக்கும் பல்வேறு நலத் திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் சாதனை விவரங்களைப் பொதுமக்கள் அறியவும், அவற்றின் பலனை முழுமையாக அடைவதற்கு ஏதுவாக, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை அவர்களிடம் உருவாக்கி, விளம்பரப் பணிகளையும் செவ்வனே மேற்கொள்ளும் பணிகளை மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப் பணி ஆற்றுதல், அரசு விழாக்களை நடத்துதல், சிறு கண்காட்சியினை அமைத்தல், நினைவகங்களைப் பராமரிக்கச் செய்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவர்கள் பணி சிறக்கும் வகையில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அனைத்து மாவட்டங்களில் அரசின் சார்பில் புதிய மடிக் கணினிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 'டிஜிட்டல்' நிழற்படக் கருவிகள், நிகரிகள், 'ஸ்கேனர்கள்', நகலெடுக்கும் இயந்திரங்கள் போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, தற்போது மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் தன்னிறைவுடன் செயல்படுகின்றன.

மாவட்ட அலுவலகங்களில் உள்ள பழுதடைந்த ஊர்திகள், நிகரிகள், நகலெடுக்கும் கருவிகள் ஆகியவை, பகுதி-II திட்டங்களில் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு, பணிகள் தொய்வில்லாமல் நடக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், திண்டுக்கல், திருவண்ணாமலை, தேனி, நாமக்கல், வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு பழைய ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வழங்கப்பட்டன.

சென்னை, திருநெல்வேலி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மடிக் கணினிகள் ரூ3.02 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டன.



2008 மே 8]

## அத்தியாயம்–13

### தகவல் மையங்கள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், புதுடில்லி ஆகிய ஆறு இடங்களில் தகவல் மையங்கள் இயங்கி வருகின்றன.

மாநிலத் தகவல் மையம், சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகிறது. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் இந்நிலையம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 17,500 புத்தகங்களை உள்ளடக்கி பொதுமக்கள் தொடர்பு ஊடகமாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள், மாணவர்கள், போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்திக் கொள்பவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களது அலுவலகங்கள், அரசின் உயர் அலுவலர்கள், தமிழரசு ஆகிய பல்வேறு பிரிவினரும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பேருதவியாக உள்ளன.

வாழ்க்கை வரலாற்று நூல்கள், அறிவியல், சரித்திரம், தத்துவம், மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், வணிகவியல், கணக்கு, கணினி ஆகிய புத்தகங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது மேற்கோளுக்கு பயன்படும் புத்தகங்களும் நாளிதழ்கள், வார, மாத இதழ்களும் வைக்கப்பட்டுள்ள இந்நூலகத்தை தினசரி சுமார் 100 வாசகர்களுக்கும் குறையாமல் பயன்படுத்தி வருகின்றனர். வேலை தேடும் இளைஞர்களது நலனுக்காக வேலைவாய்ப்புச் செய்தி, போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்ய உதவும் மேற்கோள் புத்தகங்கள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளின் முடிவுகளும் இங்கு மேற்கோளுக்காக வைக்கப்பட்டுள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்ட இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு பதிப்பகத்திலிருந்து புத்தகங்கள் புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டு, நூலகம் இன்னும் பயனுள்ளதாகப் பயன்பட அவ்வப்போது தக்க நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கையேடுகளும், இதர வெளியீடுகளும் இங்கு த வலுக்காக வைக்கப்படுகின்றன.

### நிறைவுரை

அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களும், திட்டப் பயன்களும் மக்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதே அரசின் இலட்சியமாகும். இதனை மையமாக வைத்து, இத்துறை நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசின் திட்டங்களின்மூலம் பெறவேண்டிய பலன்களை அவர்கள் முழுமையாக அடைய உதவும் வகையில், வளமான முன்னேற்றப் பாதையில் இத்துறை சிறப்புற வெற்றி நடைபோடுகிறது.





## இணைப்பு–1

### வரவு செலவு திட்ட மதிப்பீடு 2008–2009

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கணக்கு தலைப்பு | 2006–2007 கணக்குகள் | 2007–2008 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2007–2008 திருத்த மதிப்பீடு | 2008–2009 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2259 | பொதுப் பணிகள் | 77,98 | 75,29 | 82,40 | 75,40 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 29,59,99 | 32,21,11 | 32,70,86 | 34,86,76 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 24,42 | 40,40 | 1,42,24 | 48,60 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 5,42 | 5,56 | 5,36 | 6,18 |
| 2251 | தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள் | 2,27,38 | - | - | - |
| 4220 | செய்தி விளம்பரம் குறித்த மூலதனச்செலவு | 38,48 | 87,60 | 87,60 | 97,00 |
| 6220 | செய்தி–விளம்பரத்திற்கான கடன்கள் | | | 5,22 | |
| | மொத்தம் | 33,33,67 | 34,29,96 | 35,93,68 | 37,13,94 |

[2008 மே 8

## இணைப்பு-V

(507 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, தமிழக அரசின் சேவைத் துறையாக வகைப்படுத்தப்பட்டு, அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசைச் சார்ந்த நிறுவனங்களின் அச்சுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது:—

### 1.1. தோற்றம்

அனைத்து அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளுக்கும் தகவல் மற்றும் ஆவணப் பராமரிப்பிற்கும் உறுதுணையாக விளங்கும் இத்துறை சென்னையில் டிசம்பர் 17, 1831-இல் தொடங்கப்பட்டு 175 ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளது. தற்போது இத்துறையின்கீழ் எட்டு கிளை அச்சகங்கள் மற்றும் எழுதுபொருள் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

### 1.2. அரசு அச்சகங்கள் செயல்படும் இடங்கள்

சென்னை மாநகரில் அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம் ஆகிய இடங்களிலும், மதுரை, திருச்சி, சேலம், புதுக்கோட்டை, விருத்தாச்சலம் மற்றும் உயர் நீதிமன்ற கிளை, மதுரை ஆகிய இடங்களிலும் கிளை அச்சகங்கள் இயங்கி வருகின்றன.

### 2. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணியாளர்கள் விவரங்கள்

இத்துறையில் மொத்தம் 2,044 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில், 444 பெண் பணியாளர்கள் அடங்குவர். மேலும், இத்துறையில் 105 உடல் ஊனமுற்ற பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் 62 ஆண் பணியாளர்கள் மற்றும் 8 பெண் பணியாளர்கள், ஆக மொத்தம் 70 கண் பார்வையற்ற பணியாளர்கள் உள்ளனர். மேலும் 24 ஆண் பணியாளர்கள் மற்றும் 11 பெண் பணியாளர்களை உள்ளடக்கி மொத்தம் 35 காது கேளாத மற்றும் வாய் பேசாத பணியாளர்கள் உள்ளனர்.



2008 மே 8]

### 2.1. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை-2

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம் நிர்வாக வசதிக்கென ஐந்து பிரிவுகளாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| நிர்வாகப் பிரிவு | — | இணை இயக்குநர் |
| தொழில் நுட்ப பிரிவு | — | பொது மேலாளர் |
| கணக்குப் பிரிவு | — | கருவூலத் துறையிலிருந்து இத்துறைக்கு வரப்பெற்றுள்ள முதன்மை கணக்கு அலுவலர் |
| எழுதுபொருள் பிரிவு | — | துணை இயக்குநர் |
| வெளியீடுகள் பிரிவு | — | உதவி இயக்குநர் |

அனைத்து அரசு அச்சகங்கள், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அரசு வெளியீடுகள், விற்பனை நிலையங்கள், அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன.

ஆணையரகத்தில் 165 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆணையரகத்தின் நிருவாக அமைப்பு விவரம், பிற்சேர்க்கை "அ"-வில் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.2. அரசு மைய அச்சகம், சென்னை—79

மிகப் பழமையானதும் மற்றும் பாரம்பரியமிக்கதுமான அரசு மைய அச்சகம், தங்கசாலை கட்டட வளாகம், தங்கசாலை தெரு, சென்னையில் 5.5 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகின்றது.

அரசு மைய அச்சகத்தில் 1,161 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வச்சகம், மூன்று முறை மாற்றங்களில் இரண்டு பணி மேலாளர்களின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றது. அரசு மைய அச்சகத்தில் உள்ள வரவு-செலவு மற்றும் அதிரகசிய பிரிவுகள் ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் இயங்கி வருகின்றன.

[2008 மே 8

அச்சு தொழில் நுட்பத் துறை தற்போது அடைந்துள்ள அதிநவீன வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, படிப்படியாக அரசு மைய அச்சகத்தினை நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அரசு மைய அச்சகத்தில் மிக்க முன்னுரிமை அடிப்படையில் அச்சடிக்கப்படும் இனங்கள்:-**

தமிழ்நாடு அரசிதழ்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள்

பல்வேறு சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள்

வரவு-செலவு ஆவணங்கள்

மிக கமுக்கப் பணிகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள்

தேர்தல் தொடர்பான பணிகள், வாக்குச் சீட்டுகள்

மாநில கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள்

மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள்

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு தலைமை நீதியரசர், தலைமைச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் கடிதத்தாள்கள் மற்றும் உறைகள்

சட்டத் தொகுப்புகள் மற்றும் கையேடுகள்

காலமுறை வெளியீடுகள்

நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள்

வணிக வரித் துறையின் படிவங்கள்

அரசுத் தேர்வுகள் துறை மற்றும் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாட்கள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய சிற்றேடுகள் மற்றும் நெறிமுறைகள்.



2008 மே 8]

**2.3. அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1**

அரசு எழுதுபொருள் கிடங்கானது அனைத்து அரசுத் துறைகளுக்கும் ஆண்டு தோறும் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சுப் பொறிகள், கணக்கீட்டுப் பொறிகள், கரிப்படித் தாட்கள், படிப்பெருக்கி காகிதங்கள், படிப்பெருக்கிகள், படிப்பெருக்கி மை மற்றும் எழுது பொருட்களை வழங்கி வரும் மையமாக விளங்கி வருகின்றது. எழுதுபொருள்கள் கொள்முதல் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-இன்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் மற்றும் கணக்கீட்டுப் பொறிகள் தலைமை இயக்குநர், விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன.

3,491 அரசு அலுவலகங்களுக்கு அவர்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில், இலவசமாக 3,375 அலுவலகங்களுக்கும் மற்றும் முன்கூட்டியே பணம் செலுத்தி பெறும் வகையில் 116 அலுவலகங்களுக்கும், எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

மொத்த காகிதங்களின் தேவையில், சில வகைக் காகிதங்கள் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. சிறப்பு வகைக் காகிதங்கள் மற்றும் அட்டைகள், கரிப்படி (கார்பன்) தாட்கள் மற்றும் படிப்பெருக்கியின் மை போன்றவை தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-யினைப் பின்பற்றி தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

இக்கிடங்கு வழக்கமான அலுவலக நேரங்களில் இயங்கி வருகின்றது. இங்கு மொத்தம் 119 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வலுவலகம் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

**2.4. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104**

இவ்வச்சகம் சென்னை உயர் நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை, குறிப்பாக தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிடுவதற்காக நிறுவப்பட்டது.

[2008 மே 8

சென்னை உயர் நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான சுமார் 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன. தினசரி வழக்குப் பட்டியல் அச்சிடுவதில் தாமதத்தினைத் தவிர்க்கும் பொருட்டு, இவ்வச்சகத்தில் மேலும் ஒரு வெப் ஆப்செட் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் சென்னை உயர் நீதிமன்றத்தின் பயன்பாட்டிற்குத் தேவையான படிவங்கள் மட்டுமே அச்சிட பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் இயங்கும் அரசு கிளை அச்சகம் இரண்டு முறை மாற்றங்களில், 111 பணியாளர்களைக் கொண்டு துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

**2.5. அரசு கிளை அச்சகம், மதுரை**

இவ்வச்சகம் வருவாய், காவல், சுகாதாரம், பதிவு மற்றும் வணிக வரித் துறைகளின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டது.

பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 211 வகை படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

அரசு கிளை அச்சகம், மதுரை இரண்டு முறை மாற்றங்களில் 144 பணியாளர்களைக் கொண்டு துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

**2.6. அரசு கிளை அச்சகம், சேலம்**

இவ்வச்சகம் கருவூலம், மருத்துவம் மற்றும் அரசுத் தேர்வுகள் துறைகளின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டது.

பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 146 வகை படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுகளின் விடைத் தாட்கள் மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.



2008 மே 8]

அரசு கிளை அச்சகம், சேலம் இரண்டு முறை மாற்றங்களில் 81 பணியாளர்களைக் கொண்டு உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள ஒரு கிளை மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

**2.7. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை**

இவ்வச்சகம் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், காவல், ஓய்வூதியம், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைகளின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டது.

பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 290 வகைப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம், கன்னியாகுமரி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை இரண்டு முறை மாற்றங்களில் 79 பணியாளர்களைக் கொண்டு உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள ஒரு கிளை மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

**2.8. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

இவ்வச்சகம், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் தேவையான பொதுப் படிவங்கள், தன்பதிவேடுகள் மற்றும் ரொக்கப் பதிவேடுகளை அச்சிடுவதற்காக நிறுவப்பட்டது.

பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 126 வகைப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வருகின்றன.

நவீனமயமாக்கல் காரணமாக வழக்கொழிந்த லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்கள் கழித்தொதுக்கம் செய்யப்பட்டு, ஒரு வெப் ஆப்செட் அச்சு இயந்திரம் 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

அரசு கிளை அச்சகம், திருச்சி இரண்டு முறை மாற்றங்களில் 76 பணியாளர்களைக் கொண்டு உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள ஒரு கிளை மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

## 2.9. அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலம்

இவ்வச்சகம் வேளாண்மை, பொதுப் பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம் மற்றும் புள்ளியியல் துறைகளின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டது.

விழுப்புரம், வேலூர், மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வருகின்றன.

அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலம் இரண்டு முறை மாற்றங்களில் 62 பணியாளர்களைக் கொண்டு துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

## 2.10. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–2

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகம், அண்ணா சாலை, சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

இதன் கிளை விற்பனை நிலையம், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் செயல்பட்டு வருகின்றது.

இவ்விற்பனை நிலையம்மூலம் சட்டம் மற்றும் விதிகள், விதித் தொகுப்புகள், கையேடுகள், அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், தொலைபேசி தொகுப்புகள், பணிப் ப்திவேடுகள் முதலியவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்புகளாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அரசு வெளியீடுகள் அனைத்தும் அனுமதிக்கப்பட்ட 32 முகவர்கள் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு அரசிதழில் தூய தமிழில் பெயரினை மாற்ற ரூ.50 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

2007-2008 ஆம் நிதியாண்டில் தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான பிரசுரக் கட்டணமாக ரூ. 126 இலட்சம், அரசிதழ்கள் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை மூலமாக ரூ. 21 இலட்சம், ஆக மொத்தம் ரூ. 147 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இது சென்ற நிதி ஆண்டைவிட ரூ. 22 இலட்சம் கூடுதல் வருவாய் ஆகும்.



## 2.11. அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிம மதுரை கிளை

இவ்வச்சகம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் அச்சு தேவைகளை, குறிப்பாக தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிடுவதற்காக 2006 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. புதியதாக வெப் ஆப்செட் இயந்திரம் நிறுவப்பட்டு தினசரி வழக்குப் பட்டியல்கள் 22-1-2007 முதல் தொடர்ந்து அச்சிடப்பட்டு குறித்த காலத்திற்குள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை இரண்டு முறை மாற்றங்களில் 46 பணியாளர்களைக் கொண்டு துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

## 3. 2007–2008 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்பட்ட இனங்களின் பட்டியல்

பின்வரும் இனங்கள் இத்துறையினால் குறித்த காலத்தில் செவ்வனே அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன:-

1. காவல் துறைக்கான (காவல் பி-59) 70,000 முதல் தகவல் அறிக்கை புத்தகங்கள்.
2. அரசுத் தேர்வுகள் துறையின் 544.67 இலட்சம் விடைத்தாட்கள்.
3. சென்னை உயர் நீதிமன்றத்தின் பயனுக்கான 18 இலட்சம் தினசரி வழக்கு பட்டியல்கள் மற்றும் படிவங்கள்.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சிற்றேடுகள், நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் 20.63 இலட்சம் பிரதிகள்.
5. 2008 ஆம் ஆண்டின் மாதாந்திர நாட்காட்டிகள், மூன்று மாத நாட்காட்டிகள் மற்றும் 4 வகை நாட்குறிப்பேடுகள்.
6. போக்குவரத்துத் துறைக்கான மோட்டார் வாகன சாலை வரி விதிப்பு வில்லைக்கான படிவங்கள் 16.28 இலட்சம் எண்ணிக்கை.
7. தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்தின் "ஊனமுற்றோருக்கான அடையாள அட்டைகள்" ஒரு இலட்சம் எண்ணிக்கை.

[2008 மே 8

8. பொதுத் தேர்தல் துறையின் 62,920 எண்ணிக்கை (EPIC) ரசீது புத்தகங்கள்.

9. வருவாய்த் துறையின் 19.42 இலட்சம் எண்ணிக்கை சாதிச் சான்றிதழ்கள்.

10. மீனவர் நல வாரியத்தின்—ஒரு இலட்சம்—அடையாள அட்டைகள் மற்றும் இரண்டு இலட்சம் - விண்ணப்பப் படிவங்கள்.

11. தொழில்நுட்பத் தேர்வுகளின் 32 இலட்சம் விடைத்தாட்கள்.

12. போக்குவரத்துத் துறையின் 10 வகை படிவங்கள்—16 இலட்சம் எண்ணிக்கை.

13. காவல் துறையின் (காவல் அறிக்கை பி-311) —43,000 புத்தகங்கள்.

14. படைவீரர் கொடி நாள், ரசீது புத்தகங்கள் - 11,555 புத்தகங்கள்.

## 4. தொழிலாளர் நலன்

4.1. இத்துறையில், சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை கவனிப்பதற்காக, ஒரு தொழிலாளர் நல அலுவலர், இரண்டு உதவித் தொழிலாளர் நல அலுவலர்கள் மற்றும் ஒரு சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். தொழிலாளர்களிடமிருந்து எழுத்து வடிவில் பெறப்படும் குறைகள் உடனடி முயற்சிகள்மூலம் இணக்கமாக தீர்வு செய்யப்படுகின்றன.

அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை நகரில் உள்ள ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்துப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ தொழிலாளர்கள், சிகிச்சை அளித்து வருகின்றார்.

### 4.2. அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள் குறித்த விவரங்கள்:

இத்துறையின் பணியாளர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்காணும் படிகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன:—



2008 மே 8]

(அ) சிற்றுண்டி படியாக மாதம் ரூ.150/-

(ஆ) பால் படியாக நாள் ஒன்றுக்கு ரூ.5/-

(இ) சீருடை தையற் கூலியாக ஆண்களுக்கு நான்கு ஜோடிகளுக்கு ரூ.800/- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையும், பெண்களுக்கு நான்கு ஜோடிகளுக்கு ரூ.120/- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை.

### கூட்டுறவுச் சங்கங்கள்

அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சங்க உறுப்பினர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வரையில் கடனுதவி வழங்கி வருகின்றன.

### மனமகிழ் மன்றமும், விளையாட்டுப் போட்டியும்:

பணியாளர்களிடையே விளையாட்டினை ஊக்குவிக்கவும், உடல் ஆரோக்கியத்தினை மேம்படுத்தவும், ஆண்டுதோறும் விளையாட்டுப் பொருட்கள் கொள்முதல் செய்யவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் ரூபாய் ஒரு இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 5. நிர்வாக அமைப்பு மற்றும் பணியாளர்கள் விவரம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தின் பணியாளர்களின் விவரங்கள் (2007-2008) பிற்சேர்க்கை "ஆ"-வில் வழங்கப்பட்டுள்ளன.

## 6. அச்சக மேம்பாட்டுத் திட்டம்

அரசு அச்சகங்களை தொலைநோக்குப் பார்வையுடன் படிப்படியாக நவீனமயமாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-08-ம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு அச்சகங்கள் பின்வருமாறு நவீனமயமாக்கப்பட்டுள்ளன:—

### 6.1. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை—2

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்திற்கு பின்வரும் இயந்திரங்களைக்

கொள்முதல் செய்யவும், நிறுவுவதற்கும் ரூ. 12.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) தண்ணீரைச் சுத்தப்படுத்தி குளிரூட்டி வழங்கும் இயந்திரம் மற்றும் அதன் உபகரணங்கள்;

(3) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தில் மேற்படி இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

**6.2. அரசு மைய அச்சகம், சென்னை—79**

2007-2008ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு மைய அச்சகத்தில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ.21.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) ஒரு வண்ண ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம்;

(3) மின்னோட்ட சீராக்கியுடன்கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டுள்ளன.

**6.3. அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை—1**

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு எழுதுபொருள் கிடங்கில் பின்வரும் இயந்திரங்களை கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ.2.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) தண்ணீரைச் சுத்தப்படுத்தி குளிரூட்டி வழங்கும் இயந்திரம் மற்றும் அதன் உபகரணங்கள்;

(3) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு எழுதுபொருள் கிடங்கில் நிறுவப்பட்டுள்ளன.



**6.4. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை—104**

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104 இல் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ. 1.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104-ல் நிறுவப்பட்டுள்ளன.

**6.5. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளியில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ. 1.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டுள்ளன.

**6.6. அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலம்**

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலத்தில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ. 3.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலத்தில் நிறுவப்பட்டுள்ளன.

[2008 மே 8

### 6.7. அரசு கிளை அச்சகம், சேலம்

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், சேலத்தில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ.10.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மினி ஆப்செட் அச்சு இயந்திரம்;

(3) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி;

(4) நிழற்பட பெருக்கி இயந்திரம்.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு அரசு கிளை அச்சகம், சேலத்தில் நிறுவப்பட்டுள்ளன.

### 6.8. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ. 2.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் நிறுவப்பட்டுள்ளன.

### 6.9. அரசு கிளை அச்சகம், மதுரை–7

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், மதுரையில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ. 8.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி;

(3) சிறிய ஆப்செட் அச்சு இயந்திரம்.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், மதுரையில் நிறுவப்பட்டுள்ளன.



2008 மே 8]

### 6.10. அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை–23

2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ், அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரையில் பின்வரும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதற்கு ரூ.15.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

(1) கணினி மற்றும் உபகரணங்கள்;

(2) மின்னோட்ட சீராக்கியுடன் கூடிய தண்வளி;

(3) நிழற்பட பெருக்கி இயந்திரம்;

(4) அச்சுத் தகடு உருவாக்கும் இயந்திரம். (Plate Processor Machine)

(5) தண்ணீரை சுத்தப்படுத்தி குளிரூட்டி வழங்கும் இயந்திரம் மற்றும் அதன் உபகரணங்கள்.

மேற்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நிறுவப்பட்டுள்ளன.

### 7. சாதனைகள்

7.1. அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 22-1-2007 முதல் தினசரி வழக்கு பட்டியல் அச்சிடும் பணியினை உரிய காலக்கெடுவிற்குள் செவ்வனே முழுமையாக நிறைவேற்றி வருகின்றது.

7.2. கண்பார்வையற்ற 38 நபர்கள் தகுதியின் அடிப்படையில், புத்தகம் கட்டுநர்களாகவும், ஒரு நபர் தொலைபேசி இயக்குபவராகவும் 2007-2008 ஆம் ஆண்டுக்கான உடல் ஊனமுற்றோருக்கான தொகுதியில் இத்துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

7.3. அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீருடைகள் 3 ஜோடி எண்ணிக்கையிலிருந்து 4 ஜோடி எண்ணிக்கையாக உயர்த்தப்பட்டுள்ளது. தையற்கூலி ஆண்களுக்கு 1 ஜோடிக்கு ரூ.100-ம், பெண்களுக்கு 1 ஜோடிக்கு ரூ.10-ம் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு மட்டும் ஏற்படும் செலவினம் ரூபாய் 5,63,760

ஆகும். இதைத் தொடர்ந்து ஆண்டு ஒன்றிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. 14,69,088 ஆகும்.

7.4. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர்களின் மனமகிழ் மன்ற நடவடிக்கைகளுக்காக வருடத்திற்கு ரூ.45,000/-த்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 8. வரவு–செலவு திட்ட மதிப்பீடு

இத்துறையின் 2008-2009 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு பிற்சேர்க்கை "இ"இல் அளிக்கப்பட்டுள்ளது.

## 9. நிறைவுரை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசுத் துறைகளுக்குத் தேவையான பல்வேறு படிவங்கள், பதிவேடுகள், தட்டச்சு இயந்திரங்கள், படிபெருக்கிகள் இவற்றை வழங்குவதுடன் பொதுமக்கள் தொடர்பிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் துறைகளில் ஒன்றாகும். பொதுமக்களின் முக்கிய வாழ்வாதாரங்களுக்குத் தேவையான பிறப்புச் சான்றிதழ்கள் முதற்கொண்டு அவர்களின் இறப்புச் சான்றிதழ்கள் வரை இத்துறையில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கல்வி, வேலைவாய்ப்பு, சாதிச் சான்றிதழ்கள், உணவுப் பங்கீடு அட்டைகள், வேளாண்மை கணக்கெடுப்பு முதலிய படிவங்கள் மற்றும் பதிவேடுகள் உரிய நேரத்தில் பொது மக்களுக்கு சென்றடையும் விதமாக சிறப்பாக செயல்பட்டுவரும் இத்துறை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் தலைமையிலான தொழில்நுட்பப் பிரிவு, கணக்குப் பிரிவு, எழுதுபொருள் அலுவலகப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் வெளியீடுகள் பிரிவு இவைகளின் வழியே முறையே பொது மேலாளர், முதன்மைக் கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (எழுதுபொருள்), இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் இவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், சென்னை மைய அச்சகத்துடன் இணைந்த 8 கிளை அச்சகங்களுடன் விரிந்து பரந்து நவீன கால ஓட்டத்திற்கேற்ப புதிய வகை யுக்திகளைக் கையாண்டு வருவதுடன், விரைந்து தன்னை முழுவதும் நவீனமயமாக்கிக் கொள்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. கடந்த 175 ஆண்டுகளாக, அரசுப் பணியில் தனது பங்களிப்பை முழுமையாக எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை நிறைவேற்றி வருகிறது.





அட்டவணை—அ

நிர்வாக அமைப்பு

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்



## அட்டவணை – ஆ

### 1–4–2008–ல் பணியாளர்களின் எண்ணிக்கை

| வ. எண் | அலகு | 1–4–2008–ல் மொத்த பணியாளர்கள் | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | இதர பிரிவு பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆணையரகம் (அரசு வெளியீடுகள், விற்பனை நிலையம் உட்பட) | 165 | 10 | 94 | 61 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1. | 119 | 1 | 36 | 82 |
| 3. | அரசு மைய அச்சகம் | 1161 | 17 | 89 | 1055 |
| 4. | அரசு கிளை அச்சகம், (உயர் நீதிமன்ற வளாகம்) சென்னை–104. | 111 | 2 | 11 | 98 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை. | 144 | 2 | 12 | 130 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | 81 | 2 | 9 | 70 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 76 | 2 | 9 | 65 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 79 | 1 | 6 | 72 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 62 | 2 | 5 | 55 |
| 10. | அரசு கிளை அச்சகம், (உயர் நீதிமன்ற வளாகம், மதுரை | 46 | 2 | 3 | 41 |
| | மொத்தம் .. | 2044 | 41 | 274 | 1729 |



## பிற்சேர்க்கை – இ

### வரவு செலவு 2008–2009

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

(மொத்த செலவு ரூபாய் ஆயிரத்தில்)

| | | 2007–08 வரவு செலவு மதிப்பீடு | 2007–08 திருத்திய மதிப்பீடு | 2008–09 வரவு செலவு மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2058 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 64,87,88 | 61,06,12 | 73,64,65 |
| 2059 | பொதுப் பணி | 55,23 | 55,23 | 55,23 |
| 4058 | எழுதுபொருள், அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 8 | 85,55 | 4,00,09 |
| | மொத்தம் | 65,43,19 | 62,46,90 | 78,19,97 |

[2008 மே 8

## இணைப்பு-VI

*(587 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு

### அறிவிப்புகள் 2008–2009

1. அரசு மைய அச்சகம், சென்னை-79 இல் தற்பொழுது தயாரிக்கப்படும் இரப்பர் முத்திரை முறையை மாற்றி, புதிய முறையில் செய்திடவும், அவ்வச்சகத்தினை நவீனமயமாக்குவதன் தொடர்ச்சியாக நுண்ணிய துளையிடும் இயந்திரம் மற்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் இயந்திரம் ஆகியவற்றை நிறுவிட ரூ.31 இலட்சம் வழங்கப்படும்.

2. அரசு கிளை அச்சகம், திருச்சியில் கட்டுமானப் பிரிவில் விரைவில் புத்தகமாக்கும் பர்பெக்ட் பைண்டர் சிங்கிள் கிளாம்ப் இயந்திரம் ஒன்று நிறுவிட ரூ.10 இலட்சம் வழங்கப்படும்.

3. அரசு கிளை அச்சகம், விருத்தாசலத்திற்கு துல்லியமாக வெட்டும் திறன் கொண்ட புரோகிராம் கட்டிங் இயந்திரம் ஒன்று நிறுவிட ரூ.20 இலட்சம் வழங்கப்படும்.

4. அரசு கிளை அச்சகம், மதுரையில் அச்சிடப்படும் படிவங்களை அருகிலுள்ள மற்ற அரசு அலுவலகங்களுக்கு வழங்கிடவும், அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்குத் தேவைப்படும் பொருட்களை உடனுக்குடன் எடுத்துச் செல்லவும் கூண்டு உந்து (Van) ஒன்று வாங்கிட ரூ.4 இலட்சம் வழங்கப்படும்.

5. அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற பெஞ்ச் மதுரை கிளையில், வழக்குப் பட்டியல் அச்சிடும் பணி தடையில்லாமல் நடைபெற 125KVA திறன் கொண்ட மின்னாக்கி இயந்திரம் வாங்கிட ரூ. 10 இலட்சம் வழங்கப்படும்.

6. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை உயர் அலுவலர்களின் அவசர மற்றும் அவசிய அலுவலகப் பயன்பாட்டிற்கென புதிய கூண்டு உந்து (Van) ஒன்று வாங்க ரூ. 5 இலட்சம் வழங்கப்படும்.

7. அரசு அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் / தொழிலாளர்களின் குழந்தைகளிடம் ஒரு சிறிய தொகையினை பயிற்சி கட்டணமாக பெற்று கணினியில் அவர்களின் தேவைக்கு ஏற்ப பயிற்சி அளிக்கப்படும். இக்கணினி வழிப் பயிற்சிக்காக கணினிகள் மற்றும்



2008 மே 8]

அதன் உபகரணங்கள் (மேஜை, நாற்காலி தடையில்லா மின்சாரம் வழங்கும் இயந்திரம், பிரிண்டர்) மற்றும் கட்டட உள்கட்டமைப்புடன் கூடிய பயிற்சி நிலையம் ஆணையரகத்தில் நிறுவுவதற்கு ரூ. 10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.

8. அரசு மைய அச்சகம், சென்னை-79 இல் அரசு அச்சகங்கள் நவீன மயமாக்குதல் திட்டத்தின்கீழ் நவீன இயந்திரங்களை நிறுவிட முதல் கட்டமாக ரூ. 4.22 கோடி வழங்கப்படும்.

## இணைப்பு -VII

*(587 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 28--செய்தி மற்றும் விளம்பரம்

## அறிவிப்புகள், 2008-2009

நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, எங்களையெல்லாம் ஆளாக்கிய எங்களின் உயிராக-உயிர் மூச்சாக-இதயத் துடிப்பாக விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து இந்த ஆண்டுடன் நூறாண்டு நிறைவடைகிறது. அந்தப் பெருந்தகைக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் வாய்ப்பு, ஆளுங்கட்சியாக நாம் இருக்கும் ஆண்டில் அமைந்திருப்பதை நாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம்.

அண்ணாவின் நூற்றாண்டு விழாவினை இந்த உலகமே வியக்கும் வண்ணம், ஓராண்டு முழுவதும், கட்சி வேறுபாடின்றி, தமிழக அரசின் சார்பில் கொண்டாடுவோம். அண்ணாவின் அருமை பெருமைகளையெல்லாம் அவனிக்கு எடுத்துக் கூறுவோம்.

அறிஞர் அண்ணா அவர்கள், ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்த காலக் கட்டத்தில், மக்களாட்சியின் மாண்பினை உலகிற்கு எடுத்துக்காட்டிய மாமேதையாகத் திகழ்ந்தார்.

தமிழ் மற்றும் ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கையை உறுதியாகக் கடைபிடித்து, இந்தியத் தலைவர்களுக்கெல்லாம் தேசியப் பிரச்சினைகளில் கொள்கைக் குன்றாக-கலங்கரை விளக்கமாக நின்றவர் பேரறிஞர் அண்ணா. சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கிய சீர்திருத்தச் செம்மல், மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வித்திட்ட சிந்தனைச் சிற்பி, கொள்கை எனும் குன்றேறி நின்ற அந்தக் கோமகனின் சாதனைகளையும் இலட்சியக் கனவுகளையும் இன்றைய இளைய சமுதாயத்தின் நெஞ்சங்களில் பதித்திட வேண்டுமென்ற உயரிய நோக்குடன், தென்னாட்டு காந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை, எழுகோடித் தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, அகிலமே வியக்கும் வண்ணம் கொண்டாட உறுதிபூண்டுள்ளது.

2. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் பயன்பெறும் வகையில், ரூ.90.00 இலட்சம்







செலவில் வண்ண அனலைசர் கருவி ஒன்று வாங்கி வழங்கப்படும்.

3. தமிழரசு அச்சகத்தினை மேம்படுத்தும் வகையில், 4 வண்ண வெப் அச்சுக் கருவி ரூ.97.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

4. தமிழரசு அச்சகப் பணியாளர் வருகையினைப் பதிவு செய்ய, ரூ.50 ஆயிரம் செலவில் நவீன நேரம் பதிவு செய்யும் கருவி வாங்கி வழங்கப்படும்.

5. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள பழைய வீடியோ ஊர்திகளுக்குப் பதிலாக புதிய 7 டெம்போ டிராவலர் ஊர்திகள் ரூ.42.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

6. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பயன்பாட்டிற்கு, பழைய ஊர்திகளுக்குப் பதிலாக புதியதாக 2 டெம்போ டிராக்ஸ் ஜீட்டோ ஊர்திகள் ரூ.9.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

7. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் கட்டமைப்பினை மேம்படுத்த, பழைய நகல் எடுக்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக, ரூ.3.90 இலட்சம் செலவில் 6 நகலெடுக்கும் கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

8. அதுபோன்றே, ரூ.1.10 இலட்சம் செலவில் 10 நிகரி இயந்திரங்களும் வாங்கி வழங்கப்படும்.

9. சென்னை கிண்டியில், 18.42 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள காந்தி மண்டப வளாகத்தில் உள்ள திறந்த வெளியிடங்களை அரசுக்கு எந்தவிதச் செலவுமின்றி 'ஏர்செல்' நிறுவனத்தின் உதவியுடன் ரூ.78.00 இலட்சம் செலவில் மரங்கள், மலர்ச்செடிகள் அலங்கார வளைவுகள், நீரூற்றுகள் மற்றும் நீர் நிலைகளை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அழகுற அமைக்கப்படும்.

10. தமிழகத்தில் நாளிதழ்களில்/செய்தி நிறுவனங்களில்/தொலைக்காட்சி நிறுவனங்களில்/காலமுறை இதழ்களில்/இணைய தள செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள்/புகைப்படக்காரர்கள்/ஒளிப்பதிவாளர்கள்

[2008 மே 8

ஆகியோருக்கு அரசு அங்கீகார அடையாள அட்டை வழங்குவதற்குப் புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும்.

11. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் வழங்கப்படும் பத்திரிகையாளர் அங்கீகார அட்டை, பத்திரிகையாளர் அடையாள அட்டை, பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி, பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம், பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சை உதவி நிதி ஆகியவற்றிற்கான உரிய விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அரசு இணைய தளமான www.tn.gov.in-ல் இலவசமாக எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்படும்.

12. செய்தி மக்கள் தொடர்புத் துறையில் கணினிப் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையில் 17 கணினிகள் பிற துணைக்கருவிகளுடன் 9 மாவட்ட அலுவலகங்களுக்கும், 8 கணினிகள் தலைமையிடப் பயன்பாட்டிற்கும் ரூ. 8.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

13. அரசின் நலத் திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில், புதிய மாவட்டங்கள் உள்ளிட்ட 32 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் ரூ. 1.10 இலட்சம் செலவில் நவீன டி.வி.டி. பிளேயர் கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

14. மடிப்பேடுகள் மற்றும் கையேடுகள் அச்சிடுவதற்காக தமிழரசு அச்சகத்திற்குப் புதிதாக வண்ண நகல் பிரதிகள் எடுக்கும் இயந்திரம் ஒன்று ரூ. 5.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

15. மாவட்டந்தோறும் அரசுத் திட்டங்களை விளக்கிடும் வகையில், பொழுதுபோக்கு அம்சங்களோடு கூடிய மாவட்ட அளவிலான அரசுப் பொருட்காட்சிகள், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்படும்.



2008 மே 8]

## இணைப்பு—VIII

(601 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா

## அறிவிப்புகள் 2008—2009

### 1. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மேம்பாடு

நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை அதிகம் பிரபலமடையாத சுற்றுலாத் தலமாகும். இங்கு அமைந்துள்ள ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, அழகிய காட்சி முனை, மருத்துவ மூலிகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை மையம், அறப்பளிஸ்வரர் மற்றும் எட்டுக்கை அம்மன் கோயில் போன்றவை மிகவும் புகழ் பெற்றதாகும். எனவே, கொல்லிமலைப் பகுதியினை மேம்படுத்த ரூ.100.00 இலட்சம் வழங்கப்படும்.

### 2. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி அணைப் பகுதியை மேம்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி அணைப் பகுதி ரூ.50.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

### 3. சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள் புனரமைத்தல்

சுற்றுலாத் தகவல் பெறுவதற்கு சுற்றுலா அலுவலகங்களுக்கும் சுற்றுலாத் தகவல் மையங்களுக்கும் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்களும் மற்றும் வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி இரயில் நிலையம், மதுரை இரயில் நிலைய சந்திப்பு, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலாத் தகவல் மையங்களும் ரூ.30.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

### 4. சுற்றுலா அலுவலகங்களில் வலைதள வசதி

அனைத்து சுற்றுலா அலுவலகங்களிலும் வலைதள இணைப்பு (Internet Connection) வசதிகள் செய்யப்பட்டு, சுற்றுலாத் திட்டங்கள் (Online Monitoring) கண்காணிக்கப்படும்.

[2008 மே 8

## 5. சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களுக்கு கணினி மற்றும் நிகரி இயந்திரம் வாங்குதல்

சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக புதிய கணினி, துணைச் சாதனங்கள் மற்றும் நிகரி இயந்திரம் ரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 6. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா இயக்க பயன்பாட்டிற்காக மடிக்கணினிகள் (Laptop) வாங்குதல்

சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல்களை வழங்கவும் சுற்றுலாத் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், சுற்றுலா அலுவலர்கள் மற்றும் சுற்றுலா இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 10 மடிக்கணினிகள் (லேப்டாப்) ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 7. சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு துல்லிய நிழற்படக் கருவி மற்றும் துணை பாகங்கள் வாங்குதல்

சுற்றுலா மையங்களில் நடைபெறும் விழாக்கள், பண்டிகைகள் மற்றும் சுற்றுலாத் திட்ட முன்னேற்றப் பணிகள் போன்றவற்றை புகைப்படம் எடுக்க சுற்றுலா அலுவலகங்களுக்கு துல்லியமான நிழற்படக் கருவி ரூ.2.52 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 8. சுற்றுலா வழிகாட்டும் தகவல் பலகைகள் நிறுவுதல் (Tourist Information Hoarding)

ஒரு சுற்றுலாப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், அந்த இடத்திற்கு அருகில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை எளிதில் காண்பதற்கு ஏதுவாக முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வழிகாட்டும் தகவல் பலகைகள் நிறுவப்படும்.

## 9. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களைத் தன்னார்வ வழிகாட்டிகளாக செயல்பட அனுமதித்தல்

வெளி உலகுக்குத் தெரியாத வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்கள், புகழ்வாய்ந்த கோயில்கள் பல தமிழ்நாட்டில் உள்ளன. அந்த ஊர்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதனால் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூற வழிகாட்டிகளை நியமிக்க இயலாத நிலை உள்ளது. எனவே, அந்த



2008 மே 8]

இடங்களில் ஓய்வுபெற்ற விருப்பம் உள்ள அரசு ஊழியர்கள்/ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை அந்த ஊரின் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகளாகச் செயல்பட அனுமதிக்கப்படுவார்கள்.

## 10. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப் பிரிவு

தமிழ்நாட்டில் தற்சமயம் சுற்றுச்சூழல் சுற்றுலாவின் (Eco Tourism) மீது ஆர்வம் அதிகரித்து வருகிறது. அதை நல்ல முறையில் வளர்ப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்காக தனிப்பிரிவைத் தொடங்கி, அதன்மூலம் தொன்மையைப் பாதுகாப்பதற்கும் இயற்கையைக் காப்பதற்கும் திட்டங்களைத் தீட்டுவது அத்தியாவசியமாகும். இத்தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப் பிரிவு ஒன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தொடங்கப்படும்.

## 11. புதிய சுற்றுலா அலுவலகங்கள் ஏற்படுத்துதல்

சுற்றுலாத் துறையின்கீழ் 14 சுற்றுலா அலுவலகங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. வேலூர் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள். ஸ்ரீபுரத்தில் சமீபத்தில் கட்டப்பட்ட தங்கக்கோயில், ஏலகிரிக்கும் வருகைபுரியும் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள திடீர் அதிகரிப்பு ஆகிய காரணங்களால் வேலூர், ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது.

ஜவ்வாதுமலை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமடைந்து வருகிறது.

கோவை குற்றாலம், திருமூர்த்திமலை, வெள்ளியங்கிரி, சிறுவாணி போன்ற சுற்றுலா மையங்கள் பிரபலம் அடைந்து வருவதால், கோயம்புத்தூர் அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது.

செட்டிநாடு மிகச்சிறந்த ஊரக சுற்றுலாத் திட்டத்திற்கான தேசிய சுற்றுலா விருதினைப் பெற்றுள்ளது. செட்டிநாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், உணவு ஆகிய தனித்தன்மையின் காரணமாக அதனைச்சுற்றி பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, சுற்றுலா மேம்பாட்டிற்கு முக்கியத்துவம்

கொடுக்கும் வகையில் வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், செட்டிநாடு ஆகிய நான்கு இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் அரசுக்கு 2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 36.00 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**12. வழித்தட வசதி ஏற்படுத்த மானியம்**

தங்களது இடைவிடா வேலைப்பளுவின் காரணமாக வார இறுதி நாட்களில் பெரும்பாலானவர்கள் பயணம் மேற்கொள்ள விரும்புகிறார்கள். இவர்கள் தங்களின் வசதியை முன்னிட்டு சாலைவழிப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். எனவே தேசிய/மாநில நெடுஞ்சாலைகளில் வழித்தட வசதி (Motel) ஏற்படுத்த முனைவோருக்கு 15 சதவீதம் மூலதன மானியம், 10.00 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும். மானியம்பெற இந்த வழித்தட வசதி, ஓய்வறை, கழிப்பிட வசதி ஆகியவற்றுடன் தரமானதாக இருப்பதோடு சுற்றுலாத் துறையின் ஒப்புதலைப் பெற்றிருக்கவேண்டும்.

**13. விடூர் அணை மேம்பாடு .**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விடூர் அணை உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியமான சுற்றுலாத் தலமாகும். பயணிகளுக்கு முக்கியமான சுற்றுலாத் தலமாகும். எனவே, உள்ளூர் மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் ரூ.50.00 இலட்சம் செலவில் விடூர் அணை மேம்படுத்தப்படும். இது சுற்றுலாவுக்கென மாநில அரசு ஒதுக்கும் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**14. வழிகாட்டிப் பிரிவு (Escort Service)**

சுற்றுலாப் பகுதிகளில் சுற்றுலாத் திட்டங்களை விரைவில் செயல்படுத்த பிற துறைகளின் ஒப்புதல் வேண்டும். எனவே, பிற துறைகளின் ஒப்புதல் பெறவும், அவர்களோடு ஒருங்கிணைந்து திட்டங்களை செயல்படுத்தவும் சுற்றுலாத் துறையில் வழிகாட்டிப் பிரிவு ஒன்று தொடங்கப்படும்.



## தமிழ்நாடு

## சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**15. படகு வீடுகள்**

முதலியார்குப்பம் மழைத்துளிபடகு இல்லத்தில் அரசு மற்றும் தனியார் பங்கேற்புத் திட்ட அடிப்படையில் படகு வீடுகள் (House Boats) அமைக்கப்படும்.

**16. சென்னையில் புதிய பொருட்காட்சி**

சென்னை தீவுத்திடலில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்களில் இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அங்கு மேலும் இரண்டு பொருட்காட்சிகள் நடத்தப்படும்.

**17. கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பாரம்பரிய ஓட்டல் நவீனப்படுத்துதல்**

கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பாரம்பரிய ஓட்டல் (Heritage Hotel-Cape Hotel) ரூ.70.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

**18. பத்திரிகையாளர்களுக்குச் சலுகை**

தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் தங்கள் குடும்பத்துடன் பயணம் மேற்கொள்ளும்போது அவர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்களில் அறை வாடகையில் 25% சலுகை அளிக்கப்படும்.

[2008 மே 8

## கலை பண்பாட்டுத் துறை

## அறிவிப்புகள், 2008–2009

### 1. சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் தொன்மையான கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்

சென்னையிலுள்ள அரசு கவின்கலைக் கல்லூரி, அருங்காட்சியகம், நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாரம்பரியமிக்க கட்டடம் ஆகும். இக்கட்டடம் சென்னை மாநகரிலுள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும், கலை விரும்பிகள் வருகைதரும் இடமாகவும் இருப்பதால், இக்கட்டடம் ரூபாய் ஒரு கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

### 2. மாவட்ட அரசு இசைப் பள்ளி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளித்தல்

17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் கலைத்திறனை மேம்படுத்திடவும், அவர்களது தகுதியினை வளர்த்திடவும், முதுபெரும் இசைக் கலைஞர்களைக் கொண்டு கோடை விடுமுறையில் 10 நாட்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணியிடை பயிற்சிக்கு ரூ.5.00 இலட்சம் செலவிடப்படும்.

### 3. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் பதிவு செய்யப்பட்ட கிராமிய கலைக் குழுக்கள் மற்றும் இசை நாடக நடிகர் சங்கங்களுக்கு இசைக் கருவிகள் வழங்குதல்

தொன்மைச் சிறப்பு மிக்க தமிழக ஊரகக் கலைகள், இசை நாடகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பதிவு செய்யப்பட்டு நன்முறையில் தொடர்ந்து இயங்கி வரும் ஊரக கலைக் குழுக்கள் மற்றும் இசை நாடக நடிகர் சங்கங்களில் 10 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவை பயன்பெற தவில், நாதஸ்வரம், பம்பை, ஆர்மோனியம், பறை, கைச்சிலம்பு ஆகியவற்றை வாங்கிட குழு ஒன்றுக்கு ரூ. 30,000/- வீதம் 10 குழுக்களுக்கு மொத்தம் ரூ. 3.00 இலட்சம் வழங்கப்படும்.

### 4. நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி

2008-2009 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நபர்களுக்கு நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி மாதம் ரூபாய் 1000/- வீதம் வழங்கப்படும். இதற்காக ரூபாய் 60 இலட்சம் ஆண்டொன்றுக்கு செலவிடப்படும்.



2008 மே 8]

## தொல்லியல் துறை

## அறிவிப்புகள், 2008–2009

பெரம்பலூர் மாவட்டம், ஜெயம்கொண்டம் வட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல்.

பெரம்பலூர் மாவட்டம், ஜெயம்கொண்டம் வட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் மூன்று இலட்சம் செலவில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு IX

*(601 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 11—முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு

## அறிவிப்புகள், 2008—2009

### 1. புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறத்தல்

சென்ற ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட 40 சார்பதிவாளர் அலுவலகங்களைப் படிப்படியாக மீண்டும் திறக்க முடிவு செய்யப்பட்டு சென்ற ஆண்டில் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. நடப்பாண்டில் 5 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படும்.

### 2. பதிவுச் சட்டத்தில் திருத்தம்

தற்போதுள்ள பதிவு நடைமுறையின்படி பொது அதிகார ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலக எல்லை வரம்பின்றி எந்த ஒரு சார்பதிவகத்திலும், இத்தகைய ஆவணங்கள் விருப்பப் பதிவின்கீழ் பதிவு செய்யப்படுவதால் நான்கு புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இத்தகைய ஆவணப் பதிவின் விவரம் வில்லங்கச் சான்றில் இடம் பெற வகையில்லாததால் பதிவு பொதுமக்கள் சொத்தின் மீதுள்ள உரிமை குறித்த உண்மை நிலையை அறிய வழியில்லை. எனவே, இத்தகைய ஆவணங்களைக் கட்டாயமாகவும், சம்பந்தப்பட்ட சார்பதிவகத்திலும், ஒரு புத்தகத்திலும் பதிவு செய்ய பதிவுச் சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படும். இதனால் இத்தகைய ஆவணப் பதிவின்மூலம் நடைபெறும் முறைகேடுகள் அறவே தடை செய்ய ஏதுவாகும்.

### 3. காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களைப் பூர்த்தி செய்தல்

பதிவுத் துறையில் தற்போது காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பண[illegible]ங்களை மாநகராட்சி அல்லாத பகுதிகளில் பூர்த்தி செய்ய நட[illegible]கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228389.
சென்னை-600 008